# கவிஞர் மலர்




T21208
R004F03

பாரதிதாசன்
(கனகசுப்புரத்தினம் புதுவை)

# சைபால்
# அயோடிசால்
# பேபி கிரைப்

**சைபால்**

முகப்பரு, சேத்துப்புண், சிரங்கு, வேனல் கட்டி, தீப்பட்ட புண், கரப்பான் முதலியவைகளுக்குக் கைகண்ட மருந்து - - -

**அயோடிசால்**

ரத்தத்தை சுத்தி செய்து ரத்த விருத்தியை உண்டாக்கும் - - -

**பேபிகிரைப்**

குழந்தைகளுக்கு உண்டாகும் வாயு வயிற்றுப் பொறுமல், வயிற்று வலி, அஜீரணம்' மந்தம், பல் முளைக்கும்பொழுது ஏற்படும் வயிற்றுப் போக்கு முதலிய சகல வியாதிகளையும் போக்கி நல்ல ஆரோக்கியத்தையும் தரும் சிறந்த திராவகம்

**சௌத் இந்தியன் மான்யுபாக்சரிங் கம்பெனி......மதுரை**



SELVA MALIGAI
GUARANTEED JEWELLERS.




Proprietors:—S. S. Arunachalam Chettiar & Bros.,
SOUTH AVANI MOOLA STREET, :: MADURA.

...80 YEARS FAME AND NAME...

GURU MEDICINES FOR CHILDREN

DR. A. MATHURAM SONS.. TRICHINOPOLY

ஒரு வேண்டுகோள்!

# குரு மருந்துகள்

விற்பனையாளர்கள்

—உபயோகிப்பவர்களுக்கு!

உங்கள் தேவைக்கான உற்பத்தியைப்பெருக்குவதில், நாங்கள் விசேஷ முயற்சியை மேற்கொண்டிருக்கிறோம்.

இன்னும், சில மாதங்களில் பர்மா, மலேயா, ஜாவா, சுமத்திரா, தென்னாப்பிரிக்கா, சிலோன் போன்ற வெளிநாடுகளிலுள்ளவர்களும் அவர்கள் தேவைக்கு தாராளமாய் குரு மருந்துகளைப் பெறலாம்.

ஆகையால்
அவசியமாய்த் தேவைப்படும் அளவுக்குமட்டும் பெற்று
ஆதரவளியுங்கள்.

**டாக்டர். எ. மதுரம் சன்ஸ்,**

குரு மருந்து சாலை, :: திருச்சினாப்பள்ளி.



G. 69708

A HUMAN INSTITUTION — SERVING HUMAN NEEDS

# NEW INDIA ASSURANCE Co Ltd

*Chairman*, Sir CHUNILAL V. MEHTA, K.C.S.I.

*Vice Chairman*, J. R. D. TATA Esq

*The Home of Complete Protection*



*For*

**LIFE**
**FIRE**
**MARINE**
**MOTOR**
**ACCIDENT**

## AN *Outstanding Record* OF *Growth*

The "NEW INDIA" stands in the forefront in the development of Insurance in India and has largely contributed to the progress which Indian Insurance is now so rapidly making. This contribution is aided by the Company's undeviating aims: that every policy-holder-no matter for what amount the Sum Insured may be-shall enjoy absolute protection.

FINANCIAL FIGURES-(1944)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Total Funds | ... | Exceed | Rs. | 6 | Crores |
| Total Assets | ... | Nearly | „ | 8 | „ |
| Total Premiums received since inception | ... | Exceed | „ | 22 | „ |
| Total Claims Paid | ... | „ | „ | 11 | „ |

LIFE BUSINESS FIGURES

| | | | | | |
|---|---|---|---|---|---|
| New Business in 1945 | .. | Exceed | Rs. | 8 | Crores |

SAMUEL

INDIA'S BEST — NEW INDIA — INDIA'S FOREMOST

H. O. BOMBAY. MADRAS BRANCH: 4 & 5, FIRST LINE BEACH

T021208
Saraswathi Mahal Library, Thanjavur


ஸ்ரீ கண்ணு பிலிம்ஸ்
தயாரிக்கும்
தண்டபாணி தேசிகர்
R. பாலசுப்ரமண்யம்.. S.V. சுப்பையா..
T.S. துரைராஜ்... M.S. வேலப்பா..
வித்வான் S.T. சீனிவாசன்....
K.K. பெருமாள் A.K. சீனிவாசன்..
பிரேமாவதி
தேவசேனு
P.S. சிவபாக்கியம்
குமாரி கல்யாணி..
நடிக்கும்
திருமழிசை
ஆழ்வார்
Prop. C.K. & SONS.
PUDUKOTTAH STATE
திரைக்கதை: P.S. செட்டியார்... பாடல்: சிவன்... சங்கீதம்: S.V. வெங்கட்ராமன்... ஸ்டுடியோ: சோபனசலா.

# கவிஞர் மலர்

## 28-7-1946

உரிமையாளர்:

**குயில் நிலையம்,**

581, பைக்கிராப்ட்ஸ் ரோட்,

திருவல்லிக்கேணி ∴ சென்னை

உரிமைபதிப்புற்றது]

[விலை ரூபா 2—8—0.

# பொருள் அடக்கம்


காணிக்கை............ 7
நன்றி.................... 8
எடா தம்பி எடுடா பேனு! சி. என். அண்ணுதுரை.... 9
நற்புலமை வித்தகன். நாவலர். ச. சோ. பாரதியார் 11
தமிழ் நாட்டு வால்ட் விட்மன், கவி. தேசிகவினுயகம். 12
தமிழ் நாட்டின் பொக்கிஷம். வ-ரா. 12
புரட்சிக் கவிஞன் வாழ்க. ஔவை, சு. துரைசாமி 13
பாரதியாரால் பாராட்டப் பெற்ற .......குயில்-சிவா. 16
தமிழருக்குத் தனியரசு....ச. சோ. இலட்சுமிரதன் 17
வெள்ளத்தால் போகாது........எஸ். குருசாமி. 21
யாருக்கு தாசன்? "சுகி" 23
தமிழும் பாரதி தாசனும்....கோ. சி. பெ. புலவர். 25
வடக்கே தலைவைத்து....டி. எஸ். குஞ்சிதம். 27
நான் குற்றவாளியா? ப. சுந்தரவேலு 29
எழுத்தாளர் நிலை. பு. ரா சுப்ரமணியம். 31
ஓடத்தில் ஒரு நாள்.... சீனி-வெங்கடசாமி. 33
மனிதன் பேசுகிருன். எஸ். எஸ். மாரிசாமி. 36
புரட்சியில் பூக்கும்....இரா. நெடுஞ்செழியன் 37
சரியான மதிப்பீடு. சுப-நாராயணன். 39
எழுச்சி தந்த இயற் கவிஞர். சாமி-பழனியப்பன். 40
தமிழா வாழி! வீ. உலக வூழியன். 41
தீப்பொறி. இரா. செழியன். 43
கொலைவாளினை எடடா! க. அன்பழகன். 45
மங்கையர் சுகமும்....தாமரைக் கண்ணி. 49
நாட்டுக்கு நல்ல காலம் பூ. கணேசன். 51
நிரபராதி. ரா. ஆறுமுகம். 55
தீர்ப்புக் கூறுங்கள். சாமி-சிதம்பரனுர். 57
கவியரசர். ச. சிவப்பிரகாசம். 61
மலாயா தமிழர்கள் வாழ்த்து. கோ. சாரங்கபாணி 62
எங்கள் கவிஞர். வடகரை. எம். ஏ. லிங்கம். 63
சேரிச் செம்மல். புலவர். தா. அழகு வேலன். 65
தமிழியக்கத் தளபதி. பி. எஸ். செட்டியார். 67
கவிஞர் திரு. பாரதி தாசன். எப். ஜி. நடேசய்யர் 69
தேனீ...........பாரதி தாசன் 72
வசந்தகுமாரி ப. கண்ணன். 75
காலத்திற்கு வேண்டுவன ஓ இராலிங்கம் 79
சமூகப் புரட்சி. டாக்டர். ஏ. கிருஷ்ணசாமி. 80
மலர்த் தோட்டம். எஸ். கருணனந்தம். 81
பாரதி தாசன் புரட்சிக் கவியா? மு. செல்லப்பன். 82
மாயக்காவ்ஸ்கி. ஏ. பி. சனர்த்தனம். 83
அன்றும் இன்றும். சி. கணேசன். 84
கைவாரம். மு. சி. பூரணலிங்கம். 85
நமது கவிஞர். சி. டி. டி. அரசு. 86
பாரதி தாசன் திருவுள்ளம். நாரண-துரைக்கண்ணன், 87
கவியின் உயிர் நா. வரதராசுலு. 89
சுடரொளி. மு இராசகோபாலன். 93
எங்கள் வாழ்த்து. ப. ஜீவானந்தம். 95
கவிதை. எஸ். வேதரத்னம். 97
இன்பக்கவி ரா. ஜெயலட்சுமி. 99
பாரதிக்குப் பின். முருகு-சுப்ரமணியம். 100
நல்ல கவியார்? .... சுத்தானந்த பாரதி. 101
மக்கள் நலத்திற்கு. ஆ. இராமாமிர்தத்தம்மாள் 102
நாமிருக்கும் நாடு நமதடா. இராம-சுப்பையா. 103
இதோ ஓர் போர்வீரன். காஞ்சி. மணிமொழியார். 105
இலக்கிய மறு மலர்ச்சி செ. ரா. சுப்ரமணியம். 107
ஏனோ இந்நிலை? .... அ. முத்தையா. 109
வாத்தியார் சுப்புரத்தினம். மெலாணி-நோயேல். 111
கவிஞர் மாண்பு. என். இ. பாலகுரு. 112
கவிஞரின் வாழ்க்கை வரலாறு ப. கண்ணன். 115
இசைத் தமிழ் விசு. திருநாவுக்கரசு. 123
வேண்டும் சா. ர. பக்தவத்சலம். 125
வாணகுல வீரர். ரா. பி. சேதுப்பிள்ளை. 127
தன்மானக்காவலர். ம. பொ. சிவஞான கிராமணியார் 129
ஆரம்பித்துவிட்டது. என். வி. நடராசன் 130


# விளம்பர அட்டவணை


செல்வ மாளிகை மதுரை. 1
டாக்டர். ஏ. மதுரம், & சன்ஸ். திருச்சி. 2
நியூ இண்டியா அஷ்யூரன்ஸ், கம்பெனி சென்னை. 3
கண்ணு பிலிம்ஸ் ,, 4
இண்டியன் ஓவர்ஸீஸ் பாங்கு, ,, 20
ஸ்ரீ ராம பாலகான விநோத சபா. ,, 20-ஏ
சக்தி கரியாலயம், சென்னை. 24
மங்களம் & கோ, கோவை. 30
அல்லயன்ஸ் கம்பெனி, சென்னை. 32
ஸ்ரீ பாலசண்முகானந்த நாடக சபா, கோவை. 35
அய்யர் புரொடெக்ஷன்ஸ், சென்னை. 42
ரஹீட்ஜேம் ஷேட் சன்ஸ் & கோ, மதுரை. 44
சிட்டி சுதேசி எம்போரியம், சென்னை. 47
சீனிவாஸ் மில்ஸ் லிமிடெட், மதுரை. 48
கௌரி & கம்பெனி, உசிலம்பட்டி. 52
கே. எஸ். பெருமாள் முதலியார் & சன்ஸ் மதுரை. 52
தி இண்டோ கமர்ஷியல் பாங்கு, சென்னை. 59
எலக்ட்ரிக்கல் மார்ட், ,, 60
சூடாம்பிகை பிலிம்ஸ், சேலம். 66
எஸ். கே. கே. இரத்தினம் செட்டியார், மதுரை. 68
சந்திரலேகா பிலிம்ஸ், மதுரை. 71
தமிழ் முரசு, சிங்கப்பூர். 74
கே. வீராசாமி, சோவை. 74
கந்த விலாஸ் ஜவுளிக்கடை, ,, 74
நோபிள் பிரஸ், திருச்சி. 82
முல்லைப் பதிப்பகம், சென்னை. 88
சாரதி கைத்தறி டெக்ஸ்டைல்ஸ், மதுரை. 90
மகாலட்சுமி கார்ப்பொரேஷன், சென்னை. 96
மணி & கோ, கோவை. 96
குயில் நிலையம், சென்னை. 98
கார்த்திகேயா பிக்சர்ஸ், கோவை. 104
எஸ் எம் எஸ். ஆர். பாலசுந்தரம், திருச்சி. 108
கிரேட் ஈஸ்டர்ன் பிக்சர்ஸ். சேலம். 110
சார்லி & கம்பெனி, உசிலம்பட்டி. 113
குயில் நிலையம், சென்னை. 114
ஜோதி நிலையம், ,, 122
என். எஸ். கே. நாடக சபா, ,, 122
மிட்லண்டு இன்ஷியூரன்ஸ் கம்பெனி, சென்னை. 124
நியூட்டோன் & கம்பெனி ,, 124
கிரீன் பிக்ஸர்ஸ், ,, 126
சிவானந்தம் பிளயகாட் கம்பெனி, மதுரை. 128
பாலு பிரதர்ஸ், ,, 131
மாடர்ன் தியேட்டர்ஸ், ,, 132
திருவிடம் ஸ்டோர்ஸ், விஜயபுரம். 132
ரத்னு ஸ்டுடியோஸ், சேலம். 133
கிருஷ்ணன் நாடக சபா, தஞ்சை. 134


## மேலட்டை


சௌத் இந்தியன் மான்யு பாக்சரிங் கம்பெனி, மதுரை. பக்கம் 2
பாரத் ட்ரக் ஹவுஸ், மதுரை. ,, 3
P. A. ராஜு செட்டியார் & பிரதர்ஸ், கோவை. ,, 4

# காணிக்கை

அரசியல், பொருளாதார, சமுதாயத் துறைகளிலே தாழ்ந்து, மிதியுண்டு கிடந்த தமிழனைத் தலை நிமிரவைக்கக் கவிதைச் சங்கநாதம் புரிபவர் புதுவைத் தன்மானக் கவிஞர்.

பழமைதான் பெரிதென மதித்துப் பாழ் இருட்டில் நடந்து கொண்டிருந்த பாவலர், நாவலர், கலைஞர் ஆகியோர்க்குப் பகுத்தறிவுச் சுடர்காட்டி, புதுமை நலம் புகுத்தி, கவிதையிலே - காவியத்திலே - கலையிலே மகத்தான மாறுதல் விளைவிப்பவர் புரட்சிக் கவிஞர்.

தொழிலாளர், ஏழையர், தாழ்த்தப்பட்டோர் வாழ்வுபர, இன்பம் மிளிர, காதல் சுரக்கக் கவிதை பாடும் கவியரசர், கனக—சுப்புரத்தினம்—பாரதி தாசன் அவர்களின் 55-ம் ஆண்டு நிறைவு விழா, தமிழகத்தின் திருநாள். கவியரசர்க்குப் பெருநிதியளிக்கும் விழா, தமிழ் மக்களின் பெருமையை எண்பிக்கும் நன்னாள்.

இப்புனித நாளிலே பூத்த இச்சிறு மலர் கவியரசர்க்கு எங்கள் காணிக்கை ! வாழ்க கவியரசர் ! வாழ்க தமிழ் !

"குயில் நிலையம்"
சென்னை. 28—7—1946,

டி. என். ராமன்
ப. கண்ணன்

# நன்றி

தமிழ் நாட்டின் ஒப்பற்ற கவிஞர் பாரதிதாசன் அவர்களின் நிலைத்த, உயர்ந்த, புரட்சிகரமான இலக்கியப் பணியை மக்கள் உணர்ந்ததன் பயனாக, கவிஞரின் 55-ம் ஆண்டு நிறைவைக் கொண்டாட, பெருநிதி திரட்டியளிக்க நாமக்கல்லில் ஓர் நிதிக் குழு தோன்றிற்று. வேற்றுமை மறந்து பல தலைவர்களும், தொண்டர்களும் செயற் குழுவில் சேர்ந்தனர், செயல் நிகழ்ந்தது. எதிர்பார்த்தவாறு நிதியும் சேர்ந்தது.

நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பொது மக்கள், வாழ்க்கையில் வசதியற்ற ஏழைகள்-நடுத்தர மக்கள் நிதிக்கு வாரி வழங்கினர் உணர்ச்சிப் பெருக்கால், உளமார. மலேயாவாழும் தமிழர்கள் தமக்குள்ள இடர்ப்பாடுகளையும் பொருட்படுத்தாமல் பெரு நிதி சேர்த்தனுப்பினர். மலேயா நிதிக்குழுத் தலைவர் திரு. நா. பழனிவேலு கோ. சாரங்கபாணி ஆகியோர்க்கு நன்றி.

தொடக்க நாள் முதல் நிதிக்குழுவின் தலைவராயிருந்த நாமக்கல் திரு. என். கிருஷ்ணராஜு அவர்களுக்கும், பொருளாளர் தளபதி. சி என். அண்ணாத்துரை M. A. அவர்கட்கும் நிதியளிப்பு விழாவுக்குத் தலைமை தாங்கும் திரு. நாவலர். ச. சோமசுந்தர பாரதியார் M.A., B.L., அவர்கட்கும் எங்கள் நன்றி.

நிதியளிப்பு விழாவிலே, கவியரசர்க்கு எங்கள் காணிக்கையாகப் படைக்க விரும்பிய இம் மலருக்குக் கட்டுரை கருத்துரையாலும், கவிதைகளாலும் மணம் ஊட்டிய எழுத்தாளர், கவிஞர், கலைஞர்க்கும், மலர் ஆக்கத்தில் இறுதிவரை ஒத்துழைத்த திரு. பு. செல்வராஜ், திரு. டி. எம். பார்த்தசாரதி, ஓவிய நிபுணர் பானு பிரதர்ஸ், அச்சுக்கூடத் தொழிலாளர் ஆகியோர்க்கும் எங்கள் நெஞ்சுகந்த நன்றி.

இடமின்மை-காலம்-காகித நெருக்கடி-காரணமாகப் பல கட்டுரைகள் இடம் பெற முடியாமற் போனமைக்கு வருந்துகிறோம்.

எங்கள் ஆசையின்-முயற்சியின்-அறைகுறையான விளைவுதான் இம் மலர்! எனினும் தமிழ்ப் பெரு மக்களுக்கு இம் மலர் புதிது-முதல் முதல் மலர்வது-என்ற அளவில் பெருமிதத்தோடு எங்கள் மனமுவந்த நன்றியை ஆக்கமளித்த அனைவர்க்கும் தெரிவித்துக் கொள்கிறோம்.


581, பைக்ராப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி.
சென்னை

டி. என். ராமன்
ப. கண்ணன்
செயலாளர்கள்.

# எடாதம்பி எடுடா பேனா!

—C.N. அண்ணாத்துரை—

காளி அருளோ, பவானியின் கடாட்சமோ கடம்பனின் கடைக்கண் நோக்கோ பெற்றவர்களே கவிகளாக முடியும்; அங்ஙனம் கவிகளானதும் அவர்கள் காவலரின் கொலுமண்டபங்களிலே இருப்பர்; அரசர் அகமகிழ அந்திவானத்தைப் பற்றியும் அலர்ந்த ரோஜா பற்றியும் ஆடலழகியினுடைய அதரத்தின் துடிப்புப் பற்றியும் பாடுவர்; அங்ஙனம் பாடுதல் சிற்றின்பமாமே என்று அஞ்சி, அதனை அரியின் அருள், அல்லது அரனின் திறம் என்னும் மேற்பூச்சுத் தயாரித்து, அதனுள்ளே அமைப்பர்; அவனி காவலர் அக்கவி கண்டு மகிழ்வர்; மக்கள், கவியின் திறத்தை மட்டுமல்ல, அவர் கூப்பிடு குரலுக்குத் தேவரும் மூவரும் ஓடோடி வருவர், கவிகள் விரும்பினால் கல்லை உருகச்செய்வர், புலியைப் பாட்ச்செய்வர் என்று நம்பி, அடிபணிவர். சில காலத்துக்குப்பிறகு அத்தகைய கவிகளிற் சிலர், கோயில் கட்டிக் கும்பிடத்தக்கவர்களாக்கப்பட்டு விடுவர். கவிகளின் நிலைமை இதுவாக இருந்து வந்தது. கவி ஓர் அபூர்வப்பிறவி; அற்புத ஜாலக்காரன். கடவுளின் அருள் என்னும் கைக்கோலை வைத்துக்கொண்டு அதன் உதவியால் பிறர் காண முடியாததைக்கண்டு, பிறர் கூற முடியாததைக் கூறும் அதிசயச் சக்தி பெற்றவன் என்று மட்டுமே மக்கள் கூறிவந்தனர்.

புன்னகை பெறுவர் கவிகளைக் கேட்டு; புண்யம் வருமென்பர் அவைகளைக் கேட்டதன் பயனாக; பிறகோ பெருமூச்செறிவர். அவர்போல் நாமென்ன அருள்பெற்றவரா கவிபாட என்று. கவிதை எவ்வளவுக் கெவ்வளவு கடினமானதாக இருக்கிறதோ, புரியாததாக இருக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு அதன் மதிப்பு உயர்ந்துவிடும். கவிதையின் கருத்து எவ்வளவுக்கெவ்வளவு மக்களின் அன்றாட வாழ்க்கைக்கும் அறிவுப் போக்குக்கும் தொடர்பற்றதாக இருக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு அதற்கு மதிப்பு அதிகரிக்கும்.

''நீல நிற வானமடி நிர்மலனின் தேகமடி'' என்று பாடி இருப்பார் கவி; மக்கள் நீல நிற வானத்தைக் கண்டுள்ளனர். நிர்மலனைக் கண்டதில்லை. புரிந்த ஒன்றைப் புரியாத இன்னொன்றுக்கு உவமையாக்குவார் கவி; புரியாது மக்களுக்கு, சரியா தவறா? என்று. கடவுள் மனம் வாக்குக் காயத்துக்கு எட்டாதவர் என்பதன்றோ முதுமொழி! அம்முதுமொழி' உண்மையாயின் நிர்மலனுக்கு உருவம் ஏது? உருவம் இல்லையேல் அதற்கு வண்ணம் கற்பித்து அது நீல நிறம் என்று நிர்ணயிப்பது எங்ஙனம் பொருந்தும்? ஏன் கவி நீலநிற வானத்தையும் நிர்மலனையும் தொடர்புப்படுத்திப் பாடினார் என்ற குழப்பமான நிலை வரப் பெறுவர் சிலர். ஆனால், கவி என்றால் அற்புதம் புரிபவன், ஆகவே அவன் அறிந்தே கூறி இருப்பான்; கவி அருள் பெற்றவன், ஆகவே அவன் கூறினது உண்மையாக இருந்தே தீரவேண்டும் என்று முடிவு செய்துவிடுவர். இதனால் விளைந்த பயன் என்ன? கவிதைகளைப் போற்ற—பாராட்ட முன்வந்தனரே யன்றி, உணர, ரசிக்க, இலயிக்க, மக்களால் முடியவில்லை. கலையைக் காட்சிப் பொருளாக்கினரேயன்றி, வாழ்க்கைக்குத் தோழனாக்கிக் கொள்ளமுடியவில்லை. கவிதையை இந்நிலையில் வைத்திருக்குமட்டும், கவிகளின் ஆழ்ந்த கருத்துரைகளால் ஏற்படவேண்டிய பலன் உண்டாக வழியில்லாமற் போய்விட்டது. புராணங்களில் மட்டுமே குறிப்பிடப்படும் பாரிஜாத புஷ்பத்தை நம் காதலிக்குத் தர முடியுமோ! அதுபோலாயிற்றுக் கவியின் நிலை.

இந்த நிலையைக் குலைத்து, எதிர்த்துப் புரட்சி செய்து, கலையைக் கைப் பிடித்திழுத்து வந்து நம் எதிரே நிறுத்தி, ''இதோ உன் தோழன்'' என்று கூறிப் புரட்சி செய்தவர், அதில் வெற்றி பெற்றவர் பாரதிதாசன்.

பல்வேறு துறைகளிலே நடைபெற்றன புரட்சிகள். தேவ குமாரன் அரசனாகப்பிறப்பான், அவனை ஆண்டிற்கோர் முறையே காண முடியும்; அப்போதும் அள்வளாவ அல்ல, அடிதொழவே என்றிருந்த அரசாளும் முறையில் புரட்சி ஏற்பட்டு இன்று ஆலைத்தொழிலாளியும், உலைக்கூடத்துத் தோழனும், ஊராளும் உரிமை பெற்றுவிட்டவில்லையா?

வானுலக வீதியிலே சுற்றி, தேவர்தம் வடி வழகைக் கண்டு கூறி வருபவரே கவிஞர், அஃதே கலை என்றிருந்த நிலை மாறி, கவி நம்முடனேயே இருப்பார், நமது உலகில்தான் உலவுவர், நாம் காண்பனவற்றையே காண்பார், ஆனல் அவை களைப்பற்றி நாம் கூறத் தயங்குவோம் இயலாத தால்; அவர் கூறுவார், அறிவுத் தெளிவால், கலைத்திறனால்; இந்தப்புரட்சியைச் செய்தார் பாரதி தாசன்.

புரட்சித்துறையில் ஈடுபட்டவர்கள் பெரிதும், துவக்கத்தில் பூவால் அர்ச்சிக்கப்படுவதில்லை, புன் மொழிகளையே வீசப்பெறுவர். அதிலும் மொழி வீசும் துறையிலே ஈடுபட்ட புலவர்கள் உலகிலே புத்தம் புதிய புரட்சியை ஒருவர் வெற்றிகரமாகச் செய்து வருவது கண்டால், பொச்சரிப்பின் விளை வாகப் புன் மொழி, மாரிபோல் பொழியத்தானே செய்யும்.

பாரதிதாசன், இந்த மாரியைச் சட்டை செய்ய வில்லை. புரட்சியில் ஈடுபட்டுள்ளவருக்கு இதற்கு நேரம் ஏது? போரிட்டார், போரிட்டார், போரிட் டுக்கொண்டே இருக்கிறார்! வென்றார், வெல்கிறார், வெற்றி பெற்றபடியே இருப்பார்!

அவர் பெற்ற வெற்றிகளிலே ஒன்று அவ ருடைய் கவிதைகளை இன்று மக்கள் அறிந்து கொண்டார்கள், புரிந்துகொண்டார்கள், ரசிக்கிறார் கள், பயன் பெறுகிறார்கள். "தோடுடைய செவி யன் விடை ஏறி ஓர் தூவெண் மதிசூடி" வருபவனைப் பற்றிக் கவிதைகளைக் கேட்டுக் கேட்டு, திருநீறு பூசுமுறை கற்றுக்கொண்ட மக்கள்,"இரும்புப் பெட் டியிலே இருக்கும் எண்பது இலட்சத்தையும் கரும் புத் தோட்டத்திலே வருஷம் காணும் கணக்கினை யும்" எண்ணிக்களிக்கும் தம்பிரானைப்பற்றிப் பாரதி தாசன் பாடிடக் கேட்டதும், பதைத்து எழுந்து, "பாதகா! படுமோசக்காரா! பக்தியின பெயரால் இப்படியா போக போகத்தில் புரள்கிறாய்! பார் உன்னை என்ன செய்யப்போகிறோம்" என று இன்று கொதித்துக் கூறப் போகின்றனர். நாளை?

ஆம்! நாளைக்கு என்னநடக்கும் என்பதை எண் ணும்போதுதான், "புரட்சிக் கவிஞரே பாரதிதா சன்; ஐயமில்லை" என்று அனைவரும் கூறமுடிகிறது.

அவர் போர்முகாம் அமைத்துவிட்டார்; போர்வீரர் களைக் கூட்டிவிட்டார். படைக்கலன்களும் தயார். முரசும் கொட்டி விட்டுக் கூப்பிடுகிறார்.

"கொலை வாளினை எடடா மிகு
கொடியோர் செயல் அறவே"

என்று. அந்தக் குரல்,"காற்றில் மிதந்து வரும் கீதமாக மட்டுமின்றி, கிண்கிணிச் சத்தத்தோடு இழைந்துவரும் கீதமொழியாக மட்டுமின்றி, கேட் போரின் வளைந்த முதுகை நிமிர்த்திவிடும் வீரக்குர லாகிவிட்டது! எனவேதான் நமக்கொரு வால்டேர் கிடைத்துவிட்டார். நமக்கோர் ஷெல்லி கிடைத்து விட்டார். நமக்கு ஒரு கவிஞர் கிடைத்துவிட்டார். அவர் நம்மோடு இருக்கிறார். நமக்காக இருக்கிறார், நம் வேலையைச் செய்கிறார். நாம் வாழ வழி அமைக் கிறார், அவர் வாழ்க, அவர்திறன் ஓங்குக! அவர் வெல்க! அவர்வெற்றியினல் நமக்கு வெற்றி ஓங்குக! என்று மனமார நாம் கூறுகிறோம். நாம் மட்டுமா! நாடு கூறுகிறது.

நாட்டு மக்களுடைய இந்த மகிழ்ச்சியின் ஒரு சிறு அறிகுறியே இதுபோது கவிஞருக்கு அளிக்கப் படும் பொற்கிழி. இதிலே குவிந்துள்ள ஒவ்வோர் காசும் பேசக்கூடுமானல் மணிக்கணக்கில் பேசும் கவிஞரின் பெருமையை; அதனல் சமுதாயம் பெற்ற பெருமையை. பொற்காசுகள் பேசினலும் கூட, புரட்சிக் கவிஞரின் செவியில் அந்த ஒலி புகாது. எப்படிப்புகும்? அவருடைய செவியிலே ஆலைச்சங்கு, சுண்ணம் இடிக்கும் சுந்தரியின் பெருமூச்சு, பாட் டாளியின் குமுறல், பணமெனும் கொடி கட்டிய படகு வருமா என்று எதிர்பார்த்து ஏங்கும் ஏழை யின் ஏக்கமொழி, எழில் ததும்ப இளமை ததும்ப உள்ள மங்கை மஞ்சத்தில் குறட்டைவிடும கிழ மணாளனைக் கண்டு கண்ணீர்விட்டுக் கதறும் ஒலி இவை புகுந்து, கண்களிலே அனலையும் புனலையும் கிளப்பிவிட, "ஏடா! தம்பி! எடுடா பேனா! கொண்டு வா மைக்கூடு; இந்தக் கொடுமைகளைக் களைந்தே யாகவேண்டும்; இன்றே களைந்தாக வேண்டும் என்று முழக்கமிடுகிறார்! அந்த முழக்கம் இந்நாளில் நாம் பெற்ற கருவூலம்! அவர் நமக்கு அளித்த அழியாத செல்வம் அவர் வாழ்க! வெல்க!!

# நற்புலமை வித்தகன்

நாவலர், ச. சோமசுந்தர பாரதியார், எம். ஏ., பி. எல்.,

★

" உளத்தொளிரும் உண்மைகளைப் பொய்யாமல் செஞ்சொல்
வளத்தொளிர்பண் பாவால் வனைந்து—திளைத்துலகோர்
அச்சம் அகல அறிவோங்கச் செய்தறிஞர்
நச்சுகவி சுப்புரத்தி னம்"

" உயிரில் உலகும் உயிரினமும் எல்லாம்
செயிரில் செழுந்தமிழில் செப்ப—அயிரிலதாய்
வாய்மை வளரறிவை வற்புறுத்தி வாழ்புலவன்
தூய்மனத்தன் சுப்புரத்தி னம்"

" ஊறுமுணர்வை உயிரோ வியமாக
வீறு தமிழ்ப்பண் மிளிர்கவியால்—யாறு மலை
கானல் கழியாவும் கழைக்கக் கவியுலகம்
தானல்கும் பாரதிதா சன்"

புத்தறிவை நாளும் புதியவுணர் வின்விளைவை
நத்தும் தமிழுலகில் நற்புலமை—வித்தகனும்
பாரதிதா சன்பாட்டின் பாராட்டுப் பொற்கிழியின்
சீரதிகம் ஓங்க சிறந்து"

இடும்பைதவிர்த் தின்பவாழ் வெய்துநெறி எல்லாம்
குடும்பவிளக் கின்கவியிற் கூறி—அடும்பரிசார்
குற்ற மிழைப்போரும் கோமன்னர் கண்ணுடைச்
சுற்றமாச் சூழும் துணைவராம்—பெற்றியினை

நல்லதீர்ப் பென்னும் நகைச்சுவையார் நாடகத்தில்
சொல்லி விளக்கிப்பொய்ச் சூழ்ச்சிகளுக்—கெல்லை
அறம்வெல்லத் தீமை அழியும்வரை என்னும்
திறமெல்லாம் செவ்வே தெளித்து—விறற்கூடல்

பண்சேர் தமிழ்மும்மைப் பாண்டியன் மெய்ப்பரிசை
எண்சீர் விருத்தத் தியம்பி,நிதம்—ஒண்சீர்
எழிலியற்கை எங்கும் இலகும் பரிசை
அழகின் சிரிப்பில் அமைத்து—முழவிக்

கவிமழைக்கும் காராய்க் கவிதைப் புதுமைப்
புவிதழைக்கப் பாடுகுயிற் புள்ளாய்—அவியாப்
புகழ்வளர்க்கும் யாணர்ப் புலமைவளம் சேர்த்துத்
திகழ்பெருமை தானுணரான் செவ்வி—மகிழ்தமிழர்

பாடாத் தருமிக்குப் பண்டளித்த பொற்கிழியிற்
பீடார் தமிழ்ப்பாடும் பெற்றிமையான்—வாடாச்சீர்
பாராட்டி நல்குதமிழ்ப் பாரதிதாசன் பரிசே
ஊராட்டாய் ஓங்குகவே ஊங்கு"

# தமிழ் நாட்டு வால்ட் விட்மன்

கவிஞர் பாரதிதாசன் அவர்கள் தமிழ் நாட்டின் தலை சிறந்த கவிஞர்களில் ஒருவர்; காலஞ்சென்ற பாரதியாரின் பிரதம சீடராவார். பாரதியாரின் பாட்டல்கள் தமிழ் மக்களின் உள்ளத்தில் சுதந்திர உணர்ச்சியை உண்டு பண்ணினது போல பாரதிதாசனுடைய பாட்டல்கள் சமூகச் சீர்திருத்த உணர்ச்சியை மக்களுக்கு ஊட்டி வருகின்றன என்ருல் அது மிகையாகாது. இனிய எளிய நடையிலுள்ள இவரது பாக்கள் படிப்போருக்கு இன்பம் பயக்கும் என்பதில் யாதும் ஐயமில்லை. மதங்களிலும், பழைய ஆசாரங்களிலும் ஊறிக்கிடந்த மக்களிடையே இவருடைய பாடல்கள் ஒரு பெரிய மாற்றத்தை உண்டுபண்ணியிருக்கின்றன. ஆதலால் இவர் ஒரு புரட்சிக்கவி. அமெரிக்கப் புரட்சிக்கவி வால்ட்விட்மன். தமிழ் நாட்டுப் புரட்சிக்கவி பாரதிதாசன். இக்கவிஞரைப் பலதுறையிலும் பாராட்ட வேண்டியது தமிழ் மக்களின் முதற் கடமையாகும்.

கவிஞர் பாரதிதாசன் அவர்கள் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து தமிழ் நாட்டுக்குப் பெருந்தொண்டு செய்து வருவாராகுக!

கவிஞர்--- தேசிக விநாயகம்.

## தமிழ் நாட்டின் பொக்கிஷம்

"பாரதிதாசன் ஆவேசக்கவி; அவர் (அழகு) அலங்காரக்கவியல்ல; வெறும் ஜோடிப்பு வேலை செய்பவரல்ல; அகராதியைக்கொண்டு "கவி கட்டும்" மேஸ்திரியல்ல; புன்மைக் கவிதையைக் கண்டு மனம் பொங்கும் 'புலவர்' அல்ல; ஆவேசத்தையும், உணர்ச்சியையும் வெள்ளமாகக் கொட்டும் உயிர்க் கவி பாரதிதாசன் என்பது எனது தாழ்மையான எண்ணம். அவர் கையாளும் சொற்களின் எழிலையும், பசையையும், விசித்திரத் தன்மையையும் கண்டு அனுபவிப்பவர்கள், நான் சொல்லுவதை ஆதரிப்பார்கள் என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும்.

பாரதிதாசன் தமிழ் நாட்டின் பொக்கிஷம், அந்தப் பொக்கிஷத்தை தமிழர்கள் அனைவரும் போற்றுவார்களாக!

—வ. ரா.

# புரட்சிக்கவிஞன் வாழ்க

(ஔவை சு. துரைசாமி, அண்ணமலைப் பல்கலைக் கழகம்)

சுமார் அறுநூற்றைம்பது ஆண்டுகட்கு முன் நம் தமிழ்நாட்டுத் தில்லைநகரின்கண் ஒரு புரட்சிக் கவி தோன்றினர். அவருடைய புரட்சியுள்ளம் சைவ சமயத் துறைக்கண் சென்றது. அக்காலத்தே அது வேண்டியிருந்ததுபோலும். அவரைக் கொற்றவன் குடி உமாபதி சிவனர் என்று கூறுவர். அவர் காலத்துக்கு முன்பும் பின்பும் சைவ உலகில் பௌராணிக சமயமும் வேறு பல சமயங்களும் புகுந்து உண்மையறிவுக்கு ஒவ்வாத பல கருத்துக்களை நாட்டிற் புகுத்திப் பெருங் கலக்கத்தை விளைவித்தன. அக் கலக்கத்தினின்றும் மக்களைத் தெளிவுறுத்தற்கு எளிய முறையில் அமைந்த தமிழ் நூல்கள் மிகச் சிலவேயிருந்தன. அவையும் பழமைக்கண் வேட்கையும், புதுமைக்கண் வெறுப்பு முடைய மக்களால் புறக்கணிக்கப்பட்டன. பலரும், பழமையான நூல்கள் குற்றமில்லாதன; புது நூல்கள் பலவும் குற்றமுடையன என்றனர். மக்களும் தமக்குப் பகுத்தறிவென்ப தொன்றுண்டென வுணராது, பலர் புகழில் தாமும் புகழ்வதும், இகழ்வாராயின் இகழ்வதும் செய்து திரிந்தனர். இதனைக் கண்ட கொற்றவன் குடியார், மக்கள் அறிவுபெற்றிருந்தும் அதனைப் பயன் படுத்தாது அடிமையாய் மடிகின்றனரே யெனக் கண்டு,

"தொன்மைய வாமெனு மெவையும் நன்றாகா இன்று, தோன்றிய நூலெனு மெவையும் தீதாகா" என்று அறிவுறுத்தி, பகுத்தறிவில்லாத மக்களைத் "தவறுநலம் பொருளின்கண் சார்வாராய்ந்திடுதல் இன்மையினர்" என்றும், அவர்கள், ஒன்றைக் கண்டு பலரும் புகழ்ந்தால் தாமும் அதைப் புகழ்வர்; இகழ்ந்தால் தாமும் இகழ்வர் என்பார், "தவறுநலம் பொருளின்கண் சார்வாராய்ந்தறிதல் இன்மையினர் பலர் புகழில் ஏத்துவர், ஏதிலர் உற்று இகழ்ந்தனரேல் இகழ்ந்திடுவர்" என்றும், இவர் அறிவால் வறியராவர் என்பார், "தமக்கென ஒன்று இலரே" என்றும் கூறினர்.

இவருக்குப் பின் பல நூற்றாண்டு கழிந்தும் நம் நாட்டில் "தமக்கென ஒன்று இலர்" எனப்பட்ட மக்களே நிரம்புவாராயினர். சாதி சமயங்களின் பெயரால் மக்கட் குழுவில் உயர்வுதாழ்வுகளும் கருத்துப் பிளவுகளும் பல்கின; அதனால் தமிழரினம் சூறையிற் பட்ட பஞ்சுத் துய் போலப் பல்வேறு வகையில் சிதறித் தனித்துப் பிறர்க்கு அறிவு ஆண்மை பொருள் முதலிய துறையில் பிற்பட்டு அடிமையாய்ப்போயிற்று. தமிழன் பிறருடைய அறிவு ஆண்மை பொருள் முதலிய வகையில் தனித்து நிற்கும் சிறப்பிலன் என்பார் போலத் தமிழ்மொழி, வடமொழி முதலிய மொழிகளின் நீங்கித் தனித்தோங்கும் சிறப்பில்லாதது என்றெல்லாம் பலரும் கூறத் தொடங்கினர். தமிழ்ச் சான்றோரும் தமக்கென வொன்றிலராய் அவர் வழி யொழுகுவதே நெறியெனக் கொண்டனர். அந்நெறி அண்மையில் தோன்றிய பாரதியாரையும் விட்டிலதென்பதை, "ஆரிய நாட்டினர் ஆண்மையோ டியற்றும் சீரிய முயற்சிகள் சிறந்து மிக்கோங்குக" என்று பாடுதலாலும் துணியலாம். இன்றும் தமிழ்நாட்டுச் சட்டசபை யுறுப்பினர் தமக்குரிய தலைவரைத் தாமே தேர்ந்து கொள்ளும் தகுதியிலரென அவர்தம் மேலதிகாரக் குழுவினர் கருதுவதும், பலவகையால் அலைப்பதும், தமிழ்நாட்டுக் கல்வி நிலையங்களில் தமிழ் முதன்மொழியாக இல்லாமையும் போதிய சான்றுகளாகும்.

இந்நிலையில் மக்களது நல்லறிவை யெழுப்பி அவர்களை ஒடுக்கி நிற்கும் தடைகளை யுணருமாறு பண்ணும் ஒருவரைத் தமிழகம் எதிர்பார்ப்பதாயிற்று.

முன்னாளில் தமிழகத்தில் மக்கள் வாழ்வுக்கு வேண்டிய அறிவு நெறிகளை வழங்குந் தொழிலை மேற்கொண்டிருந்தவர் இனிய கவி வழங்கும் புலவர்களே யாவர். நாட்டில் ஏரி குளங்களைப் பெருக்கி, நீர் நிலைகள் மிகுவித்தோரும், போர் வரின் அஞ்சாது சென்று பொருது வென்றி மேம்படுவித்தோரும் புலவரேயென்

பழைத் தமிழகத்தின் வரலாறு காண்போர் நன்கறிவர். இடைக்காலத்தில் வாழ்ந்த புலவர்கள், மக்கள் நலத்தைப் பேணுவதிலும் தம்மை யாதரித்த வள்ளல்களின் புகழ் பாடுவதே செயலெனத் தொண்டாற்றியதனுல் தம் தலைமை நிலையை இழந்தனர். இந்நாளில் அவர்கள் மீளத் தலையெடாவாறு பிறமொழியும்பிறதொடர்புகளும் மேம்படலாயின. ஆயினும் மக்கள் தம்மைத் தமிழரென்றும் தமது தொன்மை நலம் இதுவென்றும் மெல்லத் தெரிந்துகொண்டனர். தமிழ்ப் புலவர்களின் தமிழ்ப் பணியின் தவறு நலங்களைப் பகுத்தறியலானுர்கள். அவர்களிடையே பாரதி தாசனுர் போலும் தகவுடைய கவிகள் தோன்றலாயினர். அவருட் பாரதி தாசனுர் தலைமையிடம் பெற்றுத் திகழ்கின்றார்.

இக்காலத்தே தோன்றும் கவிகள் உலகில் பிறந்து நிலவும் மக்கள் நல்வாழ்வு வாழ்வதற்குரிய நெறிகளைக் காண்பதும், அந்நெறிகட்குத் தடையாயிருப்பவற்றின் கொடுமைகளையுருப்படுத்தி மக்கட்கு உணர்த்துவதும் கடமையாகக்கொண்டுள்ளன. இதுகாறும் மக்கள் வாழ்க்கைக்கு மேம்பட்ட தேவ வாழ்க்கைகளும், மக்களியல்புக்கு அகப்படாத வாழ்க்கைகளுமே கவிகளால் பெரிதும் பாட்டுருவிற் காட்டப்பட்டுவந்தன. அவற்றின் அறிவு, மக்களை ஒரு சிறிதும் முன்னேறவில்லை. "வையத்து வாழ்வாங்கு வாழ்வதே வாழ்வு" எனத் திருவள்ளுவர் முதலிய சான்றோர்கள் அறிவுறுத்திய செய்தி மக்கட்கு நன்கு உணர்த்தப்படவில்லை. இக்குறைபாட்டால் தமிழரினம் தலைமையிழந்து இன்றைய தாழ்நிலை எய்திற்று. இந்நிலை இக்காலப் புலமையுள்ளத்தைப் பணி கொள்வதாயிற்று. ஆகவே இக்கவிகள் பலவும் இம்மை வாழ்வின் செம்மை நிலை குறித்தே அழகிய கருத்துக்களை வழங்குவதற்குரிய கருக்கொள்ளுவவாயின.

உரிய காலம் நன்கு வாயாதிருந்த காலம், இராமலிங்க அடிகள் காலம். எனினும் அவருள்ளம் தமிழரினத்தைக் கெடுக்கும் தடைகளையும் தளைகளையும் தகர்த்தெறியப் பெரும் பாடுபட்டுள்ளது.

"குலத்திலே சமயக் குழியிலே நரகக் குழியிலே குமைந்து வீண் பொழுது, நிலத்திலே போக்கி மயங்கியேமாந்து நிற்கின்றார்" என்பது முதலிய கருத்துக்கள் அவரால் வெளிவரலாயின. அக்காலைத் தமிழரினத்துப் பிளவுகளையும் பிரிவுகளையும் தமக்குப் பயன்படுத்திக்கொண்ட தன்னலக் கூட்டம் பெரும் போர் உடற்றிற்று. பின்னர்த் தோன்றிய பாரதியார் காலத்தில் உரிமைப் போர் நிலவுவதாயிற்று. அக்காலம் ஓரளவு பயன்படுவது கண்ட புலமையுள்ளம் பாரதியாரைப் பணிகொண்டது. அவரது முயற்சி நாட்டவரை அரசியலுரிமைப் பேற்றில் வேட்கை மிகுவித்துக் கற்றார் கல்லார் ஆடவர் பெண்டிர் அனைவரையும் ஓரளவு ஒருசேரத் தொகுக்கத் தலைப்பட்டது. அவ்வாறு மக்கள் தொகுவதைக் கண்ட தன்னலக் கூட்டம் அத்தொகுதிக்குட் புகுந்து, தன் செல்வாக்கால் தலைமையேற்றுத் தமிழரினம் ஒருமையுறுவதற்குத் தடையாயுள்ளவற்றைப் போக்கும் முயற்சியை விடுத்துத் "தேசியம்" என்ற போலிப் போர்வைகொண்டு மூடி, ஒற்றுமை யெய்தாமைக்குரிய கொடுமைகளையுள்ளூற வளர்த்து வருவதாயிற்று. இது புலமை வரலாறு.

கவி பாடும் புலமையுள்ளம் இக்கால வெள்ளத்தைக் கண்டவண்ணம் இருந்தது. மேனாட்டுப் போக்குவரவும் கலையறிவும் புலமையுள்ளத்துக்குத் துணிவும் ஆக்கமும் பயந்தன. கொக்கொக்கக் கூம்பியிருந்த தமிழ்க் கவி, வேற்றுமைக் கொடுமைகளாம் மீனினத்தைக் குத்தியுண்டு தேக்கெறியும் செவ்வி இதுவெனத் தெளிந்து தன் செயலைச் செய்யத் தொடங்கிற்று. தமிழ்ச் சமூக ஊழல்களையும் தடைகளையும் தளைகளையும் தமிழ்க் கவியுள்ளம் நன்கு கண்டு பாட்டுருவில் எடுத்துக் காட்டலுற்றது. இப்பாட்டுக்கள் பாரதி தாசனுர் பாடும் பாட்டு; அவருள்ளம் பண்டைத் தமிழ் வாழ்வின் செம்மையுணர்ந்து இன்றை வாழ்வின் இழிவு கண்டொறுக்கும் எழிலுள்ளம்.

இவர் காணும் தமிழரினத்தை ஒரு சிறிது காட்டி என் பணியை நிறைவு செய்வேன். தமிழ் மகன் ஒவ்வொருவனும் சஞ்சீவி பருவதத்தின் சாரலில் தோன்றும் குப்பன்; தமிழ் மகள் அவனோடு போந்து அறிவு கொளுத்தும் வஞ்சி. சஞ்சீவி பருவதம் பல மூலிகைகள் கொண்டு நிற்கிறது. ஒரு மூலிகையைத் தின்ற குப்பனும் வஞ்சியும் புதுக் காட்சி பெறுகின்றனர்.

> "வஞ்சிக்கும் குப்பனுக்கும் வையத்து மாந்தர்களின்
> நெஞ்சம் வசமாக நேரிலவர் பேசுதல் போல்
> செந்தமிழில் தங்கள் செவியிற் கேட்கப்"

பெறுகின்றார்கள். இங்கே இவர்களுண்ணும் மூலிகை கலையறிவொடு கலந்தூறியெழும் பகுத்தறிவாய் நின்று உண்மை நிலையையுணர்த்துவது காண்மின்! இப்பகுத்தறிவாகிய மூலிகையால் தமிழ் மக்களாகிய வஞ்சியும் குப்பனும், பிராஞ்சியரும் அமெரிக்கரும் இங்கிலாந்து தேசத்தாரும் தங்களுக்குள் கொண்டிருக்கும் மனக் கருத்தையறிந்து, தம் நிலையை யெண்ணத் தொடங்குகின்றனர்.

தமிழ் மக்களுள் பெண் மக்கள் தம் தமிழினத்தின் தாழ்நிலையை முன்னுறவுணர்ந்து தெளிந்து செயல் மேற்கொள்கின்றனர்; இதனைப் பாரதி தாசனுர் வஞ்சியின் வாய்மொழியாக வைத்து,

"பச்சிலையைத் தந்த பருவதத்தைக் கும்பிட்டாள்
'இந்த இலையால் இனிநன்மை கொள்க' என்று
சொந்தத் தாய்நாட்டுக்குச் சொன்னாள் பெருவாழ்த்து
வல்லமைகொள் பச்சிலையின் மர்மத்தைக் கண்டபடி
சொல்லி யெனைத் தூக்கிவந்து சூட்சுமத்தைக் காட்டிய
ணாளர் தாம் வாழ்வடைக" [கண்

என்று வாழ்த்துகின்றார். சஞ்சிவி பருவதத்தில் ஏற மாட்டாத வஞ்சியைக் குப்பன் தூக்கிச் செல்வது, தமிழ் மகளிர் பகுத்தறிவெல்லையில் செல்லமாட்டாது கிடப்பதும், கொண்டு செலுத்திய வழி, அவர்கள் முன்னதாகவே கொள்வன கொண்டு வேண்டுவன தெளிந்து செயற்படத் தொடங்குவதும் குறித்து நிற்பது காண்மின்!

பருவதத்தின் சாரலில் இருக்கும் குப்பன், நம் நாட்டில் பாகவதர் இராமாயண காலக்ஷேபம் செய்வதும், அனுமார் சஞ்சிவி பருவதத்தை யெடுக்கச் சென்று திரும்பும் காட்சியை அப்பாகவதர் சொல்ல மக்கள் கேட்டு மதிமயங்குவதும் கேட்டும் கண்டும் அறிவு மருளுகின்றான். இதுதானே இந்நாளைய தமிழ் மக்களின் நிலை! சாதி சமூக சமய வேற்றுமைகளையும் பிறவற்றையும் மேடையிலும் திண்ணையிலும் விரியப் பேசுவதும், ஆங்காங்கே நிகழக் காண்பதும் செய்தும், மீள மனமருண்டு செயல் மடிந்து உளந்தேய்ந்து போகின்றார்களன்றோ! இவர்களை நோக்கி நம் பாரதி தாசனார், அறிவுறுத்தத் தொடங்கி, குப்பனாகிய தமிழ் மகற்கு வஞ்சியாகிய தமிழ் மகள் கூறுவதாக வைத்து,

"வானவவும் அங்கங்கள் வானரங்கள் ராமர்கள்
ஆனது செய்யும் அனுமார்கள் சாம்பவந்தர்
ஒன்றல்ல ஆயிரம் நூல்கள் உரைக்கட்டும்;
விஸ்வரூபப் பெருமை மேலேறும் வன்மைகள்
உஸ்ஸென்ற சத்தங்கள் அஸ் என்ற சத்தங்கள்
எவ்வளவோ நூலில் எழுதிக் கிடக்கட்டும்;
செவ்வைக் கிருபை செழுங்கருணை யஞ்சலிக்கை
முத்தி முழுச் சுவர்க்கம் முற்றும் உரைக்கட்டும்;
இத்தனையும் சேரட்டும்; என்ன பயனுண்டாம்?
உள்ளபகுத் தறிவுக் கொவ்வாத ஏடுகளால்
என்னை யசைக்க இயலாது; மானிடர்கள்
ஆக்குவதை யாகா தழிக்குமோ? போக்குவதைத்
தேக்குமோ? சித்தம் சலியாத் திறன்வேண்டும்!
மக்கள் உழைப்பில் மலையாத நம்பிக்கை
எக்களிக்க வேண்டும் இதயத்தில் ஈதன்றி
நல்லறிவை நாளும் உயர்த்தி யுயர்த்தியே
புல்லறிவைப் போக்கிப் புதுநிலை தேடல் வேண்டும்
மக்கள் உழைக்காமுன் மேலிருந்து வந்திடுமோ?
எக்காரணத்தாலும் இன்மையிலே யுண்மை யுண்டோ?
மீளாத மூடப் பழக்கங்கள் மீண்டுமுமை
நாடா திருப்பதற்கு நான் உங்களையின்று
சஞ்சீவி பர்வதத்தில் கூப்பிட்டேன் தற்செயலாய்
அஞ்சும் நிலைமையே ஆங்கே நிகழ்ந்ததுண்டாம்
உங்கள் மனத்தில் உறைந்து கிடந்திட்ட
பங்கஞ்செய் மூடப் பழக்க வழக்கங்கள்
இங்கினி மேல்நில்லா எனநான் நினைக்கின்றேன்"

என்று கூறுகின்றார். இதனைக் கேட்கும் தமிழ் மக்கள் குப்பன் கூறுவதுபோல,

"இன்பஞ் செறிந்திருக்கும் இப்பெரிய தேசத்தில்
முப்பது முக்கோடி மாந்தர்கள் மொய்த்தென்ன
செப்பும் இயற்கை வளங்கள் செறிந்தென்ன?
மூடப் பழக்கம் முடிவற்ற கண்ணுறக்கம்
ஓடுவதென்றோ உயர்வதென்றோ நானறியேன்."

என்று ஒவ்வொரு தமிழ்மகனும் தமிழரினத்தைப்பார்த்து உரைக்கும் நிலையில் இருந்து வருகின்றான். இது பாரதி தாசனார் காட்டும் தமிழுலகம்; உண்மையும் இதுவே. இவ்வாறு உண்மையை உள்ளவாறு காட்டுவதே புலமையும் கவி வன்மையுமாகும்.

அன்று இரண்டாயிர மாண்டுகட்கு முன்பு ஒரு புலவன், உலக வாழ்வில் காணப்படும் துன்பங்களைக் கண்டு "இன்னா தம்ம உலகம்" என்று கூறி, மேலும் இன்னாதாயினும் மனம் மழுங்காது, ஊக்கங் குன்றாது, அறிவு குறைவுபடாது "இனிய காண்க இதன் இயல்புணர்ந்தோரே" என்று ஊக்கங் காட்டினான்; பின்னே வந்தவர், பின்னே கூறியதை மறந்து முன்னே கூறியதை மேற்கொண்டு, "இன்னா தம்ம உலகம்" என்பதை வற்புறுத்தினர்; தலைமை சான்ற தமிழரினம் அதனால் மடிமை சான்ற அடிமைக்கண் அழுந்திற்று; இன்று தோன்றிய புலவனாகிய பாரதிதாசன், "இனிய காண்க இதன் இயல்புணர்ந்தோரே" என்ற கருத்தை வற்புறுத்துவது இக்காலத்து வேண்டும் இன்பத் தமிழ்த் தொண்டாகும். இத்தகைய தொண்டால் தமிழரினத்தை மேம்படுவிக்கும் இன்றமிழ்ப் புலவன் பாரதிதாசன் இனிது வாழ்க.

## கவிஞன்

உள்ளதை வெளிப்படையாக, சீர் தளைகளுக்குக் கட்டுப்படாமல், தைரியமாகச் சொல்பவனே கவிஞன். அவன் எதுகை மோனையின் அடிமையல்லன். சொல்லிற்கும், யாப்பிற்கும், இலக்கணத்திற்குங் கூட அவன் அடிமையல்லன். அவன் அவற்றின் தலைவன்; கருத்தின் முதல்வன். அவன் ஒரு சிருஷ்டி கர்த்தா!

கவிஞன், எந்தப் பழைய வழக்கத்திற்கும் கொத்தடிமையல்லன். பழைமைக் குட்டையில் பாசிபடர்ந்த பழக்கங்களை ஒழித்து, அவன் வாழ்விற்கு ஊட்டமளிக்கிறான்.

உண்மைக் கவி ஒரு தீர்க்கதரிசி. அவன் பழங் கவிகளின் எதிரொலி அல்லன்; பழைய வழக்கத்தின் பின்பாட்டுக்காரன் அல்லன். கவி, வெறும் நீதிப்புரோகிதன் அல்லன். உவமை அணிகளிலும், வர்ணனைகளிலும் விளையாடிக் காலங்கழிப்பவன் அல்லன். கவிகள், பிறர் அறிய முடியாத ஆவேசத்தை விளக்குவோர், நிகழ்காலத்திற்படிந்த மகத்தான எதிர்காலச் சாயலின் கண்ணடிகள். அங்கீகாரமின்றி, உலகிற்கு அறமளிப்போர் கவிகளே! — கவிஞர் வால்ட் விட்மன்.

# பாரதியாரால் பாராட்டப்பெற்ற கவிஞர்

(குயில் சிவா—புதுவை)

[புதுவைக் குயில் சிவா தாத்தா இனிமையாகப் பாடும் திறனுடையவர். குரலில் இனிமையுண்டு. எனவே, பாரதியார் இவரைக் "குயில்" என அழைத்தார். பாரதியார், பாரதிதாசன் ஆகியவர்களுடன் இவர் நெருங்கிய தோழமை பூண்டவர்.]

கவிஞர் பாரதிதாசன் அவர்கள் என் நண்பர். இன்று நேற்றல்ல; சிறு வயது முதல்.

அவர் சிறு வயதிலேயே பாடல் எழுதும் திறன் வாய்ந்தவர். அவரால் அப்பொழுது எழுதப்படும் பாடல்களை, அடிக்கடி நாங்கள் பாடிக் களிப்பதுண்டு. எதிர்காலத்தில் பாரதிதாசனவர்கள், இணையற்ற கவிஞராய் விளங்குவாரென்று அப்பொழுதே நாங்கள் எண்ணினோம். அந்த எண்ணம் இன்று நிறைவேறியது கண்டும், அவர்க்குச் சிறப்புச் செய்யத் தமிழகம் முன்வந்தது கண்டும், யான் பெருமகிழ்ச்சி யடைகின்றேன்.

கவிச் சக்ரவர்த்தி சி. சுப்பிரமணிய பாரதியாரவர்கள், கவிதையில் ஒரு புரட்சி செய்தவர். அவர் காலத்தில்—அவரால் பாராட்டப்பெற்ற ஒரு கவிஞர் இருந்தாரென்றால், அவர்தாம் நண்பர் பாரதிதாசன் அவர்களாவர்.

ஒருநாள் பாரதியாரவர்கள், தாம் குடியிருந்த ஈஸ்வரன் கோயில் தெரு வீட்டில், படுத்தபடியே பாட்டு எழுதிக்கொண்டிருந்தார். அவர் ஏதேனும் எழுதுவதாயிருந்தால், பெரும்பாலும் படுத்துக்கொண்டு தான் எழுதுவது வழக்கம். நானும் நண்பர் சுப்புரத்தினம் அவர்களும் வழக்கப்படி அவர் இல்லஞ் சென்றோம். அவர் எழுதிக்கொண்டிருந்ததால் ஓர்புறம் அமைதியாக உட்கார்ந்தோம். அவர் எங்களை வரவேற்குங் குறிப்பாகத் தலையசைத்து, மேலும் எழுதத் தொடங்கினார். பிறகு சற்றுநேரத்தில் தாம் எழுதுவதை நிறுத்தித் தம் எழுதுகோலினால் நெற்றியில் தட்டிக் கொண்டபடியே இருந்தார். எழுதும்போது கருத்து தடைப்பட்டால், அவர் இவ்விதம் செய்வது வழக்கம். இதையறிந்த நண்பர் சுப்புரத்தினம், மெள்ள அவரருகே சென்றமர்ந்து, அவர் எழுதியதை வாய்க்குள்ளாகவே படித்தார். அப்பாட்டில் கடைசி அடி முற்றுப்பெறாமலே இருந்தது. உடனே சுப்புரத்தினம் இரண்டொரு வார்த்தைகளைச் சொல்லிக் காட்டி, இப்படி முடிக்கலாமே என்றார். உடனே பாரதியார், "பேஷ்! சுப்பு, அமுதம்! அமுதம்!" என்று சொல்லியபடியே அவ் வார்த்தைகளைக் குறித்துக் கொண்டார். அப்போது அவரடைந்த பெருமகிழ்ச்சியை எடுத்துச் சொல்ல என்னால் முடியவில்லை. உடனே தம் மனைவி செல்லம்மாளை அழைத்தார். "காப்பி தயாராகட்டும். நான், சுப்பு, குயில் சிவா மூன்று பேர்" என்றார். அவரால் அளிக்கப்பட்ட காப்பி எங்களை அப்பொழுது மகிழ்விக்கவில்லை. அவரடைந்த பெருமகிழ்ச்சியே எங்களையும் மகிழ்வித்தது.

இதைப்போல் பல சந்தர்ப்பங்களில், பாரதியாரால் பாராட்டப் பெற்றவர் நண்பர் பாரதிதாசன். ஆனால் தமிழகம், இன்றுதான் அவரைப் பாராட்ட முன் வந்திருக்கிறது. நாட்டின் நிலையை எண்ணும் போது, இப்பொழுதாவது அவரைப் பாராட்ட முன் வந்ததற்கு மகிழ்ச்சியடையத்தான் வேண்டியிருக்கிறது.

—❖—

## வாடா மலர்

"கவிஞர் கனக சுப்புரத்தினம் காலத்தின் கூறு, கால நிலையின் விளைவு; எனினும் காலத்தைக் கடந்த கவிஞர்; நிலையை மாற்றி யமைக்கும் கருத்துகள் வழங்கும் கலைஞர். புரட்சி வாடை வீசும் கருத்தோவியங்கள் அவர் கவிதைகள். கவிஞரின் கவிதைகள் இனத்தைச் சூழ்ந்திருக்கும் இருள் அகற்றும் கைவிளக்கு; நலிந்த நம்மக்களுக்கு வலிவூட்டும் நன்மருந்து; மடைமை யகற்றி அறிவுடைமை பயக்கும் அறிவுக் கதிர்கள்; அடிமை நீக்கி உரிமை வழங்கும் வழிகள்.

"வள்ளுவர் வழங்கிய திருக்குறள்போல் கவிஞர் இயற்றிய 'குடும்ப விளக்கு' தமிழ்ப்பெரும் பூங்காவில் மலர்ந்த வாடா மலர்—எக்காலமும் எல்லோரும் கைக்கொள்ளும் கருத்தோவியம்."

—கா. து. நடராசன், M.A., B.L.

# தமிழருக்குத் தனியரசு எதற்கு?

(ச. சோ. இலட்சுமிரதன் பாரதி, M.A., B.L.)

ஆரம்பத்தில் ஆங்கில ஆட்சியின் பதவிகளில் பங்கு கேட்ட காங்கிரசு, இன்று வெள்ளையரை வெளியேற்றி இந்திய முழு அரசுரிமையை விரும்பி நிற்கின்றது. சிறு பகுதியினர் உரிமைகளைக் காப்பதற்குத் 'தனித் தொகுதியும் போதிய பதவிகளும்' வேட்ட முஸ்லிம் லீக் இன்று 'பாக்கிஸ்தான்' என்னும் நாட்டுப் பிரிவினை நாடி நிற்கின்றது. அறம் விலக்கும் பிறப்புரிமை பேணும் பார்ப்பனர் பதவிகள் அனைத்தையும் கொள்ளை கொள்ளும் பிழைகடிந்து, தென்னாட்டில் அவற்றை வகுப்புவாரியாகப் பிரித்து வழங்கும் நயங்காட்ட விழைந்த நீதிக் கட்சி இன்று திராவிட நாட்டுப் பிரிவினை கோரி நிற்கின்றது.

வெள்ளை நிறத்தவர் திமிரை ஒழித்தல் திறமே எனில், ஆட்சியனைத்தையும் ஒரு கட்சியே அடைதல் அறமாமா? ஒரு மொழி பேசும் ஓரினத்தவரான ஆங்கில மக்களுடைய பொதுநலமே பேணி நடத்தும் பாராளுமன்றக் கட்சி ஆட்சியின் மாண்பில் மயங்கி, கேவலம் படைத் துணையும் பிரித்தாளும் சூழ்வினையும் கொண்ட பிரிட்டிஷ் இந்திய அரசு ஒருமை எண்ணி, மெய்யுணராது மொழியுங் கலையும், குணமும் பண்பும் வேறுபடுத்தும், 'பல்குழுவும் பாழ் செய்யும் உட்பகையும்' மலிந்த பல பகுதிகளின் தொகுப்பான இந்தியாவை ஒரு தேசிய இனமெனக்கொண்டு, குடியாட்சி நிறுவக் காங்கிரசே முனைந்தாலும், அது முடியாததொன்றும் என மொழிவர் பலர்.

ஒன்றுபட்டுக் கூடி வாழமுடியாத வேற்றுமை உணர்ச்சிகளுடையவர்கள் ஓரினத்தவரேயாயினும், ஒரு குடும்பத்தவரேயாயினும் பிரிந்து வாழ்தல் முறையே. எனில் இந்தியாவின் பல மாகாணங்களிலும் உள்ள முஸ்லிம்கள் எல்லோரும் ஓர் இனத்தவர் (Race) அல்லது ஒரு தேசிய இனத்தவர் (Nation) என்று ஒப்புக்கொள்வதற்கில்லை. பல இனத்தவரும், பல தேசிய இனத்தவருங்கூட ஓர் அரசின் குடிகளாக ஒரு நாட்டில் வாழலாம். அமெரிக்காவிலும், கானடாவிலும் பல தேசிய இனத்தவர் குடி ஏறி ஓர் அரசின்கீழ் வாழ்கின்றார்கள். ஒரு தேசிய இனத்தைச் சார்ந்த மக்கள் இயற்கையாக அமைந்த தக்க எல்லைகளையுடைய நாட்டிலே, தம் நாகரிகத்திற்கேற்ப அரசு அமைத்து வாழ்தலே சாலச் சிறந்ததாகும். எனவே இந்தியா முழுவதிலும் காங்கிரசு அல்லது வேறு எந்தக் கட்சியினரின் ஒரே தன்னாட்சி முறை ஏற்படவேண்டுமென்றோ அல்லது அதன் ஒரு பகுதியை முஸ்லிம்களின் பெரும்பான்மை கருதிப் பிரித்து முஸ்லிம் அரசு ஏற்படுத்த வேண்டுமென்றோ, இன்றியமையாத அவசியமெதுவும் இல்லையெனலாம்.

ஆனால் நெடும் பண்டைக் கால முதல் பழம் பெரு நாகரிகச் சிறப்புடைய தமிழர்கள் தம்முள் ஒரு சிறிது மத வேறுபாடுடையவர்கள் எனினும், இயற்கை வளங்களும் அரண்களுமுடைய தொன்மையான தம் நாடு போற்றித் தனியரசு கோரும் தகுதியுடையவரென்பதில் எவ்வித ஐயப்பாடும் யார்க்கும் எழுவதற்கிடமில்லை.

'யாதும் ஊரே, யாவருங்கேளிர்' என்ற விரிந்த கொள்கையும், பரந்த நோக்கும் உடைய தமிழர் நாட்டுப் பிரிவினையும் தனியரசும் விரும்புவானேன் எனக் கேட்கலாம். தம் நாட்டைப் பிறர் கொள்ள அடிமை நிலை எய்தி, தம் நாகரிக வாழ்க்கையும் பாழ்பட்டுச் சீரழிந்தது. நண்பர் வாயிலே 'பெயக்கண்டும் நஞ்சுண்டமையும், நயத்தக்க நாகரிகம்' வேண்டும் தமிழர்கள், இன்று மனம் நலிந்து உடல்மெலிந்து, தம்மொடு உண்டேனும் கொடுத்தேனும் கொண்டேனும் உறவாட மறுக்கும் 'ஒட்டாத' ஆரியப் 'பார்ப்பனரை ஐயரென்றும், வெள்ளைப் பரங்கியைத் துரையென்றும்' புகழ்ந்து, அவர் 'பின்சென்று' வாழும் நிலையெய்தி 'அந்நிலையே கெட்டொழியாமலும்' 'நாமமிது தமிழரெனக் கொண்டு' நடைப்பிணங்களாகத் திரிகின்றார்கள்.

தமிழர் இந்நிலை எய்தியதேன்? விடுபட்டு உய்வதெங்ஙனம்? வள்ளுவர் குறளை இன்று பல்வேறு மொழிகளில் இயற்றி உலகம் போற்றுகிறது. அப்புல

வலை உலகிற்குத் தந்து வான்புகழ் கொண்டது தமிழ் நாடு. இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட அந் நூலைச் சிறிது ஊன்றிப் பார்த்தால் தமிழர் உயர் வாழ்க்கையையும், அவர் தாழ்விற்கு ஏதுவாய் மூலைத்த காரணங்களையும் கண்டறியப் பல சான்றுகள் விளக்க மாகச் சொல்லப்படுகின்றன. அக்காலத்தில்தான் ஆரிய நாகரிகம் தமிழகத்தில் புகுந்து மக்களை மருளச் செய்து, அவர்களுடைய பண்புகள், கொள்கைகளோடு மோதி மொத்துண்டு, நிலைபெற முயன்றிருக்க வேண்டுமெனத் தெரிகிறது. அறிவில் தமக்கு நிக ரற்ற வள்ளுவர், இருதிறக் கொள்கைகளையும் சமன் செய்து சீர்தூக்கி, மாய உருவமும் தோற்றமும் கொண்டு ஏமாற்றுவதும், தமிழர் அழிவிற்கு ஆவது மான புதிய ஆரிய நாகரிகப் படுகுழியில் ஆழ்ந்து மடியாவண்ணம் தமிழர்களை எச்சரித்திருக்கிறார். ஒரு சில மட்டும் இங்குக் குறிப்பிடுதல் தமிழர் பெருநூலா கிய குறளை மாணவர்கள் இந்நோக்குடன் ஆராய்வதற் கும், தமிழர் மீண்டும் தம் நிலை அடைய வேண்டிய அவசியத்தை உணர்வதற்கும் ஒரு சிறிது பயன் படலாம்.

கல்வியும் அறிவும் ஆய்ந்து ஆய்ந்து, தேர்ந்து தெளிந்துகொள்ள வேண்டிய எல்லை வரம்புகளற்ற புதை பொருள்கள் ஆகலின் அவற்றை 'மறை' என்ப தும், மாசறக்கற்று மெய்ப்பொருள் கண்டார் சொற் களை 'மறைமொழி' என்பதும், ("நிறைமொழி மாந்தர் ஆணையிற்கிளந்த, மறைமொழிதானே மந்திரமென்ப—" தொல்காப்பியம்) அம்மறைமொழிகள் அவரது நிறை விற்கும் பெருமைக்கும் சான்றாகுமென்பதும் தமிழர் துணிபு. "நிறைமொழி மாந்தர் பெருமை, நிலத்து மறைமொழி காட்டிவிடும்—" குறள்—28. இக்கருத்து கல்வியையும் அறிவையும் மக்களிடையே வளர்ந்து பெருகச்செய்யும். 'கல்வி கரையில, கற்பவர் நாள் சில.' ஆனால் எக்காலத்தும் கிடைக்கக்கூடிய சகல கலைகளையும் ஞானத்தையும் கடவுள் காட்ட, அவை 'வேதங்கள்' (மறைகள்) ஆகப் பொறிக்கப் பட்டனவென்றும், சகல மும் அதில் அடங்கிற்று, அதில் இல்லாதது எதுவு மில்லையென்றும் ஆரியர் அறைந்தனர். திரட்டி உருட்டித் தரப்பட்ட அந்த உரைகளை ஓதி ஓதி மனத் திற் பதித்து உருச்செய்வதும், அவற்றையே மீண்டும் மீண்டும் பன்னிப் பன்னி விரித்து [illegible]பொருளெல் லாம் அதிலேயே காண்பதும், சீனர் தம் பாதங்களில் இரும்புச் சட்டங்கள் அணிந்து வளர விடாமற் செய்து அழகு தேடுவதையே நிகர்க்கும். இவ்வேதங் களை வள்ளுவர் 'ஓத்து' என்றும், அதை ஓதுபவர் களைப் பார்ப்பனர் என்றும், ஒழுக்கமற்ற பார்ப்பான், பிறப்புயர்வு உலகில் கிடையாதாகையால், அழிந்து ஒழிவான் என்றும் எடுத்துச்சொல்லி, 'மறை', 'மறையோர்,' 'அந்தணர்' என்ற சொற்கள் அவர் பால் அமையாமை காட்டியுள்ளார்.

"மறப்பினும் ஓத்து கொளலாகும் பார்ப்பான்
பிறப் பொழுக்கங் குன்றக்கெடும"—(134)
அந்தணரென்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டு ஒழுகலான்—(30)

மேலை நாடுகளில் காரல் மார்க்சு (Karl Marx) தொழிலொன்றே உண்மையான மதிப்பும் விலையு முடைத்தென்பதை விளக்கினர். அதற்கு முற்பட்டு வெகு காலமாகவே தமிழர் பெருமைக்கும் சிறப்புக் கும் தொழிலொன்றே அளவு கோலாகக் கொண்ட னர். ஆரியரோ எவ்வகையான பொருத்தமும் பொறுப்புமற்ற பிறப்பொன்றையே மக்கள் உயர்விற் கும் தாழ்விற்கும் அறிகுறி என்ற விபரீதக் கொள் கையைப் புகுத்தினர்.

"பிறப் பொக்கும் எவ்வுயிர்க்கும் சிறப்பொவ்வா
செய் **தொழில்** வேற்றுமையான்"—(972)

ஒழுக்கமும் தன்மானமும் தமிழர்க்கு உயிரினும் பெரிதாகப் போற்றும் பொருள்கள்.

"இன்றி யமையாச் சிறப்பின வாயினுங்
குன்ற வருப விடல்"—(961)

ஆரியருக்கோ ஆபத்தில் எதுவும் செய்வது பாவ மாகாதென்பது தர்மம்.

தமிழர்க்கு அன்பும் அருளும் தலைசிறந்த மக்கட் பண்புகளாகும். அகப்புற அறவாழ்க்கையிலன்றி, அறமிலா மாற்றாரைப் புறங்காணும் மறவாழ்க்கையி லும் அன்பே அடிப்படை.

"அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கு மஃதே துணை"—(76)

"அன்பின் வழியதுயிர் நிலை"

எனவே,

"நன்று ஆகும் ஆக்கம் பெரிதெனினும், சான்றோர்க்கு
கொன்று ஆகும் ஆக்கம் கடை"—(328)

ஆரியருக்கோ, மந்திரத்தாலும், தந்திரத்தாலும், பிற உயிரைக் கொன்று பலி தருவதாலும், வேண்டிய வற்றைச் சாதித்துக் கொள்ளுதல் தர்மம்.

"அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று—(259)

என வெறும் வேதியர் வேள்விச் சாலைகளை எள்ளி இகழ்ந்தார். தமிழருக்கு மானமும் தவமும் (முயற்சி) தானம் செய்தலும் (ஈதல்) பெரிது; ஆரியருக்குத் தானம் வாங்குதலும் (யாசகமும்) வேள்வியும் உயிர்.

உழவும் தொழிலும் பெண்ணும் கற்பும் போற்றினர் தமிழர். ஆக்கம் தரும் இனையவை எல்லாம் இழிவுபடுத்தி, பிறப்பொன்றே பெரிதெனப் பேணினர் ஆரியர். இத்தீய வழியினை எற்ற தமிழர் பிற்காலத்தில் உழவரையும் தொழிலாளிகளையும் பள்ளரென்றும் பறையரென்றும், மள்ளரென்றும் கடைசியரென்றும் பழித்து வாழ்வினைக் கெடுத்தொழித்தனர். இன்றோ, "ஏழையென்றும் அடிமையென்றும் எவனுமில்லை ஜாதியில்" என்று புதுப்பாடல்கள் எழுதிப் படிக்கலாயிற்று; என்னே நமது பேதமை!

உலகம் (உயர்ந்தோர்) பழித்த தொழிப்பது தமிழன் கடன். தமிழ்த்தாய், "ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும், தன் மகனைச் சான்றோன் எனக் கேட்டு." எனவே தமிழ் மகன் "ஈன்றாள் பசி காண்பானாயினும், சான்றோர் பழிக்கும் வினை" செய்ய ஒருபோது மிணங்கான். ஆரியருக்கோ, "முதுகுரவர், மனைவி, மக்கள், பசியால் வருந்துழி, தீய பல செய்தேனும் அவரைக் காப்பாற்றுதல" அறநெறி. இன்னும் "இறப்பவருவழி இனிவந்த செய்தாயினும் உய்க" என்பது வடநூன் முறை. அன்னார்க்கு "மழித்தலும் நீட்டலும்" போன்ற வெளி வேடங்களே வாழ்க்கைக்குகந்த ஆசாரங்கள்.

இரத்தலினும் இழிவுடையதொன்று தமிழர்க்கில்லாகும். ஆரியர்க்கோ ஆறு தொழில்களில் ஒன்றாகிய அருங்கடன் அது. "ஆவிற்கு நீரென்று இரப்பினும் நாவிற்கு, இரவின் இளிவந்ததில்"—(1066) என்பது தமிழன் போற்றும் குறள் வாக்கு.

இவ்வாறே இன்னும் சான்றுகளைப் பெருக்கிக் கொண்டே போகலாம். வள்ளுவர் குறள் கலங்கரை விளக்கமாக இருந்தாலும் பிறவிப் பெருங்கடலில் தமிழன் நிலை தெரியாது சீர் குலைந்தது வருந்தத் தக்கதே.

விரைவில் இப்புது நாகரிகத்தின் போக்குகள் தமிழ் நாடெங்கும் பரவி நிலவியதை விளக்குவதற்குச் சிலப்பதிகாரம் நாடுகாண் காதையில் அடுத்தடுத்து இரு சித்திரங்கள் இளங்கோ வடிகளால் நமக்கு வழங்கப்பட்டிருக்கின்றன:

"உழைப்புலிக் கொடித்தேர் உரவோன் கொற்றமொடு
மழைக்கரு உயிர்க்கும் அழல்திகழ் அட்டில்
மறையோராக்கிய ஆவுதி நறும்புகை
இறையுயர் மாட மெங்கணும் போர்த்து
மஞ்சுசூழ் மலையில் மாணத் தோன்றும்
மங்கல மறையோர் இருக்கை"

ஆக்கத்திற்குக் காரணமாக நம்பும் வேள்வியும், மறையோரும் அவர் சுகபோக வாழ்வும் இதில் தீட்டியிருப்பது காண்க. அடுத்து,

"பரப்பு நீர்க் காவிரிப் பாவைதன் புதல்வர்
இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும்

(பார்ப்பனரும் அரசரும் உழவரால் வாழ்தல்)

உழவிடை விளைப்போர் பழவிறலூர்களும்
பொங்கழி ஆலைப் புகையொடும் பரந்து
மங்குல் வானத்து மலையிற் றோன்றும்,
ஊரிடை யிட்ட நாடுடன்."

உண்மையில் சகல ஆக்கங்களுக்கும் அடிப்படையான உழைப்பாளிகளின் நலமும் பயனும் இரப்போரும் காவலரும் கொண்டு களிக்கும் சுரண்டல் வாழ்க்கையைக் குறிப்பாக உணர்த்தியிருப்பது காண்க.

இவ்வாறு இடையே புகுந்து தமிழர் நிலை குலைத்து அவர்தமைக் கெட்டொழியச் செய்த அயலார் அநீத வஞ்சகக் கொள்கைகளை வெட்டி வீழ்த்த நாளும் கவிபாடும் நம் புரட்சிக் கவிஞர் நீடுழி வாழ்க!

## கவியின் உள்ளம்

கவி, ஒரு விசித்திரமான மனிதன். அவன் வயிறு காய்ந்துகொண்டிருக்கும்; அதைப்பற்றிக் கவலையில்லாது, ஏதோ ஒரு கற்பனையுலகில், ஏழாவது உப்பரிகையில், உல்லாசமாக ஒரு பெண்ணுடன் சல்லாபித்துக் கொண்டிருப்பான். அல்லது ஒரு தலைவனை, அவன் தலைவியிடமிருந்து பிரியச்செய்து, அவனையும் அவளையும் காதல் நோயால் வாட்டி வதைத்துக்கொண்டிருப்பான். நாம், 'சீ' என்று துரத்தும் கருங் காக்கையிடமிருந்து, அவன் ஓராயிரங் கதைகள் கேட்டுக்கொண்டிருப்பான். அவன் உள்ளத்தினின்று ஊற்றெடுத்துப் பாய்வதே கவிதை.

—கோவை. அ. அய்யாமுத்து.

# The Indian Overseas Bank Ltd.,

*Head Office*: **MADRAS.**

| | | | |
|---|---|---|---|
| ISSUED & SUBSCRIBED CAPITAL | | ... | Rs. 50,00,000 |
| PAID-UP CAPITAL | ... | ... | „ 30,78,130 |
| RESERVE FUND | ... | ... | „ 7,00,000 |

*CHAIRMAN :*

**The Hon'ble Mr. M. Ct. M. Chidambaram Chettyar**

*General Manager :*

**Mr. A. SUBBIAH**

*Dy. General Manager ;* **Rao Sahib. D. R. Vedamuthu**

*District Manager, Malayan Branches* **Rao Sahib. S. R. V. Arasu**

*BRANCHES :*

**INDIA.**

| | | |
|---|---|---|
| Alleppey | Karaikudi | Sivaganga |
| Bangalore City | Kumbakonam | Tadpatri |
| Bombay | Madura | Trichinopoly |
| Calicut | Negapatam | Tanjore |
| Cannanore | Pudukottah | Tirunelveli |
| Coimbatore | P. Alagapuri | Tiruvarur |
| Devakottah | Salem | Trivandrum |
| Gudiyattam | Srivilliputtur | Tuticorin |
| | | Vellore |

*Sub Offices :*

Mannargudi Muthupet Koothanallur Shiyali Kuttalam

*Overseas Branches :*

| | | |
|---|---|---|
| Ceylon | — | Colombo |
| Malaya | — | Ipoh, Kuala Lumpur, Malacca, Penang & Singapore |
| Burma | — | Rangoon (To be reopened shortly) |

*Foreign Agents :*

**The Chase National Bank of the City of New Yark, New Yark & London.**

**THE MIDLAND BANK LIMITED, LONDON.**

**SAFE DEPOSIT LOCKERS AVAILABLE.**



நாட்டு மக்கள் அனைவரது நன்மதிப்பையும்
நிதியளிப்பையும் பெற்ற நமது கவிஞர்.

# பாண்டியன் மேற்காதல்

கல்யாணி—ஆதி

தவக்கம் :

பாண்டியன் என் சொல்லைத்
தாண்டிப் போனாண்டி

உடன் தவக்கம் :

ஈண்டு மையலில் நான் தூண்டிலில் மீனாய்
மாண்டிட விடுததே வேண்டிட வேண்டிட




ஆடல் :

டி. என். இராசலட்மி



அடி :

1. தமிழ் இசைப் பேச்சும் செங்கோலோச்சும்
தடக்கை வீச்சும் காதலைப் பாய்ச்சும்!
இமைப்பினில் ஓடி அவனைத் தேடி
என்னகம் நாடி, வாடி, போடி!

2. பிரிந்திடும் போது நெஞ்சு பொறாது
வரும்போது பேசாதிருக்க வொண்ணாது
எரிந்திடும் சினத்தில் எதிர் வருவானேல்
என்னுயிர் தாவிடும் அன்னவன் மேல்!

—பாரதிதாசன்





ஸ்ரீ ராம பால கான விநோத சபா
காரைக்குடி

தத்துவ நீதிகள்! தந்திரக் காட்சிகள்!
உத்தம வசனங்கள்! உயர்ந்த கருத்துக்கள்!

இவை அனைத்தும் ஒருங்கே அமைந்தது

# திருமழிசை ஆழ்வார்

நாடகம்

## சென்னை, மவுண்ட் ரோடு, S. V. S. நியூ தியேட்டரில்

**எமது அடுத்த நாடகம்:—"செயின்ட் பிலோமினு"**

சினிமாவுலகிலும், நாடகவுலகிலும் இதுவரை நீங்கள் கண்டிராததும், எமக்கே உரிமையாக்கப் பெற்றதுமான இதர சிறந்த நாடகங்கள்:

| | |
|---|---|
| பக்த சாருகதாசர் | எதிர்பார்த்தது |
| தாக சாந்தி | பக்த மீரா |
| குடும்பவாழ்க்கை | ஏகம்பவாணன் |
| வினையின் விளைவு | விஜய நகர சாம்ராஜ்யா |
| புகழேந்திப்புலவர் | சிவன் சக்தி |
| பகவான் புத்தர் | பக்த ஜீவா |
| மோகினிலீலா | மாணிக்கவாசகர் |

**சிறந்த சில நடனங்கள்**

| | |
|---|---|
| பரதநாட்டியம் | இரதிமன்மதா |
| புரு டான்ஸ் | பாம்பாட்டி |
| நாக டான்ஸ் | கிராம நடனம் |
| கோபியின் கனவு | உமா தாண்டவம் |

உரிமையாளர்:—
"நாடகப்புரவலர்", 'நாடகக்கலாமணி',
வைரம், உ. அ. அரு. அருணாசலம் செட்டியார்

# வெள்ளத்தால் போகாது தோழா

S. குருசாமி, B. A.

"பிராமணத் துவேஷம் நாட்டில் தலைவிரித்தாடுகிறது! கல்லூரிகளில் பிராமணத் துவேஷம்; கச்சேரிகளில் பிராமணத் துவேஷம்; ஆபீஸ்களில் பிராமணத் துவேஷம்; ஆற்றங்கரையில் பிராமணத் துவேஷம். இவற்றிற்கெல்லாம் காரணம் யார் தெரியுமோ? இங்கிலீஷ்காரன்தான். இதுவும் ஒரு பிரித்தாளும் சூழ்ச்சியைத் தவிர வேறென்ன?"

இதுதான் விஸ்வநாதய்யர் கூறுவது. மனமார உணர்ந்து சொல்கிறாரோ, என்னவோ? அழுத்தந் திருத்தமாகக் கூறுவார், யார் கேட்டாலுஞ் சரி. விஸ்வநாதய்யர் மட்டுமா? பொது உடைமைக் கட்சி புருஷோத்தம சாஸ்திரியும் இதையேதான் சொல்கிறார். கதர் அணிந்த காங்கிரஸ் அன்பர் கந்தப் பிள்ளையும் இதற்குப் பக்க வாத்தியம் வாசிக்கின்றார். அர்ச்சகர் அனந்தராம கனபாடிகளும் இதைத்தான் அர்ச்சிக்கின்றார். வக்கில் வரதாச்சாரியும் இதையே தான் அளக்கிறார்.

* * * * *

தென்னாட்டில்—தமிழ் நாட்டில்—பிராமணத் துவேஷம் ஏன் ஏற்பட்டது? என்று ஏற்பட்டது?

வேதம் அனாதி என்கிறார்கள்; மறுக்கவேண்டாம். அன்றுமுதல் பிராமணத் துவேஷம் ஆரம்பமாயிருக்க வேண்டும். சந்தேகமிருந்தால், தஸ்யூக்களைப்பற்றிக் கூறப்பட்டிருக்கும் பகுதிகளை மட்டுமாவது படித்துப் பாருங்கள். அதுமட்டுமா? கவைக்குதவாத கட்டுக் கதைகளிலே பிராமணத் துவேஷ விதை ஊன்றப்பட்டிருக்கிறதே! இல்லாவிட்டால், அமிர்தம் கடைந்த போது வாசுகி என்னும் பாம்பின் தலைப் பக்கத்தை அசுரர்களும், வால் பக்கத்தைத் தேவர்களும் பிடித்திழுக்கவேண்டியதில்லையே! இரண்டு இனத்தாரும் கலந்து அப்பாம்பைப் பிடித்துக் கடைந்திருக்கலாமே! அல்லது பிறப்பும் இறப்பும் அற்ற தேவர்கள் தலைப் பக்கமே பிடித்திருக்கலாமே! இந்தக் கதையை ஒட்டித்தானே பூதேவர்கள் (பிராமணர்) இன்று இந்த உலகின் உழைப்பினுடைய வால் பகுதியைத் தாங்கள் பிடித்துக்கொண்டு முரட்டு இனத்தவர்களுக்கு (திராவிடர்) நஞ்சுள்ள பக்கத்தைத் தந்திருக்கின்றனர்.

என்று துரோணாச்சாரி என்ற பார்ப்பனத் துறவி ஏகலைவன் என்னும் வேடனின் வலதுகைக் கட்டை விரலைத் தட்சணையாகக் கேட்டு வாங்கினானோ, அன்று முதலே பிராமணத் துவேஷ வேர் ஊன்றப்பட்டுவிட்டது இந்த நாட்டிலே.

* * * * *

"இதெல்லாம் அற்ப விஷயம், ஸார்! சுயராஜ்யம் வந்ததும்—அதாவது வெள்ளையன் வெளியேறியதும்—தன்னாலேயே பறந்து போய்விடும். பொருளாதாரச் சமத்துவம் அல்லவா நமது லட்சியமாக இருக்கவேண்டும்! பொது உடைமைத் தத்துவம் வெற்றிபெற்றால் இப் பார்ப்பனீயம் அந்தப் பெருவெள்ளத்தில் அடித்துக்கொண்டு போகப்பட்டுப் பாதாளக் கடலில் சேர்க்கப்பட்டுவிடாதா? சிறு தடியால் அடித்துக் கொல்லப்படக்கூடிய ஒரு பாம்புக்காக நீங்கள் ரிவால்வர்களை ஏந்திச் செல்கிறீர்களே! இது என்ன வீண் வேலை?" என்று கேட்கிறார் கம்யூனிஸ்ட் கதிர்வேலன், சுயமரியாதைச் சோமசுந்தரத்தைப் பார்த்து.

"தோழர் கதிர்வேலரே! உங்கள் வேலை உயர்ந்த ரகமானதாயிருக்கலாம். ஆனால் எங்கள் வேலை மட்ட ரகமானதல்ல; வீண் வேலையுமல்ல. பொது உடைமைப் புரட்சி வெள்ளத்தில் முதலாளித்துவம் என்னும் ஆலமரம் புரண்டோடிப் போகலாம்; ஏகாதிபத்தியம் என்னும் கோட்டைச் சுவர்கூடச் சரிந்து விழுந்து கரைந்துபோகலாம். ஆனால் நீர் குறிப்பிட்ட ஆரிய அரவம்மட்டும் பெருவெள்ளத்தில் சாகாது. ரஷ்யா குளிர் மிகுந்த நாடாகையால் அங்கு இந்த நச்சரவம் இருந்ததில்லை. ஆதலால் நீர் படித்த புத்தகங்களில் இதைப்பற்றி இருந்திருக்காது. ஆரியம் அழகான நல்ல பாம்பு. எத்தனையோ பெரு வெள்ளங்களைக் கண்டு விட்டது. பௌத்தமத அகில இந்திய வெள்ளத்திலும் தப்பித்துக் கொண்டது. ஜைனமத வெள்ளத்தில் கரையேறிப் புல்லில் பதுங்கி யிருந்தது.

மொகலாய ஆட்சியிலும் இந்தப் பாம்பு சாகவில்லை. மராட்டிய ஆட்சியிலோ படமெடுத்தாடிற்று. இன்றைய ஆட்சியிலோ தன் சந்ததிகளைப் பெருக்கிக் கொண்டு வீடுதோறும் திரிந்து விளையாடிக்கொண்டிருக்கிறது. அல்லியரசாணியின் படுக்கையில் கிடந்ததாகச் சொல்கிறார்களே, அந்த ஜகஜ்ஜோதியான பாம்பைப்போல, இன்று ஹிந்து பக்தர்களின் மடியில் கிடந்து கொஞ்சிக் குலாவிக் கொண்டிருக்கிறது. ஆட்சிக்காரரோ பாம்புக்குப் பாலூட்டி வருகின்றனர். 'அதன் பல்லைப் பிடுங்கிக் கூடையில் போட்டு மூடுவது தான் முதல் வேலை' என்று பாம்புப் பிடாராராகிய நாங்கள் கூறுகிறோம்"—என்றார் சுயமரியாதைச் சோம சுந்தரம்.

"நீங்கள் என்னதான் சொல்லுங்கள்; முதலாளித்துவத்தை எதிர்த்தாலொழிய இந்நாட்டில் பொருளாதாரச் சமத்துவம் ஏற்படுமா?" என்று கேட்டார் பொது உடைமைத் 'தோழர்'

"தோழனே! ரொம்பச் சரியான கேள்விதான். அரச குடும்பத்தில் பிறப்பவன் பரம்பரை உரிமை கொண்ட முதலாளியாகின்றான். இதைப்போலவே, பிறப்பினால் அதிகாரப்பிச்சை யெடுக்கும் உரிமை கொண்டவன், பஞ்சாங்கத்தின் உதவியால் மாடி வீடும் மோட்டார் காரும் பெறுகிறான். கேளப்பா தோழனே! அரசங்குடி அப்பண்ணா சாஸ்திரி படிப்பே யில்லாதவர். தொழிலோ புரோகிதம் ஆனால் அவர் மகனோ மயிலாப்பூரில் மாடி வீட்டுக்குச் சொந்தக்காரனாகி விட்டான். அப்பன் வேலை அரசங்குடியில்; மகன் வேலை மயிலாப்பூரில். ஆனால், இதைப் போல, வண்டியோட்டும் வரதன் மகன் ஒரு போலீஸ் கான்ஸ்டேபிள் வேலைக்காவது போக முடிகிறதா? அப்பண்ணா சாஸ்திரிகள் ஆயிரக் கணக்கிலுண்டு. ஆனால் வண்டிக்கார வரதனின் மகன் மோட்டார் வாங்கியிருப்பதாகக் கதையிலாவது படித்திருக்கிறாயா? பிறப்பினால் மட்டுமே முதலாளித்துவம் வளரக்கூடிய ஒரு முறையை இரு கையால் அணைத்துக்கொண்டு, வாயினால் மட்டும் பொது உடைமை பேசினால் அம் முயற்சி பலன் தருமா? பலன் தந்தாலும் நீடிக்குமா? யோசித்துப்பார், தோழனே!"

இது சோம சுந்தரத்தின் பதில்.

"நீ சொல்வது எனக்குப் புரியவில்லையப்பா! என்னதான் சொல்லு......" என்று இழுத்தார் தோழர்.

"புரியாது தான் தோழரே! ஆனர்ஸ் வகுப்பில் தேறிய கணக்கு நிபுணருக்கு வாய்ப்பாடு மறந்திருப்பது இயற்கைதான். ஆனால் வாழ்க்கையில் பயன்படுவது வாய்ப்பாடு தானேயப்பா?" என்றார் சோம சுந்தரம்.

*  *  *  *

மறுநாள் மாலை 5 மணி:

"நடவு செய்த தோழர் கூலி
    நாலணாவை ஏற்பதும்
உடலுழைப்பிலாத செல்வர்
    உலகை ஆண்டு லாவலும்
கடவுளாணை என்றுரைத்த
    கயவர் கூட்ட மீதிலே
கடவுள் என்ற கட்டறுத்துத்
    தொழிலுளாரை ஏவுவோம்"

என்ற புரட்சிக் கவி கனக சுப்புரத்தினத்தின் பாடலை அடாணா ராகத்தில் யாரோ ஒரு சிறுவன் பாடும் சத்தம் கேட்டது. ஓசை வரும் இடத்தை நோக்கிச் சென்றார், சோமசுந்தரம்.

சென்னைக் கடற்கரையில் பதினாயிரக் கணக்கான மக்கள் கொண்ட கூட்டம். பெரிய கறுப்புக் கொடியின் நடுவில் சிவப்பு வட்டம். மேடையின்மீது ஒலி பெருக்கியின் எதிரில் ஜிப்பா அணிந்த குள்ளமான ஓர் உருவம்; நறுக்கு மீசை; சிவப்படாத கிராப்; வெற்றிலைப்பாக்குச் சாயம் படிந்த பற்கள். ஜூன் மாதத்தில் திருக்குற்றால அருவியில் நீர் வந்து கொட்டுவது போல ஜிலு ஜிலுப்பான தமிழ் வார்த்தைகள் வந்து கொட்டிக்கொண்டே யிருக்கின்றன!

என்ன ஆச்சரியம்! அவருக்குப் பின்னால் ஒரு நாற்காலியில்—ஆம்! அதே கதிர் வேலர் தான்! பொது உடைமைத் தோழர் தலைமை வகிக்கிறார்! சோமசுந்தரம் தம் கண்களைத் துடைத்துக்கொண்டு மறுமுறையும் பார்த்தார். இன்னொரு தடவையும் பார்த்தார். உடல் சிலிர்த்தார்! அந்த நிமிஷத்தில் சோமசுந்தரம் அரை அங்குலமாவது உப்பியிருப்பார்.

# யாருக்கு தாசன்?

"சுகி"

மனிதனுக்குள்ள ஒரு சிறப்புப் பண்பு உணர்ச்சி; இது மூன்று காலங்களையும் பிணைக்கும் சங்கிலித் தொடர். நேற்று நடந்ததைச் சொன்னாலும், இன்று நடப்பதை விவரித்தாலும், நாளைய நிகழ்ச்சியை வர்ணித்தாலும் உணர்ச்சிக்குள் வயப்பட்டு விடுகிறோம்.

இந்த அருமையான சக்தியைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்பவர்கள் கலைஞர்கள் என்றாலும், கவிகளே சக்திபெறக் கையாளுகிறார்கள். அவர்கள் காட்சிகளையும் மாட்சிகளையும் சொல்லோவியமாகத் தீட்டி நம்மைப் படாதபாடு படுத்தி வைப்பார்கள்; நம்முடைய உணர்ச்சியை மீட்டி, எங்தெந்த பாவங்களில் நம்மை ஆட்டுவிக்க நினைக்கிறார்களோ, அப்படி ஆட வைத்து விடுவார்கள்.

இவர்களில் பாரதி தாஸனும் ஒருவர். மற்றக் கவிகளிடம் இல்லாத ஒரு சிறப்பு இவரிடம் உண்டு. கவிகள் அழகையும், அமைதியையும், இன்பக் கனவுகளையும், இதயக்குழைவுகளையும் எழுதி நம் மனத்தைத் தூண்டிற் புழுவாகத் துடி துடிக்க வைப்பார்கள். பாரதிதாஸன், நாம் செய்கிற கொடுமை, அக்கிரமம், நாம் சொல்ல வெட்கப்பட்டு மூடி வைத்துக்கொள்ள முயலும் ஆபாசங்கள் முதலியவற்றைக் கிளறிவிட்டு, வைத்தியமும் செய்து விடுகிறவர். இது யாரும் செய்ய முன் வராத ஒரு நிலை.

கவிதைக்குப் பொருளாக இருக்க வேண்டியவை லாவண்யம் நிறைந்தவையாக இருக்க வேண்டுமென்பது சட்டமா? கவிதையின் ஓர் அம்சம் சீர்திருத்தம்; பிரசாரம். வானவில்லில் மழைத்துளி ஒளிந்திருப்பது போல, கவிதையில் பிரசாரம் இருக்கலாம். பிரசாரம் மட்டும் கவிதையல்ல.

"விதவை மணம்" என்பது எல்லோரும் ஒப்புக்கொள்ளாத காரியம். ஒப்புக்கொள்ளுவதிலும் அபிப்பிராய பேதங்கள் உள. நடைமுறையில் கையாள இடம் கொடுக்கிறவர்கள் ஒரு சிலரே. பெண்மையின் துடிப்பை,

> எனை மணந்தார் இறந்தார் என் குற்றமல்ல
> இறந்தவுடன் மங்கலநாண், நல்லாடைகள்,
> புனைமலர், குங்குமம், அணிகள் போனதுண்டு
> பொன்னுடலும் இன்னுயிரும் போனதுண்டோ?

என்று சொல்ல வந்த கவிஞர், விஷயத்தைச் சொன்னார். அதாவது உடலையும் உயிரையும் நினைவு படுத்துகிறார். ஆனால் கவிதா சக்தி பின் வரும் அடிகளில் துள்ளி வருகிறது:

> மணவாளன் இறந்தால்பின் மணத்தல் தீதோ?
> பாடாத தேனீக்கள், உலவாத் தென்றல்,
> பசியாத நல் வயிறு பார்த்ததுண்டோ?

.........நாம் எங்கே பார்த்திருக்கிறோம்? பாடும் தேனீயும் உலவும் தென்றலும் பசிக்கும் வயிறும் இருக்கிறபோது, துடிக்கும் உபாதை இருக்காதா? தேக உணர்ச்சி என்பது யாரும் அடக்கியாள முடியாத இன்ப வாதனை.

உடலுறவின் தன்மைக்காகப் பரிந்து பேசிய கவிஞர், கர்ப்பத்தடையும் வேண்டுமென்கிறார். பிள்ளைப் பேறு யாவரும் விரும்புகிற காரியம். ஆனால் எந்த நிலையில் வேண்டாம்? இதோ,

> தொத்து நோய், ஏழ்மை, பணக்காரர் தொல்லை
> தொடர்ந்தடிக்கும் சூறையிலே பிள்ளையோ பிள்ளை!

இப்பேர்ப்பட்ட கஷ்ட நிலையில் நமக்குத் தேவை இன்னதெனச் சொல்லக் கவிஞருக்கு உரிமையுண்டு. சமூகத்தின் தேவை, நலன் இவை எனச் சுட்டிக் காட்டுகிறவன் கவிஞன். அதே காரணத்தால்,

> காதலுக்கு வழிவைத்துக் கருப்பாதை சாத்தக்
> கதவொன்று கண்டறிவோம் இதிலென்ன குற்றம்?
> சாதலுக்கோ பிள்ளை? தவிப்பதற்கோ பிள்ளை?
> சந்தான முறை நன்று; தவிர்க்கு முறை தீதோ?

என்று கேட்கும்போது, நாம் வாயடைத்து நிற்க வேண்டியதே.

தமிழ்க்கவிகள் யாருமே, காதலையும் காமத்தையும் சரளமாகப் பாடியது போக, கர்ப்பத்தடைபற்றிக்

கவியா என வியக்கின்றோம்? நாட்டில் சுதந்திர உணர்ச்சிக்காகவும், தாய் மொழிப் பற்றுக்காகவும், பாரதி வகுத்த அதே வழியில் சமூகத்திற்காக எவ்வளவோ உண்மைகளைச் சுதந்திரமாகத் தாய் மொழிப்பற்றோடு கவிஞர் சொல்லி 'புரட்சி'ப் பட்டம் பெற்றார்.

கவிஞரின் புரட்சி, எடுத்தாளும் விஷயங்களோடு மட்டும் நிற்காமல் சொல்லாட்சியிலும் புகுந்தது. புதிய புதிய சொற்றொடர்கள், புதிய புதிய உவமைகள் நூதன அணிகள் எல்லாம் சேர்ந்து புரட்சி! புரட்சி!! புரட்சி!!! என்று அலைமோதின.

சொற்றொடர்கள், உவமைகள், அணிகள், நூதனமானவை எவ்வளவு உண்டென, 'பாரதிதாஸன் கவிதைகள்' குடும்ப விளக்கு' 'இருண்ட வீடு' 'அழகின் சிரிப்பு' 'பாண்டியன் பரிசு' முதலான புஸ்தகங்களிலிருந்து மேற்கோள் காட்ட ஆரம்பித்தால், அவை மறுபதிப்பு வந்த மாதிரி ஆகும்!

புதுமையில் மோகங் கொண்ட இளைஞர்களின் உள்ளத்தைப் பாரதிதாஸன் நூல்கள் கவர்ந்து விட்டன. 'பழுத்த மேதாவிகள்' நெஞ்சத்தைத் தொடவில்லை யென்பதாகச் சிலர் சொல்லுகிறார்கள்.

ஒரு மனிதனுடைய மேதை அவன் வயதின் தோற்றத்தைப் பொருத்ததல்ல; அவனுடைய இதயத்தின் வாலிபத்தைப் பொருத்தது. இளைஞர்கள் அனுபவிக்கிறார்கள், ஆரவாரிக்கிறார்கள் என்றால் இளமை உள்ளம் கொண்ட 'முதியவர்கள்' என்றுதான் அர்த்தம்.

மாறாத இளமைத்துடிப்பும் உணர்ச்சி வேகமும் கொண்ட அவருடைய நவரஸக் கவிதைகள் தமிழ்த் தாயின் "குடும்ப விளக்கு".

அவர் கவிதைகளைப் படிக்கும்போது சொற்களின் ஜால வித்தையைப் பார்க்கிறோம். வார்த்தைகள் துள்ளுகின்றன; துடிக்கின்றன; கண்ணீர் உகுக்கின்றன; இரத்தமும் கக்குகின்றன. சமூகத்தின் கோளாறுகளை நாம் உணர்ந்தபடி அவர் உணர்ந்தார். நாம் கவிதையில் சொல்ல இயலாமல் ஊமையாக இருந்தோம். நமக்காகக் கவிதையில், புதுமைச் சுடர் விட அவர் பொறித்துக் கொண்டு வருகிறார்.

அவர் கவி; ஆமாம் நம்முடைய சமூகத்தின் தொண்டன். பாரதி, "கண்ணன் எனது சேவகன்" என்று உறவு கொண்டாடுவது போல, கவிஞரை நம்முடைய "சேவகன்" என்கிறேன்.

"பாரதி தாஸன்" பாரதியின் தாஸன் மட்டுமல்ல; நமது சமூகத்தின் தாஸன்! தமிழ்த்தாயின் தாஸன்!!


## சக்தி காரியாலயம்

ராயப்பேட்டை :: சென்னை.

### புத்தகம்

உங்களுக்கேற்ற உயரிய
நற்கருத்துக்களை — அழகிய
முறையில் புத்தக வடிவில்
வெளியிட்டிருக்கிறோம்,
வெளியிடுகிறோம்.
வெளியிடுவோம்.

### பத்திரிகை

**"சக்தி"— மாத வெளியீடு**
கட்டுரை, கவிதை, கதை,
சயன்ஸ், மருத்துவம், பற்பல
விஷயங்களுடன் வெளி வருகிறது.
வருட சந்தா ரூபா ஆறு.

### பெண்கள்

**"மங்கை"—பெண்களின் புத்தகம்**
குடும்பப் பாதுகாப்பு, குழந்தை
வளர்ப்பு, குழந்தை தத்துவம்,
கட்டுரை, கதை, கவிதை, சயன்ஸ்,
உடலோம்புதல், தையல், சமையல்
முதலிய விஷயங்களுடன் வருடத்தில்
பன்னிரண்டு புத்தகங்கள். பன்னிரண்டு
புத்தகங்களுக்கும் ரூபாய் பன்னிரண்டுதான்.

### கதை

**"கதைக்கடல்"—கதைகளுக்கெனவே**
தனியான புத்தகம். இதில் சிறு —
கதைகள், அயல் நாட்டுக் கதைகளின்
தமிழாக்கம் முதலியன அடங்கியிருக்கும்.
வருடத்தில் 12 புத்தகங்கள்.
12 புத்தகங்களிலும் சுமார் 1300 பக்கம்—
120 கதைகள். இத்தனை பெரிய
புத்தகத்திற்கு நீங்கள் கொடுக்க வேண்டியது
ரூ. பன்னிரண்டு. ஒவ்வொரு மாதத்திலும்
ஒரு புத்தகம் கிடைக்கும். 12 புத்தகங்கள்
சேர்ந்ததும் பெரிய புத்தகமாக பைண்டு
செய்துகொள்ளலாம்.



# தமிழும் பாரதிதாசனும்..



(கோ. சி. பெரியசாமிப் புலவர்)

தமிழ் என்ற சொல், (1) இனிமை என்ற பொருளி லும், (2) தமிழ் நாடு என்ற பொருளிலும், (3) தமிழ் வீரர் என்ற பொருளிலும், (4) தமிழ் அரசர் என்ற பொருளிலும் பண்டைய செந்தமிழ் இலக்கிய நூல் களில் பயில வழங்கி வந்துள்ளதைத் தமிழறிஞர் நன் கறிவர்.

இப் பொருளெல்லாம் ஒருங்கு திரண்டு ஒன்றிய ஒருருவே நம் பாரதிதாசன் ஆவார். மூடக் கொள்கை களால் பிணிப்புண்டு, உரிமையை மறந்து, நாட்டை மறந்து, தம் அரசை மறந்து, நீண்ட, ஆழ்ந்த உறக்கத் திற்கிடந்த தமிழரைத் தட்டி யெழுப்பித் தமிழின் மாட்சியைத் தமிழர்க் குணர்த்தியவர் நம் பாரதிதாச னன்றோ?

தமிழ் என்ற சொல் பல்பொருளுந் தருமென் றறிந்த பாரதிதாசன் "தமிழுக்கு அமுதென்று பேர்" எனத் தொடங்கிப் பல்பொருளுந் திகழப் பாடிவைத் திருக்கின்றார். துன்பஞ் சேர்கையில் அத் துன்பம் நீக்கி இன்பமளிப்பது பாரதிதாசன் பாட்டு. அன் பின்றி வற்றிய நெஞ்சில் ஈரத்தை யுண்டாக்கி அன் பினைச் சுரக்கச்செய்வது பாரதிதாசன் பாட்டு.

> "துன்பஞ் சேர்கையில் யாழெடுத்துநீ
> இன்பஞ் சேர்க்க மாட்டாயா?—எமக்
> கின்பஞ் சேர்க்க மாட்டாயா?—நல்
> லன்பிலா நெஞ்சில் தமிழைப் பாடிநீ
> அல்லல் நீக்க மாட்டாயா?—கண்ணே
> அல்லல் நீக்க மாட்டாயா?

எனக் கவிஞர் வினவிய வழியே விடையும் இறுத்து நமக்கு இன்பம் சேர்க்கின்றார். இவ் வின்பப் பாடலை மீண்டும் மீண்டும் இயம்பிப் பாருங்கள்! இன்பஞ் சேர் கின்றது என்பதனை இனி தறிவீர்கள்! இவ் வின்பப் பாடலை நமக்களித்த இன்புருவாகிய பாரதிதாசன் ஈரைம்பதாண்டிற்குமேல் இனிது வாழ்வாராக.

பாரதிதாசனைப் பாராட்டிப் பரிசளித்தல் தமி ழின் மறுமலர்ச்சிக்குப் பரிசளித்தலாம். பதிற்றுப் பத்துள் இப் பாடலைப் பாடிய புலவர் இன்னரென்றும், இவர் பாடிப் பெற்ற பரிசுகள் இவையென்றும் குறிப் பிடும் செய்திகளைப் படித்தால் தமிழ்ப் பாட்டிற்கு அக் காலத் தமிழரசர்கள் தம் பொருளையேயன்றித் தம் மையு மளித்துத் தாழ்ந்த செய்திகளை அறியலாம். அத் தகு தமிழ்க்கொடை வள்ளல்கள் இக்காலத்துத் தமிழ்நாட்டில் இலரென்றாலும் தமிழ்ப் பாட்டை மதித்து, தமிழ்ப் பண்பு மாறாது பாரதிதாசற்குப் பரிசளித்து ஊக்க எண்ணிய தமிழக மக்களை யாம் பாராட்டுகின்றோம். பத்துப் பாட்டுள் ஒரு பாட்டிற் கிணையான பாட்டு இக்காலத்து எழாமைக்குரிய கார ணம் என்னே? கலித்தொகைப் பாட்டைப்போல ஒரு பாட்டு எழுதும் புலவனை இன்று ஏன் காண இயல வில்லை? பரிபாடல் பாட்டைப்போல ஒரு பாட்டு உண்டா? ஏன் பாட்டு எழவில்லை? புலவர் அறவே தோன்றாது ஒழிந்தனரா? புலமை வளம் படைத் தோர் இலரா? புலவருமுளர், புலமை வளம் படைத் தோருமுளர், பாட்டும் எழும். இருந்துமென்ன? புலவரை ஆதரித்துப் புரப்போர் இலர். இக் காரணத் தினலேயே தமிழ் நாட்டில் புதிய புதிய பழம் பாட்டுக் களைப்போன்ற பாட்டுக்கள் எழாமல் ஒழிந்தன. இங்ங னம் வற்றிய புலமையுள ஊற்றினைச் சுரக்கச் செய்தற் குப் பொருள் வழங்கும் வள்ளல்கள் வேண்டும்.

வீண் பெருமைக்கும் வெற்றாரவாரத்திற்கும் பொருளை அள்ளி இறைக்குஞ் செல்வர்கள் அறிவு திருந்தி நல்வழிப் படரவேண்டுமென எண்ணிய தமி ழக மக்கள் தாங்களே வலிய முன்வந்து பரிசளித்துக் கவி பாரதிதாசரைப் பாராட்ட முற்பட்டது தமிழ் மறுமலர்ச்சிக்கேற்ற ஒரு நற்பேறு என்போம்! இவ் வாறு பொதுமக்கள் தமிழ்ப் புலமை வளத்தைப் பாராட்டுவார்களானல் தமிழ் மொழி விரைவிற் செழித்து ஓங்கும்; மொழி உணர்ச்சி வளரின் நாட் டுணர்ச்சி வளரும்; நாட்டுணர்ச்சி எழுச்சியுறின் நாடு விடுதலை அடையும்; நாடு விடுதலையடைந்தால் தமிழ் அரசியல் மொழியாகத் திகழும்; அங்ஙனம் அரசியல் மொழியாகத் தமிழ் ஆக்கம் பெறுங்காலத்து பாரதி தாசர் பாடல்கள் தமிழகப் பள்ளிகளிலும் கல்லூரிகளி

லும் முக்காலங்களிலும் முழங்கும். அங்ஙனம் முழங்க வேண்டியதே முறையும் ஆகும். இங்ஙனம் கல்லூரி மாணவர்கள் பள்ளி மாணவர்கள் ஆண் பெண் இரு பாலாரும் பாரதிதாசன் பாடல்களைப் பண்ணுடன் பாடுவார்களானால் "இருண்ட வீடு" இந்நாட்டில் இருக்காது. காதற்கொலை இந் நாட்டில் நிகழாது. "வலியோர் சிலர் எளியோர் தமை வதை" புரியார். உழைப்பின் பயனை உண்டு வாழ ஒரு கூட்டமும், உழைத்து உழைத்து இளைக்கும் ஒரு கூட்டமும், இந் நாட்டில் இரா. பெண்ணடிமை பிறக்கிட்டோடும்; வீரம் தழைக்கும்; அன்பு தழைக்கும்; அறம் வளரும். தமிழ் நாடு தனிப் பேரரசு நாடாக உலகில் வல்லரசு நாடுகளில் ஒன்றாகத் திகழும். இந் நாடு இந் நன்னிலையுறுதற்குப் பாரதிதாசன் பாடல்கள் அடிப்படை அமைத்துள்ளன. இப் பாடல் பாடிய பாவலர்க்குப் பரிசுமாத்திரம் அளித்தல் போதாது; உடல் பச்சை உதிரமும் விரும்பின் அளிக்கலாம். இத்தகைய தியாக உணர்வு தமிழக மக்களுக்கு வரும் நாளே நன்னாளாகும். அந் நாளை யாம் ஆவலுடன் நோக்குகின்றோம்.

இதுபோழ்து தமிழ்நாட்டார் நிலை எங்ஙனம் உளது? தமிழ் நாட்டின் நிலைமையைக்கண்ட பாரதிதாசன்,

"நாயினுங் கீழாய்ச் செந்தமிழ் நாட்டார்
நலிவதை நான் கண்டும்
ஓயுதலின்றி அவர்நலம் எண்ணி
உழைத்திட நான் தவறேன்"

என உண்மையை உணர்ந்து வைத்து உரைத்து உழைக்க முன்வந்துள்ளார்.

அவரோடு ஒன்றி நீவிரும் உழைப்பீராக! ஏன் உழைக்கவேண்டும்? எதற்கு உழைக்கவேண்டும்? அந்த வாழ்வைப்பெற உழைக்கவேண்டும். அந்த வாழ்வு எது? பாரதிதாசன் பாடலைப் படியுங்கள்!

"அந்த வாழ்வுதான் எந்தநாள் வரும்?
இந்த மாநிலம் முழுதாண் டிருந்தார்
இணையின்றி வாழ்ந்தார் தமிழ்நாட்டு வேந்தர் (அந்த)
ஒலியென்ப தெல்லாம் செந்தமிழ் முழக்கம்
ஒளியென்ப தெல்லாம் தமிழ்க் கலைகளாம்
புலிவில்கயல் கொடி மூன்றினால்
புதுவான மெங்கும் எழில்மேவிடும் (அந்த)

இப் பாட்டை மீண்டும் பாருங்கள்! அந்த வாழ்வைக் கவிஞர் உங்கள் அகக்கண்முன் தோற்றுவிக்கும் காட்சியைக் கண்டு அகமகிழ்வீர்கள். இந்த அருமைப் பாக்களை அருளிய ஆற்றல் சால் அறிஞர் பாரதிதாசனைப் பாராட்டுதல் அறிவுலகைப் பாராட்டலன்றோ?

"வடக்கினில் தமிழர்வாழ்வை வதக்கிப்பின் தெற்கில்வந்தே
இடக்கினைச் செயநினைத்த எதிரியை அந்நாள்தொட்டே
அடக்கடா என்றுரைத்த அறங்காக்குந் தமிழே இங்குத்
தடைக்கற்கள் உண்டென்றாலும் தடந்தோளுண் டெனச்
சிரித்தாய்"

"ஆளுவோர்க் காட்பட்டேனும் அரசியல் தலைமைகொள்ள
நாளுமே முயன்றார் தீயோர் தமிழேநீ நடுங்கவில்லை
"வாளினை எடுங்கள் சாதிமதமில்லை தமிழர்பெற்ற
காளைகாள்!" என்றாய் காதில்கடல் முழக்கத்தைக் கேட்டாய்.

தமிழ் நாட்டின் விடுதலைக்குத் தடையாய் நிற்கும் தடைக் கற்கள் உளவேனும் அக் கற்களைத் தூளாக்கி விடுதலைப் போருக்கு எழும் தடந்தோள்கள் உளவெனக் கண்ட கவி பாரதிதாசன் அத் தடந்தோளர்களை நோக்கிக் கூறும் வீர உரைகளைக் கேளுங்கள்!

"வாளினை எடுங்கள் சாதிமதமில்லை தமிழர் பெற்ற காளைகாள்" எனக் கவி கழறுகின்றார். இக் கழற்றுரை யேன்? நம் மக்கட்கு உணர்ச்சியூட்டி யெழுப்பி எதிரியை அடக்கவன்றோ? எதிரி யொழிந்தால் என்னாகும்? எதிரி யொழிந்தால் இந் நாடு நமதாகும். இவ்வாறு வீரச்சுவை ததும்பும் பாடல்களில் பல உள்ளன.

"வாழ்க வாழ்கவே வளமார் எமது திராவிட. நாடு
வாழ்க வாழ்கவே"

எனக் கவிஞர் நம் நாட்டை வாழ்த்தினார். நாட்டை வாழ்த்திய கவிஞரை யாம் நாவார வாழ்த்துகின்றோம். எதிர்காலத்தில் தமிழ் நாடு தனி நாடாகவேண்டும். தமிழ் மொழி அரசியல் மொழியாகத் திகழவேண்டும். போராடி விடுதலைபெற்ற தமிழக வீரர்கள் பாரதிதாசன் பாடல்களைப் புத்துணர்ச்சியுடன் பாடவேண்டும். அவர் பாடக் கேட்டு யாம் மகிழவேண்டும். அந்நாள் விரைவில் வரவேண்டும். கவிஞர் நம்முடன் விடுதலை விழாவிற் கலந்து நின்று வெற்றிமுரசு முழக்க வேண்டும். அந்நாளில் கவிஞர் பாரதிதாசன் தமிழ் நாடாக இருப்பார்; தமிழ் அரசாக இருப்பார்; தமிழ் இன்பாக இருப்பார். இதுபோது பாரதிதாசன் தமிழ் வீரராக இருக்கின்றார். போர்புரிய ஊக்கும் இவ் வீரரின் செவிகள் கேட்க இந்நாட்டு மக்கள் இப் பாடலைப் பாடவேண்டுமென வேண்டுகின்றோம்.

"உயர்வென்று கொட்டு முரசே—நல்ல
உண்மைத் தமிழர்கள் வாழ்வு
அயர்வில்லை அச்சமிங்கில்லை—புவி
ஆளப்பிறந்தவன் தமிழன். (உயர்)
அயல் என்று கொட்டுமுரசே—உற
வான திராவிடர் அல்லார்
துயர் செய்ய எண்ணிடும் பகைவர்—திறம்
தூள்என்று கொட்டுக முரசே (உயர்)
தமிழ்நாடு தமிழருக்கென்றே—இந்த
சகத்தில் முழக்கிடு முரசே
நமைவென்ற நாட்டினரில்லை—இதை
நாற்றிசை முற்றும் முழக்கு முரசே. (உயர்)

இங்ஙனம் வெற்றி முரசடித்து நம் விடுதலைக்கு வழிகோலிய இவ் வீரக் கவிஞர் தமிழன்னையின் தண்ணருளால் எல்லாப் பேறுகளும் பெற்று இனிது வாழ வேண்டித் தமிழன்னையை வணங்கி வாழ்த்துகின்றேன். வண்மையார் கவி பாரதிதாசன் வழிவழி சிறக்க வாழ்வாராக!

# வடக்கே தலை வைத்து படுக்காதே



T.S. குஞ்சிதம் B.A.L.T

"சாஸ்திரத்திற்கு விரோதமப்பா! சொல்வதைக் கேள்! வீண் அரட்டைக் கல்வி படிக்காதே! அந்தக் காலத்திலே பெரியவாள் சொன்னதெல்லாம் சும்மா சொல்ல வில்லை! வடக்கே தலை வைத்துப் படுக்காதே! படுக்காதே! என்று எத்தனை தரம் சொல்றது? தோஷமப்பா! ஆயுசு குறையுமப்பா!" என்றாள் வள்ளிப் பாட்டி.

பண்டைக் காலத்தில் ஏற்பட்ட ஒரு நம்பிக்கையை விடுவதென்றால் அவ்வளவு சுலபமான காரியமா? உதாரணம் ஒன்றா, இரண்டா? புலியை விரட்டிக் கொன்ற தமிழன் இன்று பூனை குறுக்கே போனால் தொடை நடுங்குகிறானே! என்ன வெட்கக்கேடு! "பூனை குறுக்கே போனால் உனக்கென்ன?" என்று எந்தத் தமிழனையாவது கேட்டுப் பாருங்கள்! "அப்படியானால் பஞ்சாங்கம் பொய்யா?" என்று கேட்பான்.

குருட்டு நம்பிக்கைகள் இன்று தமிழனின் காலை மட்டும் பின்னிக் கொண்டு இருப்பதாக நினைக்க வேண்டாம். கழுத்தையே நெறித்துக் கொண்டிருக்கின்றன.

பல மாதங்கள் வட நாட்டில் தங்கி யிருக்கும் வாய்ப்புக் கிடைத்தது எனக்கு. அங்கே வடக்கே தலை வைத்துப் படுப்பதையோ, தெற்கே தலை வைத்துப் படுப்பதையோ பற்றி எவரும் சட்டை செய்யக் காணோம்.

ஆனால் ஒன்று. தமிழன் எப்படியோ படுக்கட்டும். வள்ளிப் பாட்டி பயப்படுவதில் அர்த்தமில்லா விட்டாலும், வாழ்க்கையில் மட்டும் தமிழன் வடக்கே தலை வைத்துப் படுக்கக்கூடாது. அரசியல் துறையிலே வடக்கே தலை வைத்தான்; அதன் பலனை இன்று அனுபவிக்கின்றான். எழுந்து நிற்கவே முடியவில்லை. தள்ளாடித் தள்ளாடி விழுகின்றான். விழும்போது கூட,—திசை காட்டும் கருவியின் முள்ளைப் போல்,—மீண்டும் வடக்கே தலை வைத்தே விழுகின்றான். பஞ்சாலைகள் வடக்கே; இரும்பாலைகள் வடக்கே; பாங்குகள் வடக்கே;........எத்தனையோ—எத்தனையோ!

ரயில் வண்டியில் இரண்டு மாணவர்கள் பேசிக் கொண்டிருந்தனர்.

"இங்கிலாந்திலே நம்முடைய கிரிக்கெட் கோஷ்டி என்ன போடு போடுகிறது, பார்த்தாயா? என்றான் ஒருவன்.

"போடுகிற விஷயத்தைப் பற்றி அப்புறம் பேசுவோம், அதென்ன நம்முடைய கிரிக்கெட் கோஷ்டி என்று சொல்கிறாய்" என்றான் மற்றவன்.

"இதென்ன! நீயும் இந்தக் கட்சியில் சேர்ந்தவனா என்ன?"

"நான் இந்தக் கட்சியு மல்ல; எந்தக் கட்சியு மல்ல. 'நமது' என்று நீ சொல்லும் கோஷ்டியில் தமிழன் இல்லா விட்டாலும், போலித் தமிழனாவது—இருக்கிறானா பார்! தமிழனுக்குக் "கிரிக்கெட்"டே வாராதா? நீயும் தமிழன் தானே சொல்லு!" என்றான் மற்றவன்.

இதற்கிடையில் நடுத்தரமான வயதுடைய ஒருவர், "நல்ல போடு போட்டாயப்பா நீ! தமிழனுக்குச் சுய உணர்ச்சியே மழுங்கிக்கொண் டிருக்கிறது! மானங் கெட்டவனாகி விட்டான் தமிழன்!" என்றார்.

திடுக்கிட்டுப் போனேன். அவர் இடுப்பில் கதர் கட்டியிருந்தார்; தலையில் கதர்த் தொப்பி யணிந்திருந்தார்; அழகான மீசை; கருத்த மேனி.

"என்னய்யா, இவ்வளவு காரசாரமாகப்பேசுகிறீர்களே! மூன்று மணி நேரமாக அரசியல் விவகாரங்களையே கேட்டுக் கேட்டு என் காது புளித்துப்போன சமயத்தில் நல்ல வேளையாக இந்த இரண்டு பேரும் கிரிக்கெட்டைப் பற்றிப் பேச ஆரம்பித்தார்கள். நான் ஆவலாய்க் கேட்டுக் கொண்டிருந்தேன். நீங்கள் குறுக்கே புகுந்து இரத்தம் தெறிப்பதைப் போல் பேசுகிறீர்களே!" என்று அந்தத் தேச பக்தரைப் பார்த்துக் கூறினேன்.

"நீங்கள் சும்மா இருங்களம்மா! உங்களுக்கு அநுபவம் போதாது. நான் 16 வருஷமாய்க் காங்கிரசில் இருக்கிறேன். எல்லாம் "வடக்கு" மயமாகவே

இருக்கிறது. காரியக் கமிட்டியில் நமது ராஜாஜிக்கே இடமில்லை யென்றால், தமிழனுக்குக் கடுகளவாவது மான ஈனம் இருக்கிறதென்று நீங்கள் எப்படி அம்மா சொல்வீர்கள் "? என்று கேட்டார். அவர் மீசை துடித்தது.

இந்தச் சமயத்தில்,

" வடக்கே தலையினை - வைக்காதே !

—தமிழா !

வாழ்க்கையில் வளம் பெற விரும்பினால்

என்ற பாட்டைப் பாடிக் கொண்டு ஒரு பிச்சைக் காரன் கையை நீட்டினான். நான் அரையணா போட்டேன். மீசைக்காரர் அரை ரூபாயைப் போட்டு விட்டுக் கல கலவென்று சிரித்தார். வண்டியும் டால்மியாபுரம் ஸ்டேஷனில் வந்து நின்றது.

* * *

நாங்கள் இருந்த இடத்தைத் தாண்டி ஒருவர் கீழே இறங்கினார். அவருடன் இறங்கிய பெண் அவர் மனைவியாகத்தான் இருக்க வேண்டும். இருவரையும் பார்த்தேன்.

" உங்களை எங்கேயோ பார்த்த ஞாபகமா யிருக்கிறதே ! ஓஹோ டில்லியிலா ? ஆமாம் ! நலந்தானே?" என்றேன்.

" சௌக்கியந்தான் ! உங்களையும் டில்லியில் தான் பார்த்த ஞாபகமிருக்கிறது. 2 மாசத்துக்கு லீவ் எடுத்துண்டு வந்திருக்கோம். இன்னும் 2 வாரத்தில் திரும்பிப்போவதா யிருக்கோம். மெட்ராசுக்கு வந்தால் சாவகாசமாய்ப் பேசலாம். உங்க ஆம் எங்கேருக்கு ?" என்றாள் மனைவி.

" எங்கள் வீடா? காந்தி நகரில், நேரு பார்க்குக்கு எதிரிலே இருக்கிறது. தேசாய் ரோடு— 4 ம் நம்பர் வீடு, " என்றேன்.

" ரொம்ப சரி ! முடிந்தால் வருகிறோம் !" என்றாள் அவள்.

" டில்லியில் முன்பிருந்த இடத்திலேதானே இருக்கிறீர்கள் ? வீட்டு வசதி இப்போது எப்படி இருக்கிறது ?" என்று கேட்டேன்

" இல்லை மாமி! அந்த ஆத்தைக் காலி செய்துட்டோம். " ராஜாஜி காலனி "ண்ணு சொல்லி புதுசா ஒரு காலனி கட்டி யிருக்கா. அதிலே "காமராஜ பார்க்"குண்ணு ஒரு பெரிய பார்க் வைச்சிருக்கா. அதுக்குப் பக்கத்திலே கிழக்கு மேற்கில் " முத்துரங்கமுதலியார் ரோடு"ண்ணு ஒன்றிருக்கு. அதிலே 2-ம் நம்பர் வீடு. " வள்ளுவர் நிலையம் " என்று எங்க ஆத்துக்குப் பேர் போட்டிருக்கும். எப்போதாயினும் வந்தா கட்டாயம் எங்காத்துக்கு வாருங்கோ மாமி !" என்றாள், என் சிநேகிதி.

எனக்குத் தலை சுற்றியது. பெஞ்சிலேயே படுத்துட்டேன். மூர்ச்சை தெளிந்து எழுந்தேன். திருச்சி ஸ்டேஷனில் வண்டியும் நின்றது.

## சுய மரியாதை இயக்கத்தின் ஒப்பற்ற கவி

தோழர் பாரதிதாசன் அவர்கள் தமிழ் நாட்டுக்குப் புதியவரல்ல. அவர் பல ஆண்டுகளாகச் சுயமரியாதை இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார். மனித சமுதாயத்தின் ஒற்றுமைக்கும், முன்னேற்றத்திற்கும், சந்தோஷ வாழ்க்கைக்கும் இன்றியமையாத புரட்சியான பல சீர்திருத்தங்களை ஆதரிப்பதுமட்டு மின்றி, அவைகளை ஜன சமூகத்தில் பல வழிகளிலும் பரப்பவேண்டும் என்ற ஆசை கொண்டவர்.

சிறப்பாகவும் சுருக்கமாகவும் கூறவேண்டுமானால், பாரதிதாசன் அவர்கள் "சுயமரியாதை இயக்கத்தின் ஒப்பற்ற கவி " என்றுதான் கூறவேண்டும். இந்த ஒரு காரணத்தினாலேயே, அவர் இன்று தமிழ் நாட்டின் சிறந்த கவியாயிருந்தும், அவருடைய புகழ் போதுமான வரையில் பரவாமலிருக்கிறது.

ஆனால், அவர்மட்டும் வெறும் புகழை விரும்புவாரானால், காலத்திற்கும், பாமர மக்கள் உணர்ச்சிக்கும் ஏற்றவாறு தம் கருத்துக்களை மாற்றிக்கொண்டு "மிகச் சிறந்த கவி " என்ற பெயரை எளிதில் பெற்றுவிடலாம். ஆனால், உண்மை, நியாயம், அறிவு முதலியவற்றைச் சிறிதும் விட்டுக்கொடுக்க இசையாத, இயற்கையான ஒரு பிடிவாதமுடையவ ராதலால், அவர் புகழை எதிர்பாராமல் தம் கொள்கைகளில் விடாப்பிடியாய் இருந்து வருகிறார். இக்குணத்தை நான் அவரிடம் பலதடவைகளில் கண்டிருக்கிறேன்.

—பெரியார், ஈ. வே. இராமசாமி.

# நான் குற்றவாளியா?

ப. சுந்தரவேலு

அதோ! அந்த இருளடைந்த வீதியை என்றும் மறக்க முடியாது. ஏன்? அந்தத்தெரு தான், நான் தகப்பனாகும் பாக்கியத்தைத் தந்தது. எனக்கு இன்பத்தைக் கொடுத்த பெண் குடியிருந்தது அந்த வீதியில்தான், அவள் குக்கிராமத்துப் பெண். ஏழ்மைக் குடியில் பிறந்தவள். ஆம்! அவளது வாழ்க்கை பெரும் புயல் காற்றாயிருந்தது. காரணம்! வறுமை — அறியாமை. அவளிடம் அகப்பட்ட ஆடவர்களில் நானும் ஒருவனானேன். எப்படியோ, என்னையுமறியாமல் நான் அவள் அழகு வலையில் சிக்கிக்கொண்டேன். அந்த இயற்கையை வென்றவர்கள் தான் யார்? சின்னாள் வேடிக்கையாகவே காலங் கழித்தோம். ஆனால், துக்ககரமான செய்தி ஒன்று என்னைப்பலத்த சிந்தனையில் ஆழ்த்தியது! என்னவென்று கேட்கிறீர்களா? அதுதான் "லட்சுமி கர்ப்பவதியானாள்" என்பது. சிறிது காலம்வரை நான் ஒரு மிருகத்தைப் போலவே காலங் கழித்தேன். மன்னிக்கவேண்டும். அப்போது எனக்கு இருபத்திரண்டு வயதுதான். நான் என்ன அனுபவத்தைப் பெற்றிருக்க முடியும்? உலக மறியாதவன்; அதனால் லட்சுமியைக் கேவலமாகக் கருதி, வெறுத்தேன். அவளழுகையுடன் என்னிடம் பேசியபோது, நான் உதாசினத்தைப் பகிரங்கமாகத் தெரிவித்தேன். அது மட்டுமல்ல. உள்ளவைகளுடன் இல்லாதவைகளையும் சேர்த்து, அவள்மீது அபாண்டப் பழிகளை மலைபோல் குவித்தேன்.

ஏழைப் பெண் லட்சுமி நான் கூறியவைகளைக் கேட்டுத் திடுக்கிட்டுப் போனாள். நல்ல அழகுடையவள். நடையுடை பாவனைகள் சாதாரணமானவை. மெலிந்த உடல். பார்வைக்குக் குடும்பப் பெண் போலவே தோன்றினாள். அவள் தனது பதினெட்டாவது வயதிலேயே, வாழ்க்கையில் முறை தவறிவிட்டாள். ஆனால் அவள் கர்ப்பவதியானவுடன் பெருத்த மாறுதல்! வாழ்க்கையின் பிற்பகுதியில் அவள் திடச்சித்தம் பெற்றாள், நேர்மையில் மாறா உள்ளமும் உறுதியும் கொண்டாள்; அன்புடையவளானாள். இயற்கை தந்த கடமையைச் சிரமேற்கொண்டாள். அதற்காக அவள் எந்தவிதத் தியாகத்தையும் வரவேற்றாள். அவள் இப்போது ஓர் உத்தமி!

அவளைப்போன்ற குடும்பத்தைச் சேர்ந்த ஒருவன் மூலமாக இந்தச் சம்பவம் நடந்திருந்தால், ஒரு விதமாக முடித்திருக்கலாம். ஆனால், நானே நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவன். ஆதலால், இதற்குச் சுலபமாக வழிதேடுவது முடியாத காரியம். ஏனெனில் எங்கள் குடும்பம் புகழ் வாய்ந்தது? இதை லட்சுமிக்கு விளங்கும்படி எடுத்துக் கூறினேன். இதுவரை அவளிடம் பழக்கமானவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்திச் சொல்லிச் சிறுபிள்ளைத்தனமாக அவமதித்தேன். மேலும், எனக்கு முன் அவளிடம் நட்பாயிருந்தவன்தான் குழந்தைக்குத் தந்தை என்று மனமறிந்த பொய்யை, தைரியமாகச் சொன்னேன்!

லட்சுமிக்குக் கோபம் மூண்டது. கோபம் என்றால் சாதாரணமான கோபமல்ல. அப்போது அவளைப் பார்ப்பதற்கே பயமாயிருந்தது. அவள் கூறினாள், "எனது வாழ்க்கை புயல்காற்றில் அகப்பட்ட படகு! அதை நான் மறக்கமுடியாது. இந்தக் கொந்தளிப்பு வாழ்க்கை நடத்தும் என்னுடன் நீ கூடியதேன்? "நான் தவறிவிட்டேன். இப்போதுதான் அதை உணர்ந்தேன்" என்று நீ சொல்லக்கூடும். அப்படியானால் தவறுதல் இயற்கை என்பதை நீ ஒப்புக்கொள்கிறாய். நான் கர்ப்பவதியானதால், நீ மனமாற்றமடைந்தாய். அந்த மாற்றம் எனக்கேற்படாது என்பது உன் நினைவா? அல்லது மாறுதலடைதல் உனக்கு மட்டும் உரிமைச் சொத்தா? நான் தவறு செய்தவளானேன். நீ?......நான் பலருடன் பழகினேன். பலர் உன்னுடன் பழகினார்கள்—பழகப் போகிறார்கள். என் செய்கை வெளிப்படையானது. உன் செய்கை மறைவாயிருக்கிறது. நீ நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவனா இல்லையா என்பதை நான் கருதவில்லை. நீயும் அப்படித்தான் முதலில் என்னுடன் பழகினாய். இப்போது மட்டும் இந்த ஞானம் உனக்குப் பிறப்பானேன்? இந்த ஞானம் உனக்கு முன்னமேயே இருந்திருக்க வேண்டும். அதைவிட்டு, இப்போது உயர்வுதாழ்வு பேசுகிறாய். கர்ப்பவதியானதால் நீ என்னை வெறுக்கிறாய். நீ கோழை! அதை வெளிப்படையாகக் கூறி என்னைவிட்டு நீ விலகியிருக்கலாம். அப்படிச் செய்யவில்லை. மற்றொருவனைக் காட்டுகிறாய். அப்படியென்றால், நீ நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவன் என்பது குற்றமாகுமே! ஆண் தன்மை உன்னிடம் கடுகளவாவது இருக்கிறதா? இந்தப்பழி உன்னைவிட்டு நீங்கிவிடுமா? அது பகற்கனவு! உன் மனச்சாட்சி உன்னைச் சும்மா விடாது."

கோபத்தோடும் அழுகையோடும் அவள் கூறியவைகளையெல்லாம் பொறுமையுடன் கேட்டுக்கொண்

டேன். அவள் தன் வயிற்றிலிருக்கும் கர்ப்பத்திற்கு ஏதாவது கெடுதிசெய்து, அதனால் அவளுக்கும் எனக்கும் ஆபத்து நேரிட்டால் என்னசெய்வதென்று பயந்தேன். நூறு ரூபாய் நோட்டொன்றை எடுத்து மேஜைமீது வைத்து, "நான் உன்னை அனாதையாக விட்டுவிடவில்லை" என்று சொன்னேன். என் பெட்டியை எடுத்துக்கொண்டு வெளியில் கிளம்பினேன். அப்போது அவள் வழி மறித்தாள்.

"இந்த நூறு ரூபாய் உனக்குத்தான் பெரிது. உன்னுடைய அபாண்டப் பழியையும், மனச் சாட்சியின் தண்டனையையும் தாங்கிச் செல். அதுவே எனக்குப் போதும். உன் குழந்தையில்லையே! போனால் போகிறது. அது என்னுடைய குழந்தையே. நோட்டை எடுத்துச் செல் எனக்கு வேண்டாம்' என்றாள்.

நான் வெட்கித் தலைகுனிந்தவனாய் நோட்டை எடுத்துக்கொண்டு வெளியே வந்துவிட்டேன். மறுநாள் அவளைச் சந்தித்துப் பேசியிருந்தால், ஒருவிதமாக ஒழுங்குபடுத்தி யிருப்பேன். ஆனால், நான் ரயில் வண்டிக்குச் சென்றதற்கும் ரயில் புறப்படுவதற்கும் நேரமாக இருந்துவிட்டது!

* * * *

வாழ்க்கையின் அலைகள் பலரையும்போல் என்னையும் அடித்துச்சென்றன. வாலிப வாழ்க்கை கடந்தது. விவாகம் செய்துகொண்டேன். துன்பங்களை அனுபவித்தேன். அநியாயத்திற்குப் பலியானேன். சினேகிதனுடைய வஞ்சனையால் வேலையை இழந்தேன். இவைகளைக் கடவுளிடம் முறையிட்டேன். ஆனால் கடவுள்?... அப்போதுகூட லட்சுமியையோ அவளது குழந்தையையோபற்றி நினைத்ததே இல்லை. அவளையும் அவள் குழந்தையையும் அனாதையாக விட்டதைப்பற்றியும், அவளை அவதூற்றுக்கு ஆளாக்கிய அழியாப் பழியைப் பற்றியும் நான் எண்ணியதே இல்லை.

எனது நாற்பத்தைந்தாவது வயதில், வாழ்க்கையில் வீசிய பெரும் புயலுக்குப் பின் சற்று அமைதி நிலவிற்று. எதிர்பாராத இரண்டு இடங்களிலிருந்து சொத்துக்கள் வந்து சேர்ந்தன. அவற்றை வைத்துக் கொண்டு என் அன்பு மனைவியுடனும், இரண்டு பெண் மக்களுடனும் இன்பமாய்க் காலங் கழித்தேன்.

ஒரு நாள் நானும் எனது மூத்த மகளும் ஒரு சிறு கப்பலில் பக்கத்து ஊருக்குப் போய்க்கொண்டிருந்தோம். என் மகள், கப்பல் வெளிப்பாகத்தில் நின்று கைப்பிடியில் சாய்ந்த வண்ணம், வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருந்தாள். அப்போது அவள் கைவளையல் நழுவிற்று; பிடிக்க முயன்றாள்; கடலில் வீழ்ந்தாள். நான் வேறு பக்கம் திரும்பிக் கொண்டிருந்தபடியால் அதைக் கவனிக்கவில்லை. அங்கிருந்தவர்கள் கூக்குரலிட்டதைக் கேட்டு நான் கடலில் குதிக்க முயன்றேன்.

(32-ம் பக்கம் பார்க்க)

கலியாண காலங்களிலும், விசேஷ காலங்களிலும் விருந்து
போஜனத்திற்கும் பலகார பட்சணங்களுக்கும்
தாமரைப்பூ, கப் & காப் பிராண்டு
சுத்தமான அசல்
LOTUS BRAND GHEE
MANGALAM & Co COIMBATORE
வெண்ணெய் & நெய்
வாங்கி உபயோகித்து ஆனந்தமடையுங்கள்
மங்களம் & Co.,
வெண்ணெ & நெய் வியாபாரம்
ஒப்பணக்கார வீதி, :: கோயம்புத்தூர்.

# எழுத்தாளர் நிலை

(புத்தனேரி. ரா. சுப்பிரமணியன்)

அருந்தமிழில் உரைநடை நூல் நிறைவில்லாக் குறைபோக்கும் ஆர்வத் தோடு
பெருந்தொண்டு செய்பவர்போல் கதைபலவும் கட்டுரையும் பெருக்குகின்றார்!
பொருந்துதமிழ்ப் பண்பில்லை! புரிகின்ற நடையென்று பூரிக் கின்றார்!
தெரிந்த தமிழ்ச் சொல்விட்டுத் தேடியவர் திணிக்கின்றார் திகைப்புச் சொல்லே!

கட்டுரையின் சொற்பலவும் அரைகுறையும் கொச்சையுமாய்க் காட்சி நல்கும்!
கொட்டுகிற எழுத்தியலில் மட்டற்றுப் பிறசொற்கள் குவிந்து காணும்!
கட்டழகாய்த் தேன்போலும் தமிழ்ப்பண்புக் கட்டுரைகள் காணற் கில்லை!
வட்டமிடும் எழுத்தாளர் சிலர்கூடிப் பேசுவதோ மறும லர்ச்சி!

ஒருசிலரின் பாராட்டைப் பெறவேண்டி எழுத்தாளர் உரிமை தோற்றுப்
பரிசிலினை எதிர்பார்த்துப் பண்பெல்லாம் முகமன்முன் பறக்க விட்டுத்
தெரிநிலையில் உண்மைக்கு மாறாகப் பேனாவைத் திருப்பு கின்றார்!
அரசியலில் அலையிட்ட துரும்பென்ன அலைகின்றார்! ஆற்றல் எங்கே?

செல்லரித்த சமுதாயக் கட்டுகளை அறுத்திடுக! சிந்திப் போடு
நல்லெழுத்து நெறிபற்றி அறிவியலின் துணையாலே நாட்டின் சீரை
ஒல்லுவகை யாலெல்லாம் உயர்த்துதலே எழுத்தாளர் உட்கோ ளாகும்
செல்லுபடி யாகாத குப்பைகளைச் சேர்ப்பதுநம் திறமைக் காமோ?

ஒருபகுதி யினர்வீட்டில் உரையாடும் சொல் லெல்லாம் பாமரர்க்குப்
புரிகின்ற நடையென்று கட்டுரையிற் புகுத்துநிலை போக வேண்டும்!
தருகின்ற கருத்துக்கள் அறிவுலகை முன்னேற்றும் தகுதி வேண்டும்!
ஒருபயனு மில்லாத பழங்கதையும் பொய்மரபும் ஒழிதல் நன்றே!

(30-ம் பக்கத் தொடர்)

அங்கிருந்தவர்கள் என்னைப் பிடித்துக்கொண்டார்கள். நான் எவ்வளவு சொல்லியும் அவர்கள் என்னை விடவில்லை. என் மனம் தாங்கொணுத் துயரத்தால் தத்தளித்தது. அங்கிருந்த பிரயாணிகளிடையே ஒரு வாலிபன்! ஆம்; அவன் மேலெல்லாம் கரி; உடையெல்லாம் கரி; நாளெல்லாம் உழைத்த உழைப்பின் அறிகுறி அது! அவன் யாரையும் எதிர்பார்க்காமல் கடலில் குதித்தான். நீரோட்டத்தை நோக்கிச் சென்றான். அவன் ஏன் குதித்தான்? எங்கே பிரயாணம் போகிறான் என்பது எனக்குத் தெரியாது. ஆனல், அங்கிருந்த சிலர் "பெண்ணருகே சென்று விட்டான்" என்றார்கள் அப்போது அவன் திடீரெனத் தண்ணீருக்குள்ளே மூழ்கினன். என் நெஞ்சுத் துடிப்பு நின்றுவிட்டது போலிருந்தது. மேலும் கீழும் பார்த்தேன்; மிரள மிரள விழித்தேன். அப்போது என் பக்கத்திலிருந்த ஒருவர் "பெண்ணைப் பிடித்துக்கொண்டான் பிடித்துக்கொண்டான்!" என்றார். பார்ப்பதற்கு முயன்றேன்; தெரியவில்லை. கப்பல் கேப்டன் அவர்களிருக்கும் இடத்தை நோக்கிக் கப்பலைச் செலுத்தினர். அருகில் வந்ததும், பலர் சேர்ந்து அந்த வாலிபனையும் என் மகளையும் கப்பலில் கொண்டுவந்து சேர்த்தார்கள். நான் என் மகளைத் தூக்கிக்கொண்டு டாக்டர் அறைக்குச் சென்றேன். சிகிச்சை நடந்தது. என் மகள் மூர்ச்சையாகியிருந்தாள். அதனல், அவள் அதிகமாக நீரைக் குடிக்கவில்லை. சிகிச்சை சிரமமில்லாது போனது. சிறிது நேரத்தில் சுய உணர்வைப் பெற்றாள். மகளைப் பற்றிய நினைவாகவே இருந்த எனக்கு அந்த வாலிபனைப் பற்றிய நினைவே இல்லை. அந்த வாலிபன் மிகவும் களைப்புற்றிருப்பதாக டாக்டர் கூறினர். அவனது உடைகளைக் களைந்தனர். அவன் பிரக்ஞையற்றுப் பிணம் போலிருந்தான். அப்போது அவனது சட்டைப்பையில் அடையாளச் சீட்டொன்றிருந்தது. அதையெடுத்தவர், உரக்க வாசித்தார்:

"லட்சுமியின் மகன் சுந்தரன். பிறப்பு 15-2-1915"

அந்தச் சொற்கள் என் காதில் விழுந்தன. உடனே என் மகளை விட்டுவிட்டு, விரைந்து சென்று அந்த அடையாளச் சீட்டை வாங்கிப் படித்துப் பார்த்தேன். அவன் பிறந்த தேதி நெருப்பினல் எழுதிய எழுத்துக்களைப் போன்று தோன்றின. மறந்துபோன பழைய சம்பவங்கள் மின்னல் ஒளிபெற்று என் கண்முன் தோன்றின. ஆ! என்ன வியப்பு! என் மகளைக் காப்பாற்றியவன்—நான் புறக்கணித்த—அவமதித்த-அனுதையாகவிட்ட என் மகன்! என் உள்ளத்தின் உணர்ச்சிகளும் சிந்தனையில் உதித்த பிரச்னைகளும் ஒன்றோடொன்று மோதின! சகிக்க முடியாமல் "ஆ!" வென்று சத்தமிட்டுக் கீழே வீழ்ந்துவிட்டேன்.

விழித்தேன். நீண்ட காலத்திற்குமுன் நான் செய்த கொடுமைக்கு ஒருவாறு பரிகாரம் தேட முடியுமென்ற நம்பிக்கையுடனும், அறியாமையால் புறக்கணிக்கப்பட்ட அருந்தவப்புதல்வனைப் பெற்றுவிட்டோம் என்ற மகிழ்ச்சியுடனும் எழுந்து உட்கார்ந்தேன். ஆனல்... ஆனல் என்ன? அந்நிகழ்ச்சி! என்னை, வாழ்நாள் பூராவும் வதையுறும்படியாய்ச் செய்துவிட்டது! "என்னைக் குற்றவாளி" யென்றே தீர்ப்புக் கூறிற்று என் மனச்சாட்சி. நான் மறுக்க விரும்பினேன். ஆனல் சகோதரியைக் காக்கத் துணிந்து மடிந்துகிடந்த என் மகனின் அழகிய உடல், "நீ குற்றவாளி மட்டுமல்ல கோழை! துரோகி! என்று குரல் எழுப்புவதுபோலிருந்தது! கைகளால், கண்களை மூடிக்கொண்டேன்; கதறினேன். ஐயோ! நான் குற்றவாளியா?


# கதைக்கோவை

அல்லயன்ஸ் பிரசுரங்களின் சித்ரம்

—ஹிந்துஸ்தான்

முதல் தொகுதி

40 எழுத்தாளர்களின் சிறு கதைகள் 40

(புதிய பதிப்பு தயாராகிறது)

இரண்டாம் தொகுதி

50 எழுத்தாளர்களின் சிறு கதைகள் 50

மூன்றும் தொகுதி

60 எழுத்தாளர்களின் சிறு கதைகள் 60

நான்காம் தொகுதி

75 எழுத்தாளர்களின் சிறு கதைகள் 75

ஐந்தாம் தொகுதி

( தயாராகிறது )

விலை விபரங்கள், எழுத்தாளர்களின் பேர்கள், புத்தக ஜாப்தா இவைகளுக்கு எழுதுக.

**அல்லயன்ஸ் கம்பெனி,**

மயிலாப்பூர் : : சென்னை.

# ஓடத்தில் ஒருநாள்

(மயிலை, சீனி. வேங்கடசாமி)

இற்றைக்குப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் 31—3—34-ல், பகுத்தறிவு வாதிகளாகிய நண்பர்கள் சுமார் இருபதுபேர் சேர்ந்து சென்னையிலிருந்து புறப்பட்டு, பக்கிங்காம் கால்வாய் வழியாக மகாபலிபுரத்திற்கு யாத்திரை சென்றோம். மகாபலிபுரத்தில் உள்ள சிற்பக் கலைகளைக் காணவேண்டும் என்பது அந்த யாத்திரையின் நோக்கம். இளவேனிற் காலத்தில், மாலை வேளையில் படகு ஏறிப் பயணம் செய்வது—அதுவும் நண்பர்களுடன் சேர்ந்து பயணம் செய்வது-மிக இன்பகரமானது. அந்த யாத்திரையின் போதுதான், புரட்சிக்கவி என்றும், பாரதிதாசன் என்றும் சிறப்புப் பெயர் பெற்றுள்ள தோழர் கனக சுப்புரத்தினம் அவர்களுடன் அறிமுகம் ஆனேன். சாந்தமான இயல்பு; அமைதியும் இனிமையும் கலந்த பேச்சு, கவிதையில் திளைத்துக் கொண்டிருக்கும் உள்ளம், இவற்றையுடையவர் பாரதிதாசன். இன்பகரமான மகாபலிபுர யாத்திரை எல்லோருடைய மனத்தையும் கவர்ந்தது போலவே, தோழர் பாரதிதாசன் உள்ளத்தையும் கவர்ந்தது. எங்கள் மனத்தில், அந்த யாத்திரையின் நிகழ்ச்சி ஊமையன் கனவுபோல வெளிப்படாமல் இருந்தது, எங்களுக்குக் கவிதைபாடும் ஆற்றல் இல்லாமையினால். ஆனால், கவிதை புனையும் புலமைவாய்ந்த பாரதிதாசன் அவர்கள் அடுத்த நாளே அந்த யாத்திரையைப்பற்றிக் கவிதை ஒன்று பாடிவிட்டார்.

சென்னையிலே ஒரு வாய்க்கால்—புதுச்
சேரி நகர் வரை நீளம்!
அன்னதில் தோணிகள் ஓடும்—எழில்
அன்னம் மிதப்பது போலே!
என்னருந் தோழரும் நானும்—ஒன்றில்
ஏறி அமர்ந்திட்ட பின்பு,
சென்னையை விட்டது தோணி—உடன்
தீவிரப் பட்டது வேகம்!

படகு சென்று கொண்டிருக்க, மாலை நேரத்தில் அதன் மேற்புறத்தில் அமர்ந்து எத்தனையோ இயற்கைக் காட்சிகளைக் கண்டோம். அவற்றில் ஒன்று, நடுத்தர உயரம் உள்ள ஒரு பனைமரமும் ஓர் ஈச்சமரமும் இணைபிரியா நண்பர்கள் போல நெருங்கி நின்று கொண்டிருக்க, அவற்றின் இடையே—அன்று பௌர்ணமி—முழு வட்டமுள்ள நிலா கடலிலிருந்து சிவந்த மேனியுடன் புறப்பட்டு மேலெழும்பி வந்தது. இக் காட்சியைக் கண்ட கவிஞர் உள்ளம் சும்மா இருக்குமா? பாருங்கள் பாரதிதாசன் கூறுவதை:

வெட்ட வெளியினில் நாங்கள்—எதிர்
வேறொரு காட்சியும் கண்டோம்.
குட்டைப் பனைமரம் ஒன்றும்—எழிற்
கூந்தல் சரிந்த ஓர் ஈந்தும்
மட்டைக் கரங்கள் பிணைத்தே—இன்ப
வார்த்தைகள் பேசிடும் போது
கட்டுக் கடங்கா நகைப்பைப்—பனை
கல கல வென்று கொட்டும்.

* *

எட்டிய மட்டும் கிழக்குத்—திசை
ஏற்றிய எங்கள் விழிக்குப்
பட்டது கொஞ்சம் வெளிச்சம்—அன்று
பௌர்ணமி என்பது கண்டோம்.

* *

முத்துச் சுடர்முகம் ஏனோ—இன்று
முற்றும் சிவந்தது? சொல்வாய்,
இத்தனை கோபம், நிலாவே?—உனக்
கேற்றிய தார் என்று கேட்டோம்.

எங்கள் மகாபலிபுர யாத்திரையைப்பற்றி வாசகர்கடம் விவரித்துக் கூறி நேரம் போக்க வேண்டுமென்பது எனது கருத்தன்று. நான் சொல்லவந்த செய்தியைக் கூறுகிறேன்.

தோழர் பாரதிதாசன் அவர்கள் அறிமுகமானது முதல், அவர் உள்ளத்திலிருந்து அவ்வப்போது வெளிப்படும் அவரது கவிதைகளைப் படித்து வந்தேன். அக்கவிதைகள் என் உள்ளத்தைக் கவர்ந்தன. எனது உள்ளத்தை மட்டும் அன்று; படித்த ஏனையோர் உள்ளங்களையும் கவர்ந்தன. கற்பவர் உள்ளத்தைக் கவரும் ஆற்றல் பாரதிதாசன் கவிதைகளுக்கு எப்படி உண்டாயிற்று? ஏன் எல்லோரும் இவர் பாடல்களை ஆர்வத்துடன் படிக்கிறார்கள்?

கவிதைக் கலையின் தத்துவத்தை உணர்ந்த மேல் நாட்டு அறிஞர், சிறந்த கவிதைகளுக்கு மூன்று சிறப்புகள் அமைந்து இருக்கவேண்டும் என்று கூறுகிறார்கள். அந்த மூன்று சிறப்புகள் எவை எனில், உண்மை, இனிமை, அழகு என்பனவாம். கவிதையில் கூறப்படும் செய்தி மறுக்க முடியாத உண்மையைக் கொண்டிருக்க வேண்டும். வெறும் உண்மையை மட்டும் நிறைத்து வைத்துப் பாட்டுப்பாடி விட்டால் போதாது. அதனோடு இனிமையும் அமையவேண்டும். உண்மை இனிமை இரண்டும் இருந்தால் போதுமா? அக்கவிதையில் அழகும் அமையவேண்டும். இந்த மூன்று இயல்புகளும் ஒருங்கே அமையப் பெற்றது தான் சிறந்த கவிதையாகும் என்பது அறிஞர் கருத்து.

பாரதிதாசன் கவிதைகளில் உண்மை, இனிமை, அழகு இம்மூன்றும் அமைந்துள்ளன. அதனால்தான் அவரது கவிதைகள் படிப்போர் உள்ளத்திற்கு இன்பம் அளிக்கின்றன. இந்த மூன்று தன்மைகள் மட்டுந்தானா அவர் கவிதைகளில் மிளிர்கின்றன? இல்லை. மற்றும் இரண்டு சிறப்புகளும் பொருந்தியிருக்கின்றன. அச்சிறப்புக்கள் எவை? அவை: எல்லோருக்கும் விளங்கக் கூடிய எளிய நடை; படிப்பவர் உள்ளத்தைத் தட்டி எழுப்பி உணர்ச்சியை ஊட்டும் உயிர்த்தன்மை என்பன.

கவிஞர்கள் தனி உலகத்தில் சஞ்சரிப்பவர்கள். கவிஞர்கள், தமது கவிதைகள் மூலமாக ஏனையோரையும் பற்பல உலகங்களில் சஞ்சரிக்கச் செய்வார்கள். நமது நாட்டுக் கவிஞர்களோ, தாங்கள் வாழும் மண்ணுலகத்தை முற்றும் மறந்துவிட்டு, கயிலாயம், வைகுண்டம், பிரமலோகம், தேவலோகம், நரகலோகம் முதலிய கற்பனை உலகங்களில் சஞ்சரித்துக்கொண்டிருப்பதோடு, தமது கவிதைகளைக் கற்போரையும் தம்மைப் போன்றே கண்ணுக் கெட்டாத கற்பனை உலகங்களில் தம்மை மறந்து சஞ்சரிக்கச் செய்துவிடுகின்றார்கள். அவர்கள் தாம் வாழும் மண்ணுலகம் மாயா உலகம் என்று கருதுபவர்கள். நம் பாரதி தாசனவர்கள் கவிஞர் என்கிற முறையில் கற்பனா உலகங்களில் சஞ்சரிப்பவர் என்றாலும், நமது மண்ணுலகத்திலேதான் அதிகமாகச் சஞ்சரித்து வருகிறார். மண்ணுலகத்திலும், பெருங் குடிமக்களான ஏழைகள் இடையே இவர் அதிகமாகப் பழகி வருகிறவர். இராஜாக்கள், சிற்றரசர்கள், ஜமீன்தார்கள், செல்வந்தர்கள் முதலியவர்கள் இடையே சஞ்சரிக்க இவருக்கு நேரம் இல்லை. ஆகவே இவர்களைப்பற்றிக் கவிதை இயற்ற இவருக்குச் சந்தர்ப்பம் இல்லை. கிராமங்களில் எளிய வாழ்க்கை நடாத்தும் குப்பன், முனியன், முருகன், கண்ணம்மாள், அழகம்மாள், பொன்னம்மாள் முதலியவர்களைத்தான் பாரதிதாசன் காண்கிறார். அவர்கள் இடையே காணப்படும் வறுமை, துன்பம், அநீதி, கொடுமை, இழிவு முதலியவற்றைப் பார்க்கிறார். சமுதாயத்தில் மாதர்கள் வைக்கப்பட்டுள்ள இழிநிலையைக்காண்கிறார். தொழிலாளர்களின் வறுமை நிலையையும் சோம்பேறிகளின் செல்வ வாழ்க்கையையும் பார்க்கிறார். மக்களை மூடத்தனத்தில் அமிழ்த்திவைக்கும் மத போதகர்களைக் காண்கிறார். தாழ்த்தப்பட்டுள்ள ஆதிதிராவிடர்களின் பரிதாப நிலையைக் காண்கிறார்; உள்ளம் குமுறுகிறார்; பெருமூச்சு விடுகிறார். வீரசக்தி அவரிடம் தோன்றுகிறது. இந்த அநியாயங்களையும் அக்கிரமங்களையும் ஒழிக்க வேண்டும் என்று நினைக்கிறார். ஆனால், வாள் எடுத்து வீசவில்லை; பேனா எடுத்துக் கவி எழுதுகிறார். பாரதிதாசன் அவர்களின் கவிதைகள் பெரும்பாலானவற்றில், உண்மை, இனிமை, அழகு இவை மிளிர்கின்றன. இவற்றுடன் எளிதில் விளங்கும் தன்மையும், மன எழுச்சியை உண்டாக்கி உணர்ச்சி கொடுக்கும் உயிர்த் தன்மையும் பொருந்தியுள்ளன. இந்த இயல்புகள் இவரது கவிதைகளுக்குச் சிறப்புத் தருகின்றன.

பாரதிதாசன் அவர்கள் புரட்சிக் கவி, தமிழ் நாட்டின் தேசியக்கவி, உணர்ச்சியை உண்டாக்கும் வீர கவி. ஆகவே மக்கள் இவரது கவிதைகளை ஆவலோடு படிப்பதில் அதிசயம் இல்லை. பாரதிதாசன் வாழ்க! நமது புரட்சிக்கவி வாழ்க! கனக சுப்புரத்தினம் வாழ்க!



# ஸ்ரீ பாலஷண்முகானந்த சபா

1935-ல் நிறுவியது

## ஆண்டுகளாகக் கலைப்பணியாற்றி வருகிறோம்

## (எங்கள் கழகம் தோன்றி 21-ஆண்டுகளாயின)

புதிய நாடகங்கள் அரங்கேறின

புதிய நாடகாசிரியர்கள் தோன்றினர்

புதிய நடிகமணிகள் உருவாயினர்

புதிய நுணுக்கங்கள் கையாளப்பட்டன

## 1950-ம் ஆண்டு நிறைவுக்குள்

உங்கள் அன்பினாலும் ஆதரவினாலும்

## தமிழ் நாடக மேடையில்

❖

**அவள் விபசாரியா?**
N. சேதுராமன்

❖

**இராஜ ராஜ சோழன்**
அரு. ராமநாதன்

❖

**வீரப்பெண்**
பி. எக்ஸ். ரங்கசாமி

❖

**புயல்**
'அகிலன்'

❖

? **உயிரோவியம்** ?
நாரண-துரைக்கண்ணன்

# டி. கே. எஸ். சகோதரர்கள்

உரிமையாளர்கள்.

# மனிதன் பேசுகிறான்

எஸ். எஸ். மாரிசாமி

அஞ்சா நெஞ்சம். எதிர்ப்பையோ முணுமுணுப்பையோ கண்டு தளரா மன உறுதி; எது நியாயம் என்று படுகிறதோ அதைப் பட்டெனக் கூறும் நேர்மை; கூறுவதையும் பளீரெனக் கூறும் தைரியம்; இவற்றின் சேர்க்கையே நீங்களும் நானும் புகழ்ந்து பாடும் பாரதிதாஸன்!

நதியின் ஓட்டத்தை அறிந்து அதை ஒட்டிப் போவது சுலபம். எதிர்த்துப் போவதுதான் கஷ்டம். இதற்கு உறுதிபடைத்த நெஞ்சு வேண்டும். இது விஷயத்தில் பாரதிதாசன் நெஞ்சு வைரம் பாய்ந்தது!

எதிர்ப்பையோ, போலிக் கூச்சலையோ கண்டு அவர் அசைந்துவிட மாட்டார். தம் கருத்தை, நஹாஸ் வேலைசெய்து மழுப்பிவிடவும் மாட்டார்.

பாரதிதாஸன் கவிதைகள் தொகுப்பு வெளியானதும் அதைப் படித்தேன். மற்றொரு முறையும் படித்தேன். முதல் தடவை படித்தபோது ஏற்பட்டிருந்த மகிழ்ச்சி, இரண்டாந்தரம் படிக்கும்போது இரட்டிப்பு மடங்காகி இருந்தது. பிறகு அவரின் கவிதைகள் மீண்டும் எப்பொழுது வருமென எதிர்பார்த்திருந்தேன். கோவை நண்பரொருவர் எங்கேயோ தேடிப் பிடித்து பாரதிதாஸனின் "கவிதா மண்டலப்" பிரதிகள் சில வற்றைக் கொண்டுவந்து கொடுத்தார்.

கவிதா மண்டலங்களைப் படித்ததும் அவரை நேரில் காண வேண்டுமென்று ஆசை பிறந்தது. ஐந்தாண்டுகளுக்கு முன் சென்னையில் அவரைக் கண்டேன். பிறகு அவருடன் அளவளாவும் சந்தர்ப்பங்கள் பல கிடைத்தன. அப்பொழுது நான் கண்டது என்னைத் திடுக்கிட வைத்தது!

'வீரம்—வீரம்' என்று எழுதுகிறவர்கள் பலர் எனக்குத் தெரியும். சீர்திருத்தம் வேண்டி நிற்பார் பலரையும் நான் அறிவேன். உண்மை வாதிகள் என்று கூறி அதற்கு உடைமை மட்டுமல்ல, உயிரையே அர்ப்பணிக்கக் காத்திருப்பவர்களும் எனக்குப் பரிசயம் ஆனவர்கள் தான். இத்யாதி லட்சிய வாதிகள் பலரை நெருங்கி நின்று பார்க்கும்பொழுது அவர்கள் கூறுவதற்கும் செய்கைக்கும் மிகுந்த முரண்பாடுகள் இருப்பது தெரியும். இது ஏன்? காரணம் தெரியாது!

பாரதிதாஸன் இது விஷயத்தில்தான் என்னைத் திடுக்கிடவைத்தார். அதாவது அவர் எந்தக் கருத்துகளைக் கவிதையாகப் பொழிகிறாரோ அந்தக் கருத்துகளை, அப்படியே முள்ளு முனை ஒடியாது கடைப் பிடிக்கிறார். இது ஆச்சரியந்தானே!

பாரதிதாஸன் கவிதைகள் இரண்டு வகையில் எனக்கு உதவுகின்றன. ஒன்று உரம்பாய்ந்த தமிழ், கவிதைகளில் மிளிருவது; மற்றொன்று, சீர்திருத்தத்தின் கடைசி எல்லைக்கோட்டை ஆரத்தழுவி நிற்பது!

பாரதிதாஸன் பாட்டுகள் சில, சிலருக்குக் கோபத்தை மூட்டுகின்றன. "பிரசாரம் செய்கிறார்" என்று அவர்கள் கொதிப்படைகிறார்கள். கவிதையில் பிரசாரம் புகுந்தால், கவிதையின் அழகு அஸ்தமித்துவிடுமெனக் கூப்பாடு போடுகிறார்கள். இந்த நண்பர்களைக் குறித்து ஒரு சமயம் பாரதிதாஸனிடமே கேட்டேன். அதற்கு அவர் சொன்ன பதில் இன்றும் என் நினைவில் இருக்கிறது:

"மிருகத்துக்கும் மனிதனுக்கும் ஒரே ஒரு வித்தியாசம்தான் உண்டு. அதாவது மனிதன் பேசுகிறான்-தன் கருத்தைப் பிறருக்குத் தெரிவிக்கிறான். இது தான் மனிதனின் உயர்வு. இதற்குப் பிரசாரம் என்று சொல்லுகிறேன். கருத்தை வெளிப்படுத்துவதற்கு அர்த்தம் பிரசாரம் என்பது தான். இது ஒரு குற்றமென்றால், மனிதன் மிருகத்தைவிட உயர்ந்தவன் என்று சொல்லுவதும் குற்றம்........"

பாரதிதாஸன் மீது கோபப்படுபவர்களுக்காகவே, அவரின் இந்த பதிலைக் கூறினேன். என்னைப் பொறுத்தவரை, பாரதிதாஸன் அவர்களுக்கு யார் மீதும் வெறுப்போ, பகைமையோ இருப்பதாகத் தோன்றவில்லை. அவர் வெறுப்பது தனிப்பட்ட நபரையோ, வகுப்பையோ அல்ல. சமூகத்தைச் செல்லரித்துக்கொண்டு இருக்கும் மூடப் பழக்க வழக்கங்களைத் தான் அவர் வெறுக்கிறார். ஆகவே நண்பர்கள் ஆத்திரமோ கொதிப்போ அடைவதில் பிரயோசனமில்லை.

ஆனால், பாரதிதாஸனுக்குத் தமிழ் மக்கள் சிலை நிறுவி அவரின் தமிழ் ஆர்வத்தைத் தேச மெங்கும் பரவச் செய்தல் வேண்டும்!

# புரட்சியில் பூக்கும் புது உலகு

இரா. நெடுஞ்செழியன் M.A.

புரட்சிப் புன்னகையில் மலர்ந்து பொலிவு பெற்று வரும் உலகம், புரட்சி வீரர்களைக்காலந்தோறும் கண்டு வருகிறது. காட்சிப் பொருளும் கருத்துப் பொருளும் தாம் நின்றதொரு நிலையிலிருந்து தேவைக்கேற்றவண்ணம் நல்லமுறையில் சிறந்த நிலைக்கு மாறும் தன்மையைப் புரட்சி என்கிறோம். ஒவ்வொரு துறையிலும் படிப்படியாக ஏற்பட்ட புரட்சியின் விளைவால்தான் இயற்கை உலகில் செயற்கைக் காட்சிகள் கவின் பெற இலங்கக் காண்கிறோம். பொதுவாக உலகம், பொருள்களிடத்தே ஏற்படும் புரட்சியினால் உருக்கொள்ளுகின்றது; பொருள்கள் மக்கள் செயலாற்றலில் ஏற்படும் புரட்சியினால் உருமாறுகின்றன; செயலாற்றல் மக்கள் சிந்தனையில் ஏற்படும் புரட்சியினால் உருவடைகின்றது என்பதை நன்கு அறிகிறோம். எனவே மக்களின் சிந்தனையைப் பொறுத்துத்தான் செயற்படு உலகம் ஒவ்வொரு துறையிலும் உருக்கொள்ளுகின்றது என்பது பெறப்படுகின்றது. அப்படிப்பட்ட அடிப்படைக் காரணமாக அமைந்த மக்கள் சிந்தனையில் புரட்சியைச் செய்யும் வீரனைத்தான் உலகம் மிக மிகப் போற்றிப் புகழ்ந்து வந்திருக்கிறது. சிந்தனையைக் கிளறும் எழுதுகோலைத் தாங்கிய வீரனைப் போற்றிய அளவுக்கு உலகம் இதுவரையில் வேறு யாரையும் போற்றியதில்லை. "வாளினும் வலிது எழுதுகோல்" என்பது ஆங்கிலநாட்டுப் பழமொழி. "வில்லேருழவர் பகைகொளினும், கொள்ளற்க சொல்லேருழவர் பகை" என்பது வள்ளுவன் வாய்மொழி. சிந்தனையைச் சீர்படுத்தும் சிந்தனைச் சிற்பிகளிலே தலைசிறந்து விளங்கும் வீரன் கவிஞனாவான். அவனைத்தான் புரட்சிக் கவிஞன் என்று உலகம் போற்றும். வெறும் கவிதைகளைப் பாடுபவன் கவிஞனாகலாமேயொழிய அவன் புரட்சிக் கவிஞனாகமாட்டான். இருக்கின்ற நிலையிலிருந்து உயர்ந்த சிறந்த அழகிய அறிவுடைமையோடுகூடிய நிலைக்கு மக்களுள்ளத்தை இழுத்துச் செல்லுகின்றவனே புரட்சிக் கவிஞனாகக் கருதப்படுகிறான். முதல் சிந்தனைச் சிற்பியின் உள்ளத்தே எழுந்த ஏன்? என்ற கேள்வியின் எதிரொலி உள்ளங்கள்தோறும், இடத்துக்கு இடம், நாட்டிற்கு நாடு, காலத்திற்குக் காலம் மாறி மாறி அடுத்தடுத்து ஒலிக்கவே உலகம் வளர்ச்சியடையத் தொடங்கிற்று. உலக இயல்பை அப்படியே படம்பிடித்து உள்ளத்தே இருத்தி, ஏன் என்று கேட்டு, அதற்கு மெருகிட்டு, வேண்டும் அளவுக்குத் திருத்தி அவ்வண்ணமாக உலகைக்காண விழைகிறான் புரட்சிக் கவிஞன். தமிழகத்தில் தோன்றி வாழ்ந்து மறைந்த கவிஞர் எண்ணிறந்தோர் என்றாலும் அவரெல்லாரிடத்தும் அமையப்பெறாத புரட்சிக் கவிஞனுக்குள்ள புலமை பாரதிதாசன் ஒருவரிடத்தே அமையப்பெற்றபடியால் அவரைப் புரட்சிக் கவிஞர் என்று போற்றுகிறோம். பாரதிதாசனைப் புரட்சிக் கவிஞராக ஆக்கியது அவரது சூழ்நிலையேயாகும். ரஷ்யா ஒரு புஷ்கினையும், ஆங்கில நாடு ஒரு ஷெல்லியையும், பிரான்சு ஒரு ஹூகோவையும், அமெரிக்கா ஒரு வால்ட் விட்மனையும் கண்டவாறு திராவிடமும் ஒரு பாரதிதாசனைக் கண்டது.

கவிஞனுள்ளத்தோடு தோன்றிய கனக சுப்புரத்தினம் பாரதிதாசனாகி, தீந்தமிழ்த் தேன் மாந்தித் தம் தாய் நாட்டின் பெருமைதன்னை, நல்ல மணிநதியை, உயர்குன்றை, தேனை அள்ளிப் பெய்யும் நறுஞ் சோலையினை, வீசு தென்றலைப் பாடினார்; பாடி மக்களுள்ளத்தை அவற்றிலே படியவைத்தார். நாட்டின் மண்வளத்தைக் கண்டு களிப்பெய்திய பாரதிதாசன் மக்களின் வளத்தைக் காணத் தம் கண்களைத் திருப்பினார். நாடிழந்து நலமெலாமிழந்து அரசிழந்து அழகெலாமிழந்திருக்கும் தம் மக்களின் தாழ்நிலையைக் கண்டார். வாளோச்சி வாழ்ந்த தமிழ் மறவர் வீணரின் தாளடியில் வீழ்ந்து கிடந்ததைப் பார்த்தார். உள்ளம் குமுறிற்று. குமுறிய உள்ளம்,

"நாயினுங் கீழாய்ச் செந்தமிழ் நாட்டார்
நலிவதை நான் கண்டும்
ஓயுதல் இன்றி அவர்நலம் எண்ணி
உழைத்திட நான் தவறேன்"

என்ற உறுதிமொழி கூறி எழுந்தார்; எழுந்து,

" தமிழரின் மேன்மையை இகழ்ந்த வனேஎன்
தாய் தடுத் தாலும் விடேன்
எமைநத்து வாயென எதிரிகள் கோடி
இட்டழைத் தாலும் தொடேன் "

என்று வஞ்சினங் கூறிப் பாசறை புகுந்த கவிஞர் பகுத்தறிவு வாளேந்திப் பகைப்புலங்கள் பலவற்றையும் அழிக்கத் தொடங்கினர். அழிக்கத் தொடங்கவே புதுமைக்கவிஞர் புரட்சிக் கவிஞரானர்.

வேங்கைகள் உலவிய தம் தாய்நாட்டில் நரிகள் உலவக் கண்டார். வாளேந்தி வாழ்ந்த மக்கள் வகையற்றோரின் தாளேந்தி நின்றனர். அறிவும் திறனும் செறிந்திருந்த நாட்டில் மடமையும் மருளும் சூழ்ந்தன. கைவிரித்துவந்த கயவர், மக்களிடத்துப்பொய் விரித்து அவரின் உரிமையெலாம் பறித்து வாழலானர். ஏற்றம் மிகுந்திருந்த நாட்டில் இழி கழுதை ஆட்சி வளர்ந்தது. இவற்றையெல்லாம் கண்ட புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், உறங்கிக்கிடக்கும் தமிழர்களின் உள்ளத்தே சொல்லம்புகள் ஊடுருவிப் பாயச்செய்தார். 'சிம்புட்பறவையே சிறகை விரி, எழு, சிங்க இளைஞனே திருப்பு முகம், திறவிழி' என்றார். 'உங்கள் குகையினை விட்டே வெளிவருவீர் சிங்கங்காள்!' என்று கூறி இளைஞர் கூட்டத்தை வரவேற்க எதிர்நோக்கி நிற்கிறார்.

காலத்திற்கேற்ற கருத்துக்களைக் கவிதையின் மூலம் குழைத்தூட்டியே மக்களை மக்களாக ஆக்கினர்கள் மற்றை நாட்டுப் புரட்சிக் கவிஞர்கள். அரசனையும் ஆண்டவனையும்மட்டும் பாடும் பணியில் கவிஞர்கள் ஈடுபட்டிருந்த காலம் ஒன்று இருந்தது. மதுவோடும் மங்கையோடும் கொஞ்சும் மன்னன், கயமை பொருந்திய திருவிளையாடல்களைச்செய்த ஆண்டவன் இவர்கள் கவிஞனின் பாட்டுடைத் தலைவர்களாக விளங்கினர்கள். அந்தக் காலங்களில்தான் மக்களின் ஆயுள் அரசனுக்கும், அறிவு ஆண்டவனுக்கும் அடிமைப்படுத்தப்பட்டன. அவைகளில் மக்கள் உள்ளம் ஊறத்தொடங்கியபிறகுதான் அறிவு வளர்ச்சிக்கான வழிகளில் தடைகள் ஏற்பட்டன. ஆகவேதான்,

" இருட் டறையில் உள்ளதடா வுலகம்
சாதியிருக்கின்ற தென்பானும் இருக்கின் றானே
மருட்டுகின்ற மதத்தலைவரும் வாழ்கின் றாரே
வாயடியும் கையடியும் மறைவ தெந்நாள்
சுருட்டுகின்றார் தம்கையில் கிடைத்த வற்றைச்
சொத்தெல்லாம் தமக்கென்று சொல்வார் தம்மை
வெருட்டுவது பகுத்தறிவே இல்லை யாயின்
விடுதலையும் கெடுதலையும் ஒன்றேயாகும் "

என்று அறிவுரை பகன்றார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். அறிவும் திறலும், அழகும் எழிலும், மலையும் மடுவும், சோலையும் சாலையும், வளமும் வகையும், மக்களின் பண்பும் பழக்க வழக்கமும், கொள்கையும் கோட்பாடும் பாடல்களின் பொருள்களாக மிளிர்ந்துவந்த நாட்டிலே கவிஞர்கள் கயமை நிறைந்த கடவுட் புராணங்களைப் பாடி மக்களை மடமைச் சேற்றில் அழுந்தச்செய்த தன்மையைக் கண்டார். கண்டு வெகுண்ட புரட்சிக் கவிஞர், "மாடுகளும் வழக்கத்தால் செக்கைச் சுற்றும், மடையர்களும் இயற்றிடுவார் கடவுட் பாடல்" என்று முழங்கினர். கடவுள், மதம், மூடப் பழக்கவழக்கம், குருட்டு நம்பிக்கை, அரசியல், வாழ்க்கை இயல் ஆகியவற்றின்பேரால் பெருங்குடி மக்கள் தனிப்பட்ட ஒரு சிலரால் ஏமாற்றப்படுவதைக் கண்டு மனம் புழுங்கினர்.

புழுங்கிய அவர் உள்ளத்தினின்றும் எழும்பிய தீப்பொறி கொடுமைக் குட்படுத்தப்பட்டோரின் உள்ளங்களில் கொழுந்துவிட்டெரிகிறது. புது உலகைப் புரட்சிக் கருத்துக்களிலே பூக்கச் செய்து புது உலகை அமைக்கப்போகும் புரட்சிக் கவிஞர், பழைய உலகைப் பார்த்துக் கேட்கிறார் :

மண்மீதில் உழைப்பாரெல்லாம்
வறியராம்! உரிமை கேட்டால்
புண் மீதில் அம்பு பாய்ச்சும்
புலையர் செல்வராம் "

இது நீதியா என்று கேட்கிறார்.

" முழங்காற் சேற்றினில் முக்கி விளைத்தவன்
மூடச் சகோதரன் பஞ்சப் பயல்—அதை
மூக்குக்கும் நாக்குக்கும் தண்ணீர்க் காட்டித் தின்னும்
மோசக் காரன் மேலாம் "

இது நேர்மையா என்று கேட்கிறார்.

கூழுக்குப் பற்பலர் வாடவும் சிற்சிலர்
கொள்ளை யடிப்பதும் நீதியோ?

என்று கேட்கிறார்.

இத்தகைய புரட்சிக் கேள்விகளை இந்த நாட்டில் வேறு எந்தக் கவிஞனும் கேட்டதில்லை; கேட்கத் துணிவு கொண்டதில்லை. நம் புரட்சிக் கவிஞர் மக்களைப்பார்த்து மூடப் பழக்கவழக்கங்களென்னும் பழமைச் சேற்றில் புரளாமல் புரட்சி மணங்கமழும் பூங்காவில் உலவச் சொல்லுகிறார். இளமை யுள்ளங்களைப் பார்த்து, கன்னங்கருத்த இருட்டின் கறையாக, தொங்கும் நரம்பின் தூளாக வாழாமல் மக்களாக வாழச் சொல்லுகிறார். புரட்சி மணங்கமழும் பூஞ்சோலை நிறைந்த புது உலகிற்கு மக்களை அழைக்கிறார்! பேதமிலா அறிவுடைய அவ்வுலகத்திற்குப் பேசு சுயமரியாதை உலகு எனப் பேர் வைப்போம் என அறைகூவி அழைக்கிறார்! புரட்சியில் மலரும் புது உலகத்திற்கு நம்மை அழைக்கிறார்! நாமும் புன்முறுவலோடு போவோம்! புரட்சிக் கவிஞனல்தான் புரட்சியில் பூக்கும் புது உலகிற்கு நம்மை அழைத்துச் செல்ல முடியும்!

# சரியான மதிப்பீடு

சுப—நாராயணன்

கவிஞன், பிறக்கிறானே யொழிய உண்டாக்கப்பெறுவதில்லை என்பதுவாஸ்தவம். பிறவி மேதைதான் பிறவிக்கவிஞனாக முடியும். ஆனால், கவிஞனும் மனிதன் தான். அவன் கவிபாடுவதும் மனிதர்களுக்காகவே தான். எனவே, கவிஞன், கவிதை, மேதை என்கிற விஷயங்களெல்லாம் முற்றும் மனித சம்பந்தமானவை களே தான். கடவுள் கிருபை, தெய்வ வாக்கு, அமர சிருஷ்டி என்கிற பேச்செல்லாம் மிகைப்பட்ட பூசனை மொழிகளே அல்லாமல், விஷயத்தைச் சரியாகப் புரிந்து கொண்ட, கச்சிதமான விமர்சனம் ஆகா.

மற்றவர்களைப் போலவே, கவிஞனும், பிறந்து வளர்ந்து பண்படுகிறான். ஆனால், மற்றவர்களைவிட அவன் இயற்கையாகவே மேம்பட்ட திறமையுள்ளவனா கையால், அவனுடைய உள்ளார்ந்த மேதா விலாசம் எளிதில் பிரகாசித்துவிடுகிறது. தன் காலத்து அறிவுச் செல்வம் அனைத்துக்கும் அவன் கொள்கலமாக இருந்து, இதுவரை மனித சமுதாயத்துக்குக் கிடைத் துள்ள தத்துவ, இலக்கிய, கலை சம்பந்தமான பேருண் மைகளை உய்த்துணர்ந்து, வாழ்க்கையின் சரியான விமர்சகனாக இருப்பதோடு, எதிர்கால வாழ்வு நலத் துக்கு ஆன சரியான வழிகாட்டித் தோழனாகவும் அவன் இருக்கவேண்டும். இவ்வளவு சங்கதிகளும் பரி பூரணமாகப் பெற்று, தானும் வளர்ந்து, மனித இனத் தையும் வளர்த்து வருகிறவனே கவிஞன். இந்தப் பண்பு நலங்கள் மாணப் பெரியனவாய் அமைந்துள்ள வனே மகா கவி.

கம்பனுக்குப் பிறகு உயர்ந்த கவிகள் இன்னும் தமிழ் நாட்டில் தோன்றவே இல்லை—என்று தமிழ் நாட்டின் கவிதை விமர்சனத் தந்தையான வ. வே. சு. ஐயர் சொன்னார். மிகக் கடுமையான சட்டங்களை வைத்துப் பார்த்து அவர் மதிப்பீடு செய்திருக்கிறார். அப்படித்தான் மதிப்பீடு செய்யவும் வேண்டும். பாரதியை, அவர் நல்ல கவிஞராகவே கருதியிருக்க வேண் டும். ஆனால், தேச பக்தர் பாரதி, தேசியக்கவி பாரதி யார் ஆக ஆனதோடு, பின்னால் உலக மகா கவியாகக் கூட ஊதிப்போய் விடுவார் என்று அவர் எண்ணி யிருக்க மாட்டார். இருந்தாலும், பலமொழி இலக்கி யங்களை ஆழப் பயின்ற அவருக்குத் தமிழினிடத்தி லும், தமிழனிடத்திலும் மகத்தான ஆர்வமும் நம்பிக் கையும் இருந்துவந்தன என்பது தெளிவு.

அறிஞர் ஐயரவர்களின் நம்பிக்கை மோசம் போக வில்லை. அவர் மதிப்பீட்டுப் படியே, கம்பன் அடிச் சுவட்டில் நடைபோட்ட ஒரு பாரதி நமக்குக்கிடைத் தார். பாரதியின் அடிச்சுவட்டைப் பின்பற்ற முயன்று வெற்றிகரமாக அவரை ஒட்டி நடந்து பாரதிதாசனாக ஆகி, சில அம்சங்களில் பாரதியையும் முந்திக்கொண்டு நிமிர்ந்து நிற்கிறார் நமது புரட்சிக் கவிஞர் கனக சுப்பு ரத்தினம் அவர்கள்.

தொடக்கம் முதலே, கவிஞர் சுப்புரத்தினம் தம்முடைய சொந்தத் திறமையிலேயே பெரிதும் நம் பிக்கை வைத்து வந்திருக்கிறார் என்பது, அவருடைய கவிதைகளைப் பூராவும் அமைவுடன் பயில்வார்க்குத் தெரியாமல் இருக்கமுடியாது. பல அம்சங்களில் பார தியை மிஞ்சிவிட்ட இவர், தாசானு தாசர்களான போலி மேதைகளின் காழ்ப்பு மொழிகளால் வெந்து கருகி உலர்ந்து போகாமல், தம்முடைய மேதை பலம் ஒன் றையே துணைக்கொண்டு புரட்சிக் கவிஞராகத் தமிழ் மக்கள் உள்ளத்தில் நிலையான ஓர் இடத்தை வகித்துக் கொண்டுள்ள இவர்—பாரதிதாசனல்ல !—சொந்தப் பெயரிலேயே சொந்தப் பெருமை கொள்ளக்கூடிய புரட்சிக் கவிஞரே, இவர்.

ஒரு கவிஞனை மூன்று தினுசாக மதிப்பிடலாம். சுயமரியாதைக் கட்சியை இவர் ஆதரிக்கிறார்; அதனால் இவர் மகாமேதை, கவிச் சக்கரவர்த்தி என்று சொல் வது நபர் மதிப்பீடு; இது தப்பு. அறத்தைக் கிரம மாக வளர்த்து வந்த பார்ப்பனச் சேரிகள் அக்கிரம மாய் அண்டை அயலானின் உரிமைகளை அபகரிக்கிற சாதிப் பூசல்களை வளர்க்கும் அக்கிரமகாரப் பண்ணை களாக மாறியதை இவர் கண்டிக்கிறார்; அதனால், இவர் கவிஞரே அல்ல; துவேஷப் பிரசாரகர் என்று சொல் வது நபர் மதிப்பீடு; இதுவும் தப்பு. பாரதிக்குப் பிறகு, தமிழை முறையாகப் பயின்று, மொழி இலக் கணம், யாப்பு இலக்கணம் இவைகளைத் தெள்ள ஓர்ந்து விழுமிய கருத்துக்களைப் பொருத்தமான இன் சொற் களைக் கொண்டு, உயிர்த்துடிப்புள்ள கற்பனை நயத் தோடு, உணர்ச்சியைக் கிளறி, உள்ளத்தில் இன்ப ஊற்று சுரப்பெடுக்கும் வண்ணம், கலை மெருகேறிய பல கவிதைகளை இவர் யாத்துள்ளார்; "தேசிய"க் கவிகளும், "மர்ம"க் கவிகளும் "பெற்றுத் தள்ளி" யுள்ள கவிகளில் தோன்றும் சொள்ளை சொட்டைகள்

இவருடைய சுமாரான கவிகளில்கூட இல்லை; இலக்கணப் பண்டிதர்களின் இலக்கணக் கவிபோல், வெறும் டம்பச் சொல்லடுக்கல்ல இவருடைய கவி; ஆகவே, இவர் நவயுக மகா கவி என்று சொல்வது சரித்திர மதிப்பீடு; இதுவும் தப்பு.

அப்படியானால், சரியான மதிப்பீடு எது? உண்மைக் கவிஞனுக்கு வேண்டிய படிப்பறிவு இவரிடம் இருக்கிறது. இவர் போலி மேதை அல்ல, உண்மையான மேதையே என்பது, இவர் பாடியுள்ள "பில்கணியம்," "குடும்ப விளக்கு" போன்ற சிறந்த கவிதைகளிலிருந்து புலனாகிறது. இவருடைய கவிகளில் மிகப் பெரும்பாலானவை அறத்தை அடிநாதமாகக் கொண்டிருப்பனவாதலால், இவர் லட்சியக் கவி என்பது தெளிவு. தமிழன் வாழ்வில் முடைநாற்றம் வீசும் சமூகக் குறைபாடுகளைப் போக்குவதை இவர் குறிக்கோளாகக் கொண்டிருப்பதால், இவர் புரட்சிக் கவிஞர். மகாகவி ஆவதற்கு வேண்டிய தகுதிகள் இவரிடம் நிரம்பக் காணப்படுகின்றன. இவர் பாடியுள்ள கவிதைகளில் பேர் பாதி மிக உயர்ந்த கவிதைகள். இதை, ஜாதி, மத, கட்சி வேறுபாடின்றி, எல்லா அறிஞர்களும் ஒப்புகின்றனர். எஞ்சிய கால்பகுதி, சுமாரான கதைகள். மறு கால்பகுதி, நல்ல பிரசார அறவுரைகள். ஆனால், ஒன்றுகூட மட்டமான வெறும் சொல்லடுக்கல்ல.

ஆகவே, மேதை கனக சுப்புரத்தினம் அவர்கள், இன்று தமிழ்ப் பெருமக்களுக்குப் பகிரங்கமாய்த் தெரிந்துள்ள கவிஞர்களில் அதி உன்னதமான புரட்சிக் கவிஞர் என்பதே சரியான மதிப்பீடு என்று நான் நினைக்கிறேன். இவர், இதுவரை நமக்குத் தந்துள்ள கவிதைச் சொத்துக்கள் சிறு சிறு ரத்தினங்களும், மாணிக்கங்களும், வைரங்களும் ஆகவே உள்ளன. கவிஞர் கனகம் நமக்கு நிறையக் கனகமும் தந்திருக்கிறார். ஆனால், காவிய ரூபமாக இவர் இன்னும் நமக்கு ஏராளமாக அணி பணிகளைக் குடும்பச் சொத்தாக வழங்கவேண்டும்; வழங்க முடியும். இன்று நம் கவிஞருக்கு நாம் வழங்கும் நிதி முடிப்பு நம்முடைய பாராட்டுதலுக்கு அறிகுறி. இது நம்முடைய நன்றியறிதலுக்கு அறிகுறியல்ல. இது, கேவலம் உபகாரத் தொகையு மல்ல. புரட்சிக் கவிஞர், மகாகவி ஆக முடியவே முடியும். நல்ல கவிதையையும், நல்ல கவிஞரையும் பாராட்டத் தமிழனுக்குத் தெரியும். போலிச் சரக்கால் நாம் இனி ஏமாறத் தேவையே இல்லை. அசல் கவிஞர் நம்மிடம் இருக்கிறார். அசல் கவிதையை ரசித்த பிறகு, போலிகளை நீங்கள் ரசிக்க மாட்டீர்கள். போலிகளை ஒழிக்க வழி, அசல் பொருள்களை ஏராளமாகக் கொண்டுவருவதே யாகும். நம் கவிஞர் மகாகவி ஆக வேண்டும் என்று அவரை நான் கேட்டுக்கொள்ளவில்லை. அவராகவே மகாகவி ஆகிவிடுவார். ஆகாமல் இருக்க அவரால் முடியாது. அவர் நீடூழிவாழ வேண்டும். என் மதிப்பீடு சரிதானா என்பதை, நீங்களும் காலமும் சொல்லவேண்டும். புரட்சிக் கவிஞர் பல்லாண்டு பல்லாண்டு நீடூழி வாழ்க!

## எழுச்சி தந்த இயற்கவிஞர்

பொங்குகதிர் முன்மாலை மறைந்து போனாற்
புகழுடனே மறுகாலை தோன்றல் போல
மங்கியநம் தமிழரெலாம் மலர்ச்சி பெற்று
மறுமுறையும் வீறுடனே தோன்று தற்குச்
சங்காரம் செய்திடடா தமிழா! உந்தன்
சகுனியெலாம் விரைவினிலே தொலைவா ரென்று
இங்குள்ள தமிழர்க்கு எழுச்சி தந்த
'இயற்கவிஞன்' இப்புவிநாள் இனிது வாழ்க!

—சாமி. பழநியப்பன்

# தமிழா வாழி!

**வீ. உலகவூழியன்**

(1) பலதேய்வப் பழம்பெருமை, பெரும்புளுகோ டறியாமைப் பயனில் வித்தை
சிலருய்யத் தமிழருடைப் புலத்துழுது விதைத்துவளர் தீய நாற்றை
நலமென்று கருதியந்தோ கழிமிகுதிக் கண்ணோட்டம் நாளும் பேணும்
புலமென்று தமிழ்ப்புலவர் ஏமாந்து பயிர்செய்து புலங்கள் கெட்டார்.

(2) நச்சுவிழை செடியவைதாம் நாணாளும் மிகவளர்ந்து நம்தம் கால்கள்
வைச்சவுடன் பகீரென்று மனநடுங்க மெய்நடுங்க வருத்தம் நீளத்
தைச்சுவிடும் முட்களுடன் பொருளழிக்கும் பழங்கள்நனி பெற்று நொந்தோம்
பிச்சவற்றை எறியாமல் வேரோடு தோண்டுகின்ற பெரிய வீரா!

(3) "விட்டெறிந்த கற்போல" எனவுரைத்த உவமைநயம் வியந்தே னேனும்
"சுட்டுவிரல் ஈட்டி"யெனச் சொன்னவிறல் மெய்ப்பாட்டைச் சுவைத்தே னேனும்
"கட்டையில்நீர் போகுமட்டும் வேர்ப்பீர்"எனும் தொடர்படித்துக் களித்தே னேனும்
கட்டழகா உனைக்காண உரைகேட்க விரும்பினவே கண்ணும் காதும்.

(4) கஞ்சாவின் இலையதனைக் கசக்கியுண்டு மதிமயங்கும் கசடர் போலப்
பஞ்சாங்கக் குழுக்களுடைப் பொய்ப்புளுகு நூல்மாந்தும் பான்மை யோராய்
அஞ்சாமைக் குணங்கைவிட் டஞ்சுகின்ற தமிழர்தாம் அறிவு தேறச்
"சஞ்சீவி பர்வதத்தின் சாரல்"தரு வீரநிறை தமிழா வாழி.

(5) இளங்கோவை முதலாக இளம்பனுவல் நாயகத்தை இறுதியாக
வளங்காணுந் தமிழ்நாட்டுப் புலமைநிறை பாவாழ்நர் வரிசை யுள்ளே
களங்கேறும் பொய்மைபோதி கதையெல்லாம் மறுத்துண்மை கண்டோன் நீயே
உளங்காண விழைகனக சுப்புரத் தினமென்னும் உறவோய் வாழி!


அய்யர் புரொடெக்ஷன்ஸ்
அண்டு
நேஷனல் ஸ்டுடியோஸ்
லிமிடெட்
ஜி.என்.பி. ◦ யோகமங்களம்
P.A.பெரியநாயகி ◦ L.நாராயண ராவ்
C.T.ராஜகாந்தம் ◦ ராஜாமணி நடித்த
ருக்மாங்கதன்
(தமிழ்)
ஜூலை வெளியீடு
டைரக்ஷன்: P.S.V.அய்யர்
பாட்டு: சிவன்......
பாட்டு டைரக்டர்: ராமநாதன்
நடன டைரக்டர்: மாதவன்
ஸ்டுடியோ: ஜெமினி..
விவரங்களுக்கு: அய்யர் புரொடெக்ஷன்ஸ் அண்டு நேஷனல் ஸ்டுடியோஸ் லிமிடெட்
119, அரண்மனைக்கார தெரு. மதராஸ்.1.

# தீப்பொறி



(இரா. செழியன் M. A.)

**கா**ரிருளில் மூழ்கிக் கிடந்தது கருங்குன்று. கடுங் குளிர் மேலும் மேலும் இருட் குழம்பைக் குன்றின்மீது படியச்செய்தது. மக்களோ ஒளியும் வெப்பமும்வேண்டித் துடித்தனர். பாதுகாவலன்தான் என்ன செய்வான்? திக்குகள் மறைந்த நேரத்தில் ஒளியின் உருண்டையைத் தேடுவது எப்படி? வேதனை மிகுந்த விம்மலொலி அடங்குவதாயில்லை. இருள் படர்ந்த பாலையில் ஒளியின் ஊற்றைத்தேடி விழிக்காத கண்கள் துழவிக் கொண்டிருந்தன. நிலைதடுமாறிய மக்களினம் நீண்ட இரவின் முடிவுக்குக் காத்துக் கொண்டிருந்தது.

குமுறலிடையே திடீரென்று கூக்குரல். அவதி தந்த ஆவல் ஒலித்தது. மலையிடுக்குகளிடையே மங்கிய ஒளி தென்பட்டது. காலத்தின் நீண்ட கைகளில் காலைச் சம்மட்டி சுழன்றது. ஓங்கிய அடி கனல் கசிந்த பள்ளத்தில் விழுந்தது. தீப்பொறி பறந்தது. செஞ்சுடர்கள் சிதறின. அடி தாங்காது பழுக்கக் காய்ச்சிய பந்தொன்று மலைப்பீடத்தில் துள்ளிக் குதித்தது. வெடித்த எரிமலையிலிருந்து கிளம்பு வதைப்போல, கிழக்கு அடிவானத்திலிருந்து தீச்சுழல்கள் அலையலையாக எழுந்தன. அழல் சுழன்று சுழன்று பரவியது. கருமேகக் காட்டில் கனல், வெண்மேகப் பகுதியில தீ வெள்ளம், செக்கர் வானில் செந்தூர வண்ணம பெருக்கெடுத்தோடியது. எங்கணும் பரபரப்பான, களிதுள்ளும் செவ்வொளி துலங்கியது.

கிழக்கிலே தீ, மேற்கிலே தீ, வடக்கும் தெற்கும் கிழக்காயின.

வான வெளியில் தெரித்த தீப்பொறிகள் மண்ணகத்திலும் விழுந்தன. மலைச் சரிவில், அலை கடலில், தாமரைக் கூட்டத்தில், ரோஜாத் தோட்டத்தில், பொன்னொளியில், செந்நெல்லில் செம்மை திகழ்ந்தது.

* * *

எங்களுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. ஆரவாரத்துடன் சண்டைக்குப் போகும் நாங்கள் ஒவ்வொரு சமயமும் அழுங்கிய மனத்துடன் திரும்பினோம். பகல் முழுவதும் வேலை செய்தும் பலன் காணாது வருந்தினோம். இவைகளுக்கு மாற்றமில்லையா?

ஊர்க்கோடியிலிருக்கும் கருமானின் ஞாபகம் எங்களுக்கு வந்தது. தள்ளாத கிழவன் அவன். நாங்கள் சண்டைக்குப் போகும் பொழுதெல்லாம் அவன் ஏதேதோ சொல்வான்; வேலைக்குப் போகும்பொழுது வெறித்துப் பார்ப்பான். தள்ளாத கிழவன். அவன் சொற்களைத் தள்ளிவைத்தோம். அவ்வாறு புறக்கணிக்கப்பட்டவனிடம் சென்றோம், எங்களை அமைதியும், வாழ்வும் புறக்கணித்த நிலையில்.

எங்களது கலக்கம் அவனுக்குக் களிப்பையே தந்தது. களிப்புடன் வரவேற்றானே யொழிய, அவன் எங்களை ஏளனத்துடன் ஏறெடுத்துப் பார்த்தான்.

பலி பீடம் வேண்டுமா?

—ஆம், பசியைப் பலியிட

கொலைவாள்?

—கொடுமையை ஒழிக்க.

தளர்ந்த கிழவன் முறுக்குடன் எழுந்தான்; உலைக்களத்தை அசக்கினான். சாம்பல் போர்வைக்குள் உறங்கிக்கொண்டிருந்த கனல் கண்ணை விழித்துப் பார்த்தது. புன்னகை செய்துகொண்டே கருமான் செந்தழலின் மத்தியில் ஒளிந்து கொண்டிருந்த நெருப்புக் கட்டியைக் கூடத்தில் வைத்தான். சம்மட்டி சுழன்றது, பலப்பல நூற்றாண்டுகளாக அவன் கைகளில பதுங்கிக்கிடந்த பல மனைத்தும் காய்ச்சிய இரும்பைத் தாக்கியது. தீப்பொறிகள் சிதறின, மேலும் சிதறின, சிதறின சிதற முடிந்தவரை, மேலும் சிதற முடியாதபடி.

அதே சமயத்தில் புயல் வீசியது. சூறாவளியில் பறந்த சுடர்த் திவலைகள் ஆங்காங்கு அவிந்துகிடந்த உலைக்களங்களை உறக்கத்தினின்று எழுப்பின.

ஆயிரமாயிரம் தீப்பொறிகள் அதனால்
ஆயிரமாயிரம் உலைக்களங்கள் அவற்றில்
ஆயிரமாயிரம் தொழிலாளர்.

தீப்பொறி பட்டுத் தொழிலாளர் துள்ளிக் குதித்தனர். எரிகிற உலைக்களம் அவர்களுக்கு ஆச்சரி

யத்தைக் கொடுத்தது. உடனே ஒவ்வொரு கூடத்தி லும் சம்மட்டி சுழன்றது, அரிவாள் மிளிர்ந்தது, வாழ்வு மலர்ந்தது.

* * *

தமிழ்க் குன்றில் இருள், தமிழகத்தில் மருள். கலைத்துறையில் ஏற்பட்ட அருட்பாக்கள், அறிவுலகில் இருட் செறிவை உண்டாக்கின. ஆண்டவனின் அருளைக் காட்டி, இவ்வுலகில் சிலர் பொருள் கூட்டுவதைத் தடுக்க எவரும் முன்வரவில்லை. ஆண்டவனே உலகுக்கு அப்பாற் பட்டவனுயிருந்தான். பொருள் படைத்த ஆண்டைகளோ அடிமைகள் பலர் வாழ்வதால் வாழ்பவர்கள். இந்நிலையில் கலையொலி, புனல் நிறைந்த தொட்டியில் வாழும் தவளையின் குரலாக இருந்தது. எனவே அது பொத்தல் இலைக் கலங்களைப்பற்றி எண்ணவில்லை.

உள்ளமெனும் உலைக்களம் அவிந்து கிடக்கிறது; கருமான் உறங்குகிறன். துருப்பிடித்த சம்மட்டி, உருக்குலைந்த அரிவாள், தூசிபடிந்த அடுப்பு, பாசி படர்ந்த உருவங்கள், இவை கொட்டிலின் நிலை.

கருத்தெனும் சம்மட்டி உணர்வைத் தாக்கியதும் புரட்சிப் பொறிகள் சிதறுகின்றன. வீசுகின்ற புயலில் தீப்பொறிகள் பரவுகின்றன. அணைக்கமுடியாத காட்டுத் தீ தமிழகத்தைக் கவ்வுகிறது. சமூகத் தளத்தின் கீழே குமுறிக்கொண்டிருந்த கனல் எரிமலையாக வெடித்து விட்டது. வெகுண்டெழுந்த வேங்கை போல, செந்தழல் அங்குமிங்கும் பாய்ந்த வண்ணம் இருக்கிறது. குடிசைகள் அழிகின்றன, வறுமையும் அழிகிறது, கோபுரங்கள் வெடிக்கின்றன, கொடுமையும் ஒழிகிறது.

அவிந்த உலைக்களம் உயிர்பெறுகிறது. அணைந்த அடுப்புகள் எரிகின்றன. கண்கள் ஒளி விடுகின்றன. பச்சை இரத்தம் சிவப் பேறுகிறது. கற்றாண்களுடன் கட்டப்பட்டிருந்த இரும்பு விலங்குகள் உதிர்கின்றன. வறுமைக் கூண்டிலிருந்து வெளியேற்றம், வாழ்வு நகர் நோக்கி முன்னேற்றம்.

வறுமையால் தீய்ந்த நாட்டில் வன்மையான தீப் பொறி பரவுகிறது, ஒடப்பர் உள்ளங்களில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் உலகப்பன் பாட்டு பரவியதைப்போல—பரவியதால்.

---


SCIENTIFIC TT ASAFOETIDA

# ஸைன்டிபிக் டி. டி. பெருங்காயம்

—: மிக்ஸ்ஸ் கி :—

- ஆகாரத்திற்குத் தனி ருசி கொடுக்கக்கூடியது
- காரம், மணம், குணம் எல்லாவற்றிலும் சிறந்தது
- பெருங்காயத்தில் முதல் ஸ்தானம் பெற்றது
- யாவராலும் அமோக ஆதரவுடன் விரும்பப்பெறுவது

(பரிசுக் கூபன்கள் உடையது)

ரஷீட் ஜேம்ஷேட் சன்ஸ் அண் கோ.,
96, பாலெஸ் ரோடு,
மதுரை.

# கொலைவாளினை எடடா!



க. அன்பழகன் M.A.

எங்கும் எதற்கும் எவரும் புரட்சிசெய்யுங் காலம் இது. புரட்சி நடவாத காலமோ, தோன்றாத நாடோ இல்லை. புரட்சி முதலில் எண்ணத்தில் தோன்றி, அதன் பின்னரே செயலில் நிகழும் வேறு எந்த நிகழ்ச்சியையும் போல. அப் புரட்சி, உள்ளத்திலே அரும்பி, சொற்களிலே மலர்ந்து, ஏடுகளிலே கமழ்ந்து, மக்களுடைய மனத்திலே நிறைந்து, அவர்தம் செயலிலே காய்த்து, இறுதியிலே நாட்டிலே அந் நாட்டு மக்கள் வாழ்க்கையிலே கனிகின்றது.

எண்ணத்தில் ஏற்படும் மலர்ச்சி, ஏட்டிலே இடம் பெற்றபின்தான் நாட்டிலே புரட்சிக்கான அடிப்படைகள் வலுப் பெறுகின்றன. உலகின் வரலாற்றிலே, ஏட்டிலே புரட்சியைத் தோற்றுவித்தோர் சிலர்; நாட்டிலே அதனை உண்மையாக்கினோரும் சிலர். இந்தியத் துணைக் கண்டத்திலோ, அன்றித் திராவிடத் திரு நாட்டிலோ என்றால், எண்ணவும் ஆள் கிடைத்திடுதல் அருமையாம். திராவிடத்தில் புரட்சிக் கருத்தை அழகான கவிதைகளாக, காவியச் சித்திரங்களாக ஏட்டிலே திகழ வைத்தவர், தனிப் பெருங் கவிஞர், பெருந்தகை பாரதிதாசன் ஆவார். கவிஞர், கருத்துலகை மலரச்செய்யுந் தலையாய கடனை, முதற் பணியை, முட்டின்றி நிறைவேற்றியுள்ளார். முதற் கண் நிகழ்வது நிகழ்ந்தால் அதன் வழிப் புத்துலகம் பூக்க வேண்டுமன்றோ!

இந்நாட்டிலே புரட்சியுள்ளம் ஒடுங்கி, புதுமைக் கருத்துக்கள் மங்கி, பகுத்தறியும் பண்பு நசித்துப் பலப்பல நூற்றாண்டுகள் கழிந்துவிட்டன. மக்களெல்லாம் நடைப்பிணங்களாக உலவுகின்றனர்; மானமிழந்து மதிகெட்டுத் திரிகின்றனர்; தன்னுணர்வற்று, தம் தாய்நாட்டை மறந்து, உரிமையிழந்து நிற்கின்றனர்; மறம் குன்றியதால், "வீரம்" வரலாற்றுச் செய்தியாகவும் 'போர்க்களம்' படக் காட்சியாகவும், 'வெற்றி' வேற்று நாட்டார் உரிமையாகவும் மாறிவிட்டன. பூரிக்குந் தோள்களோ, போர்ச்செய்தி கேட்டுக் களிப்பூறும் உள்ளமோ, வாளினது பளபளப்பைக்கண்டு ஒளிபெறும் கண்களோ, தோளொடு தோளிணைத்து நிற்கும் படை மாட்சியை எண்ணியும், தனியாற்றலைக் கருதியும் "பகைப்புலம் மாய்த்திடுவோம்" என்ற எக்காளமோ, இன்று காணாத கேளாத காட்சிகளாகிவிட்டன. தமிழகத்தின் பண்டைப் பெருமைகள்—அந்நாள் திராவிட மக்கள் பெற்ற வெற்றிகளின் அடிப்படைகள்—இன்று சிதறிவிட்டன. சீரிழந்த—சிறப்பிழந்த திராவிடமே இன்றைய தமிழகம். இந் நாடு மறுமலர்ச்சிபடையவேண்டுமானால் புரட்சி பூக்கத்தான் வேண்டும்.

புரட்சியின்றேல் புத்துலக வாழ்வில்லை. அந்தப் புது வாழ்வு இல்லையேல் பழைய சாக்காடேதான். பலப்பல நூற்றாண்டுகளாக நமது நாட்டைப் பாழ்படுத்தி, நமது உடலை அரித்து, உள்ளத்தைத் தீய்த்து, உயிரை மாய்த்து வருகின்ற அதே சாக்காடுதான். 'நாமிருக்கும் நாடு நமதென்பதறிந்தோம்—இது நமக்கே பரம்பரைச் சுடுகாடு என்பதுணர்ந்தோம்" என்று பாடி ஏங்கவேண்டிய அளவிற்கு இன்றைய திராவிடநாடு—ஆரியத்தின் மாயக்காடாக, வடநாட்டாரின் வாணிப வேட்டைக்காடாக, ஆங்கிலேயரின் ஆதிபத்திய கொள்ளைக்காடாக, தமிழரின் வாழ்விற்கு 'முடிவிலோர் பிடி சாம்பல்' என்ற தத்துவத்தைப் போதிக்கும் 'சுடுகாடாக' ஆகிவிட்டது.

திராவிட மக்கள் எழுச்சியுற வேண்டுமானால், அதற்குப் புரட்சியுள்ளம் வேண்டும். மக்கள் மனமெல்லாம், புரட்சி விருப்பாலே பெரு நெருப்பாதல் வேண்டும். அதற்கெனவே, கவிஞர் பாடத் தொடங்கினர். ஏட்டினை எடுத்தார், எழுத்தோவியங்களை, உணர்வுச் சித்திரங்களைப், புத்துலகக் காட்சிகளைப், பகுத்தறிவுப் பாக்களைப், புரட்சிப் புயல்களைத் தீட்டினர்; நாட்டு மக்களிடத்திலே நீட்டினர். புரட்சிக் கவிஞரின் கவிதைத்தீ நாட்டு மக்கள் உள்ளமெல்லாம் சென்று பற்றத் தொடங்கியது.

> "சாந்தியால் உலகம் தழைப்பது நன்று?
> சமயபேதம் வளர்த்தே தளர்வது நன்று?"

என்று கேட்பது கவிஞர்தானே? என்றால், ஆம். சாந்தியால் உலகம் தழைப்பது நன்று. எனவே அச் சாந்திக்கு மாறான வேறுபாடுகளை விளக்கும் சமயங்களும், சச்சரவுகளும் ஒழிக்கப்படவேண்டும். அதை ஒழிக்கப் புரட்சி தேவை. அப் புரட்சி, போர்க்களம் புகுந்தேனும் நடந்தே தீர வேண்டும் என்பது கவிஞர் கருத்து.

> அணிம்பெறத் தமிழர் கூட்டம்
> போர்த்தொழில் பயில்வதெண்ணிப்
> புவியெலாம் நடுங்கிற்றென்ற

வார்த்தையைக் கேட்டுநெஞ்சு
மகிழ்ந்துகூத்தாடல் என்றோ?
மண்ணிடை வாளையேந்திப்
பகைப்புலம் மாய்ப்பதற்கும்
எண்ணிலாத் தமிழர் உள்ளார்
எனும்நிலை காண்பதென்றோ?

என்று கவிஞர், தம் நாட்டார் போர்த்தொழில் பயின்ற வீரர்களாக விளங்கவேண்டுமென விழைந்து கூறுகின்றார். அந்நிலை ஏற்பட்டுவிட்டால்,

"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு!"

என முழங்கி,

"வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடுந்
தோளெங்கள் வெற்றித் தோள்கள்"

என்று தோள் தட்டி,

"சிங்களஞ்சேர் தென்னாட்டு மக்கள்
தீராதிதீரரென் றூதூது சங்கே!
பொங்கு தமிழர்க் கின்னல் விளைத்தால்
சங்காரம் நிசமெனச் சங்கே முழங்கு!

எனச் சங்கநாதம் முழங்கிடுவர் தமிழர் எனக் கருதுகிறார் கவிஞர். அம் முழக்கத்திற்குப்பின்,

"கிளம்பிற்றுக் காண் தமிழர் சிங்கக்கூட்டம்
கிழித்தெறியத் தேடுதுகாண் பகைக்கூட்டத்தை
வளம்பெரியத் தமிழ் நாட்டில் தமிழரல்லார்
வால்நீட்டினால் உதைதான் கிடைத்திடுங் காண்"

என்று தமிழருடைய எழுச்சி இருக்கும் விதத்தை இங்கே சித்திரிக்கின்றார். தகுமுறை நீங்கி நடக்கும் மாற்றாருக்குத் தமிழர் கற்பிக்கவேண்டியதை எடுத்துக் கூறியுள்ளார்.

அந்தப் "புரட்சி உள்ளம்" தொழிலாளரைப்பற்றிப் பேசும்போது, இதைவிடப் பன்மடங்காகக் கனல் கக்குகின்றதைக் காணலாம்:

"நடவுசெய்த தோழர்கூலி
நாலணாவை ஏற்பதும்
உடலுழைப்பி லாதசெல்வர்
உலகைஆண் டுலாவலும்
கடவுளாணை என்றுரைத்த
கயவர் கூட்டமீதிலே
கடவுள்என்ற கட்டறுத்துத்
தொழிலுளாரை ஏவுவோம்."

இங்கே, தொழிலாளரை அவர்களது மூட நம்பிக்கையைக்கொண்டே ஏமாற்றப் பயன்படும் கற்பனைக் கட்டினை அறுத்து அவர்களுடைய போராட்டத்தைத் துவக்குவோம் எனக் கூறுகிறார். இன்னும்,

"செப்புதல் கேட்பீர்!—இந்தச்
செகத்தொழிலாளர்கள் மிகப்பலர் ஆதலின்,
சுப்பல்களாக—இனித்
தொழும்பர்களாக மதித்திடவேண்டாம்!
இப்பொழுதே நீர்—பொது
இன்பம் விளைத்திட உங்களின் சொத்தை
ஒப்படைப்பீரே—எங்கள்
உடலில் இரத்தம் கொதிப்பேறு முன்பே"

என்று முதலாளிகளுக்குத் தொழிலாளிகளின் சார்பாக ஓர் எச்சரிக்கை தீட்டியிருக்கிறார். இவ் வெச்சரிக்கையிலேயே "இரத்தம் கொதிப்பேறுகிறது" என்ற உண்மையை உணர்த்தியிருக்கின்றார். அதன் விளைவாக ஏற்படும் போராட்டத்தில் தொழிலாளருக்கு இருக்கும் வலிவினை,

"எலிகள் புசிக்க எலாம் கொடுத்தே சிங்க
ஏறுகள் ஏங்கிடுமோ—இனிப்
புலிகள் நரிக்குப் புசிப்பளித்தே பெரும்
புதரினில் தூங்கிடுமோ?"
"கிலியை விடுத்துக் கிளர்ந்தெழுவார் இனிக்
கெஞ்சும்உத் தேசமில்லை—சொந்த
வலிவுடையார் இன்ப வாழ்வுடையார் இந்த
வார்த்தைக்கு மோசமில்லை."

என்று எடுத்துக்காட்டி, தொழிலாளர் தங்கள் சொந்த வலிமையால், உரிமையான இன்ப வாழ்வை அடைந்தே தீருவர் என்று உறுதி கூறுகிறார்.

இனி, ஏழைகளைப்பற்றியும் உலக மக்களுக்கு உணர்த்தக் கருதி, உலகப்பனை விளித்துச் சொல்கிறார்:

ஓடப்பரா யிருக்கும் ஏழையப்பர்
உதையப்ப ராகிவிட்டால், ஓர்நொடிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி
ஒப்பப்பர் ஆய்விடுவார் உணரப்பா நீ

என்று. இதைக் கேட்டுவிட்டால், ஏழைமட்டுமின்றிக் கோழையாய்த் திரிபவனும் புரட்சிக்குத் தயாராகிவிடுவான். அப்படி அனைவருமே புரட்சிக்குத் தயாராகும் நிலை பிறந்துவிடிலோ, அப்பொழுதும் போர்க்களத்தில் நின்று முரசொலி முழக்குகின்றார் புரட்சிக் கவிஞர். போர்வீரர்க்கு அவர் தரும் புத்துணர்வு இழந்த உறுப்புக்களைமட்டுமல்ல, நீங்கிய உயிரையே திரும்பத் தந்து, புது வாழ்வளித்து, போர்க்களத்தில் வெற்றி வாகை சூடச்செய்யும் தன்மைத்து. கேளுங்கள் அம் முழக்கத்தை,

"வலியோர் சிலர் எளியோர் தமை வதையே புரிகுவதா?
மகராசர்கள் உலகாளுதல்நிலையாம் எனும் நினைவா?
கொலை வாளினை எடடா மிகுகொடியோர் செய லறவே
குகைவாழ் ஒரு புலியே உயர்குண மேவிய தமிழா!
இலையே உணவிலையே கதி இலையே எனும் எளிமை
இனிமேலிலை எனவே முரசறைவாய் முரசறைவாய்"

'கொலை வாளினை எடடா' என்றவுடனேயே கொலை வாள் என்று கூறுவதிலே உள்ள உணர்ச்சி தெளிவாகின்றது. வாள்—கொலை செய்வதற்குரிய வாள் என்பதுமட்டுமன்றி, இதுநாள்வரை கொலைத் தொழிலில் ஈடுபடாது உறையிற்கிடந்த வாள் என்பதும், இனி





திருமணம் முதலிய

விசேஷங்களில்

•

தற்கால நூதன

ஆடைகளுக்கு

•

பலருடைய

அபிமானத்திற்குரிய

கடை.

சிட்டி சுவதேசி எம்போரியம்

(THE CITY SWADESHI EMPORIUM)

356-358, எஸ்பிளனேட்,

மதருஸ்.

நூதன கைத்தறி சேலைகள், பட்டு,

மில் சேலைகள், தோத்தி, லுங்கி

முதலிய ஆடை வகைகளும்

கிடைக்கும்.

உறையினின்று உருவிவிட்டால், கொலை மாபாதகமானாலும், உரிமையை உண்மையாக்க, நீதியை நிலைநாட்ட, உலுத்தரின் உயிரைக் குடித்தே தீரும் என்பதும் "கொலை வாளினை எடடா" என்பதிலே கேட்கப்படுகின்றது. உணவில்லை கதியில்லை என்று கதறும் மக்களைக் காப்பாற்ற, வீணரை வீழ்த்த "கொலை வாளினை எடடா" என்று முழக்குகிறார் கவிஞர்.

ஆணுக்குப் பெண்ணும், பார்ப்பனருக்குச் சூத்திரரும், பணக்காரருக்கு ஏழைகளும், மிராசுதாரனுக்கு உழவனும், முதலாளிக்குத் தொழிலாளியும், உயர் சாதியினருக்குப் பறையரும், ஆள்பவருக்கு ஆளப்படுபவரும், உலுத்தருக்கு உழைப்பாளரும், எத்தருக்கு ஏமாளிகளும், எவரும், எங்கும், எக்காரணத்தாலும், எவ்வகையாலும் அடிமையாக இருக்கக்கூடாது, இருப்பது முறையாகாது என்று முழக்குகின்றார் கவிஞர் பாரதிதாசன் தமது கவிதை முழுதும்; இந்நாட்டு மக்கள் இக்காலத்தும் பலப்பல வகையிலும் அடிமைப்பட்டிருப்பதைக் கண்டு காணப் பொறாது தமது கருத்துக் கண்களினின்று கனல் கக்கியுள்ளார்; அந்தத் தீப்பொறிகளே அவரது கவிதைகள்.

"இது எனது" என்னுங் கொடுமையைத் தவிர்ப்போம், "ஒரு பொருள் தனி" என்னும் மனிதரைச் சிரிப்பேர்ம்," "கூழுக்கு ஒருவன் அழும்படி ஆண்டிடும் கோலை முறித்திடுவோம்," "ஏழை முதலாளி இல்லாமற் செய்திடுவோம்," "சாதிமத பேதங்கள் மூட வழக்கங்கள், தாங்கி நடைபெற்றுவரும் சண்டை யுலகினை, ஊதையினில் துரும்புபோல் அலைக்கழிப்போம், பின்னர் ஒழித்திடுவோம், புதியதோர் உலகம் செய்வோம்," "பொதுவுடைமைக் கொள்கை திசையெட்டும் சேர்ப்போம்," என்று புரட்சியின் விளைவாகிய புது உலகைப், புது வாழ்வைப் படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

புரட்சி மலர்ந்து, புத்துலகம் பூத்து, புதுவாழ்வு மணங்கமழப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அரும் பெருந் தொண்டுகளாற்றியுள்ளார். ஆங்கில நாட்டுக் கவிஞர் ஷெல்லியைப்போல, அமெரிக்க நாட்டுக் கவிஞர் வால்ட் விட்மனைப் போல, இஸ்லாமிய இனத்திற்குக் கிடைத்த கவிஞர் இக்பாலைப்போல, திராவிட நாட்டிற்குத், தமிழ் இனத்திற்குக் கிடைத்த ஒப்பிலா அறிஞர் புரட்சிக் கவி பாரதிதாசன். அவருடைய பணியே புரட்சிக்கு முதற் பணி; எந்நாளும் நின்று நிலைத்துப் பயன் விளைக்கும் அரும்பணி; எவருக்கும் நலம் விளைக்கும் பெரும்பணி; தமிழ் மொழிக்கும் இலக்கியத்துக்கும் வாழ்வளித்த உயிர்ப்பணி. இந்நாட்டிளைஞர்கட்கெல்லாம் இன்பப்பணி; அந்தப்பணியே புரட்சிக் கவிஞருக்கு அணி. அப்புரட்சிக் கவிஞரே தமிழகத்தின் தலைமணி.


# SRINIVAS MILLS LTD.,

(Spinning & Weaving)

## MADURA

**Authorised Capital :** ... ... **Rs. 25,00,000**

**(Divided into 1,50,000 Ordinary Shares of Rs. 10/- each and 10,000 6% Cumulative Preference Shares of Rs. 100 each.)**

**Issued Capital :** ... ... **Rs. 25,00,000**

The Company has been formed for the purpose of establishing Cotton Mills in Madras Presidency and particularly in Madura to do Spinning & Weaving. The Mills will be equipped with the latest type of Machineries consisting of 12,000 Spindles and 300 Looms to start with and also a complete set of BLEACHING, DYEING & FINISHING PLANT — FIRST OF ITS KIND IN THESE PARTS.

***Public Patronage Solicited.***

**SRINIVASAN & Co.,**
*Managing Agents.*

# மங்கையர் சுகமும் ...மதுரத் தமிழும்...

"தாமரைக் கண்ணி"

அருங்கலை விநோதனுகிய மன்னன் ஒருவன் "உலகத்தில் பெரிய சுகம் எது?" என்று தன் கொலு மண்டபத்தில் வீற்றிருந்த புலவர்களைக் கேட்டான்.

"உண்டிடிற் சுகமே யல்லால்
உறுசுகம் இல்லை மன்னு!"

என்று ஒரு புலவர் கம்பீரமாகச் சொன்னர். இப் புலவன் 'சாப்பாட்டு ராமன்' எனக் கருதி அரசன் சிரித்தான். மற்றொரு புலவர்,

"மங்கையர் சுகமே யல்லால்
மறுசுகம் இல்லை மன்னு!"

என்றார். மன்னன் மீண்டும் நகைத்தான் புலவனின் போக்குக் கருதி. ஆனல், கம்பன் கண்ட சுகத்தைப் பாருங்கள்!

"பொன்னின் சோதி; போதினினற்றம் பொலிவேபோல்
தென்னுண் தேனின் தீஞ்சுவை; செஞ்சொற் கவி யின்பம்'

உலகத்தில் மிகச் சிறந்தது, மங்கையர் சுகம் மட்டுமல்ல; இதற்குச் சமமான மற்றொரு சுகமும் இருக்கிறது. அதுதான் தமிழ்க் கவியின்பம் என்பது கம்பன் கருத்து.

ஆம்; கம்பனும் எட்டிப் பிடிக்க முடியாத நிலையை எட்டிப் பிடித்து விட்டார் கவியரசர் பாரதிதாசன்.

* * *

1937-வது ஆண்டில், காங்கிரஸ் அரசாங்கம்இந்தி மொழியைக் கட்டாயமாகத் திணித்ததை மக்கள் எதிர்த்துப் போராடிக் கொண்டிருந்த சமயத்தில். ஒரு நாள் பிற்பகல் நான் ஏதோ படித்துக்கொண்டிருந்த போது, என் தோழி மாயா அவசரமாக உள்ளே வந்தாள்.

நான்:—என்னடி, மாயா, ஏன் இவ்வளவு அவசரம்? உட்காரேன்.

மாயா:—உட்கார நேரமில்லை. நீ பாடிக் கேட்டு நீண்ட காலமாயிற்று. ஒரு பாட்டுப் பாடு.

நான்:—(சிரித்துக்கொண்டே) இதற்கா அவசரம்? வியப்பாயிருக்கிறதே. சரிதான் உட்கார் பாடுகிறேன்!

மாயா:—ஆமாம், என்னத்தைப் பாடப்போகிறுய்?

நான்:—(சற்று யோசித்தபிறகு) ஏன், இப்போது தான் எல்லாரும் பாடுகிறுர்களே, கவிஞர் பாரதி தாசன் பாடிய அந்த இந்தி எதிர்ப்புப் பாட்டைப் பாடுகிறேன்.

மாயா:—நல்ல இந்தி எதிர்ப்பு மாச்சு; தமிழு மாச்சு......உன் அண்ணுவுக்கும் (அவள் கணவர்) உனக்கும் இதைவிட்டால் வேறு வேலையில்லை......சரி பாடித்தொலை; கேட்கிறேன்.

இந்திக்குத் தமிழ்நாட்டில் ஆதிக்கமாம்—நீங்கள்
எல்லாரும் வாருங்கள் நாட்டினரே!
செந்தமிழ்க்குத் தீமை வந்தபின்னும்—இந்தத்
தேகம் இருந்தொரு லாபமுண்டோ?
விந்தைத் தமிழ்மொழி எங்கள்மொழி—அது
வீரத் தமிழ்மக்கள் ஆவி யென்போம்;
இந்திக்குச் சலுகை தந்திடுவார்—அந்த
ஈனரைக் காறி உமிழ்ந்திடுவோம்.
எப்பக்கம் வந்து புகுந்துவிடும்—இந்தி
எத்தனை பட்டாளம் கூட்டிவரும்?
அற்ப மென்போம் அந்த இந்திதனை—அதன்
ஆதிக்கந் தன்னைக் குலைத்திடுவோம்.
சிங்கமென்றே இளங் காளைகளே—மிகத்
தீவிரங் கொள்ளுவீர் நாட்டினிலே,
பங்கம் விளைந்திடில் தாய்மொழிக்கே—உடல்
பச்சை ரத்தம் பரிமாறிடுவோம்.
தீங்குள்ள இந்தியை நாம் எதிர்ப்போம்—உயிர்
தித்திப்பை எண்ணிடப் போவதில்லை
மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை—எம்மை
மாட்ட நினைக்கும் சிறைச்சாலை.

மாயா:—ஆஹா; இதுவன்றே Poetry! இதுவன்றே Patriotism!

எங்கள் உடல்பொருள் ஆவியெல்லாம்—எங்கள்
இன்பத் தமிழ்மொழிக் கேதருவோம்;
மங்கை ஒருத்தி தரும்சுகமும்—எங்கள்
மாத்தமிழ்க் கீடில்லை என்று ரைப்போம்.

மாயா:—என்ன, என்ன? அந்த 3-வது, 4-வது அடிகளை இன்னெருதரம் சொல்லு!

மங்கை யொருத்திதரும் சுகமும்—எங்கள்
மாத்தமிழ்க் கீடில்லை என்று ரைப்போம்.

மாயா:—அடி ஜலஜா, இது ஒரு Poetic Flash!

நான்:—அதைத் தமிழில்தான் சொல்லித் தொலையேன். மின்வெட்டுக் கவிதையென்று சொல்லலாகாதா?

மாயா:—(சிறிதுநேரம் யோசித்துவிட்டு) ஓ, இதெல்லாம் வெறும் எட்டுச்சுரைக்காய், கறிக்குதவாது. ஏதோ, பாட்டு காதுக்குக் கேட்பதற்கு நன்றாயிருக்கிறது. அவ்வளவுதான். உன் அண்ணா ஏதேதோ மேடைகளில் பேசுகிறார். இந்தியை எதிர்த்துச் சிறை புகப்போகிறோமென்று. அதெல்லாம் நடக்காத காரியம். நான் கண் வலையை வீசினால் அவர் என்னிடம் பெட்டிப் பாம்புபோல் அடங்கியிருக்க வேண்டியவர்தானே! என் சுகத்தை உதறித் தள்ளிவிட்டு அவரால் போகமுடியுமா? என்னைவிடவா அந்தத் தமிழ் ஓசத்தி அவருக்கு?

நான்:—அந்தமட்டும் நீ பாக்யசாலிதான் மாயா. ஒரு மனைவி தன் கணவனை அப்படித்தான் தன்னிடம் பிணைத்து வைத்துக்கொண்டிருக்கவேண்டும். உன் விருப்பம் நிறைவேறுவதாக!

(மாயா போய்விட்டாள்)

* * *

இரண்டு நாட்கள் சென்றன. மாலை நேரத்தில் நான் வீட்டுமேல்மாடியில் காற்றுக்காக உலாவிக்கொண்டிருந்தேன். மாயா திடு திப்பென்று படிக்கட்டேறி வந்து என்னைச் சேர்த்துக் கட்டிக்கொண்டு ஓவென்றழுதாள். எனக்குத் தூக்கிவாரிப்போட்டது. என்ன சேதி என்று கேட்டேன்.

"ஐயோ, ஜலஜா, உன் அண்ணா என்னைவிட்டுப் போய்விட்டாரடி. கட்டாய இந்தி வைத்துள்ள பாடசாலையின்முன் இப்போதுதான் மறியல்செய்து, கைது செய்யப்பட்டு, போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறார். நான் என்னடி செய்வேன்? நீ இரண்டு நாட்களுக்குமுன் எனக்குப் பாடிக்காட்டிய,

"மங்கை யொருத்திதரும் சுகமும்—எங்கள்
மாத்தமிழ்க் கீடில்லை என்று ரைப்போம்"

என்ற அடிகளைப் பாடிக்கொண்டுதான் மறியல் செய்தாராம்......

மேலே பேசமுடியாமல் தேம்பித் தேம்பி அழுதாள் மாயா. நான் அவளைச் சேர்த்து அணைத்துக்கொண்டு தலையையும் முதுகையும் தடவிக்கொடுத்தேன். அவளுக்கு ஓர் ஆறுதல் மொழிகூடச் சொல்ல என்னால் முடியவில்லை. கரைகாணமுடியாத துக்கம் என் நெஞ்சத்தை அடைத்திருக்கும்போது, நான் அவளுடன் எவ்வாறு பேசமுடியும்?

திடீரென்று மாயா தன்னை என் பிடியினின்று விடுவித்துக் கொண்டாள். அவள் அப்போது பத்திர காளி போல் காணப்பட்டாள். அவள் கண்கள் வட்டமிட்டுச் சுழன்றன. கண்ணீர்க் கடல் எங்கேயோ வற்றி விட்டது. கூந்தல் விரிந்திருந்தது.

"ஜலஜா, ஒன்று கேட்கிறேன் சொல்லுவாயா? மங்கை என்பதற்கு Masculine Gender என்ன?

"மாந்தன்"

மாயா எட்டு வீடு கேட்கும்படி சிரித்தாள்.

"மாந்தன் ஒருவன்தரும் சுகமும்—எங்கள்
மாத்தமிழ்க் கீடில்லை என்றுரைப்போம்'

என்று ஆவேசம் வந்தவள்போல் உரக்கப் பாடிக்கொண்டு, என்னிடம் விடை பெற்றுக் கொள்ளாமல் கூடப் போய்விட்டாள். என் உடல் சிலிர்த்தது!

மறுநாள் மாயா தன் கணவன் மறியல் செய்த பள்ளியின் முன்னேயே நின்று,

"மாந்தன் ஒருவன்தரும் சுகமும்—எங்கள்
மாத்தமிழ்க் கீடில்லை என்றுரைப்போம்"

என்று பாடிக்கொண்டே மறியல்செய்து, கைது செய்யப்பட்டு, சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டாள்.

* * *

மங்கையர் சுகமே யல்லால் மறுசுகம் இல்லை' எனும் கருத்தைத் தகர்த்தெறிந்து, "மங்கையர் சுகம் செஞ்சொற் கவி யின்பத்துக்குச் சமானம்" என்பதையும் தாண்டிச் சென்று, "மங்கையொருத்தி தரும் சுகமும்—எங்கள் மாத்தமிழ்க் கீடில்லை என்று ரைப்போம்" என்னும் மனோபாவத்தின் மேல எல்லையை வெகு சுலபமாக எட்டிப் பிடித்ததோடல்லாமல், தமது கவித் திறமையினால் பல மாந்தர்களையும் மங்கையர்களையும் சிறைக்கனுப்பிய அந்த அமர கவி—மகா கவி யார் என்று கேட்கிறீர்களல்லவா?

அவர்தான், நமது புதுமைக்கவி—புதுவைக் கவி—புரட்சிக்கவி—பாரதி தாசன் கனக சுப்புரத்தினம்.

---

# உள்ளத்தைக் கொள்ளை கொண்டவர்

"பாரதிதாசன் என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு விட்டார். "தமிழர் சிறந்தவர்" என்பதை அவர் ஸ்தாபித்து விட்டார்! கடவுள் பெயரால் நடைபெறும் அட்டூழியங்களை ஒழிக்க முயலுகிறார். அவருடைய தமிழ் கனலைப் போன்றது; அநீதியைச் சுட்டுப் பொசுக்கும் தன்மை வாய்ந்தது."

—கி. வா. ஜகந்நாதன்.

# நாட்டுக்கு நல்ல காலம்

பூ. கணேசன் M. A.

நாத்திகம் பேசி நாத்தழும்பேறினர் என்றார் திருவாசகம் வகுத்த மணிவாசகர். ஆத்திகம் பேசி அருமறையோதிய காரணத்தால்தான் மேன்மேலும் தமக்கு நாவன்மை நிறைந்தது என்று கருதியவர் மாணிக்கவாசகர். 'உலகெலாம்' என ஆண்டவன் எடுத்துதவிய அடியின் சக்தியே பெரிய புராணத்தைப் பாடி முடிக்கத் தமக்குப் பேருதவியா யிருந்ததென்று எண்ணியவர் சேக்கிழார். ஆண்டவனைப் புகழ்வதுதான் பாட்டு, அவனைப் புகழ்ந்து போற்றி வழிபடுதற்குத் தோன்றியதுதான் தமிழ் என்ற முடிவுக்கு வந்தவர்கள் நாயன்மார் நால்வரும். ஆதி மூலத்தின் சேவடித் தாமரைகளை மணிப் பிரவாளத் தமிழில் பஜிப்பதே வாழ்க்கையின் இலட்சியம் என்ற கொள்கையைக் கொண்டோர் ஆழ்வாராதிகள். தில்லையில் எல்லையிலா ஆனந்த நடமிடும் நடராஜரின் திருக்கரத்தில் காட்சியளிக்கும் உடுக்கையின் ஒலியே தமிழ்—உடுக்கையின் நாதத்திலிருந்து எழுந்ததே இன்றைய தமிழ்மொழி என்ற நச்சுக் கொள்கையை நாட்கள் பலதொட்டு நம்பிவரும்—ஏன்? எடுத்தோதியும் வரும்—மெய்யறியா மக்களும், உணர்வறியாக் கலைவாணரும் நிறைந்து கிடக்கும் இந்நாட்டிலே மணி வாசகர்களுக்கும், சேக்கிழார்களுக்கும் பக்த கோடிகள் இருந்து வருவதில் ஆச்சரியமில்லை. நாயன்மார்களும், ஆழ்வாராதிகளும் இங்கு என்றென்றும் இடம் பெறலாம். வாயினால் மொழியப்படுவதுதான் மொழி, உடுக்கையிலும், உருத்திராக்கத்திலும் எழுவது மொழியல்ல என்று உய்த்தறிய முடியாத மக்கள்—பண்டிதர்—கலைவாணர் மண்டிக் கிடக்கும் இந்நாட்டில் அரவிந்தர்களும், ரமணர்களும், சாயி பாபாக்களும் குடியேறுவது இயல்பே. அது இயற்கை நியதியுமாகும்.

கத்தி தீட்டத் தீட்டக் கூர்மை பெறும். தீட்ட வாய்ப்பில்லாத நேரத்தில் பகைவனை வெட்டிச் சாய்க்கச் சாய்க்கப் பளபளப் பெய்தும். இயற்கையின் கூறுபாடுகளைச் சரிவர அறிய இயலாதாருக்கே ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாகத் தோன்றும். அறிவின் எல்லையை எட்டிப்பிடிக்க இறுமாந்து நிற்கும் சிந்தனை சக்தி நனிநிறைந்த கவிஞனொருவன் எண்ணுவதெல்லாம் கருத்து மிக்க கொள்கைகளே. அவன் சற்று ஆழ்ந்து நினைக்கும் நேரத்தில் எழுவதே கவிதை. கால நிலை மாறுபாட்டுக்கு மயங்கித் தனது கருத்துக்களுக்கு வடிவமைக்கும் பணியிலீடுபட அஞ்சி நிற்கும் ஒருவனைக் கவிஞன் என்று கூறாது அறிவுடை உலகம்; அவனைக் கோழையென்று கூறவும் தயங்காது. மனிதன் என்று பயப்படத் தொடங்குகிறானோ அன்றே தனது பகுத்தறிவை இழக்கிறான் என்கிறார் அமெரிக்க நாட்டு அறிஞர் இங்கர்சால். வாழ்க்கைப் போராட்டத்தி லீடுபட்டு ஒவ்வொரு துறையிலும் ஒவ்வொருவருக்கு அடிமையாகி ஊன்பொதியாய் உலகத்தோடு ஒப்ப ஓடவேண்டிய மனிதன் நிலையே இதுவானால், கருத்துக் களஞ்சியங்கள், சிந்தனைச் சிற்பிகள் எனத் தகும் கட்டற்ற கவிஞர்கள் எத்துணைத் துணிவுடன் முன்வரவேண்டும் திறந்த உளத்தினராய்!

காலத்துக் கேற்பக் கவிதைகள் பல யாத்து மக்களைக் களிப்புக் கடலில் ஆழ்த்துவது மட்டும் கலைஞனொருவனின் கடமையல்ல. தெருவில் திரியும் குடுகுடுப்பைக்காரன் முதல் நாடறிந்த அரசியல்வாதி ஈறாக பலப் பலர் மக்களுக்கு ஆனந்தக் காட்சிகளை அளித்துத்தான் வருகிறார்கள். கொலைச்சிந்து பாடுவோனும், குறவஞ்சிக் கவி கட்டுவோனும் கலைஞனல்லன். ஆங்கிலக் கவிஞர் ஆஸ்கர் ஒயில்ட் கூறுவது போல் அழியாத் துக்கத்தின் வெண்கலத்தைக் கொண்டு இமைப் பொழுதே நிற்கும் இன்பத்தின் உருவை அமைப்பவன் கலைஞன்; காலத்தை யறிந்து காலத்தோடு எதிர் நீந்துபவன் கலைஞன்; காலத்துக்கும் கயவருக்கும் அடிமைப்படாதவன் கலைஞன்.

“முதலாளி பாட்டாளியின் குருதிகொண்டு இரத்தினம் உண்டாக்குகின்றான்; நிலச்சுவான் குடியானவனின் வாழ்நாளைப் பாழாக்குகின்றான்” என்று கூறிய இக்பாலும், “உங்களை இழிவு படுத்தும் செல்வந்தருக்கு நீங்கள் உழுவதேன்? உங்களைத் துன்புறுத்துவோருக்கு உயர்ந்த உடைகளைத் தொல்லையோடு கூட நெய்வது ஏன்? நீங்கள் ஆக்குகிறீர்கள்—அயலான் அனுபவிக்கிறான். நீங்கள் ஆயுதம் அடித்துக் கொடுக்க—அவன் அதை உங்கள் மீதே செலுத்துகின்றான். நீங்கள் செய்த விலங்கை நீங்களே அணிவதேன்? நீங்கள் வடித்த வேல் உங்களையே நோக்கி வருவதேன்?” என்று கேட்கும் ஷெல்லியும், காலத்தை எதிர்த்து நின்றவர்கள்; வஞ்சகத்தை மாய்த்து வாழ்வுக்குப் போராடியவர்கள்; “பரத்தில் சுகம்பெற இகத்தை வெறுப்போம்” என்ற வெற்றுரையைப் பரப்பிவந்த வீணரை வீழ்த்தியவர்கள்; அழகுப் பொருள்கள் அநித்தியமாயிருப்பதால் தான்,

அவை இறந்துபடும் என்பதற்காகத் தான், அவற்றை இறுகப் பிடித்துளோம் என்று கசையடி கொடுத்த கவி வாணர்கள்.

'ஆயிரம் ஆண்டுக் கொருமுறை அறிஞன் தோன்றுகிறான்' என்கிறது ஆங்கிலப் பழமொழி யொன்று. அத்தகைய ஒரு புனிதமான, மிகமிக வர வேற்கத்தக்க காலத்தை இன்றைய தமிழ்நாடு எய்தி விட்டது. அறிஞரைக் கவிஞர் வடிவில் பெற்றுவிட்டது தமிழகம். எத்தகைய கவிஞர்? பழமைக்காளாகாது கருத்தையும் சிந்தனையையும் நிறுத்து, தூய நற்றமிழில் கலந்தூட்டும் கவின் கலைக் கவிஞர்; ஆத்திக முறைத்து அடாதன புரியும் அரக்கரை நசுக்க வந்த நாத்திகக் கவிஞர்; மாற்றானுக்கு அறிவையும் மானத்தையும் அடகுவைக்கத் துணியும் அந்தகருக்கு அறவுரை போதிக்க வந்த அறிவுக் கவிஞர்; ஓடப்பர் ஒப்பப்ப ராக வேண்டுமென ஓயா துரைத்துவரும் ஒப்பற்ற கவி ஞர். அழிவிலே ஆக்கத்தைக் காண விழையும் புரட்சிக் கவிஞர். ஆம், பாரதிதாசன் வாழ்க! அவரைத் தோற்றுவித்த தமிழகம் வாழ்க!!

## உயிரோவியம்

பாரதிதாசன் பாடலைத் தமிழன் இன்றைக்கு மட்டுமல்ல, என்றைக்குமே மறக்க முடியாது. அது அவன் மூச்சுடன் மூச்சாய்க் கலந்துவிட்டது; நரம்புடன் நரம்பாய் முறுக்கேறி விட்டது. இரத்தத்தோடு இரத்த மாய் இணைந்துவிட்டது. தமிழனுடைய நரம்புத் துடிப்பை-இதய ஒலியை-நெஞ்சக் குமுறலை எடுத்துக் காட்டும் உயிரோவியம்தான், பாரதிதாசன் பாடல். இது உண்மை. வெறும் புகழ்ச்சியில்லை. பின் ஏன் தமிழன் பாரதிதாசன் பாடலை மறக்கப் போகிறான்? எப்படித் தான் அவன் மறக்க முடியும்?

வால்ட் விட்மனை அமெரிக்கா மறந்துவிடவில்லை. ஷெல்லியின் புரட்சிக் கீதங்களை இங்கிலாந்து மறந்து விடவில்லை. வால்டேர் வீசிய புரட்சி மொழிகளைப் பிரஞ்சுநாடு என்றைக்கும் மறந்துவிடவில்லை. அப்படித் தான் பாரதிதாசனை-பாரதிதாசனின் புரட்சி உள்ளத்தை அதிற் கிளர்ந்தெழுந்த சண்டமாருதத்தைத் தமிழ்நாடும் மறந்து விடாது; மறக்க முடியாது.

—பி. சே. மா. இளஞ்செழியன்.

Ask for

BEST & NOURISHING FOOD

**GOWRI'S BISCUITS**

**கௌரீஸ் பிஸ்கோத்**

ருசியுடையது! சத்து நிறைந்தது!!

ஆரோக்கிய ஆகாரம்!!!

**குழந்தைகளுக்குச் சிறந்த உணவு**

*Manufactured by:*

Gowri & Company,

*Confectionery & Biscuit Factory,*

*USILAMPATTY,*

*TIRUMANGALAM.*

பிரைவேட் &
கான்பிடன்ஷியல்

கல்யாண மஹால்,
தாகர்நகர்.
30—5—46

ஸ்ரீமான் மஹாஜனம் அவர்களுக்கு,

வரதக்ஷிணை சாஸ்திரிகள் எழுதிய திருமுகம்.

க்ஷேமம்; நாம் இருந்து பேசி முடித்திருக்கிற முகூர்த்தத்திற்கு நகைகள் வெள்ளிப்பாத்திர வகைகளில் தாங்கள் நடந்து கொண்டது சரி. ஆனால், ஜவுளி விஷயங்களில் தாங்கள் எங்கேயாவது பிளாக் மார்க்கட்டில் விழுந்துவிட்டு, ஒன்றுக்குப் பலமடங்கு விலை கொடுத்தும் உபயோகமற்ற ஜவுளிகளை வாங்கி ஏமாறுவீர்களே யானால் அதற்காக நம் வரனையோ சம்பந்தி அம்மாளையோ சமாதானம் செய்யும்படி என்னை உபத்திரவத்திற் குள்ளாக்கிவிடாதீர்கள்.

அவர்களை உண்மையிலேயே திருப்திசெய்ய விரும்பினால் உறுதிக்கும், உழைப்புக்கும், உண்மைக்கும், உயர்வுக்கும் உத்திரவாதமுள்ள மதுரை, தெற்கு சித்திரை வீதி, 314-ம் நெம்பர் கட்டிடத்தில் உள்ள K. S. பெருமாள் முதலியார் & சன்ஸ் அவர்கள் நீல மாளிகையில் கிடைக்கும் மனோரம்மியமான, கண்ணைக்கவரும் ஜவுளிகளை வாங்கி வையுங்கள். முன்னெச்சரிக்கையை உதாசீனம் செய்துவிட்டுப் பின்னடி அவஸ்தைப் படாதீர்கள்.

இங்ஙனம்; தங்கள்

வரதக்ஷிணை சாஸ்திரிகள்.

# கவிஞர் நிதிக்குழுவினர்



T. S. சொக்கலிங்கம்



Sir R. K. சண்முகம்



C.N. அண்ணுதுரை, பொருளாளர்



T. N. ராமன் செயலாளர்



பெரியார் ஈ. வே. ராமசாமி



டாக்டர் A. கிருஷ்ணசாமி



ப. கண்ணன், செயலாளர்



S. முத்தய்யா முதலியார்



N. கிருஷ்ணராஜு, தலைவர்

(28-7-1946)

# கவிஞர் நிதிக்குழுவினர்



வ - ரா



S. S. லட்சுமிரதன்பாரதி



ப. ஜீவானந்தம்



T. S குஞ்சிதம் அம்மையார்



க. அன்பழகன்



இரா. நெடுஞ்செழியன்



மு. செல்லப்பன்



என். வி. நடராசன்



கே. கருப்பண்ணன் (28-7-'46)

# நிரபராதி

ரா. ஆறுமுகம்

பஞ்சாயத்து ஆரம்பிக்க இன்னும் ஒரு நாழிகைக்கு மேலிருந்தது. ஆனால் கிராமம் முழுவதும் மந்தையில் வந்து கூடிவிட்டது. பெரிய தனக்காரர், கிராம முனிசீப்பு, மணியகாரர், கணக்கப்பிள்ளை ஆகிய எல்லோரும் வந்து ஆலமரத்தடியிலிருந்த மேடையில் அமர்ந்தார்கள். கூடியிருந்த ஜனங்கள் குசுகுசு வென்று ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டதே பெருத்த சத்தமாய்க் கேட்டது.

"சரி, ஆரம்பிக்கலாமே" என்றார் பெரிய தனக்காரர். மற்றவர்களும் தலையை ஆட்டினார்கள்.

தலையாரி ஓரமாய் நின்றுகொண்டு அந்த வழக்கைத் தொடுத்த அருணாசல அம்பலகாரரின் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டான். அவர் கூட்டத்திலிருந்து எழுந்து வந்து பெரியவர்கள் முன்னால் மரியாதையாக நின்றார் மேல் துண்டை இடுப்பில் கட்டிக்கொண்டு.

"உங்களுடைய வழக்கு என்னய்யா அம்பலகாரரே?" என்று அதிகாரதோரணையில் கேட்டார் பஞ்சாயத்துத் தலைவர்.

அம்பலகாரர் தொண்டையைக் கனைத்துக்கொண்டு ஆரம்பித்தார்:—

"வழக்கினைச் சுருக்கமாகவே சொல்லி விடுகிறேன். என் மகன் மருதநாயகத்திற்கு, கணபதி அம்பலகாரரின் மகள் பார்வதியைக் கல்யாணம் செய்தது இந்தக் கிராமத்திலுள்ள பலருக்கு நன்றாய்த் தெரியும். கல்யாணம் முடிந்து சுமார் இரண்டு வருஷங்கள் ஆகிவிட்டன. இந்த இரண்டு வருஷத்திலும் என் மருமகள், வீட்டுக் குடும்பத்தை ஒழுங்காகத்தான் கவனித்து வந்தாள். புருஷன் பெண்டாட்டிக்குள் ஒருநாளும் சண்டையே வந்ததில்லை. இரண்டு பேரும் பாலும் தண்ணியும்போல் கலந்துதான் இருந்தார்கள். ஆனால் எனக்கும் கணபதி அம்பலகாரருக்கும் ஒரு நிலத் தகராறினால் சண்டை ஏற்பட்டது. அதைக் காரணமாக வைத்துக்கொண்டு என் மனைவி எந்த நேரமும் தன் மருமகளைத் திட்டிக்கொண்டேயிருந்தாள். நானும் என் மகனும் என் மனைவிக்கு எவ்வளவோ சொல்லிப் பார்த்தோம், அவள் அடங்கவில்லை. தம் மகள் எங்கள் வீட்டில் படுகிற கஷ்டத்தை எப்படியோ கேள்விப்பட்ட கணபதி அம்பலகாரர், ஒருநாள் எங்கள் வீட்டிற்கு வந்து தம் மகளைக் கூட்டிக்கொண்டு போய் விட்டார். அதனால் எனக்குக் கோபம் வந்து அந்தப்பெண்ணை, கணபதி அம்பலகாரரே வலிய எங்கள் வீட்டில் கொண்டு வந்து விடும்வரை நாங்கள் யாரும்போய்க் கூப்பிடுவதில்லை யென்று தீர்மானித்து விட்டோம். என் மகனும் என் சொல்லைத் தட்டாமல் இருந்துவிட்டான். என் மருமகள் பார்வதி தன் தகப்பன் வீட்டிற்குப் போய் ஒரு வருஷம் ஆகிறது. இப்போது அவள் எட்டுமாதக் கர்ப்பிணியாக இருக்கிறாள். இந்த அவமானத்தை எங்களால் சகிக்க முடியவில்லை. அதனால் கணபதி அம்பலகாரர் குடும்பத்தைக் கிராமத்திலிருந்தே விலக்க வேண்டும். அல்லது ஜாதிப்பிரஷ்டமாவது செய்யவேண்டும். இதுதான் என் தாழ்மையான விண்ணப்பம்" என்று முடித்தார்.

இதைக் கேட்டவர்களில் சிலர் மௌனமாயிருந்தார்கள். சிலர் கசு முசு வென்று ஏதேதோபேசிக்கொண்டார்கள். கணபதி அம்பலகாரருக்கு வேண்டாதவர்கள் ஏளனமாகச் சிரித்தார்கள். பஞ்சாயத்துத் தலைவர் கையமர்த்திச் சத்தத்தை அடக்கினார்.

கணபதி அம்டலகாரர் பெயரைக் கூப்பிடச் சொல்லிக் கட்டளை பிறந்ததும் தலையாரி அவரைக் கூவியழைத்தான். அவரும் பஞ்சாயத்தார்கள் முன்பு வந்து வணங்கி, "எனக்கு இதில் ஒன்றும் சம்பந்தமில்லை. வேண்டுமானால் என் மகளையே கூப்பிட்டு நேரில் கேளுங்கள். அவள் என்ன சொல்லுகிறாளோ, அதைக் கேட்டு நீங்கள் தீர்ப்புச் சொல்லலாம்" என்று கூறிவிட்டு மேடையிலிருந்து இறங்கி விட்டார்.

பார்வதிக்கு வயது இருபதிருக்கும். எட்டு மாதம் கர்ப்பம். அவள் முகத்தில் கவலை தோய்ந்திருந்தது. பஞ்சாயத்தார் முன்னால் வரத் தயங்கிக்கொண்டே ஓரத்தில் நின்றுகொண்டிருந்தாள். அவளுடைய வாக்குமூலத்தைக் கேட்க அனைவரும் ஆவலாயிருந்தார்கள்.

அவள் தயங்கி நிற்பதைக் கண்ட பெரிய தனக்காரர், "சும்மா அங்கே நின்றபடியே நீ சொல்லவேண்டியதைச் சொல்லம்மா" என்றார்.

தலை குனிந்தபடியே நின்ற அவள் மெதுவாகத் தலையை நிமிர்த்தி, "நான் சொல்ல வேண்டியது என்ன இருக்கிறது. என் மாமனார் சொன்னதெல்லாம் உண்மை. ஆனால் நான் கர்ப்பமாயிருப்பதைப்பற்றி அவர் சந்தேகம் கொள்ளும் வகையில் நான் நடந்து கொள்ளவில்லை. என் கணவரே என் வீட்டிற்கு அடிக்கடி இரவில் வந்து போவார்! இது என் வீட்டாருக்குக் கூடத் தெரியாது. அவர் என்னைக் கேட்டுக்கொண்டபடி இதுவரை அதை இரகசியமாகவே வைத்திருந்தேன், இப்போது என் மானத்திற்கே ஆபத்து வந்துவிட்டபடியால் அதைச் சொல்லாமலிருக்க முடியவில்லை. வேண்டுமானால் என் கணவரையே கேட்டு உங்கள் சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ளுங்கள். நான் அபலை. இவ்வளவுதான் என்னால் சொல்ல முடியும்" என்று கூறிவிட்டுக் கண் கலங்கி நின்றாள்.

அதைக்கேட்ட அவளுடைய மாமனார் அருணாசல அம்பலகாரர் துள்ளிக் குதித்து எழுந்து அவளை வெறித்துப் பார்த்தார். அதே வேகத்தில் பஞ்சாயத்தார்கள் பக்கம் திரும்பி, "இவள் என் குடும்பத்தை அவமானப்படுத்தவே இந்தக் கதை கட்டுகிறாள். என் மகன் மருதநாயகம் குணம் எனக்குத்தான் தெரியும். அவன் என் பேச்சைத் தட்டி நடந்திருக்கவே மாட்டான். இவள் சொல்லுவதெலாம் பொய்..." என்று இரைந்தார்.

மணியகாரர் அவரைத் தடுத்து, "நீங்கள் இப்படிக் குறுக்கே பேசுவது சரியல்ல. நாங்கள் பார்த்து உங்களை ஏதும் கேட்டால்தான் பேச முன்வரவேண்டும். இவ்வாறு செய்தால் எங்களையும் கிராமத்தையும் அலக்ஷியம் செய்தவராவீர். பேசாமல் உட்காரும். இப்போது உம் மகன் சொல்லட்டும். அவன் தன் மனைவி வீட்டுக்கு இரவில் போனது உண்டா இல்லையா என்பதை அவன்தான் சொல்ல வேண்டும்" என்று அதட்டி அருணாசல அம்பலகாரரை உட்கார வைத்தார்.

மருதநாயகம் எழுந்து நின்றான். பார்வதி பரிதாபத்தோடு அவனையே பார்த்துக்கொண்டு சோர்வுடன் நின்றாள். அவன்

முகத்தில் கலவரம்! அவன் வாயிலிருந்து 'ஆமாம்' என்ற வார்த்தை வருமா, அல்லது 'இல்லை' என்று வருமா என ஆவலோடு எதிர்பார்த்தாள். அந்த ஒரு கண நேரத்தில் அவளுடைய இருதயமே நின்றுவிட்டதுபோ லிருந்தது.

"உன் மனைவி சொன்னதைக் கேட்டாயா? அதற்கு நீ என்ன சொல்லுகிறாய்?" என்று கேட்டார் பஞ்சாயத்துத் தலைவர்.

தகப்பனின் முகத்தைப் பார்த்தான் தனயன்.

"நான் அவள் வீட்டுக்குப் போனதே இல்லை! அவளை ஒரு வருஷத்திற்கு முன் பார்த்ததுதான். இப்போதுதான் இங்கே பார்க்கிறேன்!" என்று சுருக்கமாகச் சொல்லி நிறுத்தினான் மருத நாயகம்.

"ஆ! என்ன? என் வீட்டிற்கு வரவே இல்லையா?......அநியாயம்...அடுக்குமா...தெய்வமே..." என்று தன் தலையை இரு கைகளாலும் பிடித்துக்கொண்டு கீழே உட்கார்ந்து விட்டாள் பார்வதி.

"சபாஷ்! பார்த்தீர்களா, என் மகளைப்பற்றி நான் சொன்னது சரிதானா?" என்று தன் மார்பைத் தட்டிக்கொண்டு எழுந்தார் அருணாசல அம்பலகாரர்.

"இந்தாய்யா, அம்பலகாரரே, இனிமேல் இப்படி எழுந்து பேசினால் அபராதம் கிடைக்கும். பேசாமல் உட்காரும்" என்று அதட்டினார் கிராம முன்சீப்.

"சரி, இனி நம்முடைய தீர்ப்பைச் சொல்ல வேண்டியதுதான்" என்றார் பஞ்சாயத்துத் தலைவர்.

பஞ்சாயத்தார்களும், மற்றப் பிரமுகர்களும் கூடிப் பேசினார்கள். ஜனங்களெல்லாம் அமைதியாய் இருந்தார்கள். அருணாசல அம்பலகாரர் முகத்தில் வெற்றிக்களை தாண்டவமாடியது. கணபதி அம்பலகாரர் கன்னத்தில் கை வைத்துக்கொண்டு குறுகிப்போய் உட்கார்ந்திருந்தார். அவள் கணவன்—மருத நாயகம் தலை குனிந்தபடியே நின்றுகொண்டிருந்தான். பார்வதி கண்ணீர் பெருக்கைத் துடைத்துக் கொண்டே பொறுமிக் கொண்டிருந்தாள்.

பஞ்சாயத்துத் தலைவர் எழுந்து நின்று, "கிராமத்தார்களே, இந்த வழக்கில் எங்கள் முடிவு இதுதான். கணபதி அம்பலகாரரின் மகளும், மருத நாயகத்தின் மனைவியுமான பார்வதி சோரம் போனபடியால், கணபதி அம்பலகாரரின் குடும்பத்தை ஜாதிப் பிரஷ்டம் செய்திருக்கிறோம். கிராமத்து நன்மையை உத்தேசித்து அவர்கள் வேறு யாருடனும் பேச்சு வார்த்தையோ, சம்பந்தமோ இனி வைத்துக்கொள்ளக்கூடாது. கணபதி அம்பலகாரர் தம் மகளை, கணவன் வீட்டிலிருந்து பிடிவாதமாய் அழைத்து வந்ததால், அவரே இக்குற்றத்திற்கு முழுப் பொறுப்பாளி யாகிறார். ஆகையால் அவருக்கு ஐந்து ரூபாய் அபராதம் விதித்திருக்கிறோம். மருத நாயகம் இஷ்டப்பட்டால் வேறு கல்யாணம் செய்துகொள்ளலாம்" என்று சொல்லி விட்டு, "கணபதி அம்பலகாரரே, இதற்கு நீர் கட்டுப்படுகிறீரா?" என்று கேட்டார் தலைவர்.

"அப்படியே செய்கிறேன். அபராதத்தை நாளைக்குக் கொடுத்து விடுகிறேன்" என்றார் அம்பலகாரர். அவர் கண்களில் நீர் சுரந்து நின்றது. "சரி, இனிக் கூட்டம் கலையலாம்" என்று தலைவர் கூறியதும் கிராமத்தார்கள் எழுந்து விட்டார்கள். அவர்களெல்லாம் போன பின்பு பார்வதி தலையில் முக்காடிட்டுக்கொண்டு தள்ளாடித் தள்ளாடிச் சென்றாள். பெண்களின் சமுதாய முன்னேற்றம்போல!

* * *

அந்தச் சம்பவம் நடந்து இருபது ஆண்டுகள் கடந்து விட்டன. பார்வதிக்கு இருபது வயதில் ஒரு மகன் இருந்தான். அவன் தன் தாயின் மூலமாகத் தன் தகப்பன் அவளுக்குச் செய்த அபவாதத்தைக் கேள்விப்பட்டிருந்தான். மருத நாயகத்தை அவன் கிராமத்தில் எங்குச் சந்தித்தாலும் மருத நாயகம் தலை குனிந்துகொண்டு ஒதுங்கிப்போய் விடுவான். பார்வதி இந்த இருபது ஆண்டுகளும் பட்ட மனவேதனை சொல்ல முடியாதது. கடைசியில் அதே நோயாகப் படுத்த படுக்கையாயிருந்து இவ்வுலகத்தை விட்டுப் பிரிந்துவிட்டாள். அவள் கடைசியாகத் தன் மகன் கருப்பையாவை அழைத்து அவன் கையைப்பிடித்துக் கொண்டு "அப்பா, நான் இறந்த பிறகு உன் தகப்பன்மேல் நீ வஞ்சம் தீர்த்துக் கொள்ள என்னவாவது செய்து விடாதே!" என்று சத்தியம் வாங்கிக் கொண்டாள். அப்போது அவன், "அம்மா உன் மீது அநியாயமாகப் பழி சுமத்திய என் தகப்பனே இந்தக் குற்றத்திற்குப் பொறுப்பாளி என்பதை இக் கிராமத்தார் அறியச் செய்யாமல் நான் சாகப் போவதில்லை" என்று சபதம் செய்தான்.

அவளை அடக்கம் செய்ய மயானத்திற்குக் கொண்டுபோனபோது கிராமத்தார்கள் யாருமே அங்கே வரவில்லை. கிராமத்துப் பஞ்சாயத்தார்களும், சில முக்கியமானவர்களுமே வந்திருந்தார்கள். அவர்களோடு மருத நாயகமும் வந்திருந்தான். ஈமக்கிரியைகள் எல்லாம் முடிந்ததும், மருதநாயகம் எதிர்பாராவிதமாகத் தன் மைந்தன் கையைப் பிடித்துக் கொண்டு கண்ணீர் விட்டான். அவனது முகம் பயங்கரமாக வெளுத்துப்போயிருந்தது.

"நீ யார்? என் கையை ஏன் தொடுகிறாய்? நான் உனக்குப் பிறந்தவனல்லவே" என்று உறுமினான் கருப்பையா?

பஞ்சாயத்தார்கள் ஒன்றும் பேசாமல் நின்றார்கள்.

"இல்லை. நீ என் சொந்த மகன்தான். உன் தாயார் அன்று பஞ்சாயத்தார்முன் சொன்னது உண்மை. நான் அவள் வீட்டுக்கு இரவு வேளைகளில் போய் வந்ததும் வாஸ்தவம். ஆனால் அன்று கிராமத்தார்கள் முன்பு என் குற்றத்தை ஒப்புக்கொள்ள எனக்குத் தைரியம் வரவில்லை. நான் கோழை, என் தகப்பனாரின் கோபத்திற்குப் பயந்தே உண்மையை மறைத்தேன். மகனே! இப்போது என்னை மன்னிக்க உன் தாயார் இல்லை. அதனால்தான் உன்னிடம் மன்னிப்புக் கேட்கிறேன். எனக்கும் வயதாகிவிட்டது. சமுதாயத்தில் ஊமையாய்க் கிடக்கும் பெண்ணுக்கு உளமறிந்து தீங்கிழைத்தேன், ஆம்! உன் தாயாரின் புனிதத் தன்மையை மறுக்க யாராலும் முடியாது. அதனால்தான் நானும் மறு மணம் செய்துகொள்ளாமலிருந்துவிட்டேன். பகுத்தறிவற்ற பஞ்சாயத்து துரோகத்திற்குத் துணைபுரிந்தது......மன்னிப்பாயா மகனே......" என்று கெஞ்சினான் மருதநாயகம்.

பஞ்சாயத்தார்களும் மற்றவர்களும் பிரமித்து நின்றார்கள். வழக்கைத் தீர விசாரிக்காமல் ஒரு பெண்ணுக்கு அவமானத்தை உண்டுபண்ணின பழியை அவர்கள் உணர்ந்தார்கள்.

"நான் மன்னிக்கிறதுக்கு என்ன இருக்கிறது. இதோ இந்தப் பெரிய மனிதர்கள் இருக்கிறார்கள். உன் பேச்சைக் கேட்டு என் தாய்க்கு மரணத்தை விளைவித்த மகான்களே உன்னை மன்னிக்கட்டும்" என்றான் கருப்பையா.

"தம்பி, கருப்பையா! நீ சொல்வது சரி. எங்கள்மேல் பிசகில்லை. உன் தகப்பன் சொன்னதைக்கேட்டு நாங்கள் அன்று நம்பிவிட்டோம். நாளைக்கு மந்தையில் கூட்டம்போட்டு உன் தாயார் நிரபராதி என்பதைக் கிராமத்தார்களுக்குச் சொல்லிவிடுகிறோம். உன் தகப்பனுக்கும் வயதாகிவிட்டது. அவனை ஏற்றுக் கொள்" என்று சொல்லிப் பஞ்சாயத்துத் தலைவர் மருதநாயகத்தின் கையையும் கருப்பையாவின் கையையும் சேர்த்து வைத்தார்.

தனது தவறுக்குப் பரிகாரம் தேடி விட்டதாக அவருக்கொரு மகிழ்ச்சி! ஆனால் அந்த நிரபராதியின் வாழ்க்கை...?

# தீர்ப்புக் கூறுங்கள்

**சாமி சிதம்பரனார்**

தலைப்பைப் பார்த்தவுடன், நான் ஏதோ உங்களிடம் முறையிட்டுக்கொள்ளப்போகிறேன் ; அந்த முறையீட்டைக் கேட்டுத் தீர்ப்புக் கூறும்படி கேட்டுக்கொள்ளுகிறேன் ; என்று நினைத்துக்கொள்ளாதீர்கள். வழக்கு—கிழக்கு ஒன்றுமில்லை. என் மனத்தில் தோன்றிய ஓர் எண்ணத்தை வெளியிடுகிறேன். அதுவும் சும்மா வெளியிடவில்லை, காரணங்களோடு வெளியிடுகிறேன். அந்த எண்ணம் சரியா? அல்லது தவறா? என்றுமட்டும் தீர்ப்புக் கூறுவதை உங்களுக்கு விட்டுவிடுகிறேன்.

காலஞ்சென்ற பாரதியார் நமது தமிழ் இலக்கியங்களைப்பற்றி—தமிழ்ப்புலவர்களைப் பற்றிக் கூறும்போது, மூன்று இலக்கியங்களைக் குறிப்பிட்டார் ; அந்த மூன்று இலக்கியங்களை இயற்றிய புலவர்களைப் பற்றிக் குறிப்பிட்டார்.

அவர் குறிப்பிட்ட மூன்று இலக்கியங்கள் கம்பராமாயணம், திருக்குறள், சிலப்பதிகாரம் என்பன. மூன்று புலவர்கள், இவ்விலக்கியங்களை இயற்றிய கம்பர், வள்ளுவர், இளங்கோ ஆகியவர்கள்.

கம்பர், வள்ளுவர், இளங்கோ மூவருந்தானா புலவர்கள்? இவர்கள் செய்த மூன்று நூல்கள்தானா இலக்கியங்கள்? வேறு இலக்கியங்கள் தமிழில் இல்லையா? வேறு சிறந்த தமிழ்ப் புலவர்கள் இல்லையா? இக்கேள்விகள் என் மனத்தில் எப்பொழுதும் தோன்றும். உங்கள் மனத்திலும் இக்கேள்விகள் தோன்றுதல் இயற்கை. இதற்கு விடை கூறவேண்டியது கடமை அல்லவா ?

மேற்கூறிய மூன்று புலவர்களைத் தவிர வேறு சிறந்த புலவர்களும் உண்டு; மேற்கூறிய மூன்று இலக்கியங்களைத் தவிர வேறு சிறந்த இலக்கியங்களும் உண்டு என்பதே என் விடை.

யார் யார் அந்தப் புலவர்கள்? எந்தெந்த இலக்கியங்கள் அவை? என்று கேட்கிறீர்கள்.

ஒவ்வொரு புலவர் பெயரையும் குறிப்பிட்டு, இவர்கள் சிறந்த புலவர்கள் என்று நான் சொல்லப்போவதில்லை. ஒவ்வொரு இலக்கியங்கள் பெயரையும் குறிப்பிட்டுச் சிறந்த இலக்கியங்கள் இவைகள் என்று நான் சொல்லப்போவதில்லை.

ஓர் எடுத்துக்காட்டு தருகிறேன். அது படிக்கப் படிக்க இனிமையாக இருக்கிறதா என்று பாருங்கள். அதன் பிறகு உங்களுக்கே விளங்கும் யார் சிறந்த புலவர்கள் ? எவை சிறந்த இலக்கியங்கள் ? என்று.

வேலன் இருபதாண்டு இளைஞன். வள்ளி பதினாறாண்டு மங்கை. இருவருக்கும் கள்ளக்காதல் ஏற்பட்டுவிட்டது. இருவரும், தங்கள் பெற்றோர்கள் அறியாமல் மறைவாகக் காதலன் காதலிகளாக வாழ்ந்து நின்றனர். இவர்களுடைய காதல் வாழ்வு, ஆற்றோரங்களில், தோட்டங்களில், குட்டிச்சுவர்களில், வீட்டுக் கொல்லைப்புறங்களில், சந்தடியற்ற சந்து பொந்துகளில், இரவில், பகலில் வாய்ப்புக் கிடைத்தபோதெல்லாம் நடைபெறுகின்றது.

கள்ளம் எத்தனை நாளைக்கு வெளிப்படாமல் இருக்கும்? பலநாள் திருடன் ஒருநாள் பிடிபடுவான் அல்லவா ? இவர்களுடைய கள்ள நட்பு எப்படியோ வெளிப்பட்டுவிட்டது. ஊரார், வேலனைப்பற்றியும், வள்ளியைப்பற்றியும் பேசத் தொடங்கிவிட்டனர். ஊரார் அறிய மணம் செய்துகொள்ளாத ஓர் ஆணும் ஒரு பெண்ணும் நட்பாக இருப்பதைப்பற்றிப் பேசுவதென்றால் எல்லோருக்குமே அதில் தனிச்சுவையுண்டு.

எப்படியோ இச்செய்தி வள்ளியின் தாய்க்கு எட்டிவிட்டது. அவள் வள்ளியைக் காவல் காக்கத் தொடங்கிவிட்டாள். முன்போல் வள்ளியும் வேலனும் சந்திக்க முடியாமல் போய்விட்டது. அவர்கள் உடல்கள்தான் சந்திக்க முடியவில்லை. ஆனால் அவர்களுடைய உயிரும், அன்பும் ஒன்றையொன்று கட்டித் தழுவிக் கொண்டுதான் இருந்தன.

கள்ளக்காதல் செய்பவர்கள் ஒருவரை ஒருவர் எளிதில் சந்திக்க முடியாத தடை ஏற்படும்போது, அவர்கள் இருவருக்கும் இடையில் தூதுப் போக்குவரத்து எப்படியோ ஏற்பட்டுத்தான் தீரும். காதலனோ, அல்லது காதலியோ தனக்கு அந்தரங்கமான நண்பர்கள் மூலம் கடிதப்போக்குவரத்தோ செய்திப்போக்குவரத்

தோ வைத்துக்கொள்ளுவார்கள். இது இன்றும் நடைபெறும் செய்தி. காதலை எவரும் தடுக்க முடியாது.

வள்ளி, தனது உயிர்த்தோழி ஒருத்தியின்மூலம் வேலனுடன் தொடர்பு வைத்துக்கொண்டாள். இருவருக்கும் செய்திப் போக்குவரத்துக்கள் தாராளமாக நடந்துகொண்டிருந்தன.

கள்ளக்காதல் வெளிப்பட்டுங்கூட, வள்ளியின் பெற்றோர்கள் அவளை வேலனுக்குக் கொடுக்கச் சம்மதிக்கவில்லை. காதலர்கள் என்ன செய்வார்கள்? உண்மையான காதலர்கள் என்ன செய்வார்களோ அந்த முடிவுக்கு வந்தார்கள். உண்மையான காதலின் முடிவு இக்காலத்தில் கதைகளில் காட்டப்படுவது போலத் தற்கொலையல்ல. அது கோழைத்தனம். தம் எண்ணத்தில் வெற்றிபெறுவதே வீரத்தனம்.

தோழியின் உதவியால் வள்ளியும் வேலனும் தனியிடத்தில் சந்தித்தனர்; வீட்டைவிட்டு வெளியேறி வேற்றிடம் புகுந்து காதலன் காதலிகளாக வாழ்வது என்று முடிவு கட்டிக்கொண்டனர். முடிவின்படி அன்றிரவே, விடியற்காலையில் புறப்பட்டு எங்கேயோ போய்விட்டனர்.

விடிந்து எழுந்தாள் தாய்; வள்ளியைப் படுக்கையில் காணவில்லை; நெஞ்சம் பகீர் என்றது; கூண்டில் அடைத்துவைத்திருந்த கிளி பறந்துவிட்டது. என்னவிருந்தாலும் தாயுள்ளம் அல்லவா? தவித்தது மனம், மகளைத்தேடிப் புறப்பட்டாள். ஒரு பாலைவனத்தின் வழியே போகின்றாள்.

(1) எதிரே சில அந்தணர்கள் உயிர்களிடம் தாய் போல அன்பு காட்டும் குணமுடைய தவசிகள் வந்தனர். அவர்கள் சூரிய வெப்பத்தைத் தடுக்கும் குடையைப் பிடித்திருந்தனர். உறியில் வைக்கப்பட்ட நீர் பாத்திரத்தையும், முக்கோலையும் தோளில் தாங்கியிருந்தனர். அவர்கள் வெப்பம் நிறைந்த காடுகளில் நடந்து செல்லுதலையே இயல்பான ஒழுக்கமாகக் கொண்டவர்கள்.

(2) அவர்களைப் பார்த்தாள் வள்ளியின் தாய், "அந்தணர்களே! என் மகள் ஒருத்தி; வேறு ஒருத்தியின் மகன் ஒருவன். இருவரும் பிறர் அறியாமல் கள்ளக்காதல் புரிந்து வந்தனர். (இப்பொழுது மற்றவர்கள் தங்கள் காதலை அறியும்படி செய்துவிட்டனர்) அப்படிப்பட்ட இரண்டுபேரை நீங்கள் வந்த வழியில் காணமல் விட்டுவிட்டீர்களோ?" என்றாள்.

(3) அந்தணர்கள், "நாங்கள் அவர்களைப் பார்க்காமல் இல்லை; வழியில் கண்டோம்; ஆண் தன்மையும், அழகும் நிறைந்தவன் அவன். நடந்து செல்லுவதற்கு முடியாத பாலைவனத்தில், உடன் சென்ற அவள் சிறந்த வேலைப்பாடுடைய நகைகளை அணிந்திருந்தாள்; உலகப்போக்கை முழுதும் உணராத அழகிய இளம்பெண் அவள். நீங்கள் அப்பெண்ணின் தாயார் என்று நினைக்கிறோம்'' என்றனர். வள்ளியின் தாய், அவர்கள் கூறியது கேட்டு வருந்தினள்; தானே அப்பெண்ணின் தாய் என்பதைப் பேசாமலிருந்ததன் மூலம் அறிவித்தாள். அந்தணர்கள் அவள் துன்பத்தை அறிந்து ஆறுதல் கூறுகின்றனர்.

(4) "வாசனைகள் பல கலந்த சந்தனம் பூசிக் கொள்ளுகிறவர்களுக்குத்தான் பயன்தரும். சந்தன மரங்கள் மலையில் பிறந்தவையானாலும் அவைகளால் மலைக்கு ஒரு பயனும் இல்லை. நினைத்துப் பார்த்தால் இதைப்போலத்தான் உமது மகளும். அவள் பயன்படக்கூடிய பருவகாலத்தில் பிறருக்குப் பயன்படுவாளே ஒழிய உமக்குப் பயன்படமாட்டாள்.

(5) "சிறந்த வெண்மையான முத்து அதை அணிந்துகொள்ளுகிறவர்களுக்குத்தான் பயன்படும். முத்துக்கள் தண்ணீரில் பிறந்தவை; ஆனால் அவைகளால் தண்ணீருக்கு ஒரு பயனும் இல்லை. இதை ஆராய்ந்து பார்த்தால் உம்முடைய மகளும் முத்தைப் போல் உமக்குப் பயன்படமாட்டாள்.

(6) "ஏழுவகை நரம்புகளின் மூலம் உண்டாகும் இனிய ஓசைகள் பாடுவோர்க்குத்தான் இன்பமளிக்கும். அவை யாழிலிருந்து பிறந்தாலும் அவற்றால் யாழுக்கு ஒரு பயனும் இல்லை. எண்ணிப்பார்த்தால் இதைப் போலவே உமது மகள் உமக்கு இன்பந்தரமாட்டாள்.

(7) "உமது மகள் சிறந்த கற்பினையுடையவள்; அவள் பொருட்டுத் துன்புறவேண்டாம். தாய்தந்தையரைக்காட்டினும், ஒரு பெண்ணுக்குக் கணவனே சிறந்தவன். ஆதலின் கணவன் சென்ற வழியே சென்றனள். அதுவே இல்லறத்தில் குற்றமற்ற செயலுமாகும்.''

இவைகளைக்கேட்ட வள்ளியின் தாய் உண்மையுணர்ந்தாள். வீடு திரும்பினாள். சில நாட்கள் கடந்தபின், ஓடிப்போன இளந் தம்பதிகள் ஊருக்கு வந்தனர். இருவரின் பெற்றோர்களும் வரவேற்றனர். சிறந்த முறையில் இல்லறம் நடத்தினர்.

இக்கருத்தை விளக்கும் பாட்டு:

1. எறித்தரு கதிர்தாங்கி ஏந்திய குடை நீழல்
உறித்தாழ்ந்த கரகமும், உரைசான்ற முக்கோலும்,
நெறிப்படச் சுவல்அசைஇ வேறுஓரா நெஞ்சத்துக்
குறிப்புஎவல் செயல்மாலைக் கொளை நடை அந்தணீர்!
வெவ்விடைச் செலன்மாலை ஒழுக்கத்தீர்.

2. இவ்விடை,
என்மகள் ஒருத்தியும் பிறமகன் ஒருவனும்

# The Indo Commercial Bank Ltd.

*REGISTERED OFFICE:* **MAYAVARAM**

*CENTRAL OFFICE:* **MADRAS**

| | | |
|---|---|---|
| AUTHORISED CAPITAL | .... | 25,00,000 |
| ISSUED & SUBSCRIBED CAPITAL | ... | 21,25,000 |
| PAID-UP CAPITAL | ... Rs. | 18,75,000 |
| RESERVE FUND | ... Rs. | 5,50,000 |

**(Total Resources nearly Rs. Five Crores)**

*CITY OFFICES:*

CHINA BAZAAR ROAD, MAMBALAM, MYLAPORE, TRIPLICANE AND PERIAMET

*BRANCHES:*

| | | | |
|---|---|---|---|
| Amadalavalasa | Erode | Pudukottah | Tinnevelly (Jun.) |
| Ambasamudram | Karaikudi | Ramnad | Tinnevelly (Tn.) |
| Ambur (N. A. Dt.) | Kumbakonam | Salur | Tiruvarur |
| Anakapalle | Madura | Shiyali | Vedaranyam |
| Chidambaram | Maruteru | Tadepalligudem | Vellore |
| Chittur (Cochin) | Nagapatam | Tanjore | Villupuram |
| Conjeevaram | Palghat | Tenkasi | Virudhunagar |
| Cuddalore O. T. | Paramakudi | Tilaru R. S. | Vizianagaram |
| Cuddalore N. T. | Parvathipuram | Trichinopoly | |

**Fixed Deposits:**—Received for one year at 2¾% p. a. and for two years at 3% p. a.

**Savings Bank Accounts:**—Opened—Interest allowed at 2½% p. a. upto Rs. 5,000/- Withdrawals by cheques Rs. 250/- per week.

**Current Accounts:**—Opened and interest allowed at ¼% p. a.

## Loans & Advances against Bullion, Government pronotes, Approved Shares, Securities and Merchandise

**BANKING BUSINESS OF EVERY DESCRIPTION TRANSACTED**

**S. N. N. Sankaralinga Iyer,**
*Managing Director.*

தம்முளே புணர்ந்த தாம்அறி புணர்ச்சியர்
அன்னுர் இருவரைக் காணிரோ பெரும!

3. காணேம் அல்லேம், கண்டனம் கடத்திடை.
ஆண்எழில் அண்ணலோடு அருஞ்சுரம் முன்னிய
மாண்இழை மடவரல் தாயிர்நீர் போறீர்!

4. பலஉறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க் கல்லதை
மலையுளே பிறப்பினும் மலைக்கவைதாம் என்செய்யும்,
நினையுங்கால் நும்மகள் நுமக்கும் ஆங்கு அனையளே.

5. சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க் கல்லதை
நீருளே பிறப்பினும் நீர்க்கவைதாம் என்செய்யும்,
தேருங்கால் நும்மகள் நுமக்கும் ஆங்கு அனையளே.

6. இறந்த கற்பினாட்டு எவ்வம் படரன்மின்,
சிறந்தானை வழிபடஇச் சென்றனள்
அறந்தலைப்பிரியா ஆறும் மற்று அதுவே.

பாட்டு கொஞ்சம் கரடுமுரடுதான். மிகப்பழம் பாட்டு. கலித்தொகைப்பாட்டு. பாலைக் கலியின் ஒன்பதாவது பாடல். பாலையே கொஞ்சம் கடுமைதானே!

இதைப்பாடிய புலவர் பெருங்கடுங் கோ என்பார். இவர் சேரர் குலத்தினர். ஆதலின் சேரமான் பெருங்கடுங்கோ என்று வழங்குவர். இவர் பாலைக் கலியென்னும் நூலையும் செய்திருப்பதால், அதையும் சேர்த்து, சேரமான் பாலைபாடிய பெருங்கடுங்கோ என்ற நீண்ட பெயரிட்டழைப்பர்.

பொருள் தெரிந்து மேற்கூறிய பாடலைப் படித்தால் எத்தனை தடவை திருப்பிப் படித்தாலும் சலிக்காது. இதுபோன்ற பாடல்கள் பலவுள்ளன கலித்தொகையில். இன்னும் பல சங்க நூல்களிலும் உள்ளன.

ஒரு தடவை படித்தவுடன், சமாச்சாரப் பத்திரிகையைப்போல வீசி யெறிந்துவிடும் புத்தகங்கள் இலக்கியம் ஆகா. அத்தகைய பாடல்கள் கவிகள் அல்ல. திருப்பித் திருப்பிப் படித்தாலும் சலிக்காதிருக்கவேண்டும். அவைகளெல்லாம் சிறந்த நூல்கள்; சிறந்த பாடல்கள். அத்தகைய பாடல்களை—நூல்களை இயற்றுகிறவர்கள் சிறந்த புலவர்கள். இதுவே என் கருத்து.

மேலே கூறியபடி பாரதியார் அவர்களால் குறிப்பிடப்பட்ட முப்பெரும் புலவர்களைத் தவிர வேறு பல பெரும் புலவர்கள் உள்ளனர் என்பதற்காகவே இது வரையில் ஏதேதோ கூறினேன். நான் கூறுவது சரியா அல்லவா? என்பதைப்பற்றி நீங்களே தீர்ப்புக் கூறிவிடுங்கள்.

"பலதடவை படித்தாலும் சலிக்காமல் இருப்பது தான் கவி; அவ்வாறு கவி எழுதுகிறவர்கள்தான் பெரும் புலவர்கள்" என்ற விளக்கத்தை நீங்கள் ஒப்புக்கொண்டால் அத்தகைய புலவர்கள் மரபில் சேர்க்கவேண்டியவர்கள் பிற்காலத்தில் இருவர்தான். ஒருவர் பாரதியார்; மற்றவர் பாரதி தாசன். பாரதியாரின் குயிற்பாட்டு, பாரதி அறுபத்தாறு, பாஞ்சாலி சபதம் போன்றவை படிக்கப் படிக்கச் சுவை தருவன. பாரதி தாசன் பாடிய சஞ்சீவி பர்வதத்தின் சாரல், புரட்சிக் கவி, மாந்தோப்பில் மணம், போன்றவைகளும் திருப்பித் திருப்பிப் படிக்கக் கூடியவை.

இனி சிறந்த கவிகள், சிறந்த நூல்கள், சிறந்த புலவர்கள், இன்னவை—இன்னவர்கள் என்று நான் கூற வேண்டியதில்லை. நீங்களே படிக்கும்போது தெரிந்துகொள்ளலா மல்லவா?

"தலையெழுத்து! குடிவெறியில் நாம் என்ன செய்கிறோம் என்பது நமக்கே புரிவதில்லை. தெய்வச்செயலும் இப்படித்தானே இருக்கிறது? அது எப்போதும் குணங்களைப் பார்த்து அவற்றிற்குத் தக்கபடி தலையெழுத்தை வரைவதில்லை; தெய்வமும் குடிகாரனைப் போன்றதே."

—வி. ச. காண்டேகர்

The Electrical Mart

*Dealers in:*

**Electric Motors**
**Fans**
**Pumpset**
**Radios**
**&**
**other accessories**

*Enquire at*

**2-336, Thambu Chetty Street,**
**G. T. MADRAS.,**

# கவியரசர்

[ ச. சிவப்பிரகாசம் ]

சீர்மிக்க தமிழகத்திற் கவிஞர் பல்லோர்
சிறந்திருந்தார்; அன்னவருள், காலத் தாலே
பேர்மிக்க கவியரச ராயி னோரும்
பெருந்தொகையர்! இவ்விருப தாம்நூற் ருண்டில்
பார்மதிக்கும் அறிஞரெலாம் புகழ்ந்து போற்றப்,
பாரதிதா சர்கவிஞர்க் கரச ராக
நேர்ந்துள்ள நிலையறிந்தோம்! இதனைச் சில்லோர்
நெஞ்ச ழுக்குக் காரணத்தால் ஒப்பிடார்கள்!

ஒருநாட்டை அல்லதுமற் றினத்தை நல்ல
உயர்நிலையிற் சேர்ப்பதற்குத் துணிவு பூண்டே,
அருநெறியைக் கண்ணோட்டம் சிறிது மின்றி
அழகியநற் கவிதையினல் மக்கட் கூட்டிப்,
பெரும்புவியின் பயன்தன்னைப் பேத மின்றிப்
பெறுவதற்குத் தொண்டுசெயும் ஒருவ ரன்றி,
இருநிலத்தில் வாழ்கின்ற கவிஞ ரெல்லாம்
இக்கால கவியரச ராகு வாரோ?

பாரதிதா சன்னனும் கவிஞர் இந்நாள்
பகரந்தத் தொண்டினிலே சலித்த லின்றி,
ஊரினிலே நாட்டினிலே எதிர்க்கும் குள்ள
உள்ளத்தார் சிறுமதியும் ஏதும் வண்ணம்
காரண காரியம்கூறி, அறிவு தோய்ந்த
கவிதைபல அளிக்கின்றார் மேனி லக்கே!
சீருடைய அவர்கவிதை யமுதை யுண்ணச்
சிந்தைதுடித் திடுகின்றார் மக்க ளின்று!

நாட்டினிலே மிக்குள்ள சாதி பேதம்
நனிமுடச் செயல்சாத்தி ரங்கள் யாவும்
கேட்டினையே வளர்க்கின்ற தன்மை கண்டும்
கீழ்நிலையில் நமைச் சேர்க்குங் கொடுமைகண்டும்
வாட்டுகின்ற அவ்வழக்கம் யாவும் தீர
வகைசெய்யாக் கவிஞர்பலர் இருக்கும் போழ்தில்
'ஒட்டிடுவேன் அத்தீமை' என்றே சொல்லி
உயர்கவிதை தருகின்றார் கோடி, கோடி!

தமிழறியாத் தமிழர்மிகப் பெருகி,யுள்ள
தமிழகத்தில் தற்குறியை மாற்ற எண்ணி,
அமிழ்தான தமிழ்மொழியின் இனிமை தன்னை
ஆர்வமுடன் மக்களெலாம் அறிய வேண்டி,
இமைமூடா உழைப்பால்நல் எளிமை சேர்ந்த
எழிற்கவிதை தருகின்றார்; சிறித றிந்த
தமிழினரும் கவிதையதன் சுவைகாண் கின்றார்!
தண்டமிழின் உயர்வறிந்து போற்று கின்றார்!

பண்டிதர்கள் நாட்டினிலே இருக்கின் றார்கள்!
பைந்தமிழை அன்னவர்கள் தம்சொத் தாக
எண்ணியதை மக்களிடம் வளரா வண்ணம்
இருட்டறையில் பூட்டிவைத்த காரணத் தால்,
எண்டிசையும் புகழேற்ற தமிழ கந்தான்
இடர்மிக்க வாழ்வினிடுல நுழையக் கண்டோம்!
கண்பெற்றும் குருடான அவர்கள் போக்கைக்
கடுகெனவே மாற்றுகின்றார் புரட்சி கூறி!

ஆதலினல், இக்காலக் கவிஞர்க் கெல்லாம்
அரசரெனத் தகுதியினல் விளங்கு கின்ற
மேதையர்பா ரதிதாசர் புகழ்வ ளர்க்க
விழாச்செய்து நிதியளித்தார் நாட்டு மக்கள்!
தீதகற்றி நலன்சேர்த்துக் கீர்த்தி வாய்ந்த
திராவிடத்தின் மேன்மையினை மலரச் செய்யும்
நீதமிகும் அவர்கவிதை ஓங்க! மிக்க
நீடுபுகழ் அவரடைந்தே நாளும் வாழ்க!

# மலாயா தமிழர்கள் வாழ்த்து

கோ. சாரங்கபாணி

உலகிற்குச் சொந்தமான கவிகள் வார்த்தைகளைச் சேர்த்துச் சேர்த்து அவைகள் துடிக்கும்படி உயிர் கொடுத்து விடுகிறார்கள்; இந்த மாய வித்தையில் வல்லவர், நம் வாழ்நாளில் நம்மிடை வசித்து வருபவர், புதுவைத் தோழர் பாரதிதாஸன். தமிழகத்தார் தங்கள் கவிஞரைப் பாராட்டி ஊக்குவித்து பெரும் பயனடைய ஒரு நிதி திரட்டித் தருகிறார்கள். அதன் ஞாபகார்த்தமாய் வெளியிடப்படும் மலரில் வெளியிடுவதற்காக, மலாயா வாழ் தமிழர்களின் சார்பில், அவர்களின் வினயபூர்வமான பக்தியைத் தெரிவித்துக்கொள்ள இதை எழுதுகிறேன்.

கவிஞரை மலாயா வாழ் தமிழர்களில் பெரும்பான்மையோர் நேரில் அறிய மாட்டார்கள். ஆனால் அவரின் கவிகளை அறிவார்கள். அவைகளை மேடைகளில் தெரிவிப்பார்கள்; மண்டபங்களில் இசைப்பார்கள்; இல்லங்களில் ஓதுவார்கள்; எழுத்தோவியங்களில் சித்தரிப்பார்கள்; சிங்கப் புலவரெனப் போற்றுவார்கள். இதை வெளிப்படையாய்ப் புலப்படுத்தியிருக்கிறார்கள் கவிஞர் நிதிக்கு ஒரு சிறுதொகை சேர்த்தனுப்பி,

"போர் தொழிற் பயில்வதெண்ணிப் புவியெலாம் நடுங்கிற்றென்ற வார்த்தையைக்கேட்டு நெஞ்சு மகிழ்ந்து கூத்தாடவென்றோ" என்ற கவிஞரின் வேணவாவை மலாயா வாழ் தமிழர்கள் பூர்த்தி செய்ய, கர்மவீரர் சுபாஷ் சந்திரபோஸின் தலைமையில் போர்த் தொழிற் பயின்றார்கள். "விண்ணிடை இரதம் ஊர்ந்து மேதினி கலக்குதற்கும், பண்ணிடைத் தமிழைச் சேர்த்துப் பாரினை மயக்குதற்கும் மண்ணிடை வாளையேந்திப் பகைப்புலம் மாய்ப்பதற்கும் எண்ணிலாத் தமிழருள்ளார் எனும் நிலையைக் காட்டி விட்டனர் மலாயா வாழ் தமிழர்கள்.

கவிஞர் யாத்த கவிகள் பல புத்தகங்களாய் வெளிவந்துள்ளன தமிழகத்தில். அவை யாவும் இன்னும் மலாயா வாழ் தமிழர்கள் கைக்குக் கிட்டவில்லை. அச்சிலிருக்கும் "தமிழரியக்கம்" முடிந்ததும், எட்டிலிருக்கும் எண்ணற்ற கவிகள் புத்தகங்களாகவேண்டும்; கவிஞர் நெஞ்சில் குமுறிக் கொண்டிருக்கும் எண்ணங்கள் வெளிப்பட வேண்டும். சிறிதுகூடச் சேதப்படாமல் அதைச் சேமிக்க வேண்டும். இந்த வேலைக்கு நிதியை உபயோகிக்கப் போவதாய்க் கூறினர் கவிஞர். நான் நேரில் அவரைக் கண்டு அளவளாவும் பேறு பெற்றபோது, இப்பெரும் வேலைக்கு இச்சிறு நிதி போதுமா என்ற கேள்வி அப்பொழுது தோன்றிற்று. ஆனால் விடை தோன்றவில்லை. தமிழகத்தில் இதற்கு விடை கிடைக்காவிட்டால் மலாயா வாழ் தமிழர்கள் விடை தேடத் தவறமாட்டார்கள்.

தமிழகத்தில் பணமுண்டு; மனமில்லை. பேச்சு உண்டு: முயற்சியில்லை. உணர்ச்சி உண்டு: ஊக்கமில்லை, கூட்டம் உண்டு: கூட்டுறவு இல்லை. திறன் உண்டு: தீரமில்லை. அதனால் கவிஞரின் பெரும் புலமை சரியாய்ப் பிரகாசிக்கச் செய்யப்படவில்லை. அரும்பாயிருக்கும் முல்லை விரிந்து மலர்ந்து மணம் வீசவேண்டும். மலரும் குணம் இயற்கையானாலும் எருவிட வேண்டும்; தண்ணீர் பாய்ச்சவேண்டும்; களையும் எடுக்க வேண்டும்.

மலாயா வாழ் தமிழர்கள் கவிஞர்பால் கொண்டுள்ள அவாவும், பக்தியும் அதிகம்; மிக அதிகம். அவரைத் தங்கள் மத்தியில் வரவேற்று உபசரிக்கும் நன்னாளை எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். கவிஞர் மலாயாவிற்கு வர இசைந்திருக்கிறார் என்று நான் அவர்களுக்குத் தெரிவித்தபோது அவர்கள் காட்டிய மகிழ்ச்சி ஏட்டில் எழுதிக் காட்டக்கூடிய அளவாக இருக்கவில்லை.

உலக வழக்கப்படி கவிஞர் தாத்தாவாகி விட்டாலும் கிழவராகி விடவில்லை. அரிமா நோக்குடைய அன்னார் திடகாத்திரராய் இன்னும் பல்லாண்டு நம்முடன் உறைந்து, கவின்மழை பொழிந்து தமிழகத்திற்கும், தமிழுக்கும் நாளும் செய்யவேண்டும் தொண்டு என மலாயா வாழ் தமிழர்களின் சார்பில் வாழ்த்துகின்றேன்.

# எங்கள் கவிஞர்

## வடகரை எம்.எ.லிங்கம்

மாணிக்கம்போல் ஒளிதரும் கற்களும் உண்டு. போலிக் கற்களும் உண்டு. போலிகளைக் கண்டு மயங்குவோரும் உண்டு. ஆனால், மயக்கம் காரணமாக உண்மை மாணிக்கம் மதிப்பிழந்து விடுவதில்லை; மாறாக அதன் மதிப்பு உயர்கிறது.

கவிஞர் பாரதிதாசன் உண்மை மாணிக்கம். இவர் மொழி பெயர்ப்புக் கவிஞரல்ல ஆங்கிலம் தெரியாத காரணத்தால். கற்பனை என்ற பெயரால் பொய்யும் புனைசுருட்டும் அளக்கும் வெறும் வார்த்தையலங்காரப் படாடோபக் கவியல்ல பொதுமக்களின் கவியென்ற காரணத்தால். இவர் சாமிகளைப் பாடும் செக்கு மாட்டுக் கவியல்ல, சாமிகளைப்பற்றிப் பாடுவது யார்க்கும் எளிது—கேடு தருவது என்ற காரணத்தால். இவர் விளம்பரத்தால் உயர்ந்த வித்தகக் கவியல்ல; கலாம் விளைக்கும் சூழ்ச்சிக்காரக் கும்பல் இவருக்கு விளம்பரம் மறுத்ததால்.

"ஒலிகடல் நீலப்பெட்டி
உடைத்தெழுந்தது கதிர்தான்"

என்று பாரதிதாசனே பாடியுள்ளதுபோல, விளம்பரம் மறுத்த ஆரிய சூழ்ச்சிக் காரிருளைப் பிளந்து கொண்டு வெளிவந்த கதிர் எங்கள் பாரதி தாசன்.

மக்கி மடிந்துபோய்க் கிடக்கும் மக்களுள்ளத்திலே உணர்ச்சி வெள்ளத்தைப் பாய்ச்சித் தட்டி எழுப்பி உத்வேகத்தை யூட்டி மக்கள் சமுதாயத்தை மறுமலர்ச்சி யடையச் செய்யும் கற்பனைச் சிற்பி பாரதி தாசன்.

சங்கப் புலவர்களுக்குப்பின் அவர்களைப்போல் ஒரு கவிஞர் தோன்றியுள்ளார் என்றால் அவர் பாரதி தாசனே.

சங்க நூல்கள் புலவர்க்கு விருந்து; அவற்றைப் படித்துப் படித்து அவர்கள் இன்புறுகிறார்கள். உண்மை. தற்குறி, சாதாரண படிப்பாளி இவர்கள் விஷயம் என்ன? புலவர்களுக்கு மட்டும் தமிழ் ஆர்வம் ஏற்பட்டால் தமிழ் வளர்ந்துவிடுமா? தற்குறிக்கும் சாதாரணப் படிப்பாளிக்குமல்லவா தமிழ் ஆர்வம் ஏற்படவேண்டும்?

சங்க நூல்களைப் படித்து அவற்றிலுள்ள சாற்றைப் பிழிந்து பொதுமக்கட்கு அளிக்க புலவர் என்ற தரகர் ஒருவர் வேண்டும், கோவில் புரோகிதன்—கருமாதிப் பார்ப்பனன் போல.

பாரதி தாசன் கவிகள் விஷயத்தில் எத்தகைய தரகருக்கும் இடமில்லை. அவற்றைப் பிழிந்து சாறெடுக்கும் தொல்லையுமில்லை. சக்கை சாறு என்று பிரிப்பதற்கு அவற்றுள் ஒன்றுமில்லை; அத்தனையும் அப்பட்டமான இன்பச்சுளைகள்! யாரும்—தற்குறி, சாதாரண படிப்பாளி, புலவன் உள்ளிட்ட அனைவரும்—அவற்றை எடுத்து "லபக்" என வாயிலிட்டு மென்று, சுவைத்து இன்புறுகிறார்கள்.

பழைய ஏற்பாட்டைத் தகர்த்துப் புதிய முறையில்—மக்கள் உள்ளத்தைத் தொடும் எளிய நடையில் கவி பாடிப் பெயர் பெற்றார் கவி சுப்பிரமணிய பாரதி. புது முறையை ஆரம்பித்தவர் என்ற வகையில் புதுமைக் கவிகளில் முதலிடம் அவருக்கு எப்பொழுதும் உண்டு.

ஆனால், பாரதியார் எட்டாத எல்லையையும்—எட்டிப்பிடிக்கப்பயந்த இடத்தையும்—பாரதிதாசன் எட்டிவிட்டார்.

"ஆயிரமுண்டிங்கு சாதி—எனில் இங்கு
அன்னியர் வந்து புகல் என்ன நீதி"

என்று பாரதியார் பாடினார். பாரதிதாசன் பாடியுள்ளதைப் பாருங்கள். ஓர் ஆங்கிலேயன் கூறுகிறான் தன் நாட்டு மக்களை நோக்கி,

"வாழ்கின்றார் முப்பத்து முக்கோடி மக்கள் என்றால்
சூழ்கின்ற பேதமும் அந்தத் தொகையிருக்கும்"

அன்னியன் வந்து புகக்காரணமே இங்கு ஆயிரம் சாதி இருப்பது தானே. ஆகவே, காரணத்தைக் கண்டு பிடித்து அதன் வேரைக்கிளறி வெந்நீர் ஊற்றுவதுதான் பாரதிதாசன் வேலை.

இந்த இரண்டாவது உலகப் போர் நடத்திய முப்பெருந் தலைவர்கள் சர்ச்சில், ரூசுவெல்ட், ஸ்டாலின் ஆகியோரில் யார் கெட்டிக்காரர் என்பதைப் பேராசிரியர் பெர்னாட்டு ஷாவிடமிருந்து அறிய விரும்பினர் ஒரு பத்திரிகை நிருபர்.

"சர்ச்சில் பத்தொன்பதாம் நூற்றாண்டுக் குழந்தை, ரூசுவெல்ட் இருபதாம் நூற்றாண்டு இளைஞன், ஸ்டாலின் முழு வளர்ச்சியடைந்த தற்கால மனிதன்" என்று ஷா இரத்தினச் சுருக்கமாகப் பதிலளித்தார்.

அதேபோல் இலக்கிய உலகில் நம் நாட்டில் பழைய ஏற்பாட்டு இடைக்காலப் புலவர்கள், பத்தாம் பசலிக் குழந்தைகள், பாரதியார் இருபதாம் நூற்றாண்டு இளை

ஞன், பாரதி தாசன் முழு வளர்ச்சியடைந்த தற்கால மனிதன் என்று நாம் தங்கு தடையின்றிக் கூறலாம்.

பாரதிதாசன் மலிவான புகழையோ காசையோ விரும்பியிருந்தால் அவருக்கு இன்று கிடைத்துள்ள தைவிட ஆயிரமடங்கு அதிகமாக விளம்பரம் கிடைத் திருக்கும். ஆரியம் அவரைத் தலையில் தூக்கி வைத் துக்கொண்டு கூத்தாடும், அதற்காக அவர் பெரிய தியாகம் செய்யத் தேவையில்லை; கொள்கையைக் கொஞ்சம் தளர்த்த வேண்டியதுதான். ஆனால், பாரதி தாசனோ,

> "எமை நத்துவாயென எதிரிகள் கோடி
> இட்டழைத்தாலும் தொடேன்"

என்னும் மன உறுதி படைத்தவர்.

பாரதி தாசன் கவிதைகளில், கற்பனையில், நடையில், போக்கில், உவமையில், நகைச்சுவையில் இரவல் என்பது மருந்துக்குத் தேடினும் காணமுடி யாது. எனவே ஓட்டம், வேகம், உணர்ச்சி, மறு மலர்ச்சி, புதுமை, புரட்சி, நினைக்க நினைக்கச் சுரக்கும் இன்பம் ஆகிய இவைகளை அவரது கவிகளில் நிறையக் காணலாம்.

நாம் அன்றாடம் வழங்கும் சாதாரணச் சொற் களுக்கு மெருகேற்றிக் காந்தசக்தியை அளிக்கும் கைத் திறன் இயற்கையாகவே அமைந்திருக்கிறது. பாரதி தாசன் வார்த்தைகளைத் தேடி அல்லற்படுவதில்லை; வார்த்தைகள் அவருடைய கட்டளைக்குக் காத்துக் கிடக்கின்றன.

பழைய எற்பாட்டுப் புலவர்கள், மக்கள் அன்று டம் வழங்கும் தூய தமிழ்ச் சொற்களை அசட்டை செய்துவிட்டு, பழங் காவியங்களைத் துருவி ஆராய்ந்து வார்த்தைகளைத் தேடி இடர்ப்படுவர். கையில் வெண் ணெய் இருக்கையில் நெய்க்கலைவார் போன்று.

இந்நாள் எழுத்தாளர் என்போர் பலரும், பத்தி ரிகை ஆசிரியர்களும் வழக்கிலிருந்து வரும் தனித் தமிழ்ச் சொற்கள் பல இருப்பினும், அவற்றை அறிவதே இல்லை. சத்தற்ற புதிய சொற் களை உண்டாக்குகின்றனர்; அல்லது வடமொழி வார்த்தைகளை நுழைக்கின்றனர். இதனால் வழக்கி லுள்ள எத்தனைத் தனித் தமிழ்ச் சொற்கள் வழக் கிழந்து மறைந்துபோகும்படி செய்கிறார்கள் என்பதை அவர்கள் உணர்வதில்லை. இதைவிடத் தமிழ்க்கொலை வேறென்ன இருக்கிறது?

வழக்கிழக்கும் தறுவாயிலிருக்கும் பல நல்ல தமிழ்ச் சொற்களை இலக்கியத்துள்ளேற்றி, தமிழ் வளர்ச்சிக்கு ஆக்கந் தேடியுள்ளார் பாரதி தாசன்; இது மாத்திரமல்ல, புதுப்புதுச் சொற்றொடர்களையும் தமிழுக்கு அளித்துள்ளார்.

பிரஞ்சு நாட்டுக் குடியரசுத் தலைவர் "ழூயில்பெரி" அந்நாட்டு மத குருக்களின் வசப்பட்டுத் தேங்கிக் கிடந்த கல்வியை, மத குருக்களிடமிருந்து பிடுங்கி மக்கட்கெல்லாம் பொதுவாக்கினான்; அதே போன்று பண்டிதர்—பாவலர்களின் தனிச் சொத்தாக இருந்த கவிதையை இன்று மக்கட்கெல்லாம் (புரியும்படி பாடி) பொதுவாக்கிய பெருமை புதுவை பாரதி தாசனைச் சேர்ந்ததாகும்.

> "..........................காரெடுத்து
> நறுமலரைத் தொடுப்பாளின் விரல் வளைவில்
> நாடகத்தைச் செய்கின்றாள்."

யார்? அழகுத்தேவி. கவிஞரின் பெருமையை விளக்க இவ்விரண்டு அடிகளே போதும். மற்றொன்று; மயிலை யும் பெண்களையும் இணைத்துக் கவி பாடாத புலவனே இல்லை; அவரெல்லாம் மயிலுக்கும் பெண்களுக்கும் ஒற் றுமையைக் கற்பனை செய்தனரேயன்றி வேற்றுமையை கற்பனை செய்தனரில்லை. அதிலும் ஒரு படிப்பினையை அளிக்கிறார் பாரதி தாசன்:

> "பிறர்பழி தூற்றும் பெண்கள் இப்பெண்கள்
> ..................................
> அயலான் வீட்டில் அறையில் நடப்பதை
> எட்டிப் பார்க்கா திருப்பதற்கே
> இயற்கையன்னை இப்பெண்கட் கெல்லாம்
> குட்டைக் கழுத்தைக் கொடுத்தாள். உனக்கோ
> கறையொன்றில்லாக் கலாப மயிலே
> நிமிர்ந்து நிற்க நீள்கழுத் தளித்தாள்."

இதுவரை எந்தப் புலவனும் கையாளாத உவமை கள். உவமையில் புதுமை.

பாரதிதாசன் தமிழைப்பற்றிப் பாடியிருப்பதை திருவள்ளுவர் படிக்க நேர்ந்திருந்தால்,

> "இன்பத்து ளின்பம் தமிழின்பம் அவ்வின்பம்
> இன்பத்து ளெல்லாம் தலை"

என்று தொடங்கி தமிழின்பத்தைப்பற்றி ஒரு தனி அத்தியாயம் பாடிக் குறளில் சேர்த்திருப்பார் என்ப தில் ஐயமில்லை.

பாரதிதாசன் பாடல்கள் வளம் நிறைந்த ஓர் அறுசுவையுண்டி; பாரதிதாசன் பாடல்கள் உட லுக்கு உறுதியளிப்பவை; சமூதாயத்திற்கு உறுதி யளிப்பவை.

அவற்றுள் எல்லோரும் விரும்பும் இனிப்பும் அவசியமான உவர்ப்பும், புளிப்பும், கசப்பும், துவர்ப்பும் அசதியை அகற்றி வீரத்தைத் தரும் காரமும் நிறையக் காணலாம்.

பாரதிதாஸனுக்குக் கிடைக்கும் புகழ் தமிழர் புகழ்-தமிழ் நாட்டின் தனிப்புகழாகும்.

# சேரிச்செம்மல்

-புலவர் தா அழகுவேலன்-

சேரியென்னுந் தூய தமிழ்ச்சொல் மக்கள் சேர்ந்து வாழும் இடத்தைக் குறிப்பது. பழையர் சேர்ந்த இடம் பழையர் சேரி என்றிருந்து பின்னர்ப் பறைச் சேரி என வழங்கிற்று. பார்ப்பனர் வந்து தங்கிய இடம் பார்ப்பனச் சேரி என்று அழைக்கப்பட்டது ; இடையர்சேரி இடைச்சேரி என்றது போல்.

மொழியானும், ஆட்சியானும் புதுமை வாய்ந்த மக்கள் சேர்ந்த இடம் புதுமைச்சேரி—புதுச்சேரி என வழங்கலாயிற்று. புதுச்சேரி பல புதுமைகளுக்குப் பெயர் பெற்ற இடந்தான். ஊரமைப்பே ஒரு புதுக் காட்சியை அளிக்கின்றது. ஊர்களில் நல்லது கெட்டது என்று ஒன்றும் இல்லை. எவ்வழி ஆடவர் நல்லவரோ அவ்வழி ஊரும் நல்லதே யாகும். புதுவை ஒரு நல்ல ஊர் தான். காரணம் பல புரட்சி வீரர்களைத் தயாரித்துத் தருகின்றது. அம்மிகு புகழைத் தன்பாற் பெற்றதற்கேற்ப இக்காலை தமிழ்க் குருதி பாயும் உடலும், தமிழ் வாழ்வே தன் வாழ்வு, தமிழரின் மேன்மையே தன் மேன்மை எனக் கருதும் உள்ளமும் ஒருங்கே பெற்ற புரட்சிக் கவியைப் பூரித்து அளித்த புதுவையின் புதுமை போற்றுதற் குரிய தன்றோ?

அப் புரட்சிக் கவியைக் கனக சுப்புரத்தினமெனப் பெற்றோரும், பாரதிதாசனெனக் கற்றோரும், வீரத்தமிழரென மற்றோரும் பாராட்டப் பார்க்கின்றோம். அவர் பாடலைப் படிப்போர் பலர், பொறாமை உண்மை அறிவை மறைக்கக் கண்ணிருண்டு, பாராட்ட மனம் இருந்தும் பாராட்டாதார் சிலர். இருந்தாலும் அப்புரட்சிக் கவிகளைப் படித்தால் தன்மான உணர்வு தழைத்து ஆரியப் புல்லுருவிகளை அழிக்கவல்ல ஆற்றல் அடையாதார் இலர் என்பது முக்காலும் உண்மையே ஆகும்.

நாட்டு மக்கட்கு நல்லுணர்வு தந்து தன்மானந் தழைத்துத் தன்னாட்சி ஓங்கி, தமிழ் வல்லரசாக விளங்க வழி வகுத்த வள்ளல் பாரதிதாசனை இரவியுள்ளளவும் மதியமுள்ளளவும் போற்றும் பொறுப்புடையவர் தமிழக இளைஞர் என்பது என்றென்றும் மறக்கற் பாற்றன்று. செம்மல் புரட்சிக் கவியை மறந்தவன், தன்மானத்தை மறந்தவன், நல்ல தமிழ்ச் செம்பால் உடலில் இல்லாதவன், காட்டிக்கொடுப்பவன், கசடன், இன்ன பிறவாம்.

உள்ளதை உள்ளபடி ஒப்புக்கொள்ள மனமில்லாத புல்லர்களும் நாட்டிற் பெரும் புலவரெனப் பெயர் தாங்க இல்லாமலில்லை. அவர்களைப் பெயர் தாங்கி யென்றே அழைப்போம். இளம் புலவர்கள் பலர் செம்மல் பாரதி தாசனை உணர்ந்தனர்; அவரவரறிவால் சீர்தூக்கிப் பார்த்தனர்; உண்மைப் பகுத்தறிவு ஒப்புக்கொண்டது; அவர் வாய் மொழியைப் பொன்னே போல் போற்றினர்.

உண்மைக்கவி, உயிர்க்கவி, புரட்சிக்கவி பாரதி தாசனை உலகம் உணர்ந்து விட்டது. விட்டில் பூச்சல்ல கூடையால் மறைத்துவிட; இடி முழக்கத்தோடு கண்ணைப் பறிக்க எழும் மின்னலென மின்னி, நல்ல மழை போன்று பருவ காலத்தில் தமிழமுதைப் பொழிந்து, பெருக் கெடுத்தோடும் ஆற்று நீரெனச் சொல்லும் பொருளும் அளவு கடந்து பாய்ந்து, தமிழர் உள்ளமாகிய பரந்த நிலத்திலே தன்மான வித்துக்கு உரமாகப் பயிர்க்கால் தோறும் பொசிந்தூறும் நீராக விருந்து தமிழர் கலையழகு, மானம், வீரம் ஆகியவற்றை ஆக்கவும், காக்கவும் ஆரியப் பூண்டை அழிக்கவும் வல்ல இயற்கைப் பேராற்றலே நம் பாரதி தாசனுவார்.

புராணப் புளுகர்களுக்குப் பொல்லாத சவுக்கு பழந் தமிழ்ப் பண்டிதப் பூச்சுக்கு வைரி; தமிழிலக்கியத்தின் வற்றாத ஊற்று. தமிழன்னையின் தனிப் பெருஞ் செல்வர். சுறண்டலின்றி நாட்டில் எல்லோரும் இன்புற்றிருக்க எண்ணுபவர். வெள்ளமெனப் புரண்டோடும் நீர்ப்பெருக்கைத் தேக்கி மின்சாரத்தைத் தோற்றி அதனை ஏவல் கொள்ளுவது போல வீரந் ததும்பும் வீரர்களைக் கட்டுப்பாட்டிற்குள் பிணித்து திராவிடரியக்க மெனும் மின்சாரத்தினுதவியால், பற்பல அற்புதங்களையும் ஆற்றும் ஆற்றல் பெற்றவர் செம்மல் பாரதி தாசனுவார்.

அத்தகு சிறப்புடைய அண்ணல் புரட்சிக் கவியைப் போற்றக் கடமைப்பட்டது தமிழ் நாடு. புரட்சிக் கருத்தை, புரட்சிக் கவிகளைப் போற்றினல் தான் புதுமைக் கருத்துக்கள் நாட்டிற் புறப்படும். நாட்டு மக்களும் தம் நிலை யுணர்வர். நிலை யுணர்ந்தவர் எழுச்சி பெறுவர். எழுச்சி புரட்சியாகும்; புரட்சி போராகும்; போர் வெற்றிதரும். திராவிடர் தனிநாடு காண்பர்; தாகன் ஒழிவான்; நாடு தழைக்கும்; வளம்பெறும். இத்தகைய நன்மை பயக்க வழி கூறும் பெரும் புலவர் பாரதிதாசனைப் போற்றுவோமாக.

உங்கள் திருப்தியே எங்கள் லட்சியமாகக் கொண்டு

தென் இந்தியாவிலேயே சிறந்த ஒலிக் கருவிகளுடன்

சௌகரியமான இடவசதியளித்து,

உயர்ந்த படங்களைக் காட்டும்

சிறந்த தியேட்டர்

# சரஸ்வதி டாக்கீஸ்

(செவ்வாய்ப்பேட்டை, சேலம்)

## Fitted with latest KALEE

**Super Double Projector with H. I. Arcs.**

**21-6-46 முதல் நடைபெற்று வருகிறது**

---

கண்ணாம்பா, மாலதி, யோக மங்களம், கௌரிநாத் சாஸ்திரி, அத்தங்கி, கிருஷ்ணமூர்த்தி,

முதலியோர் நடித்த

# மாயா மச்சீந்திரா

— மகோன்னதத் தெலுங்குச் சித்திரம் —

தமிழ்நாடு உரிமையாளர்கள் :—

## சூடாம்பிகை பிலிம்ஸ்

குகை, :: சேலம்.

திருவாங்கூர், கோச்சி, மலபார் ஜில்லாக்களுக்கு
கே. எஸ். வெங்கட்ராமன், 16-A, உட்லண்ட்ஸ்,
சென்னை 2.

வட தென் ஆற்காடு &
செங்கல்பட்டு ஜில்லாக்களுக்கு,
ஆதித்தியா பிக்சர்ஸ், வேலூர்.

# தமிழியக்கத் தளபதி

பி. எஸ். செட்டியார்

**தா**ய் மொழியாம் தமிழிடம் அளவிடமுடியாத அன்பு கவிஞர் பாரதிதாசனுக்கு. இதை அவரது மொழியே மெய்ப்பிக்கும்.

கரும்பு தந்த தீஞ்சாறு
கனி தந்த நறுஞ் சுளை,
கவின்செய் முல்லை அரும்பு தந்த வெண்ணகை
அணிதந்த செந்தமிழ்

*　　　*　　　*

எடுத்து மகிழ் இளங் குழந்தை
இசைத்து மகிழ் நல் யாழே
வாய் மடுத்து மகிழ் நறுந்தேன்
உடலியக்கும் நல்லுயிரே
உயிரியக்கும் நுண்கலையே
மக்கள் வாழ்வாம் கடலியக்கும் சுவைப்பாட்டே
கண்ணான செந்தமிழே

என்றெல்லாம் பாரதிதாசன் சிறப்பித்துப் பாடுகிறார்.

இயற்கை ஈயும் இன்பம், மதலைகளின் மழலை மொழி ஆகியவற்றால் மனங் கவரப்படுவது மக்கள் இயல்பு. ஆனால், அமுதினும் இனிய தமிழ் மொழியின் இனிமையின் முன்பு இதர இன்பங்களை எல்லாம் மறந்துவிடுகிறார் கவிஞர்.

குழவிகள் மழலைப் பேச்சும், பெண்கள்
கொஞ்சிடும் இதழின் வாய்ப்பும்
விழைகு வேனேனும், தமிழும் நானும்
மெய்யாய் உடலுயிர் கண்டீர்!
பயிலுறும் அண்ணன் தம்பி—அக்கம்
பக்கத் துறவின் முறையார்
தயைமிக உடையாள் அன்னை—என்னைச்
சந்ததம் மறவாத் தந்தை
குயில் போற் பேசிடும் மனையாள்—அன்பைக்
கொட்டி வளர்க்கும் பிள்ளை
அயலவராகும் வண்ணம்—தமிழ்என்
அறிவினில் உறைதல் காணீர்

என்கிறார். பெண்டு பிள்ளை, உற்றார் உறவினர், பெற்றோர் ஆகிய அனைவரிடத்தும் இல்லாத அலாதி அன்பு அன்னை மொழியிடம் அவருக்கு இருக்கிறதாகச் சொல்லுகிறார். உடம்பை வளர்ப்பது அறுசுவை உண்டி. "உணர்வை வளர்ப்பது தமிழே" என்று கூறுகிறார். உணர்ச்சியில்லாமல் உடல்மட்டும் வளர்ந்து பயன் என்ன?

இத்தகைய தமிழ் மொழி—அன்னை தந்த பால் ஒழுகும் குழந்தை வாய் தேன் ஒழுக அம்மா என்று சொல்லும் இன்பத் தமிழ்—இன்று ஒவ்வொரு துறையிலும் உல்லங்கனம் செய்யப்படுகிறது; இழிவுபடுத்தப்படுகிறது.

வானிடை மிதந்திடும் தென்றல், கோடைக்குக் குளிர் நிழல் நல்கும் சோலை எல்லாம் இன்னும் இருக்கின்றன நம் தமிழ் நாட்டில். வேறு என்னதான் இல்லை? அதைக் கவிஞர் மொழியாலே காணுங்கள்.

'மணக்க வரும் தென்றலிலே
குளிரா இல்லை? தோப்பில்
நிழலா இல்லை?'

எல்லாம் இருக்கிறது. பின் என்ன இல்லை?

'தணிப்பரிதாகத் துன்பமிது
தமிழகத்தின் தமிழ்த் தெருவில்
தமிழ்தா னில்லை.'

தாளமுடியாத துயரத்தைத்தருவது இது. தாய் நாட்டின் மொழி இங்கேயே அலட்சியம் செய்யப்படுவது! அதைக் காணும் எந்த உண்மைத் தமிழனுக்குத்தான் உளம் நோகாது? எனவே, தாய் மொழியை அலட்சியப்படுத்தும் ஒவ்வொருவரையும் அழைத்து, அவர்கள் குறைகளைக் கூறுகிறார்.

கடைத்தெருவில் எந்தக் கடையைப் பார்த்தாலும், அறிவிப்புப் பலகை யெல்லாவற்றிலும் அன்னிய மொழி முதலிடம் பெற்றுக் கண்ணை உறுத்தக் காண்கிறோம். எனவே, கவிஞர் கேட்கிறார்,

"வாணிகர் தம் முகவரியை
வரைகின்ற பலகையில் ஆங்கிலமா வேண்டும்?"

*　　　*　　　*

அன்னிய மொழியின் ஆதிக்கத்துக்கு அனுசரணையாய் இருக்கும் கல்லூரிக் கணக்காயர்கள்பேரில் திரும்புகிறது கவிஞரின் கவனம். அவருக்கு வரும் கோபத்தில் வார்த்தைகள் சூடாகவே வெளிவருகின்றன.

தமிழ் நாட்டின் உப்பைத்தின்
றீரன்றோ கணக்காயத்
தந்தை மாரே!
தமிழ் நாட்டின் தமிழர்களின்
தன்னுணர்வு நாட்டுவதைத்

தவிர்ப்பீ ராயின் உமிழாதோ, வருந்தாதோ
உம்மையே உம்மருமை உள்ளச் சான்றே

தமிழர் வரிப்பணத்திலிருந்து சம்பளம் பெற்று வாழும் நீங்கள், தமிழ் மொழி உயர்வுக்காகப் பாடு படாமலிருப்பது துரோகமல்லவா எனக் கேட்கிறார்.

"அமுதூட்ட நஞ்சூட்டி அகமகிழும் தாயுண்டோ
அருமைச் சேய்க்கே?'

தமிழ் மாணவர்களுக்குத் தாய் மொழியாம் இனிய தமிழ் மொழியை விட்டு விஷம்போன்ற வேறு நாட்டு மொழியில் பாடம் கற்பிப்பதா என்பதே அவரது கோபத்திற்குக் காரணம்.

தமிழில் என்ன இல்லை, எல்லாம் இருக்கிறது என்று தொல்காப்பியத்தையும், நன்னூலையும் சான்றாகக் கூறியும், தமிழ் மொழி தனித் தியங்கத்தக்கது எனச் சொல்லியும், பேசியும் காலங்கழிக்கும் புலவர்களைப் பார்த்துக் கவிஞர் கேட்கும் கேள்விகளை அவசியம் அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

'ஒல்காத பெரும் புகழ்த் தொல்
காப்பியமும், நன்னூலும் தமிழர்க் கெல்லாம்
நல்கரிய நன்மை யெலாம் நல்கின
என்றால் நாமும் நன்றி சொல்வோம்
செல் பல நூற்றாண்டு செல
அவ்விரு நூல் திருவடியில் புதிய நூற்கள்
பல்காவேல் இரு நூற்கும் பழியே!
நம் புலவர்க்கும் பழியே யன்றோ?
தனித் தியங்கத் தக்க தெனத்
தமிழ் பற்றித் தமிழ்ப் புலவர்
சாற்றுகின்றார்
இனித்திடும் அவ் விருநூலில்
வடமொழி என் வடஎழுத்துக்கொழுங்குதான் என்

நியாயமான கேள்விகள் தானே?

இப்படியாக அரசியல் சீர் வாய்ந்தார், குடும்பத்தார், கோயிலார், அறத்தலைவர், விழா நடத்துவோர், மாணவர், சொற்பொழிவாளர், ஏடெழுதுவோர், ஆக எல்லோர்க்கும் அவரவர் குறையைச் சுட்டிக் காட்டுகிறார். இக் குறைகளை அவர்கள் தவிர்க்கும்படி தூண்ட இளைஞர், யுவதியர், முதியவர் அனைவரும் கிளர்ச்சிசெய்ய முன் வரவேண்டும் என்கிறார்.

தமிழாக்கத்திற்குத் தகுந்த வழிகாட்டும் இவரை ஏன் தளபதி என்று அழைக்கக்கூடாது?




எமது கம்பெனி உத்தரவாதமுள்ள அசல் ஜாதி புஷ்பராகம் & நகைகளையும் வாங்கிவரும் அன்பர்கள் கியாரண்டி விவரங்களுடைய பில், ரசீதும் வைத்திருக்க வேண்டியது.

**விலையுயர்ந்த இயற்கை புஷ்பராக தளத்தில் எமது உயர்ந்த தயாரிப்பு!**

ஸ்டார் வைரக் கட்டிங் & இயற்கை வைர ஷைனிங்

# அசல் புஷ்பராக

## கமலங்களுக்கு

100-க்கு 65-ம் ஷை கமலங்கள் பதித்த நகைகளுக்கு
100-க்கு 75-ம் கியாரண்டி தரக்கூடும்.

**குறைந்த விலை!** **குறைந்த விலை!!**

கியாரட் 1-க்கு கமலம்
3 முதல் 12 நின்றது வைர கியாரட் 1-க்கு ... ரூ. 35 0 0
14 முதல் 50 நின்றது வைர சன்னம் 1-க்கு ... ரூ. 2 10 0
கமலம் 1, ½ கியாரட் முதல் 1, 3, 6, கியாரட்
எடையுள்ள உரு சைஸ் கமலம் கியாரட் 1-க்கு ... ரூ. 25 0 0

**S. K. K. ரெத்தினம் செட்டியார்,**

**120, தெற்காவணி மூல வீதி, மதுரை.**

N.B.—சென்னை, ஆந்திரமாகாணங்களில் பலஆண்டுகளாகப் பிரசித்தியடைந்து வருகிறது. ஒருமுறை நேரில் வந்து கவனிக்கவேண்டுகிறோம்.

ஏஜெண்டுகள் தேவை.

# கவிஞர் திரு...
# ....பாரதிதாசன்...

(எப். ஜி. நடேசய்யர்

பல வருஷங்களுக்கு முன் ஒருநாள் மாலையில் ஒரு தமிழ்ப் பத்திரிகையைப் படிக்கையில், அதில் ஒரு பாட்டு சின்னஞ் சிறு அளவில் ஒரு பக்கத்தின் மத்தியில் இருக்கக் கண்டேன்; படித்தேன். மனத்தை அப்படியே ஆகர்ஷித்து விட்டது. ஒரு முறை, இருமுறை, மூன்றுமுறை திருப்பித்திருப்பிப் படித்தேன். இன்பப்பெருக்கி லமிழ்ந்தேன்.

மாலைப் போதில் சோலையின் பக்கம்
சென்றேன். குளிர்ந்த தென்றல் வந்தது
வந்த தென்றலில் வாசம் கமழ்ந்தது
வாசம் வந்த வசத்தில் திரும்பினேன்
சோலை நடுவில் சொக்குப் பச்சைப்
பட்டுடை பூண்டு படர்ந்து கிடந்து
குலுக்கென்று சிரித்த முல்லை
மலர்க்கொடி கண்டேன் மகிழ்ச்சி கொண்டேனே!

என்ன அழகான மொழி. எவ்வளவு பிரதியக்ஷ இயற்கைப் பிரதிபலிப்புச் சித்திரம். கண்ணெதிரே முல்லையும் அதன் பீடமும் அதைச்சுற்றிய அமைப்பும் அப்படியே நிற்கின்றன. தன்னிடம் மானிடரை இழுத்துப் பரவசமாக்கும் அதன் தனி மணம் பாட்டிலேயே வீசுகிறது. உண்மையிலேயே அதை அனுபவிக்கிறோம். இதற்குமேல எந்தக் கவியும் என்ன எழுத முடியும்? இவ்விதம் எழுதுபவன்தான் "கவிஞன்" ஆவான். "பாரதி தாஸன்" என்ற பெயரைப் பாட்டின் அடியில் பார்த்தேன். இவர் ஒரு மகாகவி என்று உணர்ந்தேன். குருதேவர் ரவீந்தரநாத் டாகோரும், தேசிய மகாகவி சுப்பிரமணிய பாரதியாரும் ஒன்றுசேர்ந்து இந்நாட்டுக்களித்த பொக்கிஷம் திரு. பாரதிதாஸன் என்று உணர்ந்தேன். மனமார அவரை வாழ்த்தினேன். அக்கணமே அன்னவருக்கு என் உணர்ச்சிப் பெருக்கை எழுப்பிய அப்பாடலின் பெருமையைக் குறித்து ஒரு கடிதம் எழுதியனுப்பினேன். "பாரதிதாஸன்" பெயர் எழும்பும் போதெல்லாம் "சிரித்த முல்லை" என்முன் பிரஸன்னமாகும். முல்லை மலரைப் பார்க்கவோ, ஸ்பரிசிக்கவோ, ஏற்படும் சமயமெல்லாம் "பாரதிதாஸன்" பிரஸன்னமாவார். இதுதான் அமர கவியின் குணம். எவ்வளவோ கதைகள், கட்டுரைகள், பாக்கள் படிக்கிறோம், எவ்வளவோ சங்கீதக் கச்சேரிகள், நாடகங்கள், நாட்டியங்கள், சினிமாப்படங்கள், சித்திரங்கள், கோயில்கள், இடங்கள்-கேட்கிறோம், பார்க்கிறோம். எல்லாம் அடுத்த நிமிஷம் மறைகின்றன. சிற்சில தான் மனத்தினிடத்தே சாஸ்வத இடம்பெற்று மறையாது நிற்கின்றன. அப்படி நிற்கவைக்கும் பெரியார்களில் ஒருவராவார் "பாரதிதாஸன்."

பாரதிதாஸனவர்களை நான் நேரில் கண்டதில்லை. ஆனால் அவர்களுடைய கவிதைகள் மூலம் அவரை ஒருவாறு தெரிந்துகொண்டிருக்கிறேன். அவர் புரட்சிக் கவி, கண்ணாரக் கண்டபடியே எழுதுபவர். மனம் கசிந்து உணர்ந்ததை உணர்ந்தபடி பிறர் உணரும்படி எழுதுபவர். அவனுக்கு இவனுக்குப் பயந்தோ, தாக்ஷண்யப்பட்டோ, பேருக்கோ, பட்டத்திற்கோ, பிறர் வாழ்த்துக்கோ, புகழுக்கோ ஈடுபட்டு அவர் கை எழுதாது. இது ஒரு வீரனுடைய குணம். இக்குணம்கொண்ட வீரக் கவிஞர் பாரதிதாஸனவர்களைப் போற்றாமல் எந்த அறிஞனும், எந்தத் தமிழனும், ஏன்-எந்தத் தேசாபிமானம் படைத்த இந்தியனும்-இருக்க முடியாது.

பாரதிதாசன் அவர்களைப்பற்றிய புகழ்ச்சி யொருபுறம் வளர்ந்தோங்கிவர, மற்றொரு பக்கம் சிலர் அவரைப்பற்றிக் குறைகூறுவதும் யாருமறிந்த விஷயம். இவர் நாஸ்திகர், சமூகத்தைத் தாக்குகிறவர், தேசிய விரோதி, காவி என்றெல்லாம் அங்குமிங்கும் பேச்சு. இதில் உண்மையிருக்கிறதா? சற்று ஆராய்ந்து பார்ப்பின் ஒன்றுமில்லை. தங்களுக்கு இவர் போக்கு பிடிக்காதவர் இவர் கருத்தை யறியாதவர் பிதற்றும் வெறும் பேச்சுதான் அவை.

தற்கால உலக நிலையில், தத்துவ ஆராய்ச்சியில், உண்மையில் எல்லோரும் நாஸ்திகர்கள் தான்-ஆஸ்திகர்களாயிருந்தால் உலக மகாயுத்தம் நடைபெறுமா? அணுக்குண்டு சகாப்தம் ஏற்பட்டிருக்குமா? மனிதன் மனிதனை உண்ணும் நிலைமை ஏற்பட்டிருக்குமா? இது போகட்டும். அத்வைதத்துவதின் உட்பொருள் என்ன? தனியொரு கடவுள்-சாதாரணமாய் உலகத்தார் போற்றி வழிபடும் கடவுள்-இல்லை யென்பதைத்

தவிர வேறென்னை? பாரதிதாஸன் வேறு என்ன சொல்கிறார்?

'இல்லை என்பார்கள் சிலர்; உண்டென்று சிலர் சொல்வர்
எனக்கில்லை கடவுள் கவலை.'
எனவுரைத்தேன்-அவர் 'எழுப்புசுவர் உண்டெனில
எழுப்பியவன் ஒருவனுண்டே
இவ்வுலகு கண்டு நீ நானும் உண்டென அறிக'
என்றுரைத்தார்-அவரை நான்
'கனமான கடவுளே, உன்னைச் செய்த சிற்பி எவன்?
காட்டுவீர்' என்றவுடனே
கடவுளைக் காண்கிலேன்! அறிவியக்கப் புலமை
கண்ட பாரத தேசமே!

தீரச்சொற்களாகிய இவை உலகத்தார் மனத்தைக் குத்திக் கிளறிச் சிந்தனை சக்தியை எழுப்புகின்றன வல்லவா? சிந்திப்பதற்கு மாறாகத் தன் வழக்கத்தை, தனது பழைய மனக்கோட்டையைக் கலைக்கிற தென்பதற்காகக் கவிஞரைக் குறைகூறி என்ன பயன்?

சமூகத்தைத் தகர்த்துத் தாக்குகிறார்தான். ராம் மோகன்ராய் முதல் மகாத்மா காந்தியடிகள்வரை எல்லோரும்தான் தாக்கியிருக்கிறார்கள்; தாக்குகிறார்கள். சுப்பிரமண்ய பாரதியாருக்கு ஈடுண்டோ? ஆனால், பாரதிதாஸன் தாக்குக்கும் மற்றவர் தாக்குக்கும் வித்யாசம் இதுதான். பாரதிதாஸன் தம் தாக்குதல்களை அப்படியே சமர்ப்பிக்கிறார். மேல் பூச்சு, மறைமுகம், தாக்ஷணியம் இவை சற்று மில்லாமல் தகர்க்கிறார். வீடு ஓட்டை. அஸ்திவாரம் கட கடத்துவிட்டது. வீட்டைச் செப்பனிட முடியாது. உடைத்துத் தகர்த்துதான் புதுக்கட்டடமாக அமைக்க வேண்டும். சமூகம் தற்காலத்தில் அந்நிலையில்தான் நிற்கிறது. யார் மறுக்கக்கூடும்?

மாலையிட்ட மாணவாளன் இறந்து விட்டால் மங்கை நல்லாள் என்ன செய்வாள்? அவளை நீங்கள் ஆலையிட்ட கரும்பாக்கி உலக இன்பம் அணுவளவும் அடையாமல் சாகச் செய்தீர். பெண்டிழந்த குமரன் மனம் பெண்டு கொள்ளச் செய்யும் எத்தனம் கண்டிருந்தும் கைம்பெண் என்ற கதை செரல்லலாமோ? கதை சொல்லலாமோ? பெண்கள்வதை கொள்ளலாமோ?

என்று கேட்கிறார் பாரதிதாஸன். இதற்குச் சமாதானம் உண்டோ? இத்தீய பழக்கத்தையுடைய சமூகத்தை உடைத்தெறியாமல் வேறு என்ன செய்ய முடியும்?

தேசிய விரோதி என்று ஒரு பழிச்சொல்-இது எவ்வளவு உண்மை?

என்னருந் தமிழ் நாட்டின்கண்
எல்லோரும் கல்வி கற்றுப்
பன்னருங் கலைஞானத்தால்,
பராக்கிரமத்தால், அன்பால்,
உன்னத இமைமலைபோல்
ஓங்கிடும் கீர்த்தி யெய்தி
இன்புற்றார் என்று மற்றோர்
இயம்பக் கேட்டிடல் எந்நாளோ?

என்று நெஞ்சு பதறக் கேட்கிறார் பாரதிதாஸன். இது தேசியம் ததும்பும் சொல்லா? தேசிய விரோதியின் உரையா? வாசகர்கள் சிந்திக்கட்டும்.

இவர் ஒரு கர்வியெனச் சொல்லும் வசையொன்று! நான் சொல்லுகிறேன். கர்வமில்லாதவன் மனிதனல்ல. எல்லோரும் கர்வங் கொண்டவர்தான். அவரவர் அளவில் பேருக்குமட்டும் அவையடக்கம் காட்டுவார்கள். உலகில் நடக்கும் அக்கிரமங்களை, சமூக ஊழல்களைக் கண்டித்து, புரட்சிமூலம் உலகத்தின் போக்கை மாற்றும் உத்தேசத்துடன் எழுதும் தம்மை மக்களில் சிலர், அங்குமிங்கும் தாக்கிப் பேசுவதை மதிக்காமல் தலைநிமிர்ந்து தம் மனம்போல் அஞ்சாமல் செல்வது கர்வமாகுமா? அது கௌரவமாகும். கர்வம் நல்ல முறையிலிருப்பது கௌரவிக்கத் தகுந்த குணமாகும். கர்வம், அகம்பாவம் என்கிற வகையிலிருந்தால் அவ்விடத்தில் அன்பு இருக்குமா? சகோதரத்வம் இருக்குமா? மக்களின் நிலைமையில் பரிதாபம் ஏற்படுமா? சொல்லுங்கள். புரட்சிக்கவி பாரதிதாஸன் இவை பற்றித் தம் பாடல்களில் என்ன சொல்கிறார் கவனியுங்கள். அன்பு எப்படிச் சொரிகின்றது பாருங்கள். சகோதரத்துவம் எவ்விதம் உள்ளூறப் பாய்கின்றது உணருங்கள். மக்களின் நிலைமைபற்றி எங்ஙனம் மனம் குமுறுகிறது, துடிக்கிறது, சிந்தியுங்கள். எழுமின்-விழிமின். உலகத்தை, சமூகத்தை உடனடியாக அடியோடு மாற்றுங்கள்.

வீழ்ச்சியுறு தமிழகத்தில் எழுச்சி வேண்டும்!
விசையொடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்!
சூழ்ச்சிதனை வஞ்சகத்தைப் பொறாமை தன்னைத்
தொகையாக எதிர் நிறுத்தித் தூள் தூளாக்கும்
காழ்ச்சிந்தை, மறச்செயல்கள் மிகவும் வேண்டும்

எனக் கோருகிறார் நமது கவிஞர்-சீர்கெட்ட தமிழகத்தைப் பார்த்து அன்புப் பெருக்கால்!

பாரதிதாஸன் தமிழகத்தின் நன்முத்து; தமிழ்த் தாயின் கூரியவாளின் சீரியமுனை-அவர் வாழ்க; அவர்கவி வாழ்க; அடிமைத்தனம் ஒழிக; வீரம் எழுக.

சந்திரலேகா பிலிம்ஸின் மகோன்னத தயாரிப்பு

ஜி. சுப்புலக்ஷ்மி

நடிக்கும்

# மங்களா

K. சாரங்கபாணி T.S. கிருஷ்ணவேணி T.R. ராமச்சந்திரன்

ஸினேரியோ: டைரக்ஷன்....P.R. நாராயணன், M.A....

பாடல்கள்...சிவன்.....ஸ்டுடியோ...நியூடோன்



P.S.M.Co.

விவரங்களுக்கு:

சந்திரலேகா பிலிம்ஸ் மதுரை :: சென்னை







# தேனீ

பாடிக் கொண்டே பருகுவை நறுந்தேன்;
பருகிக் கொண்டே பாடுவை தேனியே

* * *

மேற்கில் பரிதி ஊற்றிடும் ஒளிப்புனல்
மீது, மிதக்கும் உன் மேனியும் சிறகும்
கண்ணிடை அழகின் களஞ்சியம்! உன்குரல்
விண்ணிடை இன்பப் பண்ணின் அலைகள்!

* * *

ஒளி மாலைப் போதால் உனக்கும், உன்னல்
அம் மாலைக்கும், அழகுண் டாகிடப்
பருகிக் கொண்டே பாடுவை; தேனியே
பாடிக் கொண்டே பருகுவை நறுந்தேன்

* * *

ஒளிமிகு மாலை சார் நளிர்மணிச் சோலையில்
தளிர் சார்ந்து, பன்னிறம் தரும் பூக்காடு, தன்
மண்டு தேனிதழால் மண அழைப் பளிக்கவே
அண்டும் நீ, விண் சுழன்றுடிக், காதலால்
பாடிக் கொண்டே பருகுவை; நறுந்தேன்
பருகிக்கொண்டே பாடுவை தேனியே

* * *

முல்லை சிரித்தும், மு ழுத்தாமரை தன்
முக மலர்ந்தும், முன்வாய் ஏந்திய
தேன்முத் தத்திற்குத் தெருப்பிச்சை ஏற்கும்
கான்குறச் சிறுவர்போல் கண்மகிழ்ந் தாடலொடு
பாடிக் கொண்டே பருகுவை; நறுந்தேன்
பருகிக் கொண்டே பாடுவை தேனியே

* * *







தென்றல் நட்டுவன் நன்றூட்டு விக்க
நின்றுடு தாமரை நேரிழை யாளின்
பொற்பொடி பூசுடல் புணர்ந்திதழ்த் தேனைப்
பருகிக் கொண்டே பாடுவை; பண்ணென்று
பாடிக் கொண்டே பருகுவை தேனியே

* * *

மென்மலர்க் காதலி யின்னிதழ் ஊற்று
நின் சொத்து, நீஅவ ளின் சொத்து! மற்றும்
மென் காம்பில் நின்ற வேளை யரும்பு, நின்
பொன்னுடல் தழுவவே பூத்தது! நீஅவள்
தூயுடல் தோயவே தோன்றினை, தேனியே

* * *

பருவ மலர்உன் வரவு நோக்கும்;
பருக நீ, அதன் பருவம் நோக்குவை!
இம்மி நேரம் இடையில் வீண் இல்லை
அம்மலர் நினைப்பின் அருகில்நீ இருப்பாய்,
கருதுவை, இன்பம் காண் எனும் அம்மலர்!

* * *

பூத்தாள்! ஆர்த்தாய்! புதுமணம் கண்டு
தீர்த்தாய் இரண்டுளத்துச் சேர்ந்த குறைபாடு!
இன்பத் துறையின் இலக்கணம் உரைத்தார்
உன்பால் கண்டே உரைத்தனர் தேனியே
பாடிப் புணர்ந்து நீ பிரிந்தால்
வாடிப் போகும் மணமலர் உடலே!

—பாரதிதாசன்

மலாயாவில் 12 ஆண்டுகளாக அருந் தொண்டாற்றி வரும் பிரபல தமிழ் தின சரிப்பத்திரிகை.

# தமிழ் முரசு
## ஆண்டு மலர்

**ஆகஸ்ட் மாதம் வெளிவருகிறது**

ஏராளமான வர்ணப்படங்கள், அறிவூட்டும் கட்டுரைகள், உயர்ந்த கதைகள், சிந்தையைக் கவரும் சித்திரங்கள், நெஞ்சையள்ளும் கவிதைகள் மலரில் மணம் வீசுகின்றன.

**தமிழ் நாட்டின்**

பெரியார் ஈ. வே. ராமசாமி
கவியரசர் பாரதிதாசன்
தளபதி சி. என். அண்ணாத்துரை
எஸ். இராமநாதன்
சோ. இலட்சுமி ரதன் பாரதி
ப. ஜீவானந்தம்
சாமி. சிதம்பரனார்
ப. கண்ணன்
க. அன்பழகன்
இரா. செழியன்
ஏ. பி. சனார்த்தனம்

மற்றும் பலரது கருத்தோவியங்கள் மலரை அலங்கரிக்கின்றன.

மூவர்ண முகப்புப்படம், ஏராளமான பக்கங்கள்!

**விவரங்களுக்கு**

**மானேஜர்**

தமிழ் முரசு ஆபீஸ்
71 சிலிகிரோட்
சிங்கப்பூர்

சென்னைக் கிளை
581 பைக்கிராப்ட்ஸ்ரோட்
திருவல்லிக்கேணி, சென்னை



# தாமரை மார்க்கு தேன்
**LOTUS BRAND HONEY**

தேன் என்றாலே நாக்கில் நீர் ஊறுகிறது. எனினும் தாமரை மார்க்குத் தேனையே ஒவ்வொரு குடும்பத்தலைவரும், தலைவியும் விரும்புகின்றார்கள். தேனின் குணம் ஏட்டில் அடங்காது. பாலர் முதல் வயோதிகர் வரை விரும்பிப் புசிப்பது. வளர்ச்சிக்கும் முகமலர்ச்சிக்கும் சிறந்தது.

## ஏஜெண்டுகள் தேவை

சோனல் ஏஜெண்டு : கே. வீராசாமி
**தேன் வியாபாரம், 83-B, M.N.G. வீதி**

## கோயமுத்தூர்



நவ நாகரீக உலகத்தில் மங்கையர், ஆடவர் நாகரீகம் ஒரு முக்கிய பிரச்னையாக மிளர்கின்றது.

இப் பிரச்னையைத் தீர்ப்பது அசல் பட்டு நூலில் புது டிஸைன்களில் கண் கவரும்படியான ஆடை அணிவதே.

உங்களுக்கு வேண்டிய பட்டு நூல் ஜவுளிகளுக்கு நாணயமான இடம்.

# கந்த விலாஸ் பட்டு நூல் ஜவுளிக்கடை
**(C. S. சித்தப்ப கவுடர்)**
**ரங்கே கவுடர் வீதி**

## கோயமுத்தூர்



# வசந்தகுமாரி

ப. கண்ணன்

"அவள் இந்த உயர் நிலைக்கு எப்படி வந்தாள்?" இது பல நாட்களாக என் மனத்தை அரித்து வந்த கேள்வி. அந்த வரலாற்றை அவள் வாயாலேயே கேட்டறியும் வாய்ப்பு கிடைத்தது, "எங்கள் ஊர்க்காரி" என்ற சலுகையால்.

அவளும் என்னிடம் சொல்ல விரும்பினாள். சொன்னாள்:

* * *

"நான் 8 வது வகுப்புவரையில் திருப்புனலூரில் படித்தேன். உங்களுக்குத்தான் தெரியுமே; அங்கு அதற்குமேல் வகுப்புக்கள் இல்லை. நான் மேலும் படிக்க விரும்பினேன், என் தகப்பனாரும் ஆசைப்பட்டார். எனவே நாமக்கல் உயர்நிலைப் பள்ளியில் கொண்டு சேர்க்கப்பட்டேன். என் தகப்பனார் என் படிப்புக்காகப் பட்டபாடுகளும் தொல்லைகளும் அளவிட முடியாது.

அப்பொழுது எனக்கு வயது 14. நிறம் சிவப்பா யிராவிட்டாலும், நான் அழகி யென்றே மதிக்கப்பட்டேன், மறைவு என்? என் உள்ளத்திலும் அந்த எண்ணந்தான்.

லீலா அந்த உயர்நிலைப் பள்ளியில் ஓர் ஆசிரியை, அவள் கணவரும் ஆசிரியர். என்னிடம் லீலாவுக்கு வெகு பிரியம்; அன்பும் ஆதரவுமாகப் பேசுவாள்.

லீலா இசையும் நடனமும் கற்றவள். கெட்டிக்காரி. இனிமைக் குரல் இன்மையால் அவள் பிரகாசிக்கவில்லை. எனக்குப் பாட்டென்றால் நிரம்பப் பிடிக்கும். நாட்டியத்திலும் மோகம் பிறந்தது. என் விருப்பத்தின்படியே மகிழ்ச்சியோடு லீலா பயிற்சியளித்தாள்.

ஓராண்டு சென்றது. இசையிலும் நடனத்திலும் தான் எனக்கு ருசி அதிகம்; எனினும் பள்ளித் தேர்வுகளிலும் நான் தவறவில்லை.

இந்த நிலையில் ஒருநாள் ஊரிலிருந்து, "காலராவில் அப்பா இறந்தார். அடுத்த நாள் அம்மாவும் இறந்தாள்." என்ற செய்தி வந்தது. திடுக்கிட்டேன், திகைத்தேன், அறிவு குழம்பிற்று, அழுதேன், "நான் அனாதையா?" என்று ஆற்றினேன், என்ன பயன்?

லீலா என்னைத் தேற்றினாள். நான் படிப்பை நிறுத்திவிடத் துணிந்தேன். அவள் விடவில்லை. "கலையும் படிப்பும் இருந்தால் கண்யமாக வாழலாம். உன் திறமையைப் பாழாக்காதே" என்று உபதேசித்தாள். ஆதரவு காட்டினாள். சேரியில் சென்று "நாய் வாழ்வு" வாழ்வதைக் காட்டிலும், இன்னும் சிறிது நாள் படித்து உபாத்தினி வேலை செய்வது உத்தமம் என்று நானும் கருதினேன். எனவே என் உறவினர் அழைப்பையும் ஆலோசனைகளையும் நான் ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்களுக்கு மகா கோபம்.

"ராங்கிக்காரி! நாசமாய்ப்போ!" என்று திட்டிச் சென்றார்கள்.

* * *

ஆறு மாதங்கள் சென்றன. நிலைமையில் அபிவிருத்தி. என் படிப்போடு, பாட்டையும் நாட்டியத்தையும் ஆசிரியைமார் அனைவரும் பாராட்டினர். மாணவிகள் மனதாரப் புகழ்ந்தனர். அப்படியே ஊருக்குள்ளும் பரவிற்று புகழ்! என் மனதில் ஒரே உற்சாகம். களிப்பு!

பள்ளிக்கூட நேரம் போக மற்ற நேரங்களை லீலாவின் வீட்டிலேயே கழித்தேன். நான் பள்ளிக்குப் போகும் பொழுதும் வரும்பொழுதும் என்னைப் பலபேர் பார்க்கத்தொடங்கினர். அன்புப் பார்வை அலைமோதிற்று. ஆசைப் பார்வை மின்னிற்று. காமப் பார்வை கனன்றது, மோகப் பார்வை முட்டிற்று. வெட்கம் எழுந்தது. எனினும் நெஞ்சு நெகிழவில்லை. ஆனால் ஒரே ஒரு காதல் பார்வைமட்டும் என் கருத்தைக் குலைத்தது.

அவன் அழகான வாலிபன். முகத்தில் அறிவின் சாயை படர்ந்திருந்தது. அடிக்கடி நேர்ப்படுவான். அந்தப் பார்வை என் உள்ளத்திலே என்னென்னவோ வேதனைகளை விதைத்தன. நாட்கள் செல்லச்செல்லப் பார்வையும் பதைப்பும் வளர்ந்தன.

ஒருநாள் எனக்கொரு கடிதம் வந்தது. அதைப் படித்து முடிப்பதற்குள் வேர்த்து விறுவிறுத்துப் போய்விட்டேன்! ஒரே குழப்பம்! நான் அனுபவிப்பது இன்பமா துன்பமா!? எனக்கே தெரியவில்லை, என்? அது ஒரு காதல் கடிதம், அதுமட்டுமல்ல, அதை எழுதியவன் அந்த வாலிபன்! அவன் மிட்டாதார் மகன். மணம் புரிந்துகொள்ள என்முன் மண்டியிட்டது அக் கடிதம்!

நான்கு நாட்களாக யோசித்தேன், முடிவு ஏற்படவில்லை. என் உள்ளமும் அதை எதிர்பாராமலேயே சரண் புகுந்துவிட்டது அந்த ஆணழகனிடம். மறுபடியும் கடிதம் வந்தது காதலைச் சுமந்துகொண்டு! பொங்கிற்று உள்ளம்! நான்கே வரியில் பதில் எழுத நினைந்து, நாற்பது நானூறு, என்று எழுத முனைந்துவிட்டேன் என்னையும் அறியாமல், பறந்தன கடிதங்கள்!

ஒருநாள் அவன் கடிதமொன்று எப்படியோ லீலாவிடம் கிடைத்துவிட்டது, என் மனம் "பக்"கென்று அடித்துக்கொண்டது. லீலா என்ன நினைப்பாளோ?

ஆனால் அவள் என்னிடம் அனுதாபத்தோடேயே நடந்துகொண்டாள், "காளியண்ணன் பெரியவீட்டுப் பையன். படித்தவன். நேர்மையானவன். எனினும் வீட்டுக்கு அடங்கின பிள்ளை. கலியாணம் செய்துகொள்வதாயின் நலந்தான், எதற்கும் எச்சரிக்கையாக நடந்துகொள்" என்று கூறினாள் லீலா.

ஒருநாள் காளியண்ணன் வந்தான் லீலாவோடு பேசிக்கொண்டிருந்தான், நான் அறைக்குள்ளிருந்து கதவு இடுக்கில் அவன் அழகைக் கண்களால் பருகிக்கொண்டிருந்தேன். அவன் பேச்சுகள் அமுதம்!

"சந்தேகமே வேண்டாம். நல்லியைத் தவிர வேறு யாரையும் நான் மணந்துகொள்ளப்போவதில்லை. நல்லிதான் என் உயிர். அவள்தான் என் வாழ்க்கை. எதுவரினும் நான் பின்வாங்கப்போவதில்லை" என்று உறுதி கூறினான் காளியண்ணன், என் மனம் குளிர்ந்தது.

மீண்டும் ஒருநாள் காளியண்ணன் வந்தான். அன்று வீட்டில் நான் தனித்திருந்

தேன். தேன் நிறைந்த பருவ மலர் சுவைக்கும் வண்டை ஒதுக்கவில்லை, ஒத்த உளத்தெழுந்த உணர்ச்சியும் காதலும் எங்களை ஒன்றுபடுத்தின.

காளியண்ணன் பெருங்குணம் படைத்தவன். சாது. என்மேல் உயிரையே வைத்திருந்தான். லீலா எங்கள் இன்பத்திற்கு இடையூறாக இருக்கவில்லை; மூண்டெழுந்த காதலில் மூன்று மாதங்களைக் கழித்தோம். எங்கள் சேர்க்கைபற்றிய வதந்தி மெதுவாக ஊருக்குள் பரவி, மிட்டாதார் குடும்பத்தையும் எட்டிப் பிடித்தது. வந்தது மோசம்!

* * *

சுப்பையர் நாமக்கல் கர்ணம். செல்வாக்குள்ளவர். அவர் காளியண்ணன் தகப்பனுருக்கு நெருங்கிய நண்பர். ஞானசிரியர். வைதிக வழிகாட்டி! மிட்டாதாரரோ மகா முரடர். கொலைக்கஞ்சாத பேர்வழி. இதெல்லாம் பிறகுதான் எனக்குத் தெரிந்தது.

அன்று காளியண்ணன் முகத்தில் கவலைக் குறிகள்! ஏனென்று கேட்டேன். வெகுநேரத்திற்குப்பிறகு சொன்னான், காதலின் விளைவாக வீட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள்பற்றி. "தாய் ஒப்புக்கொண்டாள் திருமணத்திற்கு. தந்தையும் இசைந்துவரும் வேளையில் சுப்பையர் புகுந்து, காரியத்தைக் கெடுத்துவிட்டார்!" என்றான். கோபத்தால் அவன் கண்கள் சிவந்து சோகத்தால் நீரைச் சிந்தின. என் மனதில் புதியதொரு வேதனை குடியேறிற்று.

அவர்கள் உயர்ந்த நிலையும், எனது தாழ்ந்த நிலையும் எனக்கு அப்பொழுதுதான் நினைவுக்கு வந்தது. சமூக விதிகள், குலதர்மம் பயங்காரமாகக் காட்சியளித்தன! என் மனம் இடிந்துபோய் அப்படியே உட்கார்ந்துவிட்டேன்.

"எத்தனை சுப்பையர்கள் சேர்ந்தாலும் என் உறுதியைக் குலைக்கமுடியாது. உன்னைக் கைவிடமாட்டேன்," என்று சொல்லிச் சென்றான் காளியண்ணன்.

நாட்கள் இரண்டு, மூன்று, நான்கு என்று ஓடின. அவன் வரவில்லை, என் மனத்தில் ஒரே கவலை!

* * *

ஒருநாள் இரவு 2 மணி இருக்கும். ஊர் நித்திரை புரிந்தது. எங்கும் அமைதி. காரிருளின் ஆட்சி. நெடுநேரம் விழித்திருந்து அப்பொழுதுதான் கண்ணயர்ந்தேன். யாரோ வருவதுபோன்ற காலடிச் சப்தம். முரட்டுக் கரமொன்று என் கழுத்தை யமுக்கிற்று. கூச்சலிட முடியாமல் வாயில் துணிப் பந்து. கை கால்கள் கட்டப்பட்டன. இரண்டுபேர் தூக்கிச் சென்று வெளியிலிருந்த காரில் என்னைப் படுக்கவைத்தனர். புலியிடம் சிக்கிய மான்போல் பதைத்தேன். விடுபட வழியில்லை. என் முயற்சிகள் தோற்றன.

"அட! பாவிகளே!" என்று குமுறிற்று லீலாவின்குரல். சத்தம் போட்டே! தீர்ந்தே!" என்று பயமுறுத்தியது மற்றொரு முரட்டுக்குரல்.

கார் புறப்பட்டது, சாவுதான் நம்மைத் தூக்கிச்செல்கிறது என்ற முடிவுக்குவந்தேன். மூக்கருகில் ஏதோ வாசனை. என் சுய நினைவை இழந்தேன்.

நெடுநேரத்திற்குப்பிறகு, ஓர் கட்டிலில் படுத்திருப்பதுபோன்ற நினைவு. என் உடம்பில் ஸ்பரிச உணர்ச்சி, வேட்கை, கனவில் நடப்பதுபோன்ற சில இன்ப நிகழ்ச்சிகள். என் உள்ளம் சிலிர்த்தது.

நான் சுய உணர்வு பெற்று விழித்த பொழுது, உடை குலைந்திருந்தது, உடம்பில் பெரும்பளுவு. ஏதோ வேதனை, குடிசையொன்றில் கயிற்றுக் கட்டிலில் கிடந்தேன் கசங்கிய மலர்போல்! என்னால் எழுந்திருக்கவே முடியவில்லை.

கருத்த மேனி, பருத்த உடல், முறுக்கிய மீசையோடு ஒரு குண்டன் வந்தான். திடுக்கிட்டேன்!

"என்ன குட்டி! மாப்பிள்ளை—காளியண்ணனைக் கூட்டிவரட்டுமா? இங்கேயே முடிச்சுடுவோம் கலியாணத்தை. என்ன சொல்றே?" என்று கேட்டது அந்த மிருகம். நெஞ்சம் "திடுதிடு"ன்று நடுங்கிற்று.

"ஐயா! என்னை ஏன் தூக்கிவந்தார்கள்? நான் எங்கிருக்கிறேன்?" என்று கேட்டேன் பரிதாபமாக.

அவன் சிரித்தான், "எதுக்காகவா? எனக்காகத்தான். காளியண்ணனைவிட நாந்தான் ஒனக்குப் பொருத்தமானவன்னு தெரிஞ்சி, நாமக்கல் மிட்டாதார் என்னைக் கூப்பிட்டுக் கொடுத்தார் ஒன்னை. நான் எப்படி?" என்று குறும்போடு கேட்டான் குண்டன்.

நடந்தது விளங்கிவிட்டது. என் இதயத்தில் ஒரு கூடை நெருப்பு. உடம்பு வெலவெலத்தது! "ஐயோ!" என்று வாய்விட்டுக் கதறி விட்டேன்! நான் கெடுக்கப்பட்டேன். என் ஒழுக்கம் சுக்கல் சுக்கலாகக் கிழித்தெறியப் பட்டது. பலாத்காரமாக என் மானம் பறிபோயிற்று. குண்டனின் காமத்திற்கு என் உடம்பு இரையாயிற்று! செல்வச் செருக்கும், சாதிவெறியும் சிதைத்தன என் வாழ்வை!

"குட்டி! இனிமே நீ என் பெண்டாட்டிதான், காளியண்ணனை நீ பாக்க மாட்டே. இது கோயமுத்தூர் ஜில்லா. மதுரமலை அடிவாரம், இங்கேருந்து காக்கா குருவிகூடத் தப்பிப்போவ முடியாது. ஒன்னைக் கொலைபண்ணக் கொடுத்தாங்க. நான் பொண்டாட்டியா வச்சிகிட்டேன். பொழச்சிப்போ!" என்றான் குண்டன்.

என் உள்ளத்தில் காட்டாந்தகாரமாகப் பொங்கிற்று கோபம். ஓங்கி யறைந்தேன் அவன் கன்னத்தில்! "அம்மாடி!" என்று அப்பால் நகர்ந்தான்.

என் கோபாவேசம் அழுகையாக மாறிற்று. அழுதேன். துடித்தேன், தலையில் அறைந்து கொண்டேன்! என்ன செய்தென்ன? உயிரினும் மேலான என் மானம்......?

அடிபட்ட குண்டன் மீசை துடிக்க, பற்களை "நறநற" வென்று கடித்த வண்ணம் என்னருகில் நெருங்கினான். என் இதயம் நின்றுவிடும் போலிருந்தது.

அச்சமயம், அருகாமையில் எங்கிருந்தோ துப்பாக்கி வெடி சப்தம் கேட்டது. குண்டன் திடுக்கிட்டான். குடிசைக்கு வெளியே ஓடிச்சென்று பார்த்தான். மிகக் கலவரத்தோடு திரும்பி வந்தான். பதற்றத்தோடு, "குட்டி! ஓடியா, ஓடியா, ஆபத்து! அப்படிப்போய் ஒளிஞ்சுக்குவோம்!" என்று அழைத்தான். நான் அசையவில்லை. அவனைவிட என்ன ஆபத்து இருக்கப் போகிறது? எண்ணம் சாயாது எனத் தெரிந்தவுடன், குடிசையின் பின்பக்கமாக வெளியே ஓட்டம் பிடித்தான் குண்டன்! கையில் துப்பாக்கியோடு குடிசையின் முன்பக்கமாக நுழைந்தார் ஒரு சப் இன்ஸ்பெக்டர். சுடப்பட்ட புறா, நீர்க்கோழிகளோடு இருவர் அவர் பின்னால் வந்தனர்.

என்னைக் கண்டதும் அவர் மலைத்து நின்றார். "யாரம்மா நீ?" என்று கேட்டார். சுருக்கமாகச் சொன்னேன் செய்தியை. அவர் மனம் இரங்கிற்று.

"வேட்டைக்கு வந்த இடத்திலே பழைய "கேடி" அமாவாசை கிடைத்தான் என்று மகிழ்ந்தேன். தப்பிவிட்டான். போகட்டும். அதைவிடப் பெரிது உன்னை அவனிடமிருந்து காப்பாற்றியது." என்றார் சப் இன்ஸ்பெக்டர். கத்திக்குத் தப்பிய ஆடுபோலக் களிப்படைந்தேன். அவரோடு சென்றேன்

* * *

கோவையில், ராவ்பகதூர் கோமதிநாயகம் பெருந்தனவந்தர். பல நிறுவனங்களிலே அங்கம் வகிப்பவர், ஊருக்கு நல்லவர். உபகாரி. சப்இன்ஸ்பெக்டரின் நண்பர். எனவே அவரது ஆதரவில் சில நாள் இருக்குமாறு என்னை விட்டுச் சென்றார் சப்இன்ஸ்பெக்டர். என்னைத் துன்புறுத்தியவர்களை-காரணமாக இருந்தவர்களை பழி வாங்குவதாக அவர் உறுதி கூறினார். ஆனால் நடந்தது என்ன வென்பது மட்டும் இன்றுவரை எனக்குத் தெரியாது.

ராவ்பகதூர் என்னிடம் அன்பாக நடந்துகொண்டார். "நல்ல பெரிய மனிதர் ஆதரவில் நாம் இருக்கிறோம்" என்று மனம் சாந்தியடைந்தது. எனது வரலாற்றைச் சுருக்கமாக அவரிடம் சொன்னேன். எனக்கு இசையும், நடனமும் தெரியும் என்ற செய்தி அவருக்கு இன்பமளித்தது. என் மதிப்பு உயர்ந்தது.

அவரது வீடொன்றில் என்னை இருக்கச் செய்தார். சமைக்கவும், பேச்சுத் துணைக்கும் வேலைக்காரி ஒருத்தி நியமிக்கப்பட்டாள். நான் விரும்பியது, விரும்பாதது, வேண்டியது, வேண்டாதது எல்லாப் பொருட்களும் வந்து குவிந்தன.

அது மூன்றடுக்குள்ள மாடிவீடு. அங்கிருந்த நாற்காலிகள், மேசைகள், பீரோக்கள், கண்ணாடிகள், கட்டில் தொட்டில், தட்டுமுட்டுச் சாமான்கள் எல்லாம் உயர்தரமானவை. அவற்றைத் தொடவும் கை கூசிற்று. அம்மாதிரி வீட்டுக்குள் நான் நுழைந்ததுகூட இல்லை. சேரியில் பிறந்த நான் சீமாட்டிகள் உலவும் மாளிகையில் குடியேறினேன்!

ராவ்பகதூர் வந்தார். "எல்லாம் சௌகரியமாயிருக்கிறதா?" என்று கேட்டார்.

"உங்கள் அன்பு மிகப் பெரிது" என்றேன். மகிழ்ச்சிப் பெருக்கால் என் கண்களில் நீர்துளித்தது.

"இது உன் வீடுபோல். நீ விரும்புகிற வரையில் இங்குத் தங்கியிருக்கலாம். ஆட்சேபணையில்லை. சப் இன்ஸ்பெக்டரிடமும் சொல்லிவிட்டேன்" என்றார் கோமதி நாயகம். நெஞ்சுக்குள் அவரை வாழ்த்தினேன்.

காளியண்ணன் அடிக்கடி மனத்தில் மின்னி மறைந்துகொண்டிருந்தான். லீலாவின் சோகக் குரல் காதில் ஒலித்தது. ஆம்! அந்தச் சம்பவம்-என் மானத்தைக் குண்டன் பலிகொண்ட நிகழ்ச்சி-உள்ளத்தை அரித்துத் தின்றுகொண்டிருந்தது. "காளியண்ணனைக் காதலித்தது குற்றமா? அதற்கா அந்தக் கொடுந்தண்டனை? நாங்கள் இருவரும் மனம் ஒத்தபின் மற்றவர்க்கென்ன? நாங்களன்றோ வாழ்பவர்கள்! உலகமே! உனக்குக் கண்ணில்லையா?" நினைக்க, நினைக்க நெஞ்சம் குமுறிற்று. மனச்சாந்திக்காக மாடிக்குச் சென்றேன். மாலைக்கதிரவன் பொன்னொளி பரப்பினான். தென்றற் காற்று "சில்"லென வீசிற்று. பெருமூச்சு விட்டேன்.

அடுத்த மாடியில் எழுந்த பாட்டொன்று என் செவியில் மோதிற்று. பாடியகுரல், முறை, இவற்றைவிட பாட்டின் கருத்து என் நெஞ்சைப்பற்றியிழுத்தது! அது என் உள்ளத்தின் எதிரொலியோ!

"காதலிருவர்களும்—தம்
கருத்தொரு மித்தபின்
வாதுகள் வம்புகள்என்—இதில்
மற்றவர்க் கென்னஉண்டு?
சூதுநிறை யுலகே—ஏ
தட்ட இருட்டறையே!
தீதுசொல்? என்றுலகை—அவள்
நிந்தனை செய் திடுவாள்"

ஆஹா! அது நான் சிந்திய கண்ணீர்ப் பிரவாகத்தின் அடிச்சுவடோ! இதயத்தினின்றும் பொங்கிவழிந்த சோகத்தின் சொற்சித்திரமோ! என் உள்ளக்கடலில் ஆயிரம் எண்ண அலைகள் புரள, பதுமைபோல் நின்றேன்."

* * *

ராவ்பகதூர் கோமதிநாயகத்திற்கு வயது 46 இருக்கும். அவரை நான் தந்தைபோல் மதித்தேன். ஆனால் அவர் என்னை மகள் போல மதிக்க வில்லை, காமம் தீர்க்கும் கருவியாக மதித்தார். காட்டிய அன்பு, உபசாரம், உயர்வு எல்லாம் அதற்குத்தான்.

பெரும் பணக்காரர். அரசாங்கப் பட்டதாரி. கோயில் தருமகர்த்தா. அதே சமயத்தில் பொதுவுடைமைக்காரரின் நண்பர். காங்கரஸ் கட்சியின் அபிமானி. சுயமரியாதை இயக்க ஆதரவாளர். இப்படி எல்லோருக்கும் நல்ல பிள்ளையெனப் பெயர் வாங்க விரும்பி, எல்லோருடைய அதிருப்தியையும் பெற்றிருக்கும் ஒரு கதம்ப மனிதர் கோமதி நாயகம்!

அவர் தம் இச்சையை என்னிடம் வெளிப்படையாகச் சொல்லிப் பரதவித்தார் ஒருநாள். என்மனம் சஞ்சலப்பட்டது. மறுத்து வெளியேறவே விரும்பினேன். ஆனால் எங்குப் போவது? எப்படி வாழ்வது? ஆதரிப்போர் யார்? விடை தெரியாமல் தத்தளித்தேன். எனினும் அவரிடம் சொன்னேன், "ஐயா! நான் தாழ்ந்த சாதிக்காரி, உங்களைக் களங்கப்படுத்திக் கொள்ள வேண்டாம்" என்று.

அவர் கேட்டார்;—"சாதி மதம் கடவுள் எல்லாம் வெறும் மாயை. நல்லி! "பறைச்சி போகம் வேறதோ பனத்தி போகம் வேறதோ? இறைச்சிதோல் எலும்பிலும் இலக்கமிட் டிருக்குதோ?" உன்னால் சொல்ல முடியுமா?"

பிறகும் நான் மறுத்துக்கொண்டிருக்கவில்லை, அவர் மனம்போல் நடந்துகொண்டேன்.

* * *

ராவ்பகதூர் வராத இரவுகளில் நானும் வேலைக்காரியும் நெடுநேரம் ஊர்வம்பு பேசிக்கொண்டிருப்போம்.

"அண்டை மாடியில் இருப்பவன் பார்ப்பன வாலிபன். ஒரு கம்பெனியில் உத்தியோகம் பார்ப்பவன். யோக்கியன். என் அழகுத் தேன்குடத்தில் இடறிவிழுந்த ஈயாகத் தவிப்பவன். அவன் பாடியது பாரதிதாசன் கவிதை". இவ்வளவும் அவள் மூலம் தெரிந்தன. அதுமட்டுமல்ல என் வேலைக்காரி அந்த வாலிபனுக்கு நிரம்பத் தெரிந்தவள்.

புத்தகம் வேண்டுமென்று ராவ்பகதூரிடம் சொன்னேன். பாரதிதாசன் பாடிய கவிதைகள் அத்தனையும் வந்து சேர்ந்தன. படித்தேன். அவைகட்கு உள்ளத்தைப் பறிகொடுத்தேன்! அத்தனையும் தேன்!

அன்று மாலை நேரம். கதிரவன் மலைவாயில் மறைந்துகொண்டிருந்தான். உடம்பில் புளகத்தை யள்ளித் தெளித்தது தென்றல். புட்கள் கூட்டம் கூட்டமாகப் பறந்து சென்றன. மனம் சொக்கிப்போய் மாடியில் நின்றுகொண்டிருந்தேன். உள்ளத்தெழுந்த களிப்பும் உற்சாகமும் பாரதிதாசன் பாட்டாகப் பரிணமித்தது! மெய்மறந்து பாடினேன்:—

"உறுதி—உறுதி—உறுதி
ஒன்றே சமூகம்
என்றெண்ணார்க்கே இறுதி
பிறவியில் உயர்வும் தாழ்வும்
சொல்லல் மடமை— இந்தப்
பிழை நீக்குவதே
உயிருள்ளாரின் கடமை--நம்மில்
குறை சொலவேண்டாம் உறவினர்
பகை நீக்குங்கள்—உங்கள்
குகையினை விட்டே வெளி
வருவீர் சிங்கங்காள்,
உறுதி—உறுதி—உறுதி—"

அடுத்த மாடியிலிருந்து பாடினான் அந்த வாலிபன்.

"தேசத்தினர்கள் ஓர் தாய்
தந்திடு சேய்கள்—இதனைத்
தெளியா மக்கள் பிறரை
நத்தும் நாய்கள்—மிகவும்
நேசத் தாலே நாமெல்
லாரும் ஒன்றாய்—நின்றால்
நிறை வாழ் வடைவோம்
சலியா வயிரக் குன்றாய்.
உறுதி—உறுதி—உறுதி—"

பாட்டிலுள்ள தீவிர உணர்ச்சி அந்தக் குரலில் ஒலித்தது. அதனைக்கேட்டு என் மெய் சிலிர்த்தது. அவனது மூலக் கருத்து விளங்கிற்று. முகத்தைப் பார்த்தேன். அவனும் பார்த்தான். கண்ணோடு கண் மோதிற்று. என் உணர்ச்சி என்னை எங்கோ இழுத்தது. "மடமட" வென்று கீழே இறங்கி வந்துவிட்டேன்.

* * *

ராவ்பகதூர் கோமதி நாயகத்தின் பெண்ணுக்குத் திருமணம் வந்தது. நாள் குறித்துவிட்டுச் சாமான்கள் சேகரித்தனர். கலியாணத்தில் எனக்கு வைர நகை ஒரு "செட்" வாங்கிப்போட முடிவு செய்தார் கோமதி நாயகம். எனவே கலி

யாண நாளை ஆசையோடு எதிர்பார்த்தேன்.

ஆச்சு. இடையில் இன்னும் நான்கு நாட்கள்தான். அன்றிரவு சோகமே வடிவாக என் முன் தோன்றினார் ராவ் பகதூர். என் மனம் கலங்கிற்று.

"நல்லாயி! என் சாதியார்கள் இவ்வளவு பிடிவாதம் செய்வார்கள் என்று நான் எதிர்பார்க்கவே யில்லை!" என்றார் அவர்.

"என்ன பிடிவாதம்?" என்று கேட்டேன்.

"நீ என்னசாதி என்பது அவர்களுக்கு எப்படியோ தெரிந்து விட்டது. உன் தொடர்பை நீக்கிவிட்டுப் பிராயச்சித்தம் செய்துகொண்டால் ஒழிய, "சாதியிலும் இருக்க முடியாது, கலியாணமும் நடைபெறாது" என்கிறார்கள். நான் என்ன செய்யட்டும்? என் கௌரவத்தை நீதான் காப்பாற்ற வேண்டும்" என்று சொல்லிக் கண்ணீர் விட்டார்!

எனக்கு அழுகையும் ஆத்திரமும் பீறிட்டுக்கொண்டு வந்தது. எல்லாவற்றையும் அடக்கிக்கொண்டு, "நீ ஒரு பெரிய மனிதன்! இல்லையா?" என்று கேட்டேன்.

அவர் முகம் இருண்டு போயிற்று. கைகால்கள் "வெடவெட" வென்று நடுங்கின. "ஐயோ, என் குடும்பத்தின் கீர்த்தியே போய்விடும்! எப்படியாவது என் கண்ணியத்தைக் காப்பாற்று" என்று காலில் விழுந்தார். என் கோபம் "குப்"பென்று அணைந்து போயிற்று.

"நான் என்ன செய்வது?" என்றேன்.

"இதோ, ரூபா 500. தயவுசெய்து இரண்டு நாளைக்குள் இங்கிருந்து போய்விடு. நம் பிராப்தம் அவ்வளவுதான்," என்று சொல்லித் திரும்பிப் பாராமலே போய்விட்டார் அந்த தீரர்!

* * *

இரவு முழுதும் நான் தூங்கவில்லை. என்ஞானமெல்லாம் எண்ணி எண்ணி மனம் புண்ணாயிற்று. சாவதற்கோ துணிவில்லை. வாழ்வதற்கோ வகையில்லை. என்ன செய்வது?

கடலில் விழுந்தவனுக்குக் கிடைத்த கட்டுமரம்போல், எனக்கு உதவிற்று வேலைக்காரியின் யோசனை. எனவே என் நிலை குறித்து அடுத்த மாடியிலிருக்கும் வாலிபன்--சங்கரனுக்குச்—செய்தியனுப்பினேன்.

சங்கரன், தரித்திரனுக்குக் கிடைத்த நிதிக்குவியல்போல் என்னை வரவேற்றார். பலநாள் எதிர்பார்த்த பலன் கிட்டியதற்கு உள்ளம் பூரித்தார். உவகையில் திளைத்தார். அவர் என் அன்பராக-காதலராக-மட்டுமில்லை, பக்தராகக் காட்சியளித்தார்!

சற்றேறத்தாழ என்னைப்பற்றிய எல்லா விவரங்களையும் அறிந்து கொண்டிருந்தார். அவரது மனத்திண்மை எனக்குப் பேரானந்தமளித்தது. எங்கள் வாழ்விலே கலைமணம் கமழ்ந்தது. என் உள்ளத்தில் புத்துணர்ச்சி பூத்தது!

சங்கரனுக்கு நண்பர்கள் அதிகம். கம்பெனி வேலையை உதறியெறிந்தார். என் இசை, நடனம் பற்றிய புகழுரைகளை எங்கும் பரப்பினார். ரேடியோவில் பாட வாய்ப்புக் கிடைத்தது. நண்பர்கள் வீட்டுக் கலியாணங்களில் ஆடவும் பாடவும் அரிய சந்தர்ப்பங்கள் கிடைத்தன. நான் கற்றகலை என்னைக் கைதூக்கி விட்டது. "கலையும் படிப்புமிருந்தால் கண்யமாக வாழலாம்" என்ற லீலாவின் உபதேசம் அப்படியே பலித்தது.

நாடெங்கும் என் புகழ் பரவிற்று. பத்திரிகைகள் பாராட்டின. பக்கத்து வீட்டு ராவ்பகதூரும் "ஆ" வென்று வாயைப் பிளந்தார்! சினிமாப்பட முதலாளிகள் என்னைத் தேடிவந்தனர். செல்வம் குவிந்தது. நல்லாயாக இருந்த நான் "வசந்த குமாரி"யாக மாறினேன். நாட்டியக்கலையுலகில் நான் வசந்த காலப் புது மலர்! என் வாழ்வு சிறந்தது.

* * *

அன்று காலை 7 மணியிருக்கும்.

முதல்நாள் கச்சேரி செய்த அலுப்பில் நன்றாகத் தூங்கிக்கொண்டிருந்தேன். தூக்கம் கலைந்தபொழுது, கூடத்தில் யாரோ என்னைப்பற்றிப் பேசுவது காதில் விழுந்தது. ஊரிலிருந்து அப்பா வருவதாக அவர் சொன்னது நினைவுக்கு வந்தது. எழுந்து சென்று பார்த்தேன். அப்படியே மலைத்துப்போய் நின்று விட்டேன் ஏன்?

"காளியண்ணன் என்னை மணந்து கொள்வது சாதிக்கு இழுக்கு, ஆசார பங்கம், தர்ம விரோதம் என்று நாமக்கல் மிட்டாதாருக்கு உபதேசித்த அந்தணர் திலகம் சுப்பையர் அங்கு உட்கார்ந்திருந்தார்! அவரே சங்கரனின் தந்தை!!"

அவர் முன்னால் சென்று நின்றேன், "என்னை யாரென்று தெரிகிறதா?" என்று வினயத்தோடு கேட்டேன். மேலும் கீழும் பார்த்தார். அவர் முகத்தில் அசடு வழிந்தது. எனினும் சமாளித்துக்கொண்டார்.

"ஓ! நன்றாகத் தெரிகிறதே! இந்த மாதிரி உயர்ந்த இடத்தில், உயர்ந்த நிலையில் இருக்கவேண்டிய கலைப் பொக்கிஷம் நீ. நாமக்கல் மிட்டாதாருக்கு இதன் பெருமை எப்படித் தெரியும்? நீ சங்கரனின் அகத்துக்காரியானது எனக்குப் பரம திருப்தி" என்றார் சுப்பையர். சங்கரன் பொருளோடு புன்னகை புரிந்தார்! "அப்பாவின் கோபம் தெளிந்துவிட்டது" என்று அவர் கூறினார்.

"என் பிரிவுக்குப் பின் காளியண்ணனுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது. அறைக்குள் அடைபட்டுக் கிடக்கிறான்" என்ற செய்தியை சுப்பையர் கூறினார். என்மனம் பதைத்தது! பழைய நினைவுகள் நிகழ்ச்சிகள் எல்லாம் என் மனத்திரையில் காட்சியளித்தன! கண்ணீர் உகுத்தேன்! நான் என்ன செய்ய முடியும்?

"நீங்கள் திராவிடன் என்று பெருமை கொள்ளலாம். தன்மானம் சமத்துவம் சகோதரத்துவம் பேசலாம். போராடலாம். ஆனால் ஆரியக் கோட்டையை என்றும் அசைக்கமுடியாது" என்று கூறினாள் வசந்த குமாரி.

"ஏன்?" என்று கேட்க வாய் துடித்தது. ஆனால் கேட்கவில்லை, ஏன்?

அந்தக் கேள்விக்கு விடைதானே வசந்த குமாரியின் வரலாறு!

## வயிற்றுத் தீ!

தொழிலாளிகள் வேடிக்கைக்காகவா கள் குடிக்கிறார்கள்? அந்த வேலையைப் பணக்காரர்களே செய்யட்டும். நாள் முழுதும் ஆலையில் உழைத்துவிட்டு வெளியே வந்ததும், மனிதன் எவ்வளவு தேய்ந்து போகிறான் என்பது அந்த அனுபவம் இல்லாதவர்களுக்குத் தெரியாது. பிரசவத்தினால் ஏற்படும் துன்பம் எப்படி ஆண்களுக்குத் தெரியாதோ அதேவிதமாக வயிற்றுத் தீயைத் தணிப்பதற்காக ரத்தத்தைத் தண்ணீராக்கும் தொழிலாளியின் தவிதவிப்பை, நாற்காலியில் உட்கார்ந்து பேனாவை 'கிர்கிர்' என்று ஓட்டுகிறவன் ஒருபோதும் அறிய முடியாது. தொழிலாளிகள் கள் குடிப்பதை நிறுத்தவேண்டுமானால் அதற்கு ஒரே உபாயந்தான் உண்டு. அவர்களுடைய வேலையைக் குறையுங்கள்; அவர்களின் கல்வி யறிவையும் சம்பாத்தியத்தையும் அதிகப்படுத்துங்கள்!

**வி. ச. காண்டேகர்.**

# காலத்திற்கு வேண்டுவன

(ஓ. இராமலிங்கம், B. A.)

காலத்தின் கண்ணுடி கவிதை. தமிழகம் தனிப் பெருமை கொண்டிருந்த நாளிலே பிறநாட்டுப் பிற மொழியாளர் ஆதிக்கம் ஏற்படாதிருந்த பொற் காலத்திலே, புனையப்பெற்ற கவிதைகளிலே அறமும் மறமும் காதலும் மலிந்து கிடந்தன. உண்மைக்குப் புறம்பான செய்தி எதுவுமே காணக் கிடைப்பதில்லை. அக நானூறு புற நானூறு முதலானவற்றிலே, காலம் செல்லச் செல்ல, தமிழன் பிறநாட்டவரின், பிற மொழியாளரின், பிற சமயத்தவரின் ஆளுகைக்குக் கீழ்ப்பட்ட பின்னர் வந்த நூற்களிலே, யாரும் அறியாதபடி புகுந்துவிட்டன கண்மூடித் தனமான எண்ணற்ற அமானுஷ்யச் செயல்கள். மனிதனை மனிதன் சுரண்ட ஆரம்பித்தான், மதத்தின் பேராலும், தெய்வத்தின் பேராலும்.

காலம் யாறியது. வறுமையும், கொடுமையும் மிக்கோங்கியது. மக்கள் தன்னுணர்வு அற்றுப்போயினர், எதையும் பகுத்தறியாது வழக்கத்திற்கு அடிமையாயினர். கண்ணிருந்தும் குருடராய், காதிருந்தும் செவிடராய், வாயிருந்தும் ஊமையராய்ப் பாமரராய் விலங்குகளாய் மாறி, "இராமன் ஆண்டாலென்ன இராவணன் ஆண்டாலென்ன" என்று திண்ணை வேதாந்தம் பேசியதோடு நில்லாது, "மரம் வைத்தவன் தண்ணீர் விடுவான்" என்று கோழைத்தனமாகப் பொறுப்பை "விதி"யின் தலையிற் போடத்துணிந்து விட்டனர். வலி யிழந்து, மதி யிழந்து, நிதி யிழந்து நேர்மை யிழந்து, நிலை யிழந்து, சீர் குலைந்து, நாடிழந்து அடிமையாய்ப்போன மக்கள், எழுவதற்குண்டான எந்தவிதமான அறிகுறியும் காணப்படவில்லை ஒரு சில ஆண்டுகட்குமுன்பு வரையிலும்.

இவ்வாறு ஏற்பட்ட பற்பல சமயங்களிலேயும் பற்பல கவிதைகள் தோன்றத்தான் செய்தார்கள் நாட்டிலே. மெல்லிய பூங்காற்று, சலசலவென்று ஓடுகின்ற தெளி நீர் ஓடை, நிர்மலமான வானம், காதளவோடிய கயற் கண்ணுள் இவைகளைமட்டும் பாடிய கவிகள் பலர். அமர வாழ்வையும், அவதார புருஷர்களையும், குட்டித் தேவதைகளையும், கோபியரின் கோலாகலங்களையும், நாயன்மாரின் நாவன்மையையும், ஆழ்வார்களின் ஆழ்ந்த பக்தியையும் பற்றிப் பாடிய புலவர்கள் கணக்கிலடங்கார்.

இக்குழுவின் மத்தியிலே, காலத்தின் தேவைகளைக் கண்ட கவிகளும் தோன்றுமலில்லை. ஒரு பாரதியும், பாரதி தாசனும் தோன்றத்தான் செய்தார்கள். பாரதியின் பாக்கள் அரசியல் எழுச்சி மக்களிடையே ஏற்படுவதற்குக் காரணமாயிருந்தன என்பது உண்மையாக இருந்தபோதிலும், அவருடைய பாடல்கள் சிலவற்றில் நாளடைவில் ஊறிப்போன ஒரு சில பழங்கொள்கைகள் இல்லாமல் இல்லை. ஆனல் பாரதி தாசனின் கன்னற்சுவைக் கவிதைகளிலே காலத்திற்கு வேண்டுவன யாவும் இருக்கின்றன! வீழ்ச்சியடைந்த மக்கள் எழுச்சிபெற, தாழ்வுற்ற மக்கள் வாழ்வுபெற வகை தேடித் தரக்கூடியவை அவருடைய தனித்த இனித்த தமிழ்ப்பாக்கள். உணர்விழந்து உலுத்துப்போன சமுதாயத்தை உணர்ச்சியடையச் செய்த பெருமை அவருக்கே. பழமை என்று பெருமை பாராட்டாது, புதுமை என்று கூறி மோகத்தில் ஆழ்ந்து விடாது பழமையும் புதுமையுங் கூடியவை அவருடைய கருத்துக்கள். பழக்கத்திற்கும் வழக்கத்திற்கும் அடிமையான மக்களைத்தட்டி எழுப்புவன அவரது தேமதுரக் கவிதைகள். கவிதைகட்கு, அரசர்கள்தான் கதா நாயகர்களாக இருக்கவேண்டுமென்பதில்லை, உழைப்பாளியும் உழவனும் இருக்கலாம். உதாரணம் கவிஞரின் கவிதைகளிலே காணலாம்.

தமிழரின் வாழ்க்கையிலிருந்து பிரிக்கமுடியாத ஓர் அம்சம் காதல். காதலுக்காகச் சாதலையும் எதிர்த்தது தமிழகம். காதலைப் பாடாத கவிஞன் அநேகமாக இல்லையென்றே சொல்லலாம். கவிஞர் பாரதிதாசனின் காதற்கவிதைகள் நெஞ்சையள்ளுவன. கற்பனைச் சிறகடித்துக் காதல் உலகத்தில் அவர் கவியுள்ளம் பறக்கும் காட்சி கண்கொள்ளாக் காட்சி.

கவிஞர் தமிழ்ப் படங்களைப்பற்றி எழுதியுள்ள பாடல் வேதனை தரும் உண்மைகள் நிறைந்திருந்த போதிலும் நகைச்சுவையின் கருவூலமாகும். காலத்திற்கு வேண்டுவன பாரதிதாசன் கவிதைகளே.

# சமூகப் புரட்சி

(டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி, M.A., Ph.D., Bar-at-Law.)

தமிழ் நாட்டின் தனிப்பெரும் செல்வம் - பாரதி தாசன் - நம்மில் பலர் மறைந்து பல்லாண்டுகளான பிறகும் எல்லோருடைய நினைவிலும் இன்னிடம் பெற்றிருப்பார். அவருடைய வாள்போன்ற சொற் சித்திரங்களின் அமைப்பைப் புகழுபவர்கள் அனந்தம். ஆனால் அமைப்பைக்காட்டிலும், தன்மான உணர்ச்சி வீசும் அப்பாக்களின் பொருளுக்கே நான் முன்னிடம் கொடுப்பேன். "பாக்கிஸ்தான்" கோரிக்கைக்குக் கவி இக்பால் வழிகாட்டி என்றால், 'திராவிடப் பிரிவினை'க்கு அடி கோலியவர் பாரதிதாசன் எனின் மிகையாகாது.

சாதாரண மனிதனது கண் கொண்டு கவிஞரின் அடிப்படையான கருத்துக்களில் இரண்டொன்றை ஆராய்கிறேன். திட்டமாக நினைக்கவும், மனம்விட்டுப் பேசவும் வேண்டிய காலம் இது.

நாம் தாழ்வுற்றதற்குச் சமூக ஊழல்களே காரணம் என்று கூறியபொழுது நாம் தேசியத்தைத் தெரிந்து கொள்ளாத சாதி சமய வேறுபாடுகளைக் கிளறும் பிற்போக்காளர்களெனக் கூறப்பட்டோம். பாரதி தாசன் கவிதைகள் அதற்கு விடை கூறின. கவிஞர் பாரதி தாஸன் நமது அரசியல் எழுச்சிக்கு அடிகோலியவர். அந்த எழுச்சியைக் காவிய உருவாக்கி நிலைக்கச் செய்பவரும் அவர்தான்!

கவிஞரின் பாக்களில் எளிமை மிளிர்கின்றது. காரணம் சாதாரண மனிதனின் உள்ளக்கிடக்கையை வெளியிட அத்தகைய எளிமைதான் சிறந்த — சீரிய கருவி.

புரட்சிக் கவியின் கனல் வாசகங்கள் மக்களின் மனத்தில் புயலைக் கிளப்பிவிடும்; பழமையைத் தகர்த்தெறியும்; தன்மான உணர்ச்சியை ஊட்டிவிடும்.

ஆங்கிலக் கவிகளில் அநேகர் அவர்களது 'தளுக்கான' நடைக்காகப் பெயர்பெற்றிருந்தார்கள். டென்னிஸன் அதற்கோர் உதாரணம். கவிஞர் ஷெல்லியும் வோர்ட்ஸ் வொர்த்தும் ஆளும் வர்க்கத்திற்குக் கசப்பான முறையில் கவிபுனைந்தனர். எனவே அவர்கள் ஒரு கூட்டத்தினரிடம் புகழடையாததில் ஆச்சரியமில்லை. இவர்களைப்போன்றவரே நம் கவிஞரும். தனக்கென்று கவிஞர் தனிமுறை ஏற்படுத்திக்கொண்டதால் தான், நியாயமாக அவருக்குக் கிடைக்கவேண்டிய புகழ் கிட்டவில்லை. அவருடைய 'வெடிகுண்டு'ப்பாக்கள் எவ்வளவு எதிர்ப்பிருந்த போதிலும் அவற்றை வெட்டி வீழ்த்தி, எதிர்காலத்திலே சுயேச்சையின் வாயிலில் நம்மைக்கொண்டு நிறுத்தும்.

ஆந்திர தேசத்திலே சமூக ஊழல்களையும் அநீதிகளையும் ஒழிக்க முன்னாள் கவி வேமன்னா தோன்றினார். தமிழ் உலகில் இந்நாள் பாரதி தாசன் தோன்றிச் சமூகப் புரட்சிக்குக் கடைக்கால்போட்டிருக்கிறார். பாரதி தாசன் கற்பனா சக்தியுள்ள கவி மாத்திரமல்ல; காரியத்தில் கண்ணும் கருத்துமாய் இருப்பவர். அவர் எழுப்பியிருக்கும் தீ வெகு விரைவில் சமூக அட்டூழியங்களைக் கொளுத்திச் சாம்பராக்கப் போகிறது.

## சில சமயம்

"தொழிலாளியின் இரத்தத்தால் முதலாளி போகமனுபவிக்கிறான். உழவனின் வாழ்நாளைப் பாழாக்கி மிராசுதார் இன்பமாக இருக்கிறான். வறிஞரை நகத்தடியில் மாட்டி அரசன் ஆனந்தமடைகிறான். அட்டூழியத்தில் சிக்கிய மக்களோ உறங்குகின்றனர். பலவீனர் தேகத்திலும் சில சமயம் சிம்மத்தின் இரத்தம் ஓடும்; நீர்த்துளியிலும் நெருப்பின் உணர்ச்சி தோன்றுவதுண்டு."

—கவிஞர் இக்பால்.

# மலர்த் தோட்டம்

(எஸ். கருணனந்தம்)

மெய்ம்மையைப் போற்றி வாழும் மேன்மையாந் தமிழர் நாட்டில்
கைம்முதல் கல்வி யின்றிக் கவிகளை எழுதப் போந்தோர்
பொய்ம்மையின் எல்லை யாகும் புராணமே செய்தார்; இன்றே
செய்ம்முறை நன்க றிந்து சீர்திருத் தங்கள் செய்து

பாட்டிலே புதுமை கண்டான் பாரதி தாசன் என்பான்
நாட்டிலே மக்கள் துன்பம், நலிவுகள், வறுமை, சூழ்ச்சி
ஏட்டிலே விரித்து ரைக்கும் ஏழையின் தோழன் சீர்த்தி
காட்டிட என்னல் ஆமோ? கண்ணுளோர் காண வேண்டும்!

உவமையிற் புதுமை யென்ன உளந்தோடும் உணர்ச்சி யென்ன;
நவநவக் கருத்தைக் கூறும் நடையிலே எளிமை யென்ன;
கவலையைத் தீர்க்கும் இன்பக் கவிநயம், நகைப்பு மென்ன!
அவனையிந் நாட்டார் நன்றாய் அறிந்திட வில்லை யின்னும்!

கல்வியின் உயர்வு சொல்வான்; காதலின் பெருமை சொல்வான்;
நல்வினைக் குடும்ப மாற்றும் நடைமுறை நயந்து சொல்வான்;
பல்சுவை, விதவை துன்பம், பழந்தமிழ் இனிமை சொல்வான்;
அல்வழி யால்நு ழைந்த ஆரியத் தீங்கும் சொல்வான்!

செந்தமிழ் நடையை நல்ல தீர்ப்புமே தெளிவாய்க் காட்டும்;
சுந்தர இயற்கை மாண்பை அழகின்நல் சிரிப்புத் தோற்றும்;
விந்தையாய் இல்ல றத்தைக் குடும்பவி ளக்கு வீசும்;
அந்தமாம் இருண்ட வீடு அறிவிலார் வாழ்வைப் பேசும்!

இன்னிசைத் தமிழர் பாட்டை இசையமு(து) எடுத்துக் காட்டும்;
மன்னிய காதல் துன்பம் மாண்எதிர் பாரா முத்தம்;
இன்னமும் இயம்புங் காதல் நினைவுகள் என்ற நூலும்
பன்னிற மலரின் தோட்டம் பாரதி தாசன் பாட்டே!

பாண்டியன் பரிசு கூறும் பழந்தமிழ்ச் சுவையும், பண்பும்
வேண்டிய தொளித்து விட்டு, வெறுங்கதை பேசி வீணில்
தாண்டிடும் பண்டி தர்க்குச் சாட்டையாம் தமிழி யக்கம்!
மாண்டுபோம் உள்ளத் திற்கு மருந்துபோல் உயிரை யூட்டும்

பாரதி தாசன் பாட்டைப் பயின்றிடும் பொழுதென் னெஞ்சில்
வீரமும் புரட்சி காணும் வேகமும், தமிழில் அன்பும்,
தீரமும், புத்து ணர்வும் சீர்திருத் தத்தில் நோக்கும்
பூரண மாகத் தோன்றும் புதுமையை என்ன சொல்வேன்!

# பாரதிதாசன் புரட்சிக்கவிஞரா?

(மு. செல்லப்பன்)

அந்நாளில் இலக்கியத்தை ஆய்தல் ஒன்றே அரும்புலமை எனும் மடமையை நீக்கி இந்நாளில் பழந் தமிழின் புதுமை ஏற்றி, எழுத்தெழுத்துக்கினிப் பேற்றி, படிப்போர் உள்ளத்திற்கு இன்பப் பெருக்கும் நகைச்சுவையும் வீர உணர்ச்சிகளும் உண்டாக்கிவைத் தவர் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்களே. கலவி அறிவும் இயற்கை அறிவும் ஒருங்குகூடி உயர்ந்த கற்பனு சக்தியுடன் கோடிக்கணக்கான மக்கள் எளிதில் உணருமாறு எளிய நடையில் கவிதைகள் அமைத்திருப் பதும், கவிதைகளில் புரட்சி மணம் வீசுவதும், அந்தப் புரட்சி மணமானது காட்டுத்தீப்போல் தமிழ் நாட்டில் பரவிவருவதும் கண்டு, கவிஞர் அவர்களைப் பாராட் டாமலிருக்கப் பகைவர்களாலும் முடியவில்லை.

பாரதிதாசன் அவர்கள், பகுத்தறிவுக் கொள் கைகளை விட்டு ஆஸ்திகத் துறைக்கு வந்து தேவா ரம் திருவாசகம் போன்ற புதிய நூல்கள் எழுத வேண்டுமென்று சில ஆஸ்திகத் தோழர்கள் கூறுகிறார் கள். கவிஞர் அவர்கள் ஏற்கனவே, ஆஸ்திகத் துறை யைப் பார்த்துவிட்டுத்தான் வந்தார் பயனற்றதெனக் கண்டு. இன்றைய உலகில் சாதி மதம் கடவுள் இவை களை வழியனுப்பிவிட்டு வாழ்க்கை நடத்துபவர்களின் நிலையையும், ஆஸ்திகத்தின் பேரால் அழுந்திக் கிடக்கும் நம்மவர்களின் நிலைமையையும் சற்றுச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

ஆஸ்திகன் கட்டுப்பட்ட அறிவுடையவன். கற்பனு சக்தி தேவையே இல்லை. இதிகாச புராணங்களைப் படித்துவிட்டால், பாடியதையே திருப்பித்திருப்பி எத் தனை தோத்திரப் பாடல்கள் வேண்டுமானாலும் பாடிக் கொண்டிருக்கலாம் அனுயாசமாக. எனவேதான், நம் கவிஞர் "மாடுகளும் செக்கைச் சுற்றும், வழக்கத் தாலே மடையர்களும் இயற்றிடுவார் கடவுட் பாடல்" என்று கூறியுள்ளார்."

கலை என்றால் அந்தந்தக்காலத்து மக்களின் அறி வுக்குப் பொருத்தமாகவும், வாழ்க்கையின் முற்போக் குக்கு இழுத்துச்செல்லும் தன்மையுடையதாகவும் இருக்கவேண்டும். வாழ்க்கைக்காகக் கலையே அல்லாது கலைக்காக வாழ்க்கை அல்ல. கலைக்கு அழகுமட் டும் இருந்தால் போதாது; அறிவுக்கும் விருந்தாக அது அமையவேண்டும். புரட்சி என்பது மாற்றம். பழமையை மாற்றி யமைத்துப் புதுமை நலம் பேணு பவர் புரட்சிக்காரர், பாரதிதாசன் புரட்சிக் கவியா? ஆம்.

பாரதிதாசன் அவர்கள் மனித சமுதாய வாழ் விற்குப் புதிய உருவம் தருகிறார்; பழைமையைச் சாடுகிறார்; அவனன்றி ஓரணுவும் அசையாது என்ற அவல மொழியில் மயங்கிக்கிடந்த மக்களைத் தட்டி எழுப்பி, 'மனிதா நீ யாருக்கும் பயப்படாதே! உலகைக் காதலி! நிமிர்ந்து நில்! உனக்குத் தெரியாத கடவுளைப் பற்றித் தெரிந்ததாக வீணுகப் பிதற்றாதே! எதையும் சிந்தித்துப்பார்! முன்னேறு!" என்கிறார். பகுத்தறிவு செறிந்த கவிதைகளின்மூலம் சீர்திருத்த உலகத்திற்கு மக்களை அழைத்துச் செல்லுகிறார். இயல் இசை நாடகம் ஆகிய முத்தமிழிலும் அறிவு நிறைந்த பாக்க ளாகப் புனைந்து தமிழ் மொழிக்கு அணிகலனைச் சூட்டி அலங்கரித்தவர் தமிழ் நாட்டுப் புரட்சிக் கவி யரசர் பாரதிதாசன் அவர்களே.


அழகான

**அச்சு வேலைகளுக்கு**

ஏற்ற இடம்

## நோபிள் பிரஸ்

தெப்பக்குளம்,

**திருச்சிறுப்பள்ளி.**

குறைந்த கட்டணத்தில், குறிப்பிட்ட நாளில், திருப்திகரமாகச் செய்து கொடுக்கப்படும்.

# மாயக் காவ்ஸ்கி

(A. P. சனர்த்தனம், M. A.)

1908ம் ஆண்டில் ஒரு நாள் சார் மன்னனின் ஏவலாளர் ஒரு குடிசையின் மீது படையெடுத்தனர். காரணம், அங்கு ஆட்சியைக் கவிழ்க்கத் திட்டமிடும் சதிகாரர் இருப்பர் என்ற அச்சந்தான். அங்கே 14 வயதுச் சிறுவன் ஒருவன் இருந்தான். காவலாளரைக் கண்டதும், அருகிலிருந்த ஒரு நோட் புத்தகத்தை வெடுக்கென்று எடுத்து வாயிலிட்டு மென்று தின்று விட்டான். புரட்சி இயக்கத்தைச் சேர்ந்தவரின் பட்டியல் அது!

அந்தப் பையன்தான் மாயக் காவ்ஸ்கி! தனது புரட்சிப் பாக்களால் ருஷ்யர் எழுச்சிக்குப் பெருந் துணை செய்தவன். "சோவியத் புரட்சி யுகத்தின் சிறந்த கவிஞ" னென்று ஸ்டாலினுல் புகழப் பெற்றவன்.

மாயக் காவ்ஸ்கி 1894-ம் ஆண்டில் பிறந்தவர். இளமையில் தகப்பனுடன் தர்க்கம் புரிந்து பல பொருள்களை உணர்ந்தார். தன் நாட்டின் மோசமான நிலையைக்கண்டு மனங் கொதித்தார். பாடல்களை இயற்றத் தொடங்கினர். அதன் விளைவாக சார் சர்க்காரால் சிறைப்படுத்தப் பட்டார். சிறையில் இலக்கியங்களைப் படித்தார். புகழ்பெற்ற கோர்க்கி என்பவர் இவருக்கு ஊக்கமளித்தார். ருஷ்யப் புரட்சி வெற்றி யடைந்ததும் மகிழ்ச்சிகொண்டு மேலும் மேலும் புதுமையான புரட்சிப் பாக்களை இயற்றினர். 1922 ஆம் ஆண்டில் வெளியான கவிதைக்கு லெனின் புகழுரை கிடைத்தது. மாயக்காவ்ஸ்கி நன்கு பாராட்டப்பட்டார். வெளிநாடுகளில் சுற்றி, அங்கு தலைவிரித்தாடும் முதலாளி ஆதிக்கத்தைக் கண்டார். மனங்கொதித்தார். சோவியத் ஆட்சியின் மாட்சியை, சுமார் 56 நகரங்களுக்குச் சென்று நேரில் தெரிந்து கொண்டார். மேலும் மேலும் பாக்களை இயற்றிப் பாட்டாளி மக்களை ஊக்குவித்தார்.

அவரது வாழ்விலே முறிந்த காதல், பொறாமைக்காரரின் தாக்குதல், நண்பர்களின் அன்பின்மை ஆகியவையெல்லாம் சேர்ந்து 1930ம் ஆண்டு மாயக் காவ்ஸ்கியின் மனத்தைக் குலைத்தன. வருந்தினர். வேதனையின் மிகுதி வேட்டுச் சத்தத்தில் முடிந்தது. மாயக்காவ்ஸ்கி தற்கொலை செய்து கொண்டார் இளமையிலும் ஒருமுறை தற்கொலை முயற்சிநடந்தது ஆனல் குறிதவறி விட்டது.

இரண்டாம் உலகப் பெரும்போரில் ருஷ்ய வீரர்களுக்கு பெரும் ஊக்கமளித்தது மாயக் காவ்ஸ்கியின் புரட்சிப் பாக்கள்.

மாயக் காவ்ஸ்கி இலக்கியக் கவிதைகளுடன் மட்டும் நின்றுவிட வில்லை. குழந்தைப் பாட்டுக்கள், காதல் கீதங்கள் ஆகியவைகளை இயற்றினர். ஆனல், இயந்திரங்களின் ஓசை, பாட்டாளியின் உழைப்பு, புரட்சியின் வேகம், சமுதாய முன்னேற்றம், எழுச்சி இவைகளுக்குத்தான் அவர் கவிதைகளில் முதலிடம்.

"பாட்டாளியின் பாசறைக்குத் தன் திறமையைக் காணிக்கையாகத் தருகிறவனே கவிஞன்" என்பது அவரது முடிந்த முடிபு.

இந்நாள், திராவிடத்திலும் ஓர் மாயக் காவ்ஸ்கியைக் காண்கிறோம். அவர்தான் பாரதிதாசன்! புரட்சிக் கவிஞருக்கு இன எழுச்சி, அரசியல், அறிவியல், சமுதாய விடுதலை குறிக்கோள். கவிஞரின் பாக்கள் மக்கள் உரிமைப் போரராட்டத்தில் நம்மை ஈடுபடுத்தும் தன்மையுடையன. கவிஞர் முரசு கொட்டுகிறுர்

'கிளம்பிற்றுக் காண் தமிழ்ச் சிங்கக் கூட்டம்,
கிழித்தெறியத் தேடுதுகாண் பகைக்கூட்டத்தை"

என்று.

புரட்சிக் கவிஞர் வாழ்க!

# மதம் ஓர் அழகிய பிணம்

"வயிற்றுப் பிழைப்புக்காகக் கிளிபோல் சொன்னதைச் செய்தும் பிராமணன் பூதேவரும்! பிரத்தியட்சமாக பூமிக்குத் தொண்டுசெய்து அன்னபூரணியை அவதார மெடுக்கச் செய்யும் பண்ணையாள்மட்டும் குடியானவரும் ஆகச்செய்யும்மதம் ஓர் அழகிய பிணம். அதை உடனே அகற்றுவிட்டால், அதன் துர்நாற்றம் மக்களுக்குப் பெருங் கேடுண்டாக்கும்.

—வி. ச. காண்டேகர்.

# அன்றும் இன்றும்

(சி. கணேசன்)

இன்று திராவிடம் புத்துணர்ச்சி பெற்றநாள். பல்லாண்டுகளாக, பன்னூற்றாண்டுகளாக நடைபெறாத நிகழ்ச்சி இன்றைத்தினம் நாம் கண்டு பெருமை கொள்ளத் தக்கவாறு நடைபெறுகிறது. நம்நாடு, திராவிடக் கவி மன்னர், புரட்சிக் கவி பாரதிதாசன்—கனக சுப்புரத்தினம்—அவர்களுக்குப் பொற்கிழியளித்துப் பெருமையடையும் இந்நாள், சரித்திரத்தில் பொன் எழுத்துக்கொண்டு பொறிக்கப்பட வேண்டிய நாளாகும்.

பொற்கிழி அளித்தல் நம் நாட்டிற்குப் புதிய செய்தியல்ல. புலவர் பெருமக்கள் பலர் பொற்கிழிகள் அளிக்கப்பட்டுள்ளனர்; மன்னர்களிடமும், சிற்றரசர்களிடமும், வள்ளல்களிடம் பரிசுகளும் பொற்கிழிகளும் பெற்ற புலவர்கள் பலர். பாடாத தருமிகூடப் பொற்கிழி பெற்றதாக நம் நாட்டு ஏடுகளில் பொறிக்கப்பட்டிருக்கிறது.

அந்தக் காலத்தில் பொற்கிழிகள்—பரிசுகள் பெற்ற புலவர்கள் அனைவரும்—பொற்கிழி தரும்—பரிசு தரும் வள்ளல்களைப் புகழ்ந்து பாடி, அவர்களைப் பாட்டுடைத் தலைவர்களாக்கியே பரிசு பெற்றிருக்கின்றனர்; அல்லது அவர்கள் மனத்திற்கிசைந்த பொருள்களை—கருத்துக்களை—கடவுளர்களை—ஸ்தலங்களைப்—புகழ்ந்துபாடிப் பரிசுகள் பெற்றிருக்கின்றனர். பரிசு பெற்றதாக, பொற்கிழி பெற்றதாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் புலவர்கள் எவரும் மக்கள் நலன் நாடியோ, நாட்டின் உயர்வைக் கருதியோ, பொதுநலக் கொள்கையுடனோ கவிதைகள் இயற்றியிருப்பதாகத் தெரியவில்லை. அதே போன்று பொற்கிழி—பரிசு—முதலியவை கொடுத்தோரும் சாதாரணப் பொதுமக்கள் இனமாக இருந்ததில்லை; அரசர்களாகவும் வள்ளல்களாகவும் பிரபுக்களாகவுமே இருந்திருக்கின்றனர்.

ஆனால் இன்று நிலைமை வேறு. மக்கள் உள்ளம் புராணங்களை, கடவுள்களை, ஸ்தல மகாத்மியங்களை அருளை, அவதார மகிமைகளை நம்புவதில்லை. இவை, வாழ்க்கை உயர்வுக்குத் தடை விதிக்கும் முட்டுக்கட்டைகள் என்னும் கருத்து மக்கள் மனத்தில் பதிந்துவிட்டது. புராணங்களை, கடவுள்களை, புகழ்மாலைகளை, புண்யக் கதைகளை—மனித வாழ்வைப் பழித்துப் பாழாக்கும் பாழ்நூல்கள் என்றும், அவற்றைப் பாடியவர்கள் கம்பனாயினும் சரி, மற்றெவராயினும் சரி, எவ்வளவுதான் உயர்ந்த புலவனாயினும் சரி, அவர்கள் காலத்தைக் கொலை செய்து, பிரபுக்களிடம் பல்லைக் காட்டி இச்சகம் பேசி வயிறு வளர்ப்பதில் கருத்தூன்றிய புல்லர்கள் என்றும்தான் இக்கால அறிவுள்ள மக்கள் கருதுகின்றனர். எனவே, பொற்கிழி பெற்ற பழம்பெருங் புலவர்கள் இக்காலத்தில் மக்களிடைப் பெருமையடைய முடியவில்லை. ஏன்? அவர்கள் தங்கள் வயிற்றை வளர்க்க, தங்கள் சுயநலத்துக்காக, தங்கள் புகழைப் பெருக்கிக்கொள்ள, வெறும் பொய்களையெல்லாம் கற்பனை செய்து, செல்வர்களைப் புகழ்ந்து, அவர்கள் மனத்துக்கிசைய, தங்கள் திறனெல்லாம் காட்டி நூல்கள் செய்தனர். எனவே, அத்தகைய புலமைக்கு இன்று மதிப்பில்லை. ஆனால் புலமை இன்று மதிக்கப்படவில்லையா? மதிக்கப்படுகிறது. எத்தகைய புலமை? "எழ்மையை வீழ்த்து! வறுமையைக் கருவறு! உடைமையைத் தனி உரிமையாக்கும் கொள்கையைச் சுட்டுப் பொசுக்கு! ஓடப்பரே! உதையப்பராகு உயரப்பரை ஒப்பப்பராக்கலாம்! விழி எழு தமிழா! கொடியோர் செயலறக் கொடுவாள் எடு!" என்றெல்லாம் கூறி மக்களைத் தட்டியெழுப்பி அவர்கள் உள்ளத்தில் புரட்சிக் கனல் கிளப்பி, உலகம் மக்களுக்கே, மக்கள் அனைவரும்—ஆண் பெண் அனைவரும் சமமே, வாழ்க்கை இன்பம் அனைவர்க்கும் பொது, என்ற கருத்துக்களைப் பரப்பி, முடைநாற்றம் வீசும் மூடப் பழக்க வழக்கங்களையும் அவற்றிற்கு அடிப்படையாயிருக்கும் கடவுளர்களையும் வேத இதிகாச புராணங்களையும் தவிடு பொடியாகத் தகர்த்துக் கடல் நீரில் கரைத்தொழிக்குமாறு மக்கள் உள்ளத்தில் ஊக்கமெழுப்பும் பாக்கள் புனைந்து தரும் புரட்சிப் புலமையை இன்று மக்கள் போற்றுகின்றனர்; புகழ்கின்றனர். பொற்கிழிதர ஓடோடியும் வருகின்றனர். மன்னர்களல்ல, வள்ளல்களல்ல, பிரபுக்களல்ல. பின் யார்? நாட்டின் சாதாரணப் பொது மக்களே. அப்புரட்சிப்புலவர் யார்?—புதுவையீன்ற பெருந்தகை, கலைமலை, புலவர் திலகம், கவியரசர், புரட்சிக் கவிஞர், பாரதிதாசன் எனும் கனக சுப்புரத்தினம் அவர்களே. அப்புரட்சிப் புலவர் மணிக்கே, இன்று பொது மக்கள் பொற்கிழியளித்து, புன்மைச் சேற்றினின்று கரையேறத் தங்கட்கு வழிகாட்டியதற்கு நன்றி தெரிவிக்கின்றனர். வளமார் திராவிட நாடு இன்றே பெருமை பெற்றது. வாழ்க திராவிடம்! வாழ்க புரட்சிக் கவியரசர் கனக சுப்புரத்தினம்!

# தைவாரம்

(பேராசிரியர் மு. சி. பூரணலிங்கம், B.A., L.T.,)

1. பாரதி தாசன் பூதேவி தொண்டன்
சாரதி சரஸ்வதி கலைமகள் தனயன்
பாரதி தேசியப் புலவன தன்பன்
பாரினி லுள்ளோ ரனைவர்க்கும் பிரியன்.

2. தமிழ்க்கலை தமிழ்மணம் தமிழர்சிறப்பையும்
அமிழ்தம் போன்று அருந்த மொழிபவன்
உமிழ்ந்த ஆடவர் மடவா ருலகில்
அமிழ்ந்தவ ருலகில் மேலாவது மியல்பே.

3. கவிநயஞ் சொன்னயம் பொருணய மிசைநயம்
புவியி லுள்ளோர் சிறப்பிக்கும் பன்னயம்
செவிமனம் நாசி கண் ணுக் கின்பம்
தவிப்பவர்க் களிக்குந் தகைசா லதிபனே.

4, உலகானு பவம் வாய்ந்த நங்கனகர்
பலதுறை கீதம், பாவினம், நாடகம்
சலன மிலாமற் சகலரு மின்புறத்
தலந்தொறும் போற்றுந் தலைமை யுற்றனர்.

5. நூலினை யிழந்த நுண்ணறி மகளிரின்
பாலியக் கொடுமை பகரவொண் ணாதே.
கூலிகொள் ளாமற் குவலயம் விரும்பும்
சாலி வாடியி னருள்பெறச் செய்தனர்.

6. சுவடி யாலயஞ் சென்ற விடமெலாம்
தவப்பய னெய்திய தக்கோ ருதவியால்
அவம் போகாமல் ஆதியி னருளால்
நவநவ மாக வமைத்தனர் நகரெலாம்.

7. அரசர்கள் வள்ளல்கள் அளித்தனர் முன்னாள்
சரஸ்வதி புதல்வர்க்குக் கேட்டதை யெல்லாம்
பரஸ்பர மாகச் சேர்ந்து வாழ்ந்தனர்
நரஸ்துதி யென்று நவின்றில ரெவரும்

8. அறிவு முணர்ச்சியு மிகுந்தவிந் நாளில்
செறிவுறு வாணிப வேளபி மானிகள்
நெறியிஃ தெனவே நேரிழை யாரும்
வெறிகொள வீந்தனர் வெண்டமிழக் கவிகளே.

9. கூறியது கூறல் குற்ற மாமெனச்
சிறுத லின்றிச் சிறியார் பெரியோர்
மாறுதல் கொள்ளா மனப்பாங் கமைய
வாற்சல் லியமாக வழங்கினருண் மைகள்.

10. ஐந்துபத் தைந்தா மாண்டிது வரவே
மைந்தர் மாணவர் பரிசுக ளளித்தனர்
மெய்யுரை யாளர் சுப்பு இரத்தினர்
பைந்தமிழ்க் கவியும் பலவாண்டுவாழவே.

# நமது கவிஞர்

(C.D.T. அரசு)

கவிஞர் பாரதிதாசன் "முத்தமிழ்"க் கவியரசர். இயலுக்கு அவருடைய கவிதைகளும், இசைக்கு "இசையமுதும்" நாடகத்திற்கு "நல்ல தீர்ப்பும்" சான்றுகள். கவிஞருடைய கலையில், கருத்தில், புரட்சி வெள்ளத்தைக் காணாதவர் இல்லை. படித்தவருக்கும், படிக்கப் பக்கம் நின்று கேட்டவர்க்கும் அவருடைய கவிதைகள் ஊட்டுகின்றன உள்ளத்தில் ஊக்கத்தை, உரிமையை, புரட்சியை. நாட்டிலே கள்ளர்கள் இருப்பதற்குப் பொறுப்பாளிகள் பொருளாளிகள் என்று எடுத்துக் காட்டும்போது, புலவருடைய புரட்சி மனப் பான்மையும், பொது வுடைமைத் தன்மையும் குன்றிடை விளக்கு போல் விளங்குகின்றது. மனிதனின் தேவைகள் கிடைக்காமல் அவதிப்படும் நேரத்தில், கள்ளத்தனமாக ஏமாற்றிப் பொருளைப் பெருக்கி வைத்திருக்கும் செல்வர்களைப் பார்த்து மக்கள் கோபம் கொள்கின்றனர்; அவர்களை எதிர்க்கத் துணிக்கின்றனர். மனம் துணிவைக் கொடுத்தாலும், நிலைமை திடத்தைத் தரவில்லை; தயங்குகிறார்கள், தவிக்கின்றார்கள் தங்களுடைய நிலைமையைக் கண்டு. தயக்கமும், தவிப்பும் வேதனை தருகின்றன! வேதனை மனத்தை வேக வைக்கின்றது. வெந்த மனம் வெண் சமரில் ஈடுபடத் தைரியம் பெறவில்லை. வேறு வழிகளை வகுக்கின்றது. கள்ளத்தனமும் அவ்வழிகளிலே ஒன்று. இந்தக் கள்ளத் தனம் ஊடுருவிப் பாய்கின்றது நொந்த உள்ளத்தில். உள்ளம் கள்ளத் தனத்திற்கு ஊட்டத்தையும், ஊக்கத்தையும், உயிரையும் கொடுக்கின்றது. உதித்த கள்ள எண்ணத்தைச் செயலில் நடத்தத் தூண்டுகிறது உள்ளம். தூண்டுதல் துணிவைக்கொடுக்கிறது. தூண்டுதலும், துணிவும் துணைபுரியக் களவில் ஈடுபடுகின்றான். கண்ணியன் கள்வன் ஆனான். இதற்குப் பொறுப்பாளி செல்வவான். இதைத்தான் புரட்சிக் கவிஞர் தம்முடைய பாண்டியன் பரிசில்,

"பொருளாளி திருடனை விளைவிக்கின்றான்
பொதுவுடைமையோன் திருடனைக் களைவிக்
கின்றான்"

என்று மிக மிக அழுத்தமாகத் தீட்டுகின்றார்.

கலைக்குக் "கவிதைகளும்" இசைக்கு "இசையமுதும்" அழகுக்கு "அழகின் சிரிப்பும்" குடும்பத்திற்கு "குடும்ப விளக்கும்" கொடுத்த உயர்கவி, உயிர்க்கவி, புரட்சிக்கவி புதுவை கனக-சுப்புரத்தினம் அவர்களுக்கு அன்பர்கள் அளிக்கும் இந்த மலர் நன்றியில் மலர்ந்தது. வாழ்க! புரட்சிக் கவி!

## மிக்க உயர்ந்த கவிஞர்

"பண்டைக் காலத்தில் தமிழ் மன்னர்கள் கவிகளை ஆதரித்தும், கௌரவித்தும் தமிழ் வளர்த்தனர்; வாழ்வில் உயர்ந்தனர். இடைக்காலத்தில் கவிகள் துன்புற்றனர். பழங்கால மன்னர்களைப் பின்பற்றிக் கவிஞர்களைக் கௌரவிப்பது மக்களின் கடமையாகும். பாரதி தாசன் பல பொருள்கள் பற்றியும் பாடியிருக்கிறார். கருத்து வேற்றுமை இருக்கலாம். ஆனால், அவர் மிக்க உயர்ந்த கவிஞர்."

—எம். இராதாகிருஷ்ணன், B.A., B.L.

# பாரதிதாசன் திருவுள்ளம்

*நாரண—துரைக்கண்ணன்*

"பாரதி,—பாரதி தாசன், இருவருக்குமிடையே எவ்வளவு வேற்றுமை? கவிஞர் கனக—சுப்புரத்தினம் எப்படி சுப்பிரமணிய பாரதியார்ருக்குத் தாசனானார்? தேச சுதந்திரத்தில் ஆர்வங் கொண்டு தேசிய கீதங்கள் பாடிய பாரதியாருக்கும், தேசிய இபக்கத்துக்கு மாறுபட்ட கொள்கையுடைய தன்மதிப்பு இயக்கத்தைச் சார்ந்த கனக. சுப்புரத்தினத்துக்கும் தோழமையும் ஆசிரிய-மாணவத் தொடர்பும் எவ்விதம் ஏற்பட்டது? சக்தியையும், கண்ணனையும் பாடிய ஆஸ்திகரான பாரதியாருக்கும், கடவுள் கொள்கையையே கேலி செய்யும் நாஸ்திகரான சுப்புரத்தினத்துக்கும் நேசம் எவ்வாறு உண்டாயிற்று? பாரதியாருடன் நட்புகொண்ட அக்காலத்தில் சுப்புரத்தினம் தேசீயவாதியாக இருந்திருக்கலாம்; ஆஸ்திகராய் இருந்திருக்கலாம். ஆகவே, தேச பக்தராகவும், ஆஸ்திகராகவும் இருந்த பாரதியாருக்குத் தாசர் ஆகக் கவிஞர் சுப்புரத்தினம் அச்சமயம் விரும்பியிருக்கலாம். தன்மதிப்பு இயக்கக் கொள்கையைத் தம் கொள்கையாகக் கொண்ட பின்னரும் பாரதி தாசனாகவே இருந்து வருகிறாரே! ஏன்? இது பொருந்துமா?" என்று பலரும் ஐயங் கொள்ளுகின்றனர்; கேட்கின்றனர். ஏன்? நான்கூட இவ்விதமாக எண்ணுவதுண்டு. இச் சந்தேகத்தைக் கவிஞர் பாரதிதாசனிடமே கேட்டுப் பதில் பெறவேண்டுமென்று நான் எண்ணிக்கொண் டிருந்தேன்.

நான் எதிர்பார்த்திருந்த சந்தர்ப்பம் சமீபத்தில் அருமையாக வாய்த்தது. சுமார் ஆறு மாதங்களுக்கு முன்பு நான் முல்லைப் பதிப்பகத்துக்குப் போனபோது, திருவாளர்கள் வ. அப்பாதுரை பிள்ளை எம். ஏ., "புதுமைப் பித்தன்," தி. ஜ. ர., சுப-நாராயணன் முதலிய அன்பர்களும் கவிஞரைக் காண வந்திருந்தார்கள். கவிஞர் எங்களுடனெல்லாம் மிக இனிமையாகப் பேசி அளவளாவினார்.

எங்கள் வேண்டுகோளின்படி கவிஞர் சிருங்கார ரசம் ததும்ப இளமையில் தாம் பாடியுள்ள சில பாடல்களைப் பாடிக் காட்டினார்.

இதனிடையே நான் பாரதி தாசனைப்பற்றிப் பலருங்கொண்டுள்ள மேற்குறித்த சந்தேகத்தை மெல்ல அவரிடம் கேட்டுத் தெளிவித்துக் கொள்ள முயன்றேன்.

"உங்களுக்கும் பாரதியாருக்கும் நட்பு எப்படி ஏற்பட்டது? அவர் கொள்கைகளுக்கும், உங்களுடைய கொள்கைகளுக்கும் நிரம்ப வித்தியாச மிருக்கின்றனவே!" என்று நான் கேட்டேன்.

கவிஞர் புன்முறுவலுடன் பதில் சொல்லத் தொடங்கினார். "என் கொள்கைகளுக்கும், அவர் கொள்கைகளுக்கும் என்ன வேற்றுமையை நீங்கள் காணுகிறீர்கள்? நான் இன்று எப்படி இருக்கிறேனோ, என்ன கொள்கைகளைக் கொண்டிருக்கிறேனோ அப்படித்தான் பாரதியார் அப்பொழுது இருந்தார். அவர் கொண்டிருந்த கொள்கைகளைத்தான் நான் இப்போது என் கவிகள் வாயிலாக மக்களிடையே பரவச் செய்து வருகிறேன். பாரதியாருக்குச் சாதி சமயப் பற்றே கிடையாது. மக்கள் ஆண் பெண்கள் உட்பட அனைவரும் சரிசமமாக இருக்க வேண்டுமென்பதுதான் அவர் கருத்து அவர் தம்மை ஒரு பிராமணர்; பிராமண சமூகத்தில் பிறந்தவர் என்று எண்ணுவது கிடையாது. அவர் கோயில் குளங்களுக்குப் போய்ப் பார்த்தது கிடையாது. கடவுள், ஆண்டவன் என்று சொல்லுகிறார்களே அதை எப்படி வணங்குவதென்றே அவருக்குத் தெரியாது. ஒரு சமயம் எங்களூரில் உள்ள பிரமுகர்கள் சிலர் முத்தியாலுப்பேட்டையில் உள்ள அம்மன் கோயில் ஒன்றில் தாங்கள் செய்யும் உற்சவத்தைக் காண வரும்படி, பாரதியாரை அழைத்தனர். நானும் அதற்குச் சிபார்சு செய்தேன். பாரதியார் நிலை எனக்குத் தெரியுமாதலால், கோயிலுக்குப் போனால் இப்படி இப்படி யெல்லாம் நடந்துகொள்ள வேண்டும்; தருமகர்த்தாவிடம் மரியாதையாக நடந்துகொள்ள வேண்டும் என்று நானும் மற்றவர்களும் அவருக்குப் பாடஞ் சொல்லிக் கொடுத்து வந்தோம். பாரதியார் எல்லாவற்றுக்கும் தலையாட்டி வந்தாரேயொழிய, அங்கே போனதும் எங்களை வரவேற்க எதிர்நோக்கி வந்த தருமகர்த்தாவை இன்னாரென்று சொன்னதும், அந்தச் செட்டியார் முன்னிலையில் மண்டியிட்டுக் கும்பிட்டவாறு அப்படியே நின்று விட்டார். அதன் பின்னர், அவர் அம்மன் கோயில் கருப்பக் கிருகத்துக்குள் செருப்புக் காலுடனேயே நுழைந்து விட்டார். அவரைக் கூப்பிட்டவர்களுக்கு, 'ஏனடா, இவரை அழைத்து வந்தோம்' என்று ஆயாசமுண்டாகி விட்டது. பாரதியார் கண்ணனையும், சக்தியையும் பாடி யிருக்கின்றாரே என்றால், கடலை நோக்கியும், பூஞ்சோலைகளைப் பார்த்துமே அப்பாடல்களைப் பாடி யிருக்கிறார். விபூதி, நாமங்களைப் போட்டுக்கொண்டு, பஜனை மடங்களில் பாடியும் ஆடியும் அவமாகக் காலம் போக்கிக்கொண்டிருந்த என்னை இன்றுள்ள நிலைக்குக் கொண்டு வந்தவர் பாரதியார்தான். பாரதியாருக்குப்

பூணூல் போட்டு, நாமம் இட்டு, அவரைப்பற்றி இல்லாத பொல்லாத கதைகளையெல்லாம் இன்று அளப்பவர்கள் அவரை நன்கு அறியாதவர்களேயாவர். பாரதியாரைப் பற்றி இன்று வந்திருக்கும் விஷயங்கள் பெரும்பாலானவை கட்டுக் கதைகளேயாகும். அன்பர் வ. ரா. போன்று பாரதியாருடன் பழகிய இரண்டொருவர்தான் உண்மையான சில விஷயங்களைக் கூறி யிருக்கின்றனர். பாரதியாரைக் குறித்து உண்மையாக வரவேண்டிய செய்திகள் இன்னும் எவ்வளவோ இருக்கின்றன. பாரதியார் அன்றுள்ள நிலையில் தேச விடுதலையை முதன்மையாகக் கருதினர். இன்று அவர் இருப்பாரானல், என்னைப் போலவே, முழுக்க முழுக்க, சமூகச் சீர்திருத்தம் குறித்த கவிதைகளையே இயற்றி யிருப்பார்" என்று கூறி முடித்தார்.

கவிஞர், பாரதி தாசனுடைய இப்பேச்சில் நானும், மற்றவர்களும் கொண்டிருந்த சந்தேகமனைத்துக்கும் சரியான பதில் கிடைத்து விட்டது. ஆகவே, அதற்கு மேல் நான் அவரை ஒன்றும் கேட்கவில்லை. ஆனல் பாரதி தாசன் உள்ளத்தைத் திறந்து பேசிய பேச்சிலிருந்து ஓர் உண்மையை உணர்ந்தேன். பாரதிதாசன் ஒரு சிலர் நினைப்பது போல், தேச சுதந்திரத்தைக் குறித்துச் சிந்தனை செய்யாமலில்லை. "அரசியல் அடிமைத்தனத்தைவிட, சமூக அடிமைத்தனம் தமிழ் மக்களைப் பலவகையிலும் பாழ்படுத்தி வருவதால், முதலில் ஜன சமூகத்தில் காணப்படும் ஊழல்களை ஒழிக்க வேண்டும். அர்த்தமற்ற கொள்கைகளையும், மூடப் பழக்க வழக்கங்களையும் அறவே அகற்ற முயலவேண்டும். அப்போதுதான் நம் நாடு அன்னியர் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்று அரசியல் ஆட்சியுரிமை கிடைத்தாலும், அதை வைத்து நிர்வகித்துக்கொள்ளத்தக்க திறமையும், ஆற்றலும் பெறும் என்று அவர் எண்ணுவதாக நான் அறிந்தேன். இவ்விதமான அவருடைய உள்ளக்கிடக்கையை அறிந்த பின்னர், நாம் பாரதிதாசனின் கவிதைகளைப் படித்தால்—ஆராய்ந்தால்தான் அவர் தமிழ்ச் சமுதாயத்துக்கு—ஏன்? ஜன சமூக மனைத்துக்குமே எவ்வளவு மகத்தான சேவை செய்து வருகிறர் என்று அறிந்து பாராட்ட முடியும்.

---

"பாரதிதாசன் கவிதையில் தேன் ஒழுகுகிறது! அவருடைய பெருமையை வட நாட்டாரும், மேல் நாட்டாரும் அறிந்து கொள்ளச்செய்ய வேண்டும். அது தமிழரின் கடமை."

டி. செங்கல்வராயன், B.A., B.L.


# இன்பந்தரும் நூல்கள்!

★

(புரட்சிக் கவிஞர் இயற்றியவை)

★

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. பாண்டியன் பரிசு | 3 | 8 | 0 | 7. தமிழியக்கம் | 0 | 12 | 0 |
| 2. பாரதிதாசன் கவிதைகள் | 3 | 8 | 0 | 8. காதல் நினைவுகள் | 0 | 12 | 0 |
| 3. கற்கண்டு | 2 | 0 | 0 | 9. குடும்ப விளக்கு | 0 | 10 | 0 |
| 4. அழகின் சிரிப்பு | 1 | 0 | 0 | 10. நல்ல தீர்ப்பு | 0 | 10 | 0 |
| 5. எதிர்பாராத முத்தம் | 1 | 4 | 0 | 11. அமைதி | 0 | 8 | 0 |
| 6. இருண்ட வீடு | 0 | 12 | 0 | | | | |

★

## முல்லைப் பதிப்பகம்

59, பிராட்வே ∴ சென்னை

# கவியின் உயிர்

[நா. வரதராஜுலு M.A., B.L., F.I.A.]

கவியின் உயிர் கொள்கை. கொள்கையைக் கடைப்பிடித்த இலக்கியமே காலப்போக்கில் நிலைத்திருக்கும். கொள்கை அற்றவை சிறிது காலத்திற்கு மன எழுச்சியும் இன்பமும் தருமாயினும் விரைவில் அழியும். கொள்கை அற்ற காவியங்களில் சிதறுண்டு கிடக்கும் சொற்றொடர்களும், சித்திரங்களும் புலவர் நாவில் அவர்கள் அண்டி வாழும் சமூக நிலைக்கேற்ப விளையாடலாம்; மக்களுடைய கீழ்த்தர உணர்ச்சிகளுக்கு விருந்தாகலாம். ஆனால், அந்நிலையும் அவ்வுணர்ச்சிகளும் மாறும்போது, அவை வழங்குவாரும் போற்றுவாரும் இன்றித் தாமே அழியும். அங்ஙனம் அழிந்த கவிதையும் இலக்கியமும் தமிழிலே மட்டும் அன்றிப் பல மொழிகளிலும் எண்ணில; அவற்றிற்காகக் கண்ணீர் உகுப்பாரும் மிகச் சிலரே.

கொள்கைகள் பலவிதம். சில் அறன் வலி உறுத்துவன; சில இலக்கிய மகனை உண்டாக்கித் தருவன; சில இம்மை பற்றியன; சில மறுமை பற்றியன; சில இளமை, யாக்கை, செல்வ நிலையாமைகளை உறுத்திக் காட்டுவன; சில ஊழ்வலியை உணர்த்துவன. எடுத்துக் காட்டாக, சிலப்பதிகார ஆசிரியர்,

"அரைசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாவதூஉம்
உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்
ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பதூஉம்"

காட்டுவான் கருதித் தம் பாட்டுடைச் செய்யுளை இயற்றினார். இவ்வடிகளும் கருத்துக்களும் காவியத்தில் பல இடங்களில் செறிந்து கிடப்பது காணத்தக்கது.

திருத்தக்க தேவர்,

"தேன் வாய் உமிழ்ந்த அமிர்துண்டவன் போன்று செல்வன்
வாய் வணக்கு நல்தார் முலைப் போகம் வேண்டான்
ஏனோரும் ஏத்த அவன் எய்திய இன்ப வெள்ளம்
ஈனோர்க்கு உரைப்பாம்"

என்று சிற்றின்பம் வேண்டாராய்ப் பேரின்பம் விழைந்து எய்திய சீவகன் மாக்கதை உரைக்கிறார்.

இந்த உயிர்க் காவியங்களின் நோக்கம் அவை எழுதப்பட்ட காலத்தில் இருந்த மக்கள் சமூக நிலை, வாழ்க்கை, பொருளாதாரம், கலைப் பண்பாடு, குறிக்கோள்கள் முதலியவற்றை ஒட்டியது. இவை மாற மாற, கவிதையைத் துய்ப்போர் உள்ளக் கிடக்கையும் மாறுகிறது. கவிதையில் குறைகளும் புது சமூக நிலையை ஒட்டி ஆராயப்படுகின்றன. ஆனால், கொள்கையே அற்ற எண்ணிறந்த பல காவியங்கள் ஆராய்ச்சிக்கேனும் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை.

சமூக நிலை மாறுபாடு மிக்கது. மாறுபாட்டின் வித்து சமூக வளர்ச்சிகளில் புதைந்துளது. ஆனால், அம் மாறுபாட்டின் வேகம் சில சமூகங்களில் அன்றிச் சில காலங்களில் தணிந்தும் வேறு சில சமூகங்களில் அன்றி வேறு சில காலங்களில் பெருகியும் ஓடும். மாறுபாட்டையே அடிப்படையாகக் கொண்டு, அதன் போக்கையும் வேகத்தையும் உணர்ந்து அவற்றிற்கு இணங்க எழுதப்பட்ட காவியமோ கவிதையோ சாகா வரம் பெற்றது. அதைப் புரட்சிக் காவியம், புரட்சிக் கவிதை எனச் சொல்லுவார்கள். அதற்குப் பொருள் சமூகத்தில் விநாடிதோறும் நேர்ந்துகொண்டிருக்கும் புரட்சியை ஒப்புக்கொண்டு அதை விளக்கம் செய்யும் கவிதை அல்லது காவியம் என்பதன்றி, புரட்சியை உண்டாக்கிய, அல்லது உண்டாக்க முயல்கின்ற கவிதை அல்லது காவியம் என்பது அல்ல. புரட்சி அவ்வளவு எளியதல்ல, மக்கள் வாழ்வை ஒட்டிய சூழ் நிலைகளால் உண்டாகுமே அன்றி அவ்வாழ்வுக்குத் தொடர்பு இல்லாத வெறும் காவியம் அல்லது கவிதையால் உண்டாகாது.

பழம் புலவர் சமூகத்தை ஒரு முடிவான (Static) நிலையாகக் கருதினார்கள்; அவர்கள் கொண்ட மனித சமூக இலக்கியங்களும் முடிவானவையாகக் கருதினர்கள். அவர்களுள் முன்னேற்ற வளர்ச்சி உடைய பலருக்குச் சமூகத்தின் வளர்ச்சியும் மாறுபாடும் தோன்றினவாயினும், அவ்வளர்ச்சி அல்லது மாறுபாட்டின் காரணமாக விளையும் இறுதிநிலை அவர்களுக்கு ஒரு மாறுபடாத நிலையாகவே தோன்றியது. சமூகம் மாற நாளடைவில் அவர்கள் கண்ட இறுதி எல்லைகளைக் குறித்த எண்ணங்களும் குலைந்தன. எடுத்துக் காட்டாக, ஊழ்வினையும் இலக்கிய மகனும் மக்கள் வாழ்க்கையினின்றும் தொடர்பு அற்றவையாக இன்றைய மக்கள் காண்கின்றனர்.

ஆகவே, மாறுபாட்டையும் வளர்ச்சியையும் அவற்றிற்குக் காரணமான சமூகப் புரட்சியையும் ஆதாரமாகக் கொண்டு, அவையே கொள்கையாக எழுதப்படும் கவிதை என்றும் நிலைத்திருக்கக்கூடிய கவிதை. சமூக மாறுபாடுகளின் வேகத்தையும் போக்கையும் சரிவர உணர்ந்து இருப்பாரேயானால், அக் கவிஞரின் மொழிகள் பிறிதொரு சூழ்நிலையில் உண்மை அழியா, வளம் குறையா, மிடுக்கு தளரா, இன்பம் குன்றா.

இந்நூற்றாண்டில் ஏற்பட்ட சமூக மாறுபாட்டையும் மாறுபாட்டை ஒட்டிய குறிக்கோள்களையும் ஒட்டித் தமிழில் கவிதை இயற்றியவருள் முதல்வர் சுப்பிரமணிய பாரதியார்.

அந்நாளில் அரும்பிய சுதந்திர வேட்கை, தமிழ் மொழிப் பற்று ஆகியவற்றை எதிர்நோக்கி, அவற்றின் இறுதிக ளாக நாட்டு விடுதலை, மொழி உயர்வு ஆகிய குறிக்கோள் களைக் கொண்டது அவர் கவிதை. மக்கள் உணர்ச்சியை அளவ தட்டி எழுப்பியவாதலின், அவற்றை மக்கள் ஆரப் பருகினர்; உருகப் பாடினர்; உள்ளங் கனிந்தனர். ஆனால், அவ் இலட்சியங்கள் நிறைவெய்தும் நாள் அண்மையில் கிட்டவே அக்குறிக்கோள்கள் மட்டும் போதாவாயின. 'ஸ்வராஜ்யம் யாருக்கு?' 'ஸ்வதந்திரத்தால் என்ன பயன்?' 'மொழி வளர்ச்சி என்பது யாருடைய மொழி வளர்ச்சி?' என்ற கேள்விகள் எழுந்தன. அவ் எண் ணங்களுக்குத் தத்துவம் தந்து, கொள்கை உருவாக்கி, பகுத்தறிவைத் தூண்டி, பாடல் இயற்றியதோடல்லாமல் அதற்கேற்பச்செயலையும் கையாண்டவர் **பாரதிதாசன்.**

பாரதி தாசன் பாடல்களில் சக்திக் கூத்தும், ஊழிப்பேயாட்டமும் இல்லை, அவர் பாரத நாட்டை மாதா ஆக்கவில்லை; அம் மாதாவுக்குத் தசாங்கமும் தர வில்லை. கண்ணனை இலக்கியத் தோழனாகவும், அன்னை யாகவும், தந்தையாகவும், காதலனாகவும், காதலியாகவும், ஆண்டவனாகவும், அடிமையாகவும் கொண்டாரில்லை; அடிமை நீங்கக் கடவுளிடம் முறையிடவில்லை. பாஞ் சாலி மானங் காக்க வாழ்க்கைக்கும், அறிவுக்கும் புறம் பான பொருளை அழைக்கவில்லை.

பகுத்தறிவை அடிப்படையாகக் கொண்டார். அதி னின்று எழும் ஆராய்ச்சியில் புகுந்தார். தாலாட்டுப் பாட்டில்

"எல்லாம் அவன் செயலே" என்று பிறர் பொருளை
வெல்லம் போல் அள்ளி விழுங்கும் மனிதருக்கும்,
காப்பார் கடவுள் உமைக் கட்டையிலே நீர் போகு மட்டும்
வேர்ப்பீர், உழைப்பீர், என உரைக்கும் வீணருக்கும்,
மானிடரின் தோளின் மகத்துவத்தைக் காட்ட வந்த
தேனின் பெருக்கே, என் செந்தமிழே, கண்ணுறங்கு!

என்று தொட்டிலிலேயே பகுத்தறிவைப் புகுத்துகிறார். "பகுத்தறிவுக்கு ஒவ்வாத ஏடுகளால் எள்ளையும் அசைக்க இயலாது" என்கிறார் சஞ்சீவி பர்வதத்தின் சாரலில்.

பாரதி தாசன் கண்ட உலகம் உலகப்பனுடையது. அவர் கண்ட புரட்சி,

"ஓடப்பரா யிருக்கும் உலகப்பர் உதையப்பராகி
விட்டால் ஓர் நொடிக்குள்
ஓடப்பர் உலகப்பர் எல்லாம் மாறி ஒப்பப்பர்
ஆய்விடுவார் உணரப்பா நீ!"

என்பது.

அவர் அழைப்பது தமிழ் நாட்டுச் சிங்கங்களை; அவர் தூண்டுவது பகுத்தறிவை. அறை கூவல்: "சமூகமே ஏறு நீ எம் கொள்கைக்கே!"

ஆய்ந்து பார்; தளை அறு, முன்னேறு, கூடித் தொழில் செய், புதிய உலகு செய்வோம் என்பது அவர் ஆத்திச்சூடி.

ஆம்; அவர் வாழ்க்கையை ஒட்டிய கவி; பகுத் தறிவுக் கொள்கை அவர் கவிக்கு உயிர். சமூக வளர்ச் சியோடு வளரும் கொள்கை, அழியாத கொள்கை, பகுத்தறிவுக் கொள்கை.

*For Style and Durability*

**SARATHI HANDLOOM TEXTILES**

**No. 274, Ramnad Road, Madura.**

Phone: ***No.158*** Telegrams: ***"AROMA"***

# கவிஞர் நிதிக்குழுவினர்



நா. பழனிவேலு,
சிங்கப்பூர்



கோ. சாரங்கபாணி,
சிங்கப்பூர்



ராம-சுப்பய்யா



A. P. சனர்த்தனம்



டி. எம். பார்த்தசாரதி



பு. செல்வராஜ்



ம. பொ. சிவஞான
கிராமணியார்



ப. முத்தய்யா



ம. அமிர்தலிங்கம்

(28-7-1946)

# கவியரசர் குடும்பம்



மணைவியார்
பழனியம்மா



கவியரசர்
பாரதிதாசன்



மருகர். கண்ணப்பர்



சரசுவதி



மன்னர் மன்னன்



வேனிலார்



பேரன்—புகழேந்தி



அழகியார்

(28-7-1946)

சிறு கதை

# ★ சுடரொளி ★

மு. இராசகோபாலன், பி. ஏ.

ஞானசுந்தரம் சென்னையில் பச்சையப்பன் கல்லூரியில் பி. ஏ. ஆனர்ஸ் வகுப்பு மாணவன். தமிழ் இலக்கண இலக்கியங்களைச் செவ்வனே கற்றுத் தமிழ்க்கழகங்களில் தொண்டாற்றுபவன்; சொற்பொழிவுகள் நிகழ்த்துவான். கவிஞர் பாரதிதாசன் பாடல்கள் எனில் அவனுக்கு உயிர்; படித்துப் படித்துச்சுவைப்பான். பாராட்டுவான். தமிழ்ப் பற்றின் காரணமாகத் தன்பெயரை அறிவழகன் என்றுமாற்றிக்கொண்டான்.

* * *

ஒரு நாள் மாலை நேரம், கடற்கரை மணற்பரப்பிலே அவன் "பாண்டியன் பரிசைக்" கையிலேந்திப்படித்துக் கொண்டிருந்தான். அக்காவிய அமைப்பும், கவிதை நடையும் அவன் உள்ளத்தை மற்றெல்லா இயற்கை இன்பங்களினின்றும் இழுத்துத் தம்மிடத்தில் நிலைக்கச் செய்துவிட்டன! பகலவன் மறைந்தான், படிப்பது நின்றது; வெண்மதி கிளம்பியது அறிவழகன் உள்ளத்தில் ஒளிவீச!

* * *

ஆழ்ந்த கருத்துடன் எழுந்து நடந்தான் தன் விடுதிகுச் செல்ல. நடையை நிறுத்தியது மின்னென ஒளி வீசிய ஒரு சிறு பொருள், அம்மணற்பரப்பின் மேல். உற்று நோக்கினன். குனிந்தெடுத்தான். அது பெண்கள் காதிலணியும்தோடு. 'இது யாருடையதோ! பாவம். இவ்வளவு சுடருள்ளது, வைரமாக இருக்கலாம். இதை எப்படி உடையவரிடம் சேர்ப்பது?' என்று சொல்லிக்கொண்டே மெல்ல நடந்தான்.

* * *

சிறிது தொலைவில் ஒரு பெரியவரும் ஒரு பெண்ணும் மணலைக்கிறிக்கிறித் தன்பக்கம் நெருங்குவதைக் கண்டான். ஒரு வேளை "இதைத்தான் தேடுகிறார் போலும்" என நினைத்து அவர்களை அணுகினன், "ஐயா! என்ன தேடுகிறீர்?" என்று வினவினன். "என் மகளின் ஒரு காதின் வைரத்தோடு தவறிவிட்டது. இவ்வழியாகத்தான் வந்தோம். நீ ஏதாவது பார்த்தாயா?" என்று கேட்டார் பெரியவர்.

அறிவழகன் :—தங்கள் மகளின் மற்றொரு தோட்டை நான் பார்க்கலாமா?

பெரியவர் :—எதற்காக?

அறிவழகன் : —நான் கண்டெடுத்ததோடு உங்கள் மற்றொரு தோட்டிற்கிணையாயிருப்பின் தங்களுடையது என்று தெரிந்து கொள்வேன்.

பெரியவர் :—இதோ பார், என்று அதனைக் காட்டினார். அறிவழகன் இரண்டு தோடுகளையும் ஒப்பிட்டுப்பார்த்து இணையானவை யாயிருக்கவே, தான் கண்டெடுத்த தோட்டைக்கொடுத்தான். அந்தப்பெண்ணின் உள்ளம் கனிந்தது. இருவர் கண்களும்—கண்ணொடு கண் நோக்கின. காதல் கனல் பளீரெனத் தாக்கியது! பெரியவர் இதையெல்லாம் உணரவில்லை. உணரவும் இயலாது. ஏன்? அதுதான் காதல்!

பெரியவர் :—தம்பி! சான்றாண்மை மிக்க இளைஞன், நீயார்?

அறிவழகன் .—நான் பச்சையப்பன் கல்லூரி மாணவன். ஆனர்ஸ் வகுப்பில் படிக்கிறேன். என் பெயர் அறிவழகன்.

பெரியவர் :—நடத்தைக்கேற்ற நல்ல பெயர். எங்கள் வீட்டிற்கு வந்து போப்பா, நாங்கள் உனக்குக் கைம்மாறு செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அறிவழகன் :—எனக்கு நேரமாய்விட்டது. மன்னிக்கவும், மற்றொருமுறை வருகிறேன் வணக்கம்.

பெண்:—ஐயா! தங்கள் கையிலிருப்பது என்ன புத்தகம்?

இதைக்கேட்டதும் வெட்கத்தால் அவள் முகம் சிவந்துவிட்டது.

அறிவழகன் :—இது "பாண்டியன் பரிசு" கவிஞர் பாரதிதாசன் பாடியது.

பெண் :—ஆம். கேட்டிருக்கிறேன், படித்ததில்லை. முடியுமானால்...கொடுத்தால் படித்துவிட்டுத் திருப்பிக் கொடுத்துவிடுகிறேன்.

உவகையுடன் அறிவழகன் "பாண்டியன் பரிசை"க் கொடுத்துவிட்டு அவர்கள் முகவரியைப் பெற்றுக்கொண்டான். சென்றான் தன் விடுதிக்கு. பெரியவரும் அவர் பெண்ணும் காரில் ஏறி மாம்பலம் சென்றார்கள். வழிநெடுக இன்பக்கனவுகள் கண்டாள் அந்தப் பெண்!

நினைந்து நினைந்து நெகிழ்ந்தது அறிவழகன் காதல் உள்ளம்! "ஏன் அந்தப் பாழுந்தோடு என் கண்ணில் படவேண்டும்? நானோ ஏழை. பிறர் உதவியால் படிக்கிறவன். அவள் என்னை மதிப்பாளோ? ஆனால் ஏன் என்னை அப்படிப்பார்த்தாள். அந்தப்பார்வையில் என் நெஞ்சம் பளீர் எனத் துடித்ததே; அவளுக்கும் அவ்வாறே யிருந்திருக்குமோ?" என்றெல்லாம் அவன் பிதற்றிக்கொண்டிருந்தான். இரவு தூக்கம் பிடிக்கவில்லை. திருக்குறளின் "காமத்துப்பால்" படித்தான்.

"கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்.
நோக்கமிம் மூன்று முடைத்து" என்பதைக்கற்றான்

* * *

மறுநாள் கல்லூரியில் அவன் தோழர்கள் அவன் முக மாறுதலைக்கண்டு "என்ன லவ் சிக்கா! (Love Sick) ஏதாவது கண்ணடி பட்டுவிட்டதா!" என்று கேலிசெய்தார்கள். அதுபற்றி அவன் கவலைப்படவில்லை, கேலிக்கு நாணுவதா காதல்?

* * *

இரண்டு மூன்று நாட்கள் கழிந்தன; அறிவழகனுக்கு ஒரு கடிதம் வந்தது, படித்தான்.

அன்புள்ள ஐயா!

"தாங்கள் கொடுத்த "பாண்டியன் பரிசை"ப் படித்து முடித்துவிட்டேன். அன்பு செய்து கவிஞரின் வேறு நூல்கள் தந்து, இதைப்பெற்றுப்போக வேண்டுகிறேன்."

இங்ஙனம்:
சுடரொளி.

* * *

கடிதத்தைப் படிக்கப்படிக்க அறிவழகன் இதயம் துடித்தது. அன்று மாலை குறிப்பிட்ட மாளிகைக்குச் சென்றான். ஐயம் நீங்கிற்று. அன்புடன் வரவேற்கப்பட்டான். கொண்டுவந்த "அழகின் சிரிப்பு" முதலிய நூல்களைக் கொடுத்துவிட்டுப் பாண்டியன் பரிசைத் திருப்பிப் பெற்றுக்கொண்டான். போகமனமில்லாமல் போனான் அறிவழகன். விட மனமில்லாமல் விடையளித்தாள் சுடரொளி.

* * *

சிறிதுநாள் கழிந்ததும் பெரியவர் மிகவும் நோய் வாய்ப்பட்டார். தன் மகளை அழைத்து, "எனக்கு வயதாய்விட்டது. உன் தாயாரிருந்திருந்தால் எனக்குக் கவலையிருந்திருக்காது. உன்னை விரைவில் என் நண்பர் சிங்காரவேல் முதலியார் மகன் சாமிநாதனுக்குக் கலியாணம் செய்து விடலாமென்றிருக்கிறேன்" என்றார். சுடரொளியின் மனம் "திக்"கென்று அடித்துக்கொண்டது. மெதுவாக, உள்ளம் அறிவழகன் பால் நிலைத்துவிட்டதென்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொண்டாள். பெரியவருக்குச் சினம் மூண்டது. அடக்கிக்கொண்டு சொன்னார், "அவன் யாரோ குலங்கோத்திரம் தெரியாதவன், ஆண்டிப் பயல்! நீ நல்ல அந்தஸ்தில் வாழவேண்டுமென்பது எனது விருப்பம், அவன் இங்கு வருவதை அப்போதே நான் தடுத்திருக்க வேண்டும். விட்டது விபரீதமாய்விட்டது" என்றார்.

சுடரொளி :—அப்பா! அவர் நல்ல தமிழர். குலத்தைவிட குணந்தானே பெரிது? நான் விரும்பும் ஆடவருக்கு என்னை மணஞ்செய்துகொடுப்பதில் தவறுண்டா? வாழ்பவள் நான் தானே?

பெரியவர்:—உன் எண்ணமும், முடிவும் தவறு, யோசித்துப்பார்.

சுடரொளி :—அப்பா! என் மனத்தை மாற்ற முடியாது.

பெரியவர் உள்ளத்தில் கோபம் கனன்றது!

* * *

இரண்டு நாட்கள் கழிந்தன. பெரியவர் நோய் வாய்ப்பட்டிருப்பதாகக் கடிதம் வந்தது அறிவழகனுக்கு. அவன் அப்பொழுது ஆனர்ஸ் இறுதித் தேர்தல் எழுதிவிட்டுச் சென்னையில் தமிழ்த் தொண்டாற்றிக் கொண்டிருந்தான். கடிதம் கிடைத்தது. பெரியவர் வீட்டிற்குவந்தான். பெரியவருக்கு மருந்துகள் வாங்கி வரவும், மருத்துவர்களையழைத்து வரவுமாகப் பக்கத்திலிருந்து பணிவிடைகள் செய்தான். அவன் நடத்தையைக் காணக்காணப் பெரியவர் மனம் நெகிழ்ந்தது.

சுடரொளிக்கு அவர் பார்த்துவைத்த மணமகன் சாமிநாதன், பக்கத்திலேயே வரவில்லை. அது மட்டுமல்ல "கிழவன் சாகப்போகிறான், அந்தப் பெண்ணும் சொத்துக்களும் என்னைவிட்டு எங்கே போகப் போகின்றன!" என்று தன் நண்பர்களோடு அவன் பேசிக்கொண்டது பெரியவர் செவிக்கு எட்டிற்று, அவர் மனம் நொந்தது.

* * *

பெரியவர் உடல் தேறியது. அறிவழகன் ஏழையாயிருப்பினும் உயர்ந்த பண்பாடுடையவன் என்பதை அறிந்தார். சாமிநாதனை வெறுத்தார். "உலகத்தில் பணம் பெரிதல்ல. அன்புதான் பெரிது. தொண்டுதான் பெரிது. இனி வருங்கால உலகம் ஊழியர்கள் கையிலுள்ளது" என்பதை உணர்ந்தார். அறிவழகன் வாழ்க்கைக்குச் சுடரொளி தர இசைந்தார்.

* * *

திருமணம் நிகழ்ந்தது, தமிழ் மணமாக. கவிஞர் பாரதிதாசன் அவர்களின் நூல்கள் நிறையப்பரிசுகளாக வழங்கப்பட்டன. அறிவழகன் தன் மனைவி மாமனுடன் வாழ்ந்துவந்தான். சாமிநாதன் மனக்கோட்டை பாழாயிற்று, கருவினான். என்ன பயன்? தேர்வில் அறிவழகன் முதல் வகுப்பில் தேறிவிட்டான். சுடரொளியைத் தாவிப்பிடித்து விளையாடினான், தோட்டைப்பிடித்து "இந்தத்தோடல். லவா நம்மைச் சேர்த்துவைத்தது" என்றான். அதற்குச் சுடரொளி; "இல்லை இப்பாண்டியன் பரிசுதான்! இதுவே என் உள்ளத்தில் உணர்வை ஊட்டிற்று! மன உறுதி பெற்றேன், கொண்டகாதலில் வெற்றியும் கண்டேன்," என்று சொல்லி அவன் மார்பில் சாய்ந்தாள்; வெள்ளத்திலேயொரு வெள்ளம் சேர்ந்தது! கரைபுரண்டு சென்றது இன்பக்கடல் நோக்கி!

அறிவழகனுக்கு இன்பமளித்த அந்தச்சுடரொளி, தொலைவில் நின்று அவர்களை வெறிக்கப் பார்த்துக்கொண்டிருந்த சாமிநாதன் உள்ளத்தைச் சுட்டுப் பொசுக்கிற்று!

பெரியவரை மனத்திற்குள் வைதுகொண்டான் பேதை!

# எங்கள் வாழ்த்து

ப. ஜீவானந்தம்.

"நமக்குத் தொழில் கவிதை; நாட்டுக்குழைத்தல்; இமைப் பொழுதும் சோராதிருத்தல்" என்றார் பாரதி. பாரதி கவிதா மண்டலத்தில் 'பாரதி தாசனுக்கு'த்தான் முதலிடம்.

"பாட்டுத் திறத்தாலே—வையகத்தை
பாலித்திட வேண்டும்"

பாரதி வழியில் பாரதிதாசனும் பாலிக்கிறார், பாரதி சென்ற தலைமுறையில் வாழ்ந்தார். 'பாரதி தாசன்' இன்று வாழ்கிறார். கவிதையின் அமைப்பையும் அடக்கத்தையும் (Form and Content) அளவு கோலாகக்கொண்டு, ஒரு தலைமுறையின் வளர்ச்சியையும் மாறுதலையும் 'பாரதி தாசன்' கவிதைகளில் பார்க்க வேண்டும். அமைப்பில் அருமையான மாறுதல்கள்; அதிசயிக்கத்தக்க வளர்ச்சி. பரம்பரைக்குப் பெருமை. அடக்கத்திலும் புதுமைகள் உண்டு.

இங்குச் சில சொற்கள், இது பொதுமக்கள் யுகம். பாட்டாளி மக்கள் சகாப்தம். புதுமைக் கவி, புரட்சிக்கவி, பொதுமக்கள் கவியாகவே இருந்து தீரவேண்டும். பொதுமக்கள் போராட்டங்களை, பொதுமக்கள் கனவுகளைப் பிரதிநிதிப்படுத்தி, கவிமழை பொழிந்தாக வேண்டும்.

"சோஷலிஸ்டு (இந்த) சகாப்தத்தின் தலைசிறந்த கவிஞன்" என்று ஸ்டாலினால் பாராட்டப்படுகிற **மாயக்காவ்ஸ்கி** சொல்கிறான்: "நான் இன்று நமது புதிய வாழ்வைக் கட்டும் பாட்டாளிப் பொதுமக்களின் கவியாக மாத்திரமே இருக்கமுடியும்...... வாழ்நாள் முழுவதும் நான் பாடுபட்டது, அழகிய பாடல்களை ஆக்கி, கேட்பவர் காதுகளில் செஞ்சொல் தேனைச் சொரிந்து நெஞ்சையள்ளுவதற்காக அல்ல. சிலரை, சிலமுறைகளை, தலை குப்புறக் கவிழ்ப்பதே எனது போராட்டம்......எனது 20-வருட இலக்கியப் பணியில் உண்மையாக நான் இலக்கியக்குத்துச் சண்டையே நடத்தி வந்திருக்கிறேன்.

முதலாளி சமூகத்திட்டத்தில் "கலை கடைச் சரக்காகிவிட்டது." கிறிஸ்டோ, பார்காட்வெல் "மாய்கையும் யதார்த்தமும்" (Illusion and Reality) என்ற நூலில் கூறுவதுபோல் இன்று "சமூக உணர்ச்சி சமூகச் செயலிலிருந்து, எலும்பிலிருந்து சதை பிய்க்கப்படுவதுபோல், பிய்க்கப்படுகிறது." நிலப் பிரபுத்துவ—முதலாளித்துவ—ஏகாதிபத்திய சமூகஅமைப்பில் வாழ்கிறார் பாரதிதாசன். ஏகாதிபத்யம், முதலாளித்துவம், நிலப்பிரபுத்துவம் ஒழியப் பாடவேண்டியது பாரதிதாசன் கடமை. பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஒழிப்பில், பரிபூரண அரசுரிமை கொண்டபுதிய தமிழகம் மலர அவர் பாடவேண்டும்.

சாதி மதக் கொடுமைகளைத் தூள் தூளாக்க, குருட்டுப் பழக்க வழக்கங்களைத் தகர்த்தெறிய, பகுத்தறிவை விரிவாக்க, தமிழ்ப்பற்றுப் பொங்கியெழ, பெண்ணடிமை நொறுங்க, பொதுவாக நில, பண, முதலாளிகளின் கொடுமையை உணர்த்த சுருங்கச்சொன்னால் முதலாளித்துவ சீர்திருத்த (Borngeois Reformison)மான பாடல்களைத்தந்துள்ளார் பாரதிதாசன். நன்றியும் வணக்கமும்.

பொதுமக்களின் பூரணக்குரல் பாரதிதாசனின் பாடல்களில் இன்று கேட்கவேண்டுமென்று, வர்க்க உணர்ச்சியும் அரசியல் பேதமும் கொண்ட பொது மக்களின் சார்பில் வேண்டிக் கொள்கிறேன். ஜார் வீழ்ச்சியைப்பற்றி பாரதி பாடினார். ஹிட்லர் வீழ்ச்சியை (பாசிச வீழ்ச்சியை)ப் பற்றி, சோவியத் வெற்றியைப்பற்றி, பாரதிதாசன் பாடியிருக்கவேண்டும். பிஜித்தீவு கரும்புத்தோட்டக் கஷ்டத்தைப்பற்றி பாரதி பாடினார். வங்கப் பஞ்சத்தைப்பற்றி பாரதிதாசன் பாடியிருக்க வேண்டும்.

இன்று ஐரோப்பாவில் ஜனநாயக வெற்றிகளைப்பற்றி பாரதிதாசன் பாடவேண்டும். அன்று ஏகாதிபத்தியத்தின் கொடுமைகளைப்பற்றி பாரதி பாடினார். இன்று பிரிட்டிஷ் திட்டத்தின் சூழ்ச்சிகளைப்பற்றி, தமிழ் மக்களுக்குரிய உண்மையான அரசியல் நிர்ணய சபையைப்பற்றி பாரதிதாசன பாடவேண்டும்.

இன்று நாடு முழுவதிலும் லட்சக்கணக்கான தொழிலாளி மக்கள் நடத்தும் வேலைநிறுத்தப் போராட்டங்களைப் பற்றியும், சிவகங்கை ஜமீன் குடிகள் பஞ்சத்தால் மதுரை ஜில்லாவுக்கு ஓடி, அங்கு குழந்தையை விற்கும் பஞ்சத்தின் கோரத்தைப் பற்றியும் உணவையும் துணியையும் ஒளித்துவைத்து, கொள்ளை விலைக்குவிற்று, பொதுமக்களைப் பட்டினியிலும், மானக் கேட்டிலும் தள்ளும் கள்ளமார்க்கெட் கயவர்களைப்பற்றியும் பலப்பல பாடல்கள் 'பாரதிதாசனிடம்' தமிழ்ப் பொதுமக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

மொழி, பண்பாடு அடிப்படையில் உண்மையான தேசிய இன உணர்ச்சியுடன், மற்றதேசிய இனங்களுடன் ஒன்றுபட்டு, ஏகாதிபத்தியத்தை ஒழிக்கவும், தமிழ் குடிஅரசை நாட்டவும், தமிழ்ப் பொதுமக்கள் முன்னேறிச் செல்லும் வழிநடைப் பாட்டுகள் நூற்றுக்கணக்கில் வேண்டுமென்று பாரதிதாசனிடம் கேட்கிறார்கள் பொதுமக்கள்.

இந்த யோசனைகளை, பாட்டாளி மக்களின் சார்பில் காணிக்கையாகச் செலுத்தி, அவர்கள் சார்பில் பாரதிதாசனுக்குப் பல்லாண்டு கூறுகிறேன்!

## லெஸெக்ஸ்

(மூட்டைப்பூச்சி மருந்து)

மனிதனின் இரத்தத்தை உறிஞ்சி, அவர்களை வியாதிக் குள்ளாக்கும் மூட்டைப்பூச்சியும், பஞ்சகாலங்களில் சேகரிக்கப்பட்டு இருக்கும் உணவுப் பொருள்களை அழித்து நாசம் செய்யும் எறும்புகளும், மனிதரின் முக்கிய விரோதிகளில் இரண்டாகும்.

அவைகளை வேரோடு ஒழிக்க "லெஸெக்ஸ்" பவுட்ரை உபயோகியுங்கள். இந்தியாவில் பல இடங்களிலும் அநேக ஆயிர ஜனங்கள் உபயோகப்படுத்தி, திருப்தி அடைந்தது.

*பாக்கெட் 1-க்கு 0-3-0 டப்பா 1-க்கு 0-8-0*

## பக்ஸெக்

பெண்களின் தலையில் பேன் என்னும் ஒரு வகைப் பூச்சி உண்டாகி, அவர்களை மிகவும் அவதிக்கு உள்ளாக்குவது எல்லோரும் அறிந்ததே. அவைமூளையிலுள்ள இரத்தத்தையும், சத்தையும் குடித்து அவைகளின் காரணமாக மூளைக்கொதிப்பு முதலிய வியாதிகளை உண்டாக்குகிறது. "பக்ஸெக்" என்னும் பரிமளமுள்ள எண்ணை, பேனையும் ஒழித்து, கூந்தலையும் வளர்க்கும் சக்தியுள்ளது. இன்றே ஒரு பாட்டில் வாங்கி உபயோசித்து திருப்தி அடையுங்கள்.

*அவுன்ஸ் பாட்டில் 1-க்கு 0-8-0*

**ஸோல் ஏஜெண்டுகள் : மணி & கோ., ஆர். எஸ். புரம் போஸ்டு, கொயம்புத்தூர்**

*Stockists:* Ms. *Pankaja Stores, Purasawalkam, Madras*
*Mani's Stores; New Street Madura*
*Bhatt & Sons, Big Bazar, Coimbatore*
*Jagajothi Provision Stores, Vellore*
Sri. *K. V. Sangapathy Naidu, Karur*

# மகாலட்சுமி கார்ப்பொரேஷன்

★

**மளிகை வியாபாரிகள் & கமிஷன் ஏஜண்டுகள்**

★

விவரங்களுக்கு

**மகாலட்சுமி கார்ப்பொரேஷன்**

**29 கோவிந்தப்பநாயக்கன் தெரு, ஜி. டி. சென்னை**

TELE { "Mahalux" Madras / "Grains" Coimbatore

H. O.
Coimbatore

# கவிதை

### எஸ். வேதரத்தினம். M.A.

"உயர்ந்த, உணர்ச்சி மிக்க உள்ளத்தின் சங்கீதந்தான் கவிதை."

—வால்டேர்

★

"சாத்திரங்கள் எல்லாவற்றிற்கும் கவிஞன்தான் சக்கரவர்த்தி; ஏனெனில், சாத்திரங்களை அடைவதற்கான வழியில், மிகத் தந்திரமாக அவன் எந்த மனிதனையும் அழைத்துச் சென்று விடுகிறான்! அது மட்டுமல்ல. அவன் நடத்திச் செல்லும் பாதை திராக்ஷைக் கொடிகள் நிரம்பியது. அந்தப் பழங்களைத் தின்றுகொண்டே, களைப்புத் தெரியாமல், நீங்கள் மேலும் மேலும் நடந்து செல்வீர்கள். அவனுடைய வார்த்தைகள் இனிமை ததும்பியவை. அவனுடைய கதைகளைக் கேட்பதற்குக் குழந்தைகள், விளையாடுவதைக்கூட நிறுத்திவிட்டு ஓடி வருவார்கள்; வயது வந்த கிழவர்கள் படுக்கையி விருந்து எழுந்து உட்காருவார்கள்."

—சர் பிலிப் சிட்னி

★

"கற்பனையையும், பகுத்தறிவையும் ஒன்று சேர்த்து, இன்பத்தையும், உண்மையையும் காட்டுவது கவிதை; கற்பனா சக்தியின் பலத்தால் இன்பத்தையும், வியப்பையும் ஒருங்கே விளைவிப்பது கவிதை."

—சாமுவேல் ஜான்சன்

★

"மனித இயற்கையை மலைபோல் காத்து நிற்பவன் கவிஞன். அன்பு என்னும் ஆயுதத்தைக்கொண்டு, அவன் மனித இயற்கையைக் கட்டுப்படுத்திக் காப்பாற்றுகிறான். நாடுகள்தோறும் மொழிகள் வேறு, பழக்க வழக்கங்கள் வேறு, தட்பவெப்ப நிலைமை வேறு, சட்டங்கள் வேறு. இத்தனை காலமாக எத்தனை எத்தனையோ அழிந்திருக்கின்றன. என்னென்னவோ மாறுபாடுகள் நடந்திருக்கின்றன. ஆனால், மனிதவர்க்கத்தையே எந்த நாட்டிலும் எல்லாக் காலத்திலும், கவிஞன் தன் அறிவினாலும் அன்பினாலும் ஒன்றுபடுத்தி இருக்கிறான்."

★ —வில்லியம் வேர்ட்ஸ்வர்த்

"கவிஞன் மனித உள்ளத்தைச் செயலில் செலுத்துகிறான். பற்பல ஆற்றல்கள் உள்ளவன் மனிதன்; இந்த ஆற்றல்களைக் கவிஞன் கற்பனை என்கிற அற்புதச் சக்தியினால் ஒருவித ஒற்றுமைப்படுத்தி அதன் விளைவாகச் செயலை உண்டு பண்ணுகிறான்."

★—சாமுவேல் டெய்லர் காலரிட்ஜ்

"உள்ளம் தன்னுடனும், இயற்கையுடனும் பேசும் மொழிக்குக் கவிதை என்று பெயர். கவிதையைப் புறக்கணிப்பவன் சுயமரியாதை இல்லாதவன். என்னவென்று வார்த்தைகளால் சொல்ல முடியாத ஏதோ ஒன்று நம் உள்ளத்தில் இருக்கிறது; அது நம்மை உயர்த்தி, பரிசுத்தப்படுத்தி, உற்சாகப்படுத்துகிறது."

★ —வில்லியம் ஹேஸ்லிட்

"உயர்ந்த உள்ளங்களின், உன்னத நேரங்களின் சரித்திரங்கள்தான் கவிதை. அது வாழ்க்கைத் தத்துவத்தின் அழியாத உண்மைகளைக் கூறுகிறது."

★ —ஷெல்லி

"கவிதை, எது உண்மை என்பதைக் காட்டுவதோடல்லாமல், உண்மையை உண்மையென்று மெய்ப்பிக்கிறது."

★ —டி. எஸ். எலியட்

"நான் ஒரு புத்தகத்தைப் படிக்கும்பொழுது, என் உடம்பு சிலிர்த்து, என் தலை கிறு கிறுத்தால், அது கவிதை என்று உடனே உணர்கிறேன். எது கவிதை என்று கண்டு பிடிப்பதற்கு இந்த ஒரு வழிதான் எனக்குத் தெரியும். வேறு ஏதாவது வழி இருக்கிறதா?"

★ —எமிலி டிக்கின்ஸன்

மேற்காட்டிய கருத்துரைகளினின்று, பல உண்மைகள் தெளிவாகின்றன. உண்மைக் கவிதை என்னவென்று யாராலும் சுலபமாகச் சொல்ல முடியாது. சர்க்கரை தித்திக்கிறதென்று சொன்னால்மட்டும் அதன் சுவை தெரிந்து விடுமா? தின்று பார்த்தால்தான் தெரியும். அதுபோல், கவிதையும் அனுபவித்து ஆனந்திக்க வேண்டிய விஷயம். வெறும் கற்பனை மாத்திரம் கவிதை யல்ல; வெறும் அறிவுச் சிந்தனை மாத்திரம் கவிதை

யல்ல ; வெறும் உணர்ச்சிப் பிரவாகம் மாத்திரம் கவிதையல்ல. உண்மைக் கவிஞன் தன் கூர்மையான அறிவினால் எந்த விஷயத்தையும் சட்டென்று உணர்ந்துகொள்ளுகிறான் ; உடனே, அவனுடைய அபரிமிதமான கற்பனா சக்தி சிந்தனையைத் தூண்டுகிறது ; அவனுடைய உணர்ச்சி மிகுந்த உள்ளம் சிந்தனையின் கற்பனைக்கு உண்மையைத் தெரிவிக்க உதவுகிறது ; இவைகளெல்லாம் சேர்ந்ததும், கவிதைப் பிரவாகம் காட்டாறு போல் மடமடவென்று கரை புரண்டு ஓடுகிறது. இதுதான் உண்மையான கவிதை ; இந்த இயல்புகளைக் கொண்டதுதான் பாரதிதாசன் கவிதையும்.

உண்மைக் கவிதை எதுவென்று கவிதை இயற்றப்பட்ட பின் பல ஆண்டுகள் கழித்துத்தான் நிர்ணயிக்க முடியுமென்று சிலர் கூறுவார்கள். இக்கூற்றை முழுதும் ஒப்புக்கொள்ள முடியாது ; ஆனால் இதில் ஓர் உண்மையும் கலந்திருக்கிறது. அதாவது, பற்பல ஆண்டுகள் சென்ற பின்னரும் உண்மைக் கவிதை சாகாது உயிர்த்திருக்கும். இதற்குக் கால வரம்பும், நாட்டு எல்லையும் கிடையாது. எந்தக் காலத்திலும், எந்த நாட்டிலும் அறிந்து கொண்டாடப்படும். ஆனால், இதைக் கொண்டு எது உண்மைக் கவிதை, எது போலிக் கவிதை என்று நெடுங்காலம் கழித்துத்தான் தெரியவரும் என்று கூறுவது பிசகு. என்றும் உயிர்த்திருக்கும் கவிதையைப் படித்தவுடன் சட்டென்று கூறிவிடலாம். அது திடீரென்று உள்ளத்தில் பாயும் ; அறிவைத் திருத்தும் ; உடம்பில்கூட என்றும் கண்டறியாத உணர்ச்சிகளை எழுப்பும்.

## சலகண்டபுரம் பகுத்தறிவு நடிகர் கழகத்தாரால்

★ தலைவர் பெரியார்
★ தளபதி அண்ணாத்துரை
★ கவியரசர் பாரதிதாசன்

ஆகியோர் முன்னிலையில் நடத்தப்பட்டு, மூவரின் பாராட்டையும் பெற்ற முதன்மையான நாடகம்; பழங்கால இனப் போரைக்குறித்த பகுத்தறிவுச்சித்திரம்; சுவையுள்ள பேச்சும் பாட்டும் நிறைந்த கருத்தோவியம்.

# ★ வீரவாலி ★

(ஆக்கியோன் : ப. கண்ணன்)

அழகிய புத்தகமாக அச்சாகிக் கொண்டிருக்கிறது
விரைவில் கிடைக்கும்.

விவரங்களுக்கு :—

## குயில் நிலையம்,

581, பைகிராப்ட்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி,
சென்னை.

# இன்பக்கவி

(ரா. ஜெயலட்சுமி)

தமிழ், தமிழ் நாடு, தமிழர் மூன்றையும் புரட்சிக் கவி பாரதி தாஸன் அவர்களின் கவிதைகளைப் படித்த பிறகே உணர்ந்தேன். மனக்கவலையை மாற்றற்கு மாண்புமிக்க கவிகளே மருந்து. நம் கவிஞரின் கவிகளைப் படிக்க உடல் களைப்பும் உள்ளச் சோர்வும் பறந்துபோம். இன வெழுச்சி தோன்றும்.

நெடு நாட்களாகக் கவிஞரின் கவிகளைப் படித்து அவரை நேரில் பார்க்க அவாவிருந்தது. ஒரு முறை சேலம் திருவள்ளுவர் கழகத்தில் கவிஞர் பேசக்கேட்டேன். அதுதான் முதல் முறை அவரை நான் பார்த்தது.

'கவிதைத் திரட்டு' 'இசையமுது' இவைகளை இன்னிசையோடு பாடினால் மிக இனிமையாயிருக்கும் என்று நினைத்தேன். நினைத்த ஓராண்டுக்குள் சேலத்தில் 'இன்ப இரவு' என்ற காட்சியைப் பார்க்க எனக்கு வாய்ப்புக் கிடைத்தது. இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழ்க் காட்சியளித்த 'இன்ப இரவை' நான் மறவேன். எனினும் ஒரு வருத்தம் என்ன வெனில் இன்ப இரவு சேலத்தோடு சிதைந்து போனதே. கவிஞர் என் கணவருக்கு எழுதின கடிதத்தில், "இன்ப இரவு தமிழர் இயக்கக் கொள்கை யுடையது; தமிழரின் எதிரிக்கு எதிர்ப்பானது. படித்தேம் என்பாரும் பணமுடையேம் என்பாரும் மக்கள் பால் செல்வாக்குடையேம் என்பாரும் நல்லதொன்றைக் கருவிற் சிதைக்க முயன்றதன் பயனை இப்போது காண்கிறார் சிறிது, பிற்போது காண்பார் பெரிதும்" என்றிருந்ததை நினைக்க நினைக்க வருத்தமுண்டாகிறது.

எக்காலத்தும் எங்கேயும் எவராலும் செய்யாத தொன்றைச் செய்து காட்டினார் கவிஞர் பாரதி தாஸன். மீண்டும் 'இன்ப இரவு'க் காட்சியைத் தமிழர்கள் எந்நாள் காண்பரோ?

கவிஞரின் சொற்பொழிவைத் திருச்சி சுயமரியாதை மாநாட்டில் கேட்டேன். பெண்கள் வீட்டில் தாங்கள் நடந்துகொள்ள வேண்டிய முறைகளைப் பற்றியும் தமிழர் உயர்வைப் பற்றியும் அவர் சொல்லியது என் போன்ற பாமரருக்கும் நன்கு விளங்கியது.

கவிஞரின் கவிதைத் திறனை விளக்கிக்காட்ட எனக்குப் போதிய ஆற்றலும் சொல் வன்மையும் கிடையாது. அவருடைய கவிதைகளைப் புகழுவதோடு நின்றுவிடாமல் உணர்ச்சியும் இனப்பற்றும் அவைகளின் மூலம் தமிழ் நாடெங்கும் பரப்பவேண்டும்.

எங்கள் மாதர் சங்கத்தில் கவிஞருடைய 'இசையமுது' இன்னிசையோடு கேட்கும். மாலையில் சங்கத்திற்குக் கையில் கவிஞரின் நூல்களுடன் செல்வோம். கவிஞரின் கவிதைகளைக் கேட்டிராத மற்றுமுள்ளோர்கேட்டதும் மனப்பாடம் செய்துகொள்வார்கள். 'வாழ்வினில் செம்மையைச் செய்பவள் நீயே' 'உவகை' 'உயர்வென்று கொட்டுக முரசே' 'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்' இவைகளை முக்கியமாகப் பாடுவோம். சங்கத்தில் தமிழ்ப் புத்தாண்டின் கொண்டாட்டம் பாரதி தாஸனின் பாடல்களால் சிறக்கும். கவிஞர் பாரதி தாஸர் நீடூழி வாழ்க!

## நீங்களே......

"மக்களே! உங்களைத் தாழ்மைப் படுத்தும் தனவந்தருக்கு நீங்கள் உழுது பயிரிடுவதேன்? உங்களை உதாசீனப்படுத்துகிறவர்களுக்கு உயர்ந்த உடைகளைக் கவலைப்பட்டு நெய்துகொடுப்பதேன்? உங்கள் வியர்வையை வடித்து உங்கள் குருதியைக் குடித்து உங்களைத் துன்புறுத்தும் அந்த நன்றியற்ற தேனீக்களுக்குப் பிறப்பு முதல் இறப்புவரை உணவும், உடையும் தந்து காப்பது ஏன்? உங்களுக்கு நல் உணவு, உடை, ஓய்வு, ஒதுங்க இடம், சுகம், சமாதானம் உண்டா? நீங்கள் விதைக்கிறீர்கள் அயலான் அறுக்கிறான். நீங்கள் நெய்கிறீர்கள், அயலான் அணிகிறான். நீங்கள் ஆக்குகிறீர்கள், அயலான் அனுபவிக்கிறான். நீங்கள் ஆயுதம் செய்கிறீர்கள், அயலான் அதை உங்கள் மீதே உபயோகிக்கிறான். விதையுங்கள், ஆக்குங்கள், ஆயுதம் செய்யுங்கள், ஆனால் அவற்றை நீங்களே உபயோகியுங்கள்.

—ஷெல்லி.

# பாரதிக்குப் பின்

முருகு. சுப்பிரமணியன்

தமிழ் இலக்கியத்தில் புது மலர்ச்சியைப் பாரதியார் தொடங்கிவைத்தார்; அப்பணியை முழு அளவிலே நிறைவேற்றி வருகிறார் புரட்சிக் கவிஞர் பாரதி தாசன்.

செம்மையையே குறிக்கோளாகக் கொண்டு வளர்ந்த தமிழ் இலக்கியம் இடைக்காலத்தில் பொய்மை புனைந்துரையிற் பட்டுத் தவித்தது. அதற்குப்பின் சில்லறைப் பாடல்களே தமிழுக்குக் கிடைத்தன. நிலையான இலக்கியங் காணுவார் இல்லாமற் போயினர்.

இச் சமயத்தில் பாரதியார் ஒரு கவிதா பரம்பரைக்கு வழி வகுத்தார்; பரம்பரையான போக்கையும் சில மாறுபாடுகளுக்குள்ளாக்கினார்; நாட்டு வேட்கை, மொழிப் பற்று இவற்றை மக்களுக்கு ஊட்டவும் கவிதை கருவியாகலாமென்று காட்டினார்; 'புரியாமலிருப்பதே பாட்டு' என்ற நிலைக்கு முற்றுப்புள்ளி வைத்து எளிய நடைக்கு ஏற்றம் தந்தார்; யாப்பு முறையிலே புதுப் பாவினங்களைக் கையாண்டார். இவைகளே பாரதியார் செய்த புரட்சிகள்.

எந்தக் கொள்கைக்கும் தொடங்குபவர்கள் எவ்வளவு அவசியமோ, அதுபோலக் கொண்டு செலுத்துபவர்களும் அவசியமாகும். அவ்வகையில் பாரதி தாசன் பாரதியின் கொள்கையைக் 'கொண்டு செலுத்துபவர்' என்பதை ஐயமறக் காட்டி வருகிறார்; மறுமைக்கு வழி காட்டுவதே பாட்டின் நோக்கம் என்றிருந்த எண்ணத்தைச் சிதற அடித்து வருகிறார்.

"பாடல் பெறும் பொருள்களிலே கடவுள் ஒன்று" என்பது அவர் கருத்து. ஆகவே அவர் கவிதைகளிலே வண்டிக்காரன் மனைவி பேசுவாள்; கிராமத்துக் குப்பன் பேசுவான்; காணுகின்ற பொருளைப் பற்றிச் சிந்தனை கொடுப்பதாக அமைந்திருக்கும் அவர் கவிதை!

பாரதியார் தம் கவிதைபால் தேசிய வெறியூட்டினார்; பாரதி தாசன் சமுதாயப் புரட்சியை உருவாக்கி வருகிறார். இருவரும் மக்களின் நலத்துக்கே, மக்களின் உயர்வுக்கே தம் கவிதைகளைப் பயன்படுத்தியுள்ளதைக் காண்கின்றோம்.

மற்றும் பாரதியார் மேற்கொண்ட எளிய நடை, புதுப்பாவினங்கள் இவற்றையும் பாரதிதாசன் கையாண்டு வருகிறார்.

பாரதி தாசனுக்கென இலங்கும் சிறப்பியல்புகள் சிலவற்றைப் பார்ப்போம். ஒன்று - அவர் கையாண்டு வருகிற தமிழ் நடை; இனிமை, எளிமை, அதோடு தெளிவும் சேர்ந்து உயிருள்ள நடையாய்ப் படிக்கப் படிக்கச் சுவை பயக்கிறது; அவருடைய வாக்கில் சொற்கள் கொஞ்சுகின்றன; கருதிய பொருளை விளக்குவதில் அவற்றிற்கு இணை அவைகளே யென்று சொல்லலாம்.

இரண்டாவது—பிழையற்ற யாப்பு முறை. இலக்கணப் பிழை, சொற் பிழை, பொருட் பிழை என்ற பேச்சே கூடாது என்பது அவர் வாதம். கவிஞர்கள் இலக்கண இலக்கியங்களை நன்கு படித்திருக்கவேண்டுமென்பது அவர் அடிக்கடி வற்புறுத்தி வருகின்ற கருத்து.

மூன்றுவது-அவருடைய இயற்கை உணர்வு. பெரும்பாலான கவிஞர்கள் இயற்கையைப் பற்றிச் சொல்லும் போது தாம் பழைய நூல்களிலே படித்தவற்றைத்தான் பாடுவார்கள். நேரில் இயற்கையைத் தெரிந்து, நுணுக்கமாக உணர்ந்து கவி புனைவார் மிக அருமை. நம் புரட்சிக் கவிஞர் இயற்கையைப்பற்றிப் பாடியன மிகுதி; அத்தனையும் அவர் சொந்தமாகத் தெரிந்து சொல்கின்ற கருத்துக்களின் கோவை; பழைய பாடம் ஒப்புவிக்கும் வழக்கம் அவரிடம் இல்லை.

இன்னும் சொல்லிச் செல்லலாம், நீண்டு போகுமென்று நிறுத்துகிறேன். பாரதி தாசனுக்கு ஒரு குறிக்கோள் உண்டு; அதை வலியுறுத்தும் முறையிலே பாடல்களை இயற்றுகிறார்; அப்பாடல்கள் இளைஞர்களின் உள்ளத்தைத் தொட்டுவிட்டன. அதன் அறிகுறியே புரட்சிக் கவிஞருக்குப் பாராட்டு, நிதி, மலர் என்பேன். அவரின் கவிதைகள் காலத்தை வென்று நின்று நிலவும் என்பதையும் நாம் காண்போம்.

பாரதிக்குப் பின்வந்தான் பாடுந்தமிழ் மகளின்
சாரதியா(ய்) இன்றிலங்கும் தன்மையினன்—சீரதையே
ஒப்பித் தமிழர் உயர்விற்கே தீங்கவிதை
செப்புவான் வாழ்க சிறந்து!

★

## தமிழருக்கு வழிகாட்டி !

'தூக்கத்திலிருந்த மக்களைத் தட்டி எழுப்பி, நிலைமையை உணரும்படி செய்திருக்கிறார் பாரதி தாசன்! பாரதியும், பாரதிதாசனும் தமிழருக்கு வழிகாட்டிகள். தமிழ் அறிஞர்களையும், கவிஞர்களையும் போற்ற வேண்டியது தமிழர் கடமை'.

—பேராசிரியர் மு. வரதராசனார்.



# நல்ல கவி யார்?

(சுத்தானந்த பாரதியார்)

ஆசை மலர்களினால்—உலகை
அழகு செய்திடுவான்
ஓசைக் கலையாலே—நாட்டை
ஒற்றுமை யாக்கிடுவான்.
இயற்கை யுள்ளத்திலே—இலகும்
இனிய உண்மைகளால்
செயற்கை வாழ்வினிலே—இன்பந்
திகழ வைத்திடுவான்.
முதிய தீமையெல்லாம்—கனல்
மூட்டிச் சுட்டெரிப்பான்
புதிய நன்மைகளை—வசந்தப்
பொலிவுறப் படைப்பான்.
உரிய நாட்டினிலே—விடுதலை
ஒளிரப் பாடிடுவான்
அரிய சொற்களினால்—பல
அற்புதஞ் செய்திடுவான்.
அந்தக் கவிப்புலவன்—உண்மை
அன்புக்கவிப் புலவன்
எந்த நாட்டினிலும்—இசை
ஏறிச் சிறந்திடுவான்.

# ★ மக்கள் நலத்திற்கு ★

(மூவலூர் - ஆ. இராமாமிர்தத்தம்மாள்)

வீரத் தமிழன், வீரத் தாய்மார்கள் வாழ்ந்த தமிழ் நாட்டிற்குள் பொய்யனின் போதனையை நம்பிப் புகழ் இகழ்ந்து—பொருள் இழந்து, மதிகெட்டு எதிலும் கோழையாய்—வைப்பாட்டி மகன், சூத்திரனென்றெல்லாம் வாய் கூசாது சொல்லப்படும் நிலைமைக்கு வந்து இருந்தான்—இருக்கின்றான் என்பதை யார்தான் மறுக்க முடியும்?

தமிழனின் நிலையைச் சகியாது தாயுமானவர், சிவப்பிரகாசர், திருமூலர், மாணிக்க வாசகர், வள்ளுவர், இராமலிங்கம் போன்ற முற்கால அறிஞர்கள் சிலர் மதத்தின் போர்வையிலேயே மேற்புண்ணை ஆற்ற முயன்றனரேயன்றி உட் புண்ணை ஆற்ற முயன்றனரா? இல்லை! இல்லை !! "சத்சூத்திரன்" அதாவது சூத்திரனிற் சிறந்தவன் என்று இழிவு சிறப்பாய்க் கூறிக்கொள்ளும் நிலைமையில்தான் கைலாய பரம்பரை முதல் கருணாநந்த வாரி வரையில் இருக்கின்றனர். இத்தகைய கொடிய கோட்டையைக் கவிஞர் பாரதி தாசன் தம் கவிதையாகிய கோடரியால் தகர்த்து எறிகின்றார்.

"உயர்ந்த பல எண்ணங்களுக்கெல்லாம் உறைவிடமாய் விளங்குவது புலவர் தரு சுவடிச்சாலை" என்னும் கருத்துடன், 'அழகியவாம் உரை நடையில் அமைந்த நூற்களைச் சுமை சுமையாய்ச் சேகரித்துப் பல்கலை சேர்—துறை துறையாய்ப் பிரித்தடுக்கி வைத்தல் வேண்டும்' என்று கூறி, வியாதிக்குத் தக்க மருந்தளிக்காது மேற்புண்ணை ஆற்றும் மருந்தே போல் விளங்கும் நூலை விடுத்து, உள் நுழையும் அழகியவாம் உரைநடையில் நூலை எழுதும்படி புரட்சிக் கவிஞர் தூண்டுவது உழைப்பின் உயர்வை விளக்குகின்றன. "மூலையிலோர் சிறு நூலும் புது நூலாயின் முடிதனிற் சுமந்து வந்து தருதல்வேண்டும்" என்று கூறி மக்கள் நலத்திற்குப் புது நூல் எதுவாயினும் தேவை என்பதை, பாரதி தாசனார் வற்புறுத்துகிறார்.

"மாசற்ற தொண்டிழைப்பீர் சமுதாயச் சீர் மறுமலர்ச்சி கண்டதென முழக்கம் செய்வீர்" என்று கூறுகின்றார் நம் கவியரசர்.

நெடுங்குன்றில் பிலஞ்சேரப் பாம்புக் கூட்டம்
போராடும் பாழ் நிலத்தை அந்நாளில்
புதுக்கியவர் யார்? அழகு நகருண்டாக்கி
சிற்றூரும் வரப்பெடுத்த வயலும் ஆறு
தேக்கியநல் வாய்க்காலும் வகைப்படுத்தி
நெற்சேர உழுதுழுது பயன் விளைக்கும்
நிறையுழைப்புத் தோள்களெல்லாம் எவரின் தோள்கள்?
கற்பிளந்து மலைபிளந்து கனிகள் வெட்டிக்
கருவியெலாம் செய்துதந்த கைதான் யார்கை?
பொற்றுகளைக் கடல்முத்தை மணிக்குலத்தை
போய் எடுக்க அடக்கிய மூச்சு எவரின் மூச்சு?

என்று கேட்டுத் தொழிலாளர் உலகத்தைக் கவிஞர் தட்டி எழுப்புகின்றார். இப்பாடலைப் பயின்ற பின்னும் தமிழன் வீறுகொண்டு எழாதிருப்பானோ! பெண்களின் வீரத்தைப் புகலுமிடத்து,

'கோழியும் தன்குஞ்சுதனைக் கொல்லவரும் வான்பருந்தைச்
சூழ்ந்தெதிர்க்க அஞ்சாத தொல்புவியில் ஆடவரைப்
பெற்றெடுத்த தாய்க்குலத்தைப் பெண்குலத்தைத்
தவ்வட்டருக்குப்
புற்றெடுத்த நச்சரவைப் புல்லெனவே எண்ணி
விட்டான்"

என்று கண்டிக்கின்றார் பெண் குலத்தை இழிவு படுத்தும் ஆண்களை.

"அன்னையும், ஆசானும், ஆருயிரைக் காப்பானும் என்னும்படி அமைந்தீர். இப்படியே பெண்ணுலகம் ஆகும்நாள் எந்நாளோ? அந்நாளே துன்பமெலாம் போகும் நாள்! இன்பப் புதிய நாள்! என்றுரைப்பேன். அன்னை எனும் தத்துவத்தை அம்புவிக்குக் காட்ட வந்த மின்னே! விளக்கே! விரிநிலவே வாழ்த்துகின்றேன்" என்கிறார் கவிஞர். புது உலகத் தமிழனைத் தோற்றுவித்த புரட்சிக் கவிஞரே! மின்னே! விளக்கே! விரிநிலவே, நீடூழி வாழ்க!

## நகைக்கிறோம்!

மரணத்தைக் காட்டி மிரட்டுகிறீர்களா? மரணமா? நாங்கள் ஒரு பொழுதும் ஜீவித்ததில்லையே? விலங்கு-சிறை என்று அச்சுறுத்துகிறீர்களா? எங்கள் ஒவ்வொரு நரம்பும் விலங்குதான்; எங்கள் உடல் முழுவதும் துன்பம் நிறைந்த சிறைதான். எங்களைச் சுட்டுக் கொல்வீர்களா? கொல்வதற்கு, எங்கள் உடலில் உயிர் ஏது? உங்கள் செயல் கண்டு நாங்கள் நகைக்கிறோம். எங்கள் நகைப்பை இறந்தோர் நகைப்பு என்று எண்ணிவிட வேண்டாம். அது, இறுமாப்பு கொண்ட இராச்சியங்களை இடித்துத் தூள் தூளாக்கிவிடும்.

—ஹரீந்திரநாத் சட்டோபாத்யாயா.

# நாமிருக்கும் நாடு நமதடா!

(ராம. சுப்பையா)

கவிஞர் பாரதி தாசன், தமிழ் நாட்டிலே தமிழர்கள் ஆரியர்களின் வஞ்சக வலையிலே வீழ்ந்து கிடப்பதைக் கண்டார்; ஆடு மாடோட்டி வந்த ஆரிய இனம் இன்பத் திராவிடத்தில் ஏறிச் சவாரி செய்வதைக் கண்டார்; தரணியாண்ட இனம் பார்ப்பனர்க்குப் பரணி பாடுவதைக் கண்டார்; கனக விசயன் தலையிலே கல்லை ஏற்றிய இனம் புல்லுக்குப் பணிவதைக் கண்டார்; சங்கத் தமிழ் கண்ட இனம் அறிவில்லாது மங்கிக் கிடப்பதைக் கண்டார்; உலகுக்கு நாகரிகத்தைக் காட்டிய இனம் இன்று வைதிகத்திற்கு வணக்கமிடக் கண்டார்; பொன்னும் மணியும் யவனருக்குப் போதுமென்னுமளவு கொடுத்த இனம் இன்று வீதிகளிலே உணவிற்கு நாயுடன் போரிடுவதைக் கண்டார்; பட்டுச் சரிகையை நெய்த இனம் இன்று பருத்தி நூலுக்குக் கெட்டலைவதைக் கண்டார்; ஆரியத்தின் ஆர்ப்பரிப்பிலே அடங்கி அடிமைப்பட்டு மக்கள் மண்ணையும் கல்லையும் மகாத்மியமாக வணங்குவதைக் கண்டார்; ஒட்டிய வயிறோடு உள்ள இனம். இன்று சொறி பிடித்த பார்ப்பனனைத் தேர்மீது வைத்துத் தெருத் தெருவாகக் கட்டி இழுப்பதைக் கண்டார். தமிழனின் இழி நிலைமையைக் கண்டு புரோகிதத்தைப் பொசுக்க எண்ணி வீறுகொண்டு எழுந்தார் நமது கவியரசர்.

தன்மானம் மிளிரத் தமிழ் மக்களின் உள்ளத்திலே புரட்சிப் பொடி தூவினர் புதுமைக் கவிஞர்; வரண்ட உள்ளத்திலே வன்மையைப் புகுத்தினர்.

"தென்னம்பாளை பிளந்தன்ன சிரிப்பு" "மல்லி பிளந்தன்ன கண்கள்" "கண்ணாடி போன்ற ஊற்றுக்கள்" என்ற பல புதிய உவமைகளைக் கையாண்டார். "பாண்டியன் பரிசு" "எதிர்பாராத முத்தம்", "இசையமுது" "தமிழியக்கம்" "எது இசை" என்ற கவிதைகள் மூலம் புத்துணர்ச்சியைக் கிளப்பினர் நாட்டில்.

"அழகின் சிரிப்பு," அரசியல் ஞானி அண்ணாத்துரை அவர்கள் போன்ற அறிஞர்களையும் கவர்ந்து கொண்டதோடல்லாது கவிஞரை ஒப்பற்றதோர் உலகக் கவிஞராக்கி வைத்து விட்டது. நமது உயிர்க் கவிஞர் மற்றக் கவிஞர்களைப் போல் புகழ்ச்சிக் கவிஞரல்லர். நாட்டிலே நாளை யிருக்க வேண்டியதை இன்று ஏட்டிலே காட்டுகிறார்.

"தோன்றில் புகழொடு தோன்றுக, அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று" என்ற நீதியை மெய்ப்பித்தவர் நமது திராவிட நாட்டுத் தனிப்பெரும் கவிஞர் பாரதி தாசன் அவர்களே.

ஆரிய முள்ளுக் காடுகளை, விரைவிலே பாரதி தாசன் அவர்களின் கவிதைகளாகிய அனல் அழித்தே தீரும் என்பது உறுதி.

பூங்காவிலே வண்டுகள் மலரின் மணத்தை நாடிச் செல்வதே போல் நம் திராவிடத்திலே பாரதி தாசன் கவிதை மலர்களின் மணத்தைத் திராவிட இனம் நுகரத் தொடங்கி விட்டது

தமிழ்க் காவலராகிய புரட்சிக் கவிஞர் பாரதி தாசன் அவர்கட்குக் காணிக்கை செலுத்த வேண்டுவது நம் கடமையே! நாமிருக்கும் நாடு "நமதடா" என்று கூறித் தமிழ் மக்களைத் திராவிட நாட்டுக் கிளர்ச்சிக்கு ஊக்குவித்த கவிஞர் பாரதி தாசன் அவர்கள் வாழ்க!

## தமிழ்மொழி இறக்கவில்லை

தமிழ்க் கவிதையை ஆராய்ச்சி செய்து பண்டித முறைப்படி விமரிசனம் எழுதும் ஆற்றல் எனக்கில்லை. ஆனல் தமிழன் என்னும் முறையில், ருசிக்கிறதாவென்று சொல்ல எனக்கு உரிமையுண்டு.

பாரதிதாசன் பாடல்களைப் படித்திருக்கிறேன். அவை ருசிக்கின்றன. திருப்பித்திருப்பிப் படித்திருக்கிறேன். தமிழ் மக்கள் அனைவரும் அவர் பாட்டுகளைப் படித்து ருசியை அனுபவிக்க வேண்டுமென்பது எனது ஆவல். பாரதிதாசனைப் போன்று ஒரிருவர் இருப்பதாலேயே தமிழ்மொழி இறக்கவில்லை யென்றும், அதன் பழம் பெருமை தற்சமயம் குன்றியிருந்தாலும் இனி வளர்ச்சி பெற்று மற்ற மொழிகளைப்போல் மேன்மையுறுமென்றும் நம்புகிறேன்.

—எஸ். இராமநாதன், M.A., B.L.,

தமிழ்ப்பட உலகில் ஒரு மகத்தான சிருஷ்டி!

# மஹாலிங்கம் மாலதி

நடிக்கும்



ஸ்டூடியோ
சென்ட்ரல்
பாட்டு
சிவன்

# உஷா

சந்தானலக்ஷ்மி, மஹாதேவன், புளிமூட்டைராமசாமி, ஆழ்வார்குப்புசாமி

தயாரிப்பவர்கள்: ஸ்ரீ கார்த்திகேயா பிக்சர்ஸ் கோயமுத்தூர்

BHARAT STUDIO

NEENA Publicities

# இதோ ஒரு போர் வீரன்!

காஞ்சி. மணிமொழியார்

அகன்ற நெற்றி, அடர்ந்த மீசை, செம்மாந்த நோக்கு, சிங்க ஏறு போன்ற தோற்றம், கம்பீரமான உருவம், கழுத்தில் சுருக்கங்கொண்ட ஒரு நீண்ட சட்டை - இத்தனையும் படைத்தவர்தான் பாரதிதாசன்.

இன்றையதினம் தமிழன் அகராதியில் பாரதிதாசன் என்றால் புரட்சி என்று பொருள். புரட்சி என்றால் பாரதிதாசன் என்று பொருள். பாரதிதாசன் வேறு, புரட்சி வேறு என்று புரட்சியில்லை நாட்டமுடைய எந்தத் தமிழனும் இன்று கருதுவதில்லை. எப்படித்தான் கருத முடியும்? பாரதிதாசனை-பாரதிதாசனின் பகுத்தறிவுக் கீதங்களை-தமிழ்த் தேனில் புரட்சி மொழிகளைத் தோய்த்தெடுத்து அள்ளி வீசுகின்ற அந்த அஞ்சாத நெஞ்சத்தை-அறிந்தவர்கள் அத்தனை பேரும் ஒப்புக்கொண்டே தீர வேண்டும் புரட்சியின் வேறு பெயர் பாரதிதாசன் என்பதை.

புரட்சிக்கு வால்டேர் என்று பொருள்; ஷெல்லி என்று பொருள்; வால்ட் விட்மன் என்று பொருள்; காரல் மார்க்ஸ் என்று பொருள்; பாரதிதாசன் என்றும் பொருள்.

தமிழருக்குப் பாரதிதாசன் பாடல் தென்றல் அல்ல; போர்வாள். தேன் அல்ல-புரட்சி முரசு. சிரித்து விளையாடும் சிற்றாறு அல்ல; சுழன்று சுழன்று அடிக்கும் சண்ட மாருதம். ஒரே வாக்கியத்தில் சொல்ல வேண்டுமானால் இயற்கை இன்பத்தை மட்டும் பாடி அத்துடன் திருப்தியடைந்து விடுகின்ற சோம்பேறிக் கவி அல்ல பாரதிதாசன்-அவர் ஒரு புரட்சிக் கவி. புரட்சியை வரவேற்கும் கவி மட்டுமல்ல; புரட்சியே உருவான கவி.

ஆம்! பாரதிதாசன் புரட்சியே உருவான கவி. அதில் சிறிதும் ஐயமில்லை. அவருடைய எழுத்தில், பேச்சில், சொல்லில், சொற்றொடரில், எண்ணத்தில், அதன் வெளிப்பாட்டில், கொள்கையில், கோட்பாட்டில், அத்தனையிலும் புரட்சி வாடை வீசுகிறது. கலைத்துறையாகட்டும், மத இயலாகட்டும், சமுதாய வாழ்வாகட்டும், பொருளாதார அமைப்பாகட்டும், ஒவ்வொரு துறையிலும் அவர் கொண்டுள்ள கருத்து, அடே அப்பா, அதி தீவிரப் புரட்சிவாதிகளையும் கலங்க வைக்கும் அவ்வளவு புரட்சிகரமானவை.

கலையா - இனக் கொலையில் முடிவதாயின் கலையைக் கொலைசெய் என்கிறார் பாரதிதாசன். மதமா— அது மக்கள்தம் முன்னேற்றத்தைத் தின்னவந்த காட்டுத் தீ என்கிறார் அவர். சாதி பேதமா-சுட்டுப் பொசுக்கு அதனை என்பது அவர் முழக்கம். தமிழிலே சமயக் கலப்பு ஆகுமோ என்றால் அது பாலிலே நஞ்சைக் கலப்பதல்லவோ என்று கேட்டுவிட்டு, தமிழ் ஒளியை மதங்களிலே சாய்க்காமை வேண்டும் என்று தீர்ப்பளிக்கிறார் பாரதிதாசன். வேத புராண இதிகாச உலகம், சூது நிறைந்த துட்ட உலகு என்பது அவர் கருத்து.

தமிழர் சமுதாயம் தலைநிமிர்ந்து வாழ வேண்டுமானால்-பிற நாட்டார் முன்னிலையில் தமிழ் நாட்டார் செம்மாந்து செல்லும் நிலை ஏற்பட வேண்டுமானால்-மண்ணன்று நானுமோர் மனிதன் என்னும் தன்மான உணர்ச்சி தமிழர் உள்ளந்தோறும் குதித்தெழ வேண்டுமானால்-தமிழன் ஆட்டும் சுட்டுவிரல் கண்டு ஆடிற்று வையம் என்று கேட்டு நாம் இன்ப ஊற்றுக் கேணியிற் குளிக்க வேண்டுமானால் கட்டாயம் பாரதிதாசன் பாடல் தமிழர் நாடு முழுதும், பட்டிதொட்டி முழுதும், சிற்றூர் பேரூர் முழுதும் முழங்க வேண்டும், முழங்கித்தானாக வேண்டும். உள்ளபடியே வீழ்ச்சியுற்ற தமிழகத்தை எழுப்பும் உயிர்ப்பாற்றல் பாரதிதாசன் பாடலுக்கு உண்டு - பாரதிதாசன் பாடலுக்குத்தான் உண்டு.

இன்றைய சமுதாயத்தையே தலைகீழாக மாற்றி அமைத்து மறுகோலம் செய்ய வேண்டு மென்பது பாரதிதாசன் இலட்சியம்.

ஆகவே அவர் 'இக் கொலை உலகம் கோணல் உலகம் மிகத் தாழ்ந்த புலை உலக' த்தை விட்டு அகன்று அவருக்கு விருப்பமான இலட்சிய மாளிகைக்குச் சென்று புதியதோர் உலகம் பற்றிய கனவு கண்டுகொண்டிருக்கிறார். கனவு காண்பது மட்டுமல்ல; அந்தப் புது உலகத்தை நடைமுறையிற் கொண்டுவர அதிதீவிரப் பிரசாரமும் செய்து வருகிறார்.

அவர் கனவு காணும் உலகத்தில் ஓடப்பரும் இல்லை, உயரப்பரும் இல்லை, எங்கும் ஒப்பப்பரே உண்டு.

அங்கே ஓட்டைக் குடிசைகளில்லை; ஒடிந்த உள்ளங்கள் இல்லை; தாழ்ந்த தலைகளும் கவிழ்ந்த முகங்களுமில்லை. நாளை வாழ்வுக்கு என் செய்வோம் என்று எண்ணி ஏங்கும் ஏழைத் தன்மை இல்லை.

அந்த உலகத்தில் இது எனது என்னுமோர் கொடுமை இல்லை, தனி உடைமை இல்லை, தன் வாழ்வு மட்டும் தழைத்தால் போதும் என்றெண்ணும் குறுகிய மனப்பான்மை இல்லை.

தன் பெண்டு தன் பிள்ளை சோறு வீடு சம்பாத்தியம் இவையுண்டு தானுண்டு என்னும் சின்னதொரு கடுகு போலும் உள்ளம் கொண்ட பயனற்ற வீணர் அங்குக் கிடையாது. கன்னலடா என் சிற்றூர் என்று சொல்லும்

கடுகுக்கு நேர் மூத்த துவரை உள்ளமும் அங்கில்லை. தன் நாட்டுச் சுதந்தரத்தால்பிற நாட்டைத் துன்புறுத்தும் தொன்மை உள்ளமும் அங்கில்லை. 'மானிட சமுத்திரம் நானென்று கூவும் விசாலப் பார்வை' மட்டுமே அங்குண்டு.

அந்த உலகத்தில் மதம் இல்லை, அதை வளர்க்கும் மூட நம்பிக்கை இல்லை, அந் நம்பிக்கையின் அடிப்பிறந்த சடங்குகள் இல்லை, இம் மூன்றை நிலைக்கவைக்கும் சாத்திரக் குப்பையுமில்லை.

அந்த உலகத்தில் ஆழ்வார்களோ நாயன்மார்களோ ஜீயர்களோ ஜீவன் முத்தர்களோ கிடையாது. கோயில்களோ குடமுழுக்குகளோ கிடையாது. ஊரை - உலகை ஆட்டிப் படைக்கும் புரோகிதப் புரட்டர் கூட்டமும் கிடையாது.

அங்கே அறிவின் விளக்கமுண்டு; அதை அடக்கி வைக்கும் புராணமில்லை. விஞ்ஞான வளர்ச்சியுண்டு; அதற்குத் தடை விதிக்கும் குள்ள நரிக் கூட்டமில்லை. ஆராய்ச்சி உண்டு; அதை வளர்க்கும் திட்டமுண்டு; மக்கட்கெல்லாம் 'ஆராய்ந்து பார்' என்று சொல்லும் பகுத்தறிவு மன்றங்களுண்டு; ஆனால் பிழைபட்ட கருத்தைக் காட்டி 'இதுதான் வேத ஒலி - நம்பித்தான் ஆக வேண்டும்' என்று சொல்லும் ஒட்டாரமில்லை.

பாரதிதாசன் உலகத்தில் நரகமும் இல்லை - மோட்சமும் இல்லை. பாபிகளும் இல்லை - புண்ணியவான்களும் இல்லை. தேவ தூதர்களும் இல்லை - அவர்களுக்கு அஞ்சி வாழும் ஆமை உள்ளத்தவரும் இல்லை. அந்த உலகத்தில் உலவுவோர் அனைவரும் மக்கள் - அறிவின் எல்லையைக் கண்டு வாழும் மக்கள்.

அங்கே கொடுங்கோல் கிடையாது. மக்கள் ஆட்சி மலர்வதைத் தடுக்கும் மமதையாளர் கிடையாது. ஊரார் உழைப்பில் உண்டு வாழும் உலுத்தர் கிடையாது. பகுத்தறிவே நீ பரவாதே என்று சொல்லும் மதோன்மத்தர் கிடையாது. உலகம் உண்ண உண்டு, உலகம் உடுத்த உடுக்கும் பொதுவுடைமை உள்ளங்கள் மட்டுமே அங்குண்டு.

சுருங்கிய உள்ளம், குறுகிய இலட்சியம், இருண்ட வீடு, புனல் சொரியும் கண்கள், பொய் சொல்லும் வேதாந்தம், புரட்சிக்குத் தடை சொல்லும் புல்லறிவு—இவையெல்லாம் பாரதி தாசன் உலகத்தில் கிடையா.

வீரம் ததும்பும் முகங்கள், ஒளி பொருந்திய கண்கள், உறுதி படைத்த கைகள், வலிமை கொண்ட தோள்கள், அஞ்சாத பெரு வீறு அமைந்த நெஞ்சங்கள்—இவற்றிற்கு மட்டுமே அந்த உலகத்தில் இடமுண்டு.

அறிவு, ஆராய்ச்சி, அநுபவம், சிந்தனை, செயல் திறம், சீர்திருத்தம், உறுதி, ஊக்கம், உழைப்பு, உற்சாகம், முற்போக்கு, கிளர்ச்சி, எழுச்சி, இவற்றிற்கு உறுதுணையான தன்மான உணர்ச்சி - இவற்றைத்தான் பாரதி தாசன் உலகத்தில் காணமுடியும். தலைவிதியை, முன் வினையை, அவன் - அருளை, அன்று எழுதிய எழுத்தை, கொடுத்து வைத்ததை, அதிர்ஷ்டத்தை இவற்றையெல்லாம் அங்குக் காணமுடியாது.

அங்கே காதல் வாழ்வுண்டு; பொருந்தா மணமில்லை. மானிட சக்தியில் மட்டற்ற நம்பிக்கை உண்டு; 'பாழுலகம் பொய்யே, பரமபதம் போ!' என்னும் சாக்குருவி வேதாந்தம் இல்லை.

அந்த உலகம், அறிவு உலகம், அன்புலகம், புது உலகம், புரட்சி உலகம், தன்மான உலகம், இன்ப உலகம், கட்டுக்காவலற்ற கருத்துலகம் - வெறும் எதுகை மோனை உலகமல்ல, அந்த உலகத்தை அமைப்பதுதான் பாரதி தாசனின் இலட்சியம்.

அதன் அமைப்புக்குத் தடை விதிக்கும் எதிர்ப்புச் சக்திகள் அத்தனையையும் தொகையாக எதிர் நிறுத்தித் தூள்தூளாக்கும் காழ்ச்சிந்தை மறச்செயல்கள் மிகவும் கொண்டவர் நம் புரட்சிக் கவிஞர் பாரதி தாசன்.

பாரதிதாசன் ஒரு பிறவிப் போர் வீரர். எங்கெங்கே அறியாமை இருக்கிறதோ, எங்கெங்கே ஆணவம் நடமாடுகிறதோ, எங்கெங்கே 'உயர்வு - தாழ்வு' மனப்பான்மை அரசு கட்டிலில் அமர்ந்துள்ளதோ, எந்தெந்த இனம் எங்கெங்கே பிறர் உழைப்பை உறிஞ்ச எண்ணுகிறதோ, அங்கெல்லாம் பாரதி தாசனின் போர் முழக்கம் உண்டு. எங்கெங்கே சூழ்ச்சிக்கும் வீரத்திற்கும் போர் நிகழ்கிறதோ அங்கெல்லாம் வீரத்தின் பக்கம் நின்று போராடும் அவருடைய போர் வாள் உண்டு அதனுடைய வீர ஒலி உண்டு. அவருடைய போர் வாள் வெறும் தங்க ஒடு போர்த்த பொம்மை வாள் அல்ல. உயிர்ப்பாற்றல் நிறைந்த - உணர்ச்சி வேகம் செறிந்த மிகக் கூரிய வாள் அது.

உள்ளபடியே பாரதி தாசன் பாடல் ஒவ்வொன்றும் ஒரு போர் வாள் தமிழனுக்கு. அவர் பாடல் தொகுதி தமிழனுக்கு ஒரு பாசறை.

'உலகத்தில் மதம் வளர்த்தும், சாதி சேர்த்தும், உயர்வு தாழ்வினைச் செய்தும், சடங்கு கண்டும் கலகத்தை நடத்துகின்ற அந்தத் தீய இருளப்பன் மீது தன் வீர வாளை ஓச்சிவிட்டார் நம் போர் வீரர் பாரதி தாசன்.

ஆம், ஊரிலேனும் நாட்டிலேனும் உலகிலேனும் எழுப்பப்பட்டுள்ள சூழ்ச்சித் திரைகள் அத்தனையையும் தூள்தூளாய்க் கிழித்தெறியப் போர் முரசு கொட்டிவிட்டார். புரட்சிக்குப் பாசறை அமைத்து விட்டார். போர்ப் பாட்டும் இசைத்து விட்டார். போர் வாளும் தயாரித்து விட்டார். தமிழர்களை அழைக்கிறார் வருக வருக என தமிழ் நாடே! நீ என்ன சொல்லப் போகிறாய் அந்தக் கவிஞர் குரலுக்கு!

# இலக்கிய மறுமலர்ச்சி

(செ. ரா. சுப்பிரமணியம்)

பண்டைத் தமிழ் இலக்கியங்கள் பிற்கால இலக்கியங்கள் போல வடநூல் மொழிபெயர்ப்பும் வடநூற் கருத்துங் கொண்டவையாக இல்லை; தமிழரைத் தாழ்த்தி வடவரை உயர்த்திக் கூறவில்லை; எதை எடுத்தாலும் சிவன், திருமால், முருகன் என்னும் தெய்வப்பாடல்களாகவும் இல்லை. எல்லாப் பாடல்களும் இயற்கை செயற்கை என இருவகைப் பாகுபாட்டில் அடங்கும். இயற்கையாவது, மக்களொழுக்க முறையை அகம் புறமென இரு கூறாகப்படுத்தி, அவ்வகப் பொருட்கு, முதல்--கரு-உரி என மூன்று உறுப்புக்களை அமைத்து, மக்கள் ஒழுக்கங் கூறுமுகத்தான், முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் பாலை என்னும் நிலமுதற் பொருளும், கார்கூதிர் முன்பனி பின்பனி இளவேனில் முதுவேனில் எனப் பெரும்பொழுதும், மாலை யாமம் வைகறை காலை நண்பகல் எனச் சிறுபொழுதும் ஆகிய கால முதற்பொருளும், உணு தொழில் விலங்கு புள் பூ ஊர் பறை முதலிய கருப் பொருளும் ஆகிய இயற்கைப் பொருளும், புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல் ஊடல் என்னும் உரிப் பொருளாகிய செயற்கைப் பொருளும் அமைத்து உலகியலையும் வாழ்வியலையுங் கூறுமுகத்தான் பல்வகைக் கலைகளையும் பல இனிய கருத்துக்களையும் உள்ளுறையாக்கி, ஆண் பெண் ஆகிய மக்கட் பரப்பை ஒருவன் ஒருத்தி கிழவன் கிழத்தி எனப் படைத்து, அன்னாரை ஒப்புயர்வற்ற தலைவர்களாக்கி அவ்விருவரும் எதிர்ப்பட்டு ஒரு மனப் படுவதைக் களவு என்றும் மண முடித்துக்கொண்டு வாழும் இல்லறத்தைக் கற்பு என்றும் பிரித்து, அன்னார் வாழ்வியல் கூறுமுகத்தான் தமிழ் மக்களின் ஒழுக்க முறையை இனிது கூறிப் போந்தாரென்க.

இனி, அரசியல், போர்முறை, தொழில் முறை முதலிய வாழ்க்கைத்துணையாயவற்றைப் புறப்பொருளென அடக்கி, அதில் தமிழர் வீரம், கொடை முதலிய உயர் குணங்களை விளங்க வைத்தனர். பண்டை இலக்கியங்களெல்லாம் அகம் புறம் என்னும் இவ்விரு கூறாகவே அமைந்திருத்தலையும் அதிலும் புறத்திணைப் பாக்களிலும் அகத்திணைப் பாக்களே மிகுந்திருத்தலையும் சங்க நூல்களிற் கண்டு கொள்க. இனிப் பழந்தமிழர் ஒழுக்கங் கூறவந்த தொல்காப்பியம் என்னும் பழந்தமிழ் இலக்கண நூலில் உள்ள மூன்றதிகாரத்தில் ஒன்றான பொருளதிகாரத்தே உள்ள ஒன்பது இயல்களில் பொதுவாகிய செய்யுளியல் மரபியலைத் தவிர அகப்பொருள்பற்றி ஆறியலும் புறப்பொருள்பற்றி ஒரே இயலும் இருத்தலே பண்டைத் தமிழிலக்கியங்கள். இவை போரைச் சிறப்பிக்கமட்டும் எழவில்லை. மக்கள் வாழ்வியலைச் சிறப்பித்துக் கூறுவதன் மூலம் உலகியல் பலவற்றையும் ஆராய்ந்து இயற்கைப் பொருள்களை அணிகலமாக்கி மக்களுக்கறிவு கொளுத்தி வாழ்வித்ததோடு, மொழியையும் வளர்த்து வந்தன. இனி எம்மொழிக்குமில்லாத ஒரு பெருமை தமிழ்மொழிக்கே உண்டு எனலாம். அதாவது தமிழில் தனியாக ஒழுக்க நூல்கள் பல இருத்தலேயாம். திருக்குறள் போன்ற ஆழ்ந்த கருத்தும், அழகிய நடையும், இலக்கியச் செறிவும் இன்சொற் புணர்ச்சியும் உடைய ஒழுக்க நூல் வேறு எம்மொழியில் உளது? வள்ளுவரும், பொருளை-ஒழுக்கத்தை அகம் புறமென இரண்டாக வகுத்துக் கூறுதல் இங்கே கவனிக்கற்பாலது.

இவ்வாறு சீரும் சிறப்புடன் திகழ்ந்து வந்த தமிழ் இலக்கியம் இடைக்காலத்தே வீழ்ச்சியுறத் தொடங்கியது. கடைக்காலத்தே வீழ்ந்துவிட்டது. இதற்குக் காரணம் என்ன? ஆரியமொழியைத் தேவமொழியெனவும் தமிழ்மொழியைத் தாழ்ந்த மக்கள் மொழியெனவுங் கொண்டதும், தமிழகத்தே ஆரியக்குல வேற்றுமையும் ஆரியச் சமயமும் தலைமை தாங்கியதுமேயாகும். நால்வர், ஆழ்வார் காலத்தே அகம் புறப் பொருள்கள் போய் ஆரியத் தெய்வப் பொருள்களும் சமயக் கருத்துக்களும் தலைமை யெய்தின. கம்பர் காலத்தே தமிழர் இகழப்பட்டு வடநாட்டார் தலைவராயினர். தமிழ் ஒழுக்க முறையை ஆரிய ஒழுக்கமுறை அடிமைகொள்ளத் தலைப்பட்டது. சேரனும், சோழனும், பாண்டியனும், பாரியும், காரியும், ஆயும், பேகனும் போய், ராமனும், நளனும், பாண்டவரும் பாட்டுடைத் தலைவராயினர். தமிழ்ப்பாரத்தியும், கிழத்தியும் குறத்தியும் போய் சீதையும், துரோபதையும் சிறப்பிக்கப்பட்டனர். இனிய தமிழ்ச் சொற்கள் இருந்த இடத்தே ஆரியச் சொற்கள் குடிகொண்டன. தமிழ் முதற்பாக்கள் கைவிடப்பட்டுப் பாவினம் பயிலத் தொடங்கியது

இனிக் கடைக் காலத்தே தமிழ் இலக்கியக் கொலைஞர்களே தமிழ்ப் புலவராக இருந்தனர் எனலாம். அவர்கள் தமிழ்ப் பண்பை அடியோடு கைவிட்டனர். உயிர் அற்ற உடல் போலப் பொருளை மறந்து சொற்கோவை தொடுப்பதிலேயே முழுக் கருத்தையும் செலுத்தி வந்தனர். நூற்றுக்கு இருபத்தைந்து தமிழ்ச் சொற்கள்.

ஆயிரத்தில் நாலைந்து தமிழ்க் கருத்துக்கள். மற்றெல்லாம் ஆரிய மயம். அருணகிரி திருப்புகழைப் பாருங்கள். அதிலும் யமகம் திரிபு முதலிய எழுத்துடைப்புப் பாட்டுக்கள் பலப்பல. அவை அகப்புறம் விடுத்து ஆரியக் கடவுள், அருவருக்கத்தக்க காமம் அளவின்றிப் புகழ்தல் என்னும் பொருள்களைக் கொண்டன. அவற்றுள் பெரும்பாலான புகழ் நூல்கள்; ஏனைய தனிப் பாடல்கள். சங்ககால இலக்கியங்கள் அரிய கருத்துக்களும் எளிய நடையும் கொண்ட தனித் தமிழ் நூல்கள். இடைக்காலப் புராணங்கள், திரிந்த கற்பனைக் கருத்தும் ஆரிய நடையுங்கொண்ட ஆரியத் தமிழ் நூல்கள். கடைக்காலத்தவை, தமிழை மறந்த பொருளற்ற பிறர்க்கு விளங்காத கடுநடையையுடைய ஆரியத் தமிழ்ப் பேர் நூல்கள். இக்காலத்தே தான் தமிழ் இலக்கணத்திலும் ஆரியக்குல வேற்றுமை புகுந்தது. ஒருவர் மேல் ஒரு நூல் பாடும்போது பாட்டுடைத் தலைவன் பெயர் கொண்ட முதல் பாட்டின் முதற் சீர்க்குப் பஞ்சாங்கத்திற் போலப் பத்துப் பொருத்தமும் பிறவும் பார்த்துப் பாடவேண்டுமெனவும் அதைப்பற்றிக் கூறும் நூல் ‘பாட்டிய’ லெனவும் செய்து, அதில் குல வேற்றுமையைப் புகுத்தியுள்ளனர். அவை, தமிழ் எழுத்துக்கள் முப்பதையும் மறையோர் மன்னர் வணிகர் சூத்திரர்க்குரியவை இன்ன இன்னவென்றும், அவ்வெழுத்துக்களை அரன் முதலிய தேவர்கள் படைத்தனர் என்றும், எழுத்துக்களை நட்சத்திரங்களுக் குரியவாக்கியும், மற்றும் எழுத்துக்களைத் தேவர் மக்கள் விலங்கு நரகர் கதிகளாக்கியும், பாக்களை - வெண்பா - வெண்ணிறம் மறையோர் சாதி, ஆசிரியம் செந்நிறம் அரசர் சாதி, கலிப்பா-பொன்னிறம் வாணிகர் சாதி, வஞ்சிப்பா-கருநிறம் சூத்திரர் சாதி என்று குல வேற்றுமை கூறுதலோடு, பாக்களுக்கும் இராசி, தெய்வம் முதலியன வகுத்துப் பாழ்படுத்தியிருக்கின்றனர். இப்பாட்டியல் தமிழ்ப் புலவர் தேர்வுக்குப் பாடமாக உளது. ஆனால் பல்கலைக் கழகத் தமிழர் யாரும் இதைக் கவனித்தாரில்லை. ஏன்? ஆரிய அச்சம் அவர்களை அடக்கியாள்கிறதன்றோ? என்று தமிழர்க்குத் தன்மான உணர்ச்சி தோன்றித் தம்மைத் தமிழரென எண்ணுவார்களோ யாமறியோம்? தமிழா! உன் பாட்டை, இலக்கியச் சுவையை நீ என்று சுவைத்தறியப் போகிறாய்? சங்க இலக்கியங்களை ஒவ்வொரு தமிழனையும் கையால் தொடும்படியாகிலும் செய். அவற்றை யொட்டிப் புது நூல்கள் செய். தமிழர் முன்னேற்றம் - தமிழர் விடுதலை, தமிழர் இனவெழுச்சி பற்றிப் புத்திலக்கியங்கள் புனை!

இனித் தமிழ் மரபுக்கு - கொள்கைக்கு ஒவ்வாத கட்டுக்களை யெல்லாம் அவிழ்த்தெறி. பாட்டியலைத் தீக்கிரையாக்கு. தமிழர் தன்மானங் கொண்டெழும்படியான புத்தம்புதிய கருத்துக்களைக் கொண்ட எளிய நடையிலமைந்த பாக்களே இனித் தேவை. ஆனால், இலக்கண வமைதியின்றி, செய்யுளின் எல்லை கடந்து செல்லக் கூடாது. ஓரடி பாடினும் தனித் தமிழிலேயே பாட வேண்டும். புத்தம்புதிய அறிவியற் கலைகளை எளிய நடையில் பாடலா(ர்). புராணங்களைத்தவிர, சமய நூல்களைத் தவிர வேறு இலக்கியம் என்ன இருக்கிறது தமிழில்? என்னும் குறையைப் போக்கி எல்லாத் துறையிலும் நூல்கள் எழவேண்டும். முயற்சிசெய்!




உறையூர்

# எஸ். எம். எஸ். ஆர். பி.

சொந்தக் கைத்தறி கலர்புடவைகள் & 3-அகலம் தோத்திகள், சரிகை அங்கவஸ்திரங்கள்.

100, 80-நெ. நூலில் தயார் செய்யப்பட்டது. உத்திரவாதமுள்ள சாயம். உறுதியான—உடை, சுத்தமான—சரிகை, உயர்தரமான—ரகங்கள், நாணயமான விலைகள்.

**S. M. S. R. பாலசுந்தரம்,**

கைத்தறி ஜவுளி வியாபாரம்,

34, பஞ்சவர்ணஸ்வாமிகோவில் தெரு,

உறையூர். P. O. திருச்சி.

# ஏனோ இந்நிலை

(அ. முத்தையா, எம். ஏ.,)

நம் தமிழ் நாடு மிகத் தொன்மையான நாடு. பல ஆயிரம் ஆண்டுகட்கு முன்பே உயர்ந்து சிறந்து விளங்கிய நாடு. செல்வம் கொழித்துப் புகழுடன் நின்ற சீரிய நாடு. உலகிற் பல்வேறு காலங்களில் சிறந்த நாகரிகத்துடன் விளங்கும் யவனர், ரோமர், சீனர் முதலியோரால் பெரிதும் கொண்டாடப்பட்ட நாடு. செல்வச் சிறப்பும் தொழில் மேம்பாடும் பெற்றிருந்தமையால் வாணிபங் கருதி, பலரும் தேடி வந்த தாய நாடு. திசைக் கருவி முதலிய சாதனங்கள் இல்லாத காலத்திலேயே பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள நாடுகளுடனும் தீவுகளுடனும் வர்த்தகஞ் செய்து பொருளீட்டிய நாடு.

இந்நாளைய நிலையோ இதற்கு முற்றிலும் வேறானது. உலகிலேயே மிக ஏழ்மையானது இத் தொன்மை நாடு. சாதிச் சண்டை, சமயச் சண்டை நிரம்பிய நாடு. மக்களில் மிகப் பெரும்பாலானோர் இந்நாட்டிலேதான் எழுத்து வாசனை கூட இல்லாது நடைப் பிணங்களாக இருக்கின்றனர். பெண்ணை இந்நாட்டினர் அடிமை கொண்டிருப்பது போல் இந்நாளில் வேறெந்நாட்டிலும் இல்லை. கைம்மை என்னும் கயமை இந்நாட்டிலேதான் இருக்க இயலுகிறது. தீண்டாமை என்னும் தீயநோய் செழித்து விளங்க இந்நாடே ஏற்றதாக இருக்கிறது. பிறப்பினால் உயர்வு தாழ்வு வகுக்கும் பேதைமை இந் நாட்டில்தான் ஆட்சி செலுத்த முடிகிறது. உழைப்பினால்தான் உயர்வு உண்டென்னும் எண்ணம் இந்நாட்டில்தான் ஏற்றம் பெறவில்லை. இவ்வகைப் பெருங் குறைபாடுகள் இருக்கும்போது இந்நாடு உலகில் மிகவும் பின்னணியில் நிற்கிறதென்பதில் ஆச்சரியம் ஏதேனும் உண்டோ?

நம் நாட்டினர் நிலையை நினைந்தால் நெஞ்சம் உருகுகிறது. ஏனைய நாட்டினரின் சிறப்பையும் நம்மவரின் தாழ்மையையும் ஒப்பிட்டுப் பார்த்தால் கண்ணீர் கரையில்லாது கொட்டுகிறது. சில சில விவரங்களை மாத்திரம் கூர்ந்து கவனிப்போம்.

மனிதன் உயிர் வாழ்வதற்கு மிக மிக இன்றியமையாதவை உடையும், உணவும். அதனால்தான் நம் நாட்டு மூதாட்டி, "உண்பது நாழி, உடுப்பது நான்கு முழம்" என வாழ்வின் உழைப்பின் முடிவைச் சுருக்கிக் கூறி இருக்கிறார். இந்த நாழியரிசி உணவும் நான்கு முழத் துணியும் கிடைக்காது, "கையது கொண்டு மெய்யது பொத்தி, காலது கொண்டு மேலது தழீஇ, பேழையுளிருக்கும் பாம்பென உயிர்க்கும்" மக்கள் இந்நாட்டில் கோடிக்கணக்கானவர்.

1. நம் நாட்டின் வருஷ வருமானமும், மற்றவருடையதும்:

| | | |
|---|---|---|
| அமெரிக்கா | 1,406 | ரூபாய்கள் |
| இங்கிலாந்து | 980 | ,, |
| ஜர்மனி (யுத்தத்தின் முன்) | 603 | ,, |
| ஜப்பான் ,, | 218 | ,, |
| பிரிட்டிஷ் இந்தியா | 65 | ,, |

2. உடை. நம் நாட்டினர் உபயோகிப்பதும், ஏனைய நாட்டினர் அநுபவிப்பதும்.

| | | |
|---|---|---|
| அமெரிக்கா | 64.0 | கெஜம் ஆண்டு ஒன்றுக்கு. |
| ஜர்மனி (யுத்தத்தின் முன்) | 34.0 | ,, |
| ஜப்பான் ,, | 21.4 | ,, |
| இந்தியா | 16.1 | ,, |
| உலகத்தில் சராசரி | 42.0 | ,, |

3. உணவு:

| | | |
|---|---|---|
| அமெரிக்கன் | 8500 | (காலோரீஸ்) |
| ஆங்கிலேயன் | 3400 | ,, |
| இந்தியன் | 2500 | ,, |
| இந்தியத் தொழிலாளி | 190. | ,, |

(டாக்டர் அய்க்ராய் கணக்குப்படி ஓர் ஆளுக்கு குறைந்தது 2600 காலோரீஸ் உணவாவது வேண்டும்)

ஊண், உடை முதலிய புறப்பொருள்களில் தரித்திரம் தாண்டவமாடுவதோடு இல்லை. அறிவுத்துறையிலும் மடமை குடிகொண்டு இருக்கிறது. இந்நாட்டிலே சுமார் நூற்றுக்கு 8 அல்லது 9 பேரே கையெழுத்தாவது போடத் தெரிந்தவர்கள். உடல் நலமும், வாழ்க்கை வசதிகளும், அறிவு விளக்கமும் இல்லாத இந்நாட்டு இக்கால மக்கள் எவ்வாறு சிறந்த சுதந்திர மக்களாக வாழ முடியும்?

நாம் இந்நிலையிலேயே இருந்து உழலுவதா? என் செய்வதென ஏங்கி நிற்பதா? எம்மாலாகாதென இளைத்து வாடுவதா? என் தலைவிதியென ஏமாந்து போவதா? இல்லை, இல்லை. நம் உயிர்க்கவி, அமரகவி, அறிவுக்கவி, ஆக்கக் கவி, பாரதி தாசன் இதோ நமக்குப் புத்துயிர் தருகிறார்.

"சாதி மத பேதங்கள் மூட வழக்கங்கள்
தாங்கி நடைபெற்றுவரும் சண்டையுலகிதனை
ஊதையினில் துரும்புபோல் அலக்கழிப்போம்; பின்னர்
ஒழித்திடுவோம் புதியதோர் உலகம் செய்வோம்.
பேதமிலா அறிவுடைய அவ்வுலகத்திற்குப்
பேசு சுயமரியாதை உலகு எனப் பேர் வைப்போம்!
ஏதேகாண் சமூகமே, யாம் சொன்ன வழியில்
ஏறு நீ! ஏறு நீ!! ஏறு நீ!! ஏறே!"

—பாரதி தாசன்.

இன்னிசை! இன்பம்!! காதல்!!!

அனைத்தும் நிறைந்து நவரசம் மிகுந்து
புதுமை மிளிர்ந்து காவிய எழிலைத் துலங்கவைக்கும்
கலைச்சித்திரம்

# சிவப்ரகாசம்

சண்டமாருத வேகத்தில் மாடர்ன் தியேட்டர்ஸ்
ஸ்டுடியோவில் தயாராகிறது

நட்சத்திரங்கள் :

★ ஜெயம்மா பாலையா ★

மற்றும்

கொத்தமங்கலம் சீனு, எம். ஆர். சந்தானலக்ஷ்மி,
வி. என். சுந்தரம், எம். ஆர். சுவாமிநாதன்,
கே. கே. பெருமாள், கே. பி. ஜயராம்,
பி. எஸ். ஞானம், ஸி. வி. வி. பந்துலு,
ஏழுமலை, டி. எஸ். துரைராஜ்

மற்றும் பல நட்சத்திரங்கள்

சினேரியோ : எம். எல். டாண்டன்

பாடல்கள் : சிவன்

தயாரிப்பும் டைரக்ஷனும் :

ரங்கராஜ் & சக்ரவர்த்தி

★

ஜில்லா உரிமை விபரங்களுக்கு :

## கிரேட் ஈஸ்டர்ன் பிக்சர்ஸ்

சௌந்தர மஹால், செர்ரி ரோட், சேலம்

தந்தி GULFY தபால்பெட்டி 37

# வாத்தியார் சுப்புரத்தினம்

(மெலானி—நோயேல்)

ஆம்! 18½ வயதில் ஆசிரியராக அமர்ந்து அல்லல் பல அடைந்த இல்லூ புரட்சிக் கவிஞர் பாரதி தாசனை - இளைஞர்கள் உள்ளத்தைக் கொள்ளை கொண்டவராக - அறிஞர் குழாத்தின் ஆமோதிப்பை அடைந்த கவிஞராகத் திகழும் பாரதி தாசன் தான் 'அந்த வாத்தியார் சுப்புரத்தினம்'

கவிஞர் பாரதிதாசன் எந்த அல்லல் அடையினும் தாம் கொண்ட கொள்கையைக் கைவிடார்; அதனை நிறைவேற்றியே தீருவார். இவர் சாதி சமயங்களைக் கல்லி யெறிவதைத் தமது முதல் நோக்கமாகக் கொண்டவர். இந்த நோக்கம் இன்று நேற்றல்ல; பல ஆண்டுகளாக அவர்க்குண்டு. அதற்குச் சான்று, அவரின் 'தாழ்த்தப்பட்டோர் சமத்துவப் பாட்டு' என்னும் நூலேயாகும்.

எனது தந்தையார், கவிஞருடன் சிறு வயதிலிருந்து நெருங்கிப் பழகி வருபவர். அவர் சொல்லிய ஒரு நிகழ்ச்சியைச் சொல்லி மேற் போகிறேன். 'வாத்தியார்' பழைய கொள்கையில் திடீரென மாற்றம் தெரிந்தது. இது ஏறக்குறைய 1929-ம் ஆண்டில்!

ஒரு நாள் அவரிடம் படித்த சிலரும், நண்பர் சிலரும் வந்து, ஈரோட்டுக் 'குடியரசு' பற்றிய உங்கள் கருத்து என்ன என்று கேட்டார்கள். "இராமாயணமும், பாரதமும் பகுத்தறிவுக்கு ஒவ்வாதனவே! அவற்றிற்கு மறுப்பு தலைகாட்டுமேல், அது எதிர்பார்க்கத் தக்கது தான். அது மாத்திரமல்ல, இந்துக்களின் வாழ்க்கை முறையின் அடிப்படையே மடமை என்றால், மறுக்க முடியாது. அதன் பயனைத்தான் நாம் உருப்படாத நிலையில் இருக்கிறோம். சாதி வேற்றுமை, சமய வேற்றுமை இவற்றை அறவே ஒழிக்க வேண்டுமானால், 'குடியரசின்' கொள்கைகளை அஞ்சாது கொள்ளத்தான் வேண்டும்!" என்று கூறினர். இரண்டொரு நாட்கள் இடையில் சென்றன! ஒரே எதிர்ப்பு! வாத்தியாரிடம் கேள்வி கேட்க வரும் பண்டிதர்களுக்குக் கணக்கே இல்லை. ஊர்ப் 'பெரிய மனிதர்' எதிர்ப்பு! 'குடியரசு'க் கொள்கையை எதிர்ப்பவருக்குப் பதில் சொல்ல வாத்தியாருக்கு 24 மணி நேரம் போதவில்லை! மேலும் அது பற்றியே பொதுக் கூட்டங்கள், 'புதுவை முரசு' பத்திரிகை ஏற்பாடு முதலியவைகளையும் தொடங்கத் தலைப்பட்டார் வாத்தியார். ஊரில் பெரியதொரு கிளர்ச்சி!

"மக்களின் உயர்வு தாழ்வு இல்லை" என்பது குடியரசு கொண்ட முதற் கருத்து. 'குடியரசு' வாத்தியார் உள்ளத்தைக் கவர்ந்ததற்கும், அதில் இக்கொள்கைகள் சிறப்பாகக் கொள்ளப்பட்டதுதான் காரணம்.

சுப்ரமண்ய பக்தரும், லிங்க தாரியும், 'சுப்ரமண்யர் துதியமுது' என்ற நூலாசிரியருமான சுப்புரத்தினம்,

'ஊர் தட்டிப் பறித்திட உயர் சாதியாம்! இதை நான்
மார்தட்டிச் சொல் வேண்டி—கிளியே!'

என்று சொல்லுவானேன் தமது 'தாழ்த்தப்பட்டோர் சமத்துவப் பாட்டில்!'

**சுயமரியாதைக்** கொள்கையைப் பற்றி வாத்தியார்—இல்லை **பாரதி தாசன்—புரட்சிக் கவிஞர்** முதலில் எழுதிய நூல் **'தாழ்த்தப்பட்டோர் சமத்துவப் பாட்டே.'** அதை நான் வெளியிட்டேன்.

**பாரதியார்** பாராட்டிய **கவிஞர்**, தாழ்த்தப் பட்டார் **சமத்துவம்** பெறவேண்டும் என்ற நோக்கத்தோடு, மன எழுச்சியோடு தொடங்கிய அந்நூல், தம் கொள்கையை மிகு விரைவில் செயலில் காட்டும் என்பது எனக்கு அப்போதே தெரியும். இதுதான் நான் சொல்ல நினைத்த நிகழ்ச்சி.

'புவியிற் சமுகம் இன்பம் பூணல் சமத்துவத்தால்
சவிழ்தல் பேதத்தாலடி—கிளியே!'

என்று தொடங்குகிறார் சமத்துவப் பாட்டை! வீரம், நகை முதலிய சுவைகளுக்கு வேறெங்கும் போக வேண்டியதில்லை!

'என்னை அளித்தவர் ஓர் கடவுள்! மற்றும்
ஏழையற் கோர் கடவுள்!—எனில்
முன்னர் இரண்டையும் சேர்த்து உருக்குங்கள்
மூளைக்கும் பொதுக் கடவுள்'!
உயர்ந்தவர், கோயிலில் உயர்ந்தது என்பீர், மிகத்
தாழ்ந்ததைத் தாழ்ந்ததென்பீர்—இவை
பெயர்ந்து விழுந்தபின் பேதமிலாததைப்
பேசிடுவீர் அன்பீர்!
'சுத்தமில்லாதவர் பஞ்சமர் கோயிற்
சாமியை பூசிப்பரோ?—எனில்
நித்த முயர்ந்தவர் நீரிற் குளிப்பது
யாதுக்கு யோசிப்பீரே!'

என்பன போன்ற அடிகள் மிகப்பல அந்நூலில் உண்டு.

மாடுண்பவன் திருக்கோயிலின் வாயிலில்
வருவதற்கு இல்லை! சாத்தியம்—எனில்
ஆடுண்பவனுக்கு மாடுண்போன் அண்ணன்,
அவனே முதற் பாத்தியம்.

இவைபோல, நிறைய உண்டு நகைச் சுவை வரிகள்.

மற்றும் அந்நூலில் 'ஞாயமற்ற மறியல்' என்ற தலைப்பில்,

'என்று தான் சுகப்படுவதோ! நம்மில்!
யாவரும் சமானம் என்ற பாவனை இல்லை!
ஒன்றுதான் இம் மானிடச் சாதி—இதில்
உயர்பிறப் பிழிப்பிறப் பென்பதும் உண்டோ?
அன்றிருந்த பல தொழிலின்—பெயர்
அத்தனையும் சாதிகளென்றாக்கி விட்டனர்!'

என்ற வரிகளால் தமது கொள்கையை விரிவாக்கி விட வில்லையா ?

'கொன்றிடுதே பேதம் என்னும் பேய்!—மிகக்
கூசும் இக்கதை நினைக்க தேச மக்களே!'

என நாட்டு மக்களுக்கு நல்ல வழியைக் காட்டு கிறார். இவை போன்ற ஆணித்தரமான முன்னேற்றக் கருத்துக்களை அவரின் நூல் அத்தனையிலும் கொட்டி இருக்கிறார் !

புரட்சி கவிஞர் என்பதற்கு இது மற்றுமோர் எடுத் துக் காட்டு. தாம் கொண்ட கொள்கையை விடாப்பிடி யாகச் சொல்லில், செயலில் காட்டுபவர் இவர் என்பதையும் இவர் கவிகள் விளக்குகின்றன. இந்தப் பண்பு இதுவரை அவரின் புகழை மறைத்து வந்தது. இதோ ! அந்தத் திரை. காலத்தால் விலக்கப்பட்டு, **புரட்சிக் கவிஞர்** புதுச்சேரி வாத்தியார் மட்டுமன்றி, புத்துலகம் சமைக் கும் **புதுமைக் கவியாகத்** தமிழ் நாட்டில் தமது பெயரைப் பதிந்து கொள்ளுகிறார். வாழ்க தமிழ்! **வாழ்க புரட்சிக் கவிஞர்** ! வாழ்க வாத்தியார் சுப்புரத்தினம்

# கவிஞர் மாண்பு

**என். இ. பாலகுரு**

(1) என்போன்ற இளைஞர்களுக்—கினப்புரட்சிப் பாலூட்டி
எழுச்சியெனும் ஊஞ்சலிலே—இன்பஇசை கூறி ஆட்டி
புன்மதியைப் பொன் அணியாய்ப்—போட்டுலவும் புல்லர்களைப்
போய்அடித்துக் கொன்றிடுங்கள்—போர்க்களத்தில் என்றுரைத்தோன்.

(2) தென்றலினைப் புணர்ந்திட்டோன்—திங்களின்நல் லழகுகண்டோன்
தென்னாட்டுச் சிற்பிஇவன்—கண்கெட்டார்க் கொளி விளக்கு
என் ஆசைச் செந்தமிழை—எவன்எதிர்க்க வந்தாலும்
தன்னுயிரைத் தந்திடஅத்—தமிழ்க்கவிஞன் தயங்கான் யார் ?

(3) புரட்சிக் கவியரசன்—பாரதிதா சன்தானே !
பொன்னீந்து 'பண்' கேட்டால்—போஎன்றுமிழ்ந் திடுவான்
அறத்திற் குழைத்திடுவோன்—அறிவிலிகட்கி ணங்கிவரான்
அறிவெங்கு கண்டானோ—அவ்விடமே அவன் கோவில்

(4) துக்கமெனும் தொழிலாசி—தொல்லைதரும் வேளையிலும்
தூக்கமெனும் மூதேவி—தொந்தரவு செய்கையிலும்
ஊக்கமெனக் களித்திடஓர்—உணவுண்டுநாட் டிலென்றால்
உரைத்திடுவேன் கூசாமல் —புரட்சிக் கவிதை யென்றே !

(5) பெண்கள்தான் அடிமையெனப்—பித்தத்தால் சத்தமிடும்
பித்தர்களை இந்நாட்டுப்—பேடிகளே ! என்றழைத்து
பெண்கள்தான் அடிமையெனில்—பேசும் நீ ! யார்? என்றோன்
புகைகின்ற எரிமலையாம்—புரட்சிமணி வாழி என்றும் !


தமிழ் நாட்டின்
தலைசிறந்த கவிஞர்
பாரதி தாஸன் அவர்களது
கதைகளையும் கட்டுரைகளையும்
விரும்பி, வாங்கிப்
படிப்பவர்கள் அநேகர்
அதேபோல்
இன்று தமிழ் நாடெங்கும்
குழந்தைகள், பெரியவர்கள்
உள்பட யாவரும்
வாங்கி விரும்பிச் சாப்பிடுவது
சார்லீஸ்
பிஸ்கட்ஸ்
CHARLEY & CO.,
USILAMPATTI

# "குயில்"

கவிதை இதழ்
மாத வெளியீடு

★

ஆசிரியர் ;

**பாரதிதாசன்**

★

*விரைவில்*
வெளிவருவதற்கான முயற்சி
நடைபெறுகிறது.

★


**குயில் நிலையம்**
*581,* பைக்கிராப்ட்ஸ் ரோட்
திருவல்லிக்கேணி,
சென்னை

# ★ கவிஞரின் ★ வாழ்க்கை வரலாறு



கவிஞர் வாழ்க்கையின் விரிவு கடல் போன்றது. பலப்பல வளமும், வாய்மையும் நிகழ்ச்சிகளும் நிறைந்தது. உலக அறிவும், அனுபவமும், வாழும் வகையும் வகுத்துரைப்பது. புதுக் கருத்துக்களும் புரட்சி மணமும் கமழ்வது. நான் படித்தவை, கண்டவை, கேட்டவைகளை வைத்துக்கொண்டு, விரைந்து தொடுக்கப் பெற்றது இவ்வரலாறு, கவிஞர் வாழ்க்கை வரலாற்றின் சுருக்கத்தின் சுருக்கமிது. விரிவு பின்னர் வரும்.

—ப. கண்ணன்.

புதுவை, வரலாற்றுப் பெருமையுடைய பட்டினம். தமிழ்ப் புலவர்களும் தமிழ்ப் பற்றுடைய பெரியோர்களும் நிறைந்தது. சிறப்புக்குரியது. அத்தகைய புதுவை ஈன்ற புதுமைக் கவிதான் நமது கனக—சுப்புரத்தினம் —பாரதி தாசன்.

### பெற்றோர்

புதுவை மளிகை கனகசபை முதலியார் பிரபல வியாபாரி, சோதிட நூல் வல்லவர், தமிழ்ப் பற்று மிக்கவர், நன்கு படித்தவர். அவருக்கு இரு மனைவியர். முதல்தாரம் ஓர் ஆண் குழந்தை பெற்றுக் காலமானார். இரண்டாந்தாரமாகிய இலக்குமி அம்மையாரிடம் நம் கவிஞர் கனக-சுப்புரத்தினம் மூன்றாவதாகப் பிறந்தார். 1891-ஏப்ரல் 17-ம் நாளன்று புரட்சிக் கவிஞரைப் பெற்றது தமிழகம். தந்தையின் பெயர் கனகசபை முதலியாராதலின் சுப்புரத்தினம் என்ற கவிஞரின் இயற் பெயருடன் "கனக" என்பதையும் சேர்த்து, கனக-சுப்புரத்தினம் என வழங்குவதாயிற்று.

### கல்வி

ஆறாவது வயதில், சுப்புரத்தினத்தின் கல்விப் பயிற்சி திண்ணைப் பள்ளிக்கூடத்தில் ஆரம்பமாயிற்று. இவரது தமையனார் ஒருவர் - பெயர் சுப்பராயன் - புதுவைக் கல்வே கல்லூரியில் படித்து வந்தார். அவருடன் நமது சுப்புரத்தினமும் சில நாட்கள் கல்லூரிக்குச் சென்றதுண்டு. இதைத் தவிர பிறமொழிக் கல்விச் சாலை இருக்கும் திசை நோக்கி அவர் தலைவைத்துப் படுத்ததுமில்லை. 14-வயது முடியுமுன் அவர் புகுந்து புறப்படாத திண்ணைப் பள்ளிக்கூடம் புதுவையில் ஒன்றேனுமில்லை. சுப்புரத்தினம் இளமைக் குறும்புகள் அளவற்றவை. குறும்பு செய்தால் உபாத்தியாயர்கள் தண்டிக்காமலிருப்பார்களா? அடிக்கப்படுவார், வெளியேற்றவும் படுவார். அவரது தகப்பனார்வேறு பள்ளியில் சேர்த்து விடுவார். எப்படியும் பையன் படிக்கவேண்டும் என்பது அவர் விருப்பம். போனது போகட்டும் என்று பழைய உபாத்தியாயர்கள் சும்மா இருந்து விடுவதில்லை. அவர்கள் பள்ளிக்கூடத்துக்கே மீண்டும் அனுப்பும்படி கவிஞரின் தகப்பனாரிடம் நேரில் வேண்டுவர்; சிபார்சு வைப்பார்கள்.

### இசையும் நடிப்பும்

தொல்லை தரும் சுப்புரத்தினத்தை உபாத்தியாயர்கள் மீண்டும் தங்கள் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பும்படி வேண்டுவது ஏன்? குறும்புக்கார சுப்புரத்தினம் நன்றாகப் பாடுவார்; திறமையாக நடிப்பார். திண்ணைப் பள்ளிக்கூடத்தில் ஆண்டுதோறும் நாடகம் நடைபெறும். அதற்கு, சுப்புரத்தினத்தின் தயவுதேவை. நாடகத்திற்குத் தலைமை நடிகர் அவர்தான். ஆண்டுதோறும் வரும் பதினெட்டாம் பெருக்கன்று பட ஊர்வலத்தின்முன், பாடிச்செல்ல, சுப்புரத்தினம் வேண்டும். அவரது குரலும் பாடும் முறையும் உற்சாகமூட்டுவன; பலராலும் விரும்பப்படுவன. மேலும் சுப்புரத்தினம் சுறுசுறுப்புடையவர்; அறிவு நுட்பம் வாய்ந்தவர். எனவே படிப்பில் சிறந்து விளங்கினார். பள்ளித் தேர்வுகளில் முதன்மையாகத் தேர்ந்து வந்ததோடு, பல மாணவர்களின் பெயரில் தேர்வுகளில் தோன்றி வெற்றி பெற்று 'வாத்தியாரு'க்குப் பெருமை தேடித் தருவார். இத்தகைய ஒரு மாணவனை விட்டுவிடுவதென்றால், எந்தத் திண்ணைப் பள்ளிக்கூட வாத்தியாருக்குத்தான் மனம் வரும்? ஒரு சுப்புரத்தினம் பல பெயரில் பல மாணவர்களாக அவதாரமெடுப்பதில் வாத்தியாருக்குக்கிடைப்பது வெறும் பெருமை மட்டுமல்ல. பொருளாதார வாய்ப்பும் உண்டு. தேர்வுகளில் வெற்றி பெற்ற மாணவர் ஒவ்வொருவருக்காகவும் தலைக்கு மூன்று ரூபா வீதம் வாத்தியாருக்குக் கிடைக்கும் அரசாங்கத்திடமிருந்து!

### சட்டாம் பிள்ளை !

மகாவித்வான் பு. அ. பெரியசாமிப் புலவர் கனகசபை முதலியாரின் நெருங்கிய நண்பர். அவரின் தூண்டுதலினால் அவரது மாணாக்கரும் தமிழ்ப் பண்டிதருமான திருப்புளிசாமி வாத்தியாரின் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்பட்டார் நமது சுப்புரத்தினம். எந்தப் பள்

ளிக்கூடத்திலாவது இரண்டு ஆண்டுகள் நீடித்தாரென்றால் அது இந்தப் பள்ளிக்கூடத்தில் தான். இக்காலத்தில் இளைஞர் சுப்புரத்தினத்திற்கு தமிழில் ஆர்வமும் அக்கறையும் ஏற்பட்டிருந்தது. இவரது படிப்பின் திறத்தையும், பண்பையும் கண்ட திருப்புளிசாமி வாத்தியார் இவருக்குச் 'சட்டாம் பிள்ளை'ப் பதவியைக் கொடுத்தார். அத்துடன் பள்ளியின் சார்பில் ஆண்டுதோறும் நடைபெறும் குசேல உபாக்யானம், பாதுகா பட்டாபிஷேகம் முதலிய நாடகங்களில் தலைமை நடிகரென்ற பொறுப்புடன் நாடகத்தை நடத்தும் பொறுப்பாளியாகவும் இருந்து வந்தார். குசேலனும் ராமனுமாகத் தோன்றிய சுப்புரத்தினம், சுசீலையும் சீதையுமாகவும் தோன்றி யிருக்கிறார். எதிலும் பொருத்தமான நடிப்பு.

### தந்தையன்பு

குறும்பு காரணமாக, சுப்புரத்தினம் உபாத்தியாயர்களுக்கு மாத்திரம் பிடிக்காத பிள்ளையல்ல; வீட்டிலும் யாருக்கும் அவரைப் பிடிக்காது, வெறுப்பார்கள். அவருக்கு ஆதரவாக இருந்தது தந்தையின் நடுநிலைமைக் குணம் ஒன்றுதான். வீட்டில் பலகாரங்கள் செய்தால் அவரது தமையனுக்கும் தங்கைக்குமே அதிகப் பங்கு தரப்படும். அதுமட்டுமல்ல பத்திரப்படுத்தி வைத்திருந்து வேண்டும் போதெல்லாம் எடுத்துக் கொடுத்து வருவார்கள். இதைக் காணும் சிறுவன் சுப்புரத்தினத்திற்கு வயிறு எரியாதா? அவரது குறும்பு மூளையில் ஒரு யுக்தி தோன்றும். சிறிது நேரத்தில் பலகாரங்கள் மாயமாக மறைந்து விடும். பத்திரப்படுத்தப்படும் பலகாரங்களை ஒரு நாளாவது அண்ணனும் தங்கையும் அடைந்ததில்லை! பலகாரங்கள் மறைந்ததும் தகப்பனாரிடம் அவர்கள் முறையிடுவார்கள். தந்தையார் சுப்புரத்தினத்தைக் கூப்பிட்டு விசாரிப்பார். அதை அப்புறப்படுத்தத் தான் கையாண்ட முறைகளைத் தந்தையிடம் அவர் ஒளிவு மறைவு இல்லாமல் கூறுவார். அப்படிச் செய்ய நேர்ந்த அவசியத்தையும் சொல்லுவார். குடும்பத்தினர் இவரிடம் நடந்துகொள்வதை அறிந்த தந்தை சிரித்துக் கொண்டு, "சரி நீயே எடுத்துக்கொள். ஒருவருக்கும் கொடுக்காதே," என்று கூறி அனுப்பிவிடுவார்.

### புலமை

சுப்புரத்தினத்தின் திண்ணைப் பள்ளிக்கூடப் படிப்பு முடிந்தது. மீண்டும் மகாவித்வான் பு. அ. பெரியசாமிப் பிள்ளை அவர்களின் ஆலோசனையின்மீது கல்வே கல்லூரியில் சேர்க்கப்பட்டார். அங்கு அவருக்குத் தமிழாசிரியராக இருந்தவர் பங்காருப் பத்தர். இவரும் மகா வித்வான் பிள்ளையவர்களின் மாணாக்கராவர். கல்வே கல்லூரியிற் பயின்ற காலையும் அவரது குறும்பு அவரை விட்டபாடில்லை. ஒருசமயம் பெரியசாமிப்பிள்ளையவர்கள் பங்காருப் பத்தரைச் சந்தித்துப் பேசிக்கொண்டிருந்தார். அப்போது இளைஞர் சுப்புரத்தினத்தைப் பற்றி அறிய விரும்பி, 'பையன் எப்படி இருக்கிறான்' என்று கேட்டார். 'பையன் எவ்வளவுக் கெவ்வளவு குறும்புக்காரனோ அவ்வளவுக் கவ்வளவு படிப்பிலும் கெட்டிக்காரன்' என்றார் பத்தர்.

"விளையும் பயிர் முளையில்" என்பார்கள். சுப்புரத்தினம் ஒரு பிறவிக் கவிஞர் என்பதற்குரிய அறிகுறிகள் இவர் கல்வே கல்லூரியில் பயின்ற காலையிலேயே தென்பட்டன. சுப்புரத்தினம் இளம் புலவர் பகுதியில் பயின்று வருகிறார். பெரிய வகுப்புப் பாடம் நடந்து கொண்டிருக்கிறது. "சீதையைப் பிரிந்த இராமன் தடாகங்களில் மலர்ந்த தாமரை மலர்களையும், உலவும் அன்னங்களையும் கண்டு வருந்தினான், ஏன்?" என்று ஒரு கேள்வியை விடுத்தார் தமிழாசிரியர். பாடம் கேட்ட மாணவர் அனைவரும்—விடையளிக்க வகையறியாது "திரு திரு" வென்று விழித்தனர். மாணவர்களது முகக் குறிப்பைப் பார்த்துக்கொண்டே வந்த ஆசிரியரின் பார்வை பின் வரிசைக்கும் சென்றது. சுப்புரத்தினத்தின் கண்களும் அவரது உடலசைவும் அவருக்கு விடை தெரியும் என்பதை விளக்கின. பாடம் அவருக்குரியதன்று. எனினும், சுப்புரத்தினத்தை அருகழைத்து, "இக்கேள்விக்கு நீ விடைகூற வல்லையோ" எனக் கேட்டார் ஆசிரியர். "ஆம்" என்றார் சுப்புரத்தினம் அச்சம் கலந்த குரலில். பங்காருப் பத்தர் அவருக்குத் தைரியம் கூறி விடையளிக்கும்படி கூறினர். "சீதையின் கைகள், முகம், கண்கள், தாமரை மலரையும் அவளது நடை அன்னத்தையும் நிகர்த்தவை. தாமரை மலரையும், அன்னத்தையும் கண்டதும் இராமனுக்குத் தன் மனைவியின் நினைவேற்பட்டது. அவன் வருந்தினான்" என்றார் நமது இளம் புலவர். ஆசிரியர் அடைந்த ஆனந்தத்திற்கும் மாணவர்கள் அடைந்த ஆச்சரியத்துக்கும் அளவேது!

### தேர்வு

கல்வே கல்லூரியில் புலவர் வகுப்புக்குச் சேர்க்கப்பட்ட மாணவர்களுக்கு, சேர்ந்த ஒரு வருடத்தில் முடிவான தேர்வுக்குத் தகுதியுடையவர்கள்தானா என்பதை அறிய, தேர்வு ஒன்று நடைபெறும். அத் தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கு மாத்திரம்தான் முடிவுத் தேர்வில் கலந்துகொள்ள அனுமதியுண்டு. நம் சுப்புரத்தினம் சேர்ந்த ஆறாவது மாதத்தில் அத்தகைய ஆரம்பத் தேர்வு ஒன்று வந்தது. அவரது கல்வித் திறமையினால் அவருக்கு அத் தேர்வில் கலந்துகொள்ள அனுமதி கிடைத்தது. தேர்வில்அவர் முதன்மையாக வெற்றி பெற்றார். அது மட்டுமல்ல, உபகாரச் சம்பளத் தேர்விலும் முதன்மையாகத் தேறினர்.

கல்வே கல்லூரியில் சேர்ந்த பிறகு இலக்கிய இலக்கணம் தவிர வேறு எதிலும் அவரது உள்ளம்

சென்றதில்லை. எனவே 18 வயது ஆகுமுன்பே பிரஞ்சு இந்தியா தமிழ் வித்வான் முடிவுத் தேர்தலில் முப்பது மாணவர்களில் முதல் மாணவராகத் தேறினர் சுப்பு ரத்தினம்.

## ஆசிரியரானர்!

தேறிய உடனே வித்வான் சுப்புரத்தினம் நிரவியில் தமிழ் வாத்தியாராக நியமிக்கப்பட்டார். அப்பொழுது அவருக்கு வயது பதினெட்டு. நிரவி என்பது காரைக் காலை அடுத்துள்ள ஒரு சிற்றூர். உத்தியோகத்தை ஏற்றுக்கொள்ளக் கவிஞரின் தந்தையார் கவிஞரை அங்கு அழைத்துச் சென்றார். வித்வான் சுப்புரத்தி னம் உத்தியோகம் ஏற்கும் தினத்தன்றுதான் அப் பள்ளிக்கூடத்தின் திறப்பு விழாவும். திறப்பு விழா முறைப்படி நடைபெற்றது. ஊர் மக்கள் குழுமி யிருந் தனர். அவர்கள் அனைவரும் கவிஞரின் தந்தைதான் பள்ளிக்கூடத்திற்குப் புதிதாக வந்துள்ள தமிழ் வாத்தி யார் என்று எண்ணி யிருந்தனர். தலைமை உபாத்தியாயர் சிறுவனுகிய நம் கவிஞரைக் கூப்பிட்டு, "நீர் தமிழ் உபாத்தியாயரானபடியால், இவ் விழாவில் பூசையை முறைப்படி நடத்த உமக்குத்தான் தெரியும். நீர் பூசை யைச் செய்யும்" என்று சொன்னபொழுதுதான் அங்கி ருந்தோருக்கு அச்சிறுவன்தான் உபாத்தியாயர் என்பது தெரிந்தது. "இந்தப் பையனு வாத்தியாரு! இவ்வளவு சின்னப் பையன் வாத்தியாரா!! என்று ஆச்சரியமடைந் தனர் நிரவி மக்கள்.

## மதிப்புக்குரியவர்

சுப்புரத்தினம் வேலை பார்த்து வந்த பள்ளிக் கூடத்திற்கு எதிரில் ஒரு வீடு. விசுவலிங்கம் பிள்ளை என்ற தமிழ் வித்வான் அதில் வசித்து வந்தார். "சங்கப் பலகை" என்பது அவர் வீட்டுத் திண் ணைக்குப் பெயர். அடிக்கடி அங்குத் தமிழ்ப் பிரசங் கங்கள் நடந்து கொண்டிருக்கும். ஒரு சமயம் வித் வான் விசுவலிங்கம் பிள்ளை பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற் புராணப் பிரசங்கம் செய்தபொழுது, "அல்லை யீதல்லை யீதென மறைகளும்" எனத் தொடங்கி "ஆசையென் சொல்வழி கேளா" என முடியும் அவைபடக்கச் செய்யுளை, "ஆசை யென் சொல்வழி கேளாய்" எனக் கூறி முடித்து விரித் துரைத்தார். இதைச் செவியுற்ற நமது இளம் புலவர் வாளா யிராமல், "கேளாய்" இல்லிங்க, "கேளா" என்று இருக்க வேண்டுங்க என்றார். விசுவலிங்கம் பிள்ளைக்குத் 'தான்' என்ற அகம்பாவம். "ஒரு சின்ன பயல் என் சொற்பொழிவில் குற்றங் காண்பதா?" என்ற சினம். 'நீ சின்ன பிள்ளை உனக்கென்னப்பா தெரியும்?" என்று சொல்லிப் பொருட்படுத்தாமல் தம் சொற்பொழிவைத் தொடர்ந்து நடத்தினர். அங் கிருந்த சுப்பையாப் பிள்ளை என்ற தமிழன்பர் ஓர் ஆளை அனுப்பித் திருவிளையாடற் புராணத்தை எடுத்து வரச் செய்தார். அதைப் பார்த்தபொழுது "கேளா" என்றே இருந்தது. அவர் அதைக் காண்பித்தார் எல் லோருக்கும். விசுவலிங்கம் பிள்ளை முகத்தில் ஈயாட வில்லை. அன்று முதல் உருவத்தால் சிறியவராகக் காணப்பட்ட நமது கவிஞர்—அவ்வூரார் மதிப்பில் பெரியவரானர். அவரிடம் எல்லோரும் அன்பாகவும், மரியாதையாகவும் நடக்கத் தொடங்கினர்.

## மணமும் மக்கட்பேறும்

கவிஞர் தமது 29-வது வயதில் பெருமாத்தூர் திரு. பரதேசி முதலியாரின் திருமகள் பழனியம்மாளை மணம் புரிந்து கொண்டார். இல்லற வாழ்க்கை இனிது நடந்தது. 1922-ம் ஆண்டில் முதற் பெண்ணுக சரசு வதி பிறந்தது.

கவிஞருக்குள்ள ஒரே திருமகன் மன்னர் மன்னன், (கோபதி) தற்போது வயது 18 புதுவை கலோனியல் கல்லூரியில் பிரெஞ்சு பீ. ஏ. வகுப்பில் படித்துக் கொண் டிருக்கிறன். கவிஞரின் உயர்வும் திறமையும் கற்பனை யுள்ளமும் மன்னர் மன்னனிடம் பிரதி பலிக்கின்றன. அவன் நாட்டுக் கேற்ற நல்ல மூளை.

மன்னர் மன்னனுக்கு இளையவர் வேனிலார், (வசந்தா) அழகியார் (ரமணி) என்ற இரு பெண்மணி கள் இருக்கின்றனர்.

## பக்தர் சுப்புரத்தினம்.

அந் நாளில் கவிஞருக்குக் கடவுள் பக்தி மிக வுண்டு. மைலம் சுப்ரமணியர் ஆண்டுக் கொருமுறை மாசி மகத்திற்காகப் புதுவைக்கு எழுந்தருளுவார். கவி ஞர் பக்திப் பெருக்கால் பாமாலை புனைந்து சூடுவார். பஜனைகளுக்குப் பாட்டுகள் இயற்றித் தருவார். பாடு வார். அந்தப் பாட்டுக்களின் தொகுப்பு 1926-ல் "சுப் ரமணியர் துதியமுது" என்ற புத்தகமாக பக்தர்களை மகிழ்வித்தது.

அந்தப் பாடல்களைப் படித்து அவரைப் பெரிய மகானென்று மதித்து நேரில் தரிசிக்க வந்த பக்தர்கள் பலர், பீடியைக் கையில் பிடித்துக் கொண்டு கிறுப்புத் தலையுடன் காட்சிதரும் கவிஞரைக்கண்டு ஏமாற்றத்தோடு திரும்பினர். பக்தியின் போக்கு!

## உடற் பயிற்சி.

கவிஞர் உள்ளத் திண்மையோடு உடல் வலிவும் படைத்தவர். சிறு வயதிலிருந்து உடற் பயிற்சியில் அதிக ஊக்கமுடையவர். சிலம்பம், குத்து வரிசை முத லியவற்றில் நல்ல பயிற்சியும் அனுபவமும் உண்டு.

"சுப்புரத்தினமா! மகாமுரடாராச்சே!" என் பார்கள் புதுவையில். நேர்மை வழிச் செல்வதிலே கவிஞர் உண்மையில் முரடர்தான்!

கவிஞருக்கு சிலம்பக்கூட வாத்தியாராக இருந்தவர் வேணு நாய்க்கர் என்பவர். அவர் சுப்ரமணிய பாரதியாரின் நண்பர், மெய்க்காப்பாளர்.

### பாரதியார் தொடர்பு.

ஒரு சமயம் வேணு நாய்க்கர் வீட்டில் திருமணம் ஒன்று நடைபெற்றது. நண்பர்கள் கூடியிருந்த இடத்தில் கவிஞர் சுப்புரத்தினம், பாரதியாரின் "வீர சுதந்திரம்" என்ற பாட்டை உணர்ச்சியோடு, தன்யாசி ராகத்தில் பாடிக்கொண்டிருந்தார். பின்புறம் பாரதியார் வந்தமர்ந்தது அவருக்குத் தெரியாது. பாட்டு முடிந்ததும் பாரதியார் சொன்னர்:—

"நான் அமைத்த மெட்டில், ராகத்தில் என் கருத்தின்படி சிறிதும் பிசகாது நன்ருகப் பாடினுய்," என்று. மேலும் பாரதியார் கவிஞரைப் பாராட்டினர். ஊக்குவித்தார். வேணு நாய்க்கரால் சுப்புரத்தினம் பாரதியாருக்கு அறிமுகப் படுத்தப்பட்டார்.

இந்த சந்திப்புக்குப் பிறகு பாரதியாருக்கும் கவிஞருக்கும் நெருங்கிய நட்பு ஏற்பட்டது. பாரதியாரின் நம்பிக்கைக்கும் அன்புக்கு முரிய தோழர்களில் முதல்வராளுர் கவிஞர். வ. வே. சு. ஐயர், அரவிந்தர் முதலியோருடன் பழக்கமும் நட்பும் ஏற்பட்டது. ஓய்வு நேரங்களை அவர்களோடு கழிப்பார் பாரதியார் வீட்டில்.

### சக்திப் பாட்டு.

ஒரு நாள் வ. வே. சு. ஐயர், பாரதியார், சுப்புரத்தினம் மற்றும் பல நண்பர்கள் பாரதியார் வீட்டில் கூடியிருந்தனர். கவிஞர்களைப் பற்றியும், கவிதைகளைப் பற்றியும் பேச்சு எழுந்தது. விவாதித்துக் கொண்டிருந்தனர். பேச்சினிடையே பாரதியார் கூறினர். "சுப்புரத்தினம் ஒரு கவி, அவருக்குக் கவி பாட வருமே" என்று

அதைக் கேட்ட வ. வே. சு. ஐயரும், மற்றும் சிலரும் ஏளனம் கலந்த குரலில் "பாடட்டுமே பார்க்கலாம்" என்ருர்கள்.

கம்பீரமாக, "பாடு!" என்ருர் பாரதியார். நம் கவிஞரை நோக்கி. அவரது குரலில் அன்பு, ஆக்ஞை, ஆத்திரம், எல்லாம் கலந்திருந்தன. சொல்லி வாய் மூடு முன்னே எழுந்தார் கவிஞர். பாரதியார் வழக்கமாகப் பாட்டெழுதும் பெட்டியின் முன் அமர்ந்தார். எழுதினர், "எங்கெங்கு காணினும் சக்தியடா!" என்ற பாட்டை, பாரதியார் ஆவலோடு கவனித்து வந்தார். முடிந்ததும் அதை வாங்கிப் படித்துக் காண்பித்தார். கூடி யிருந்தோர் அனைவரும் மூக்கின்மேல் விரலை வைத்தனர்.

"பாம்பின் கால் பாம்பறியும்" என்பது போல் கவிஞனுக்குத்தான் மற்ருெரு கவிஞனை அறிய முடியும் என்பதை பாரதியார் மெய்ப்பித்தார்.

பாரதியார் தன் கைப்பட அப் பாட்டின் மேல் "சுப்ரமணிய பாரதியார் கவிதா மண்டலத்தைச் சேர்ந்த கனக—சுப்புரத்தினம் பாடியது" என்ற குறிப்பை எழுதி, சென்னை "சுதேச மித்திரன்" பத்திரிகைக்கு அனுப்பினர். பத்திரிகையில் இதைக் கண்ட தமிழ் நாடு, உயிர்க் கவிஞர் ஒருவர் தோன்றியுள்ளதை அறிந்தது. பின்னர் அக் கவிதை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு, "Bombay Standard" என்ற பத்திரிகையில் வந்தது. பின்னர் கவிதா மண்டலத்திலும் வந்தது.

### பார்ப்பனரல்லாதார் பிரச்சினை

ஒரு நாள், பாரதியார், வ. வே. சு ஐயர். கவிஞர் மற்றும் சிலர் கூடிப் பேசிக் கொண்டிருந்தனர். புதுவை முத்தியால் பேட்டை கிருஷ்ணசாமி என்பவர் பாரதியாருக்கும், கவிஞருக்கும் நண்பர். கைப்புறத்தில் அடக்கிய "ஜஸ்டிஸ்" பத்திரிகையோடு அங்கு வந்தார். "வா! கிருஷ்ணு!" என்று பாரதியாரும் மற்றவரும் வரவேற்றனர். வ. வே. சு. ஐயரின் கண்கள் கிருஷ்ணனின் கைப்புறத்தை நோக்கின.

"கிருஷ்ணு! அது என்ன பத்திரிகை? கொடு" என்று கேட்டார் வ. வெ. சு. ஐயர். அது "ஜஸ்டிஸ்" பத்திரிகையாக இருக்கு மென்று அவர் நினைத்திருக்கமாட்டார்.

கிருஷ்ணன் சிறிது தயக்கத்திற்குப் பின், துணிச்சலோடு "இது "ஜஸ்டிஸ்" பத்திரிகை" என்ருர்.

வ. வே. சு. ஐயர் கையில் வாங்கிக் கொண்டார். படிக்கவில்லை. அவருக்குச் சிறிது வருத்தம்; அது முகத்தில் தாண்டவ மாடியது.

அவர் சொன்னர்; "ஏன் கிருஷ்ணு! பொருளாதாரம், உத்தியோகம் முதலிய துறைகளில் பிராமணரல்லாதார் முன்னேறி, பிராமணருடன் சம நிலை அடைய வேண்டும் என்பது "ஜஸ்டிஸ்" பத்திரிகையின் நோக்கம், பிராமண ரல்லாதார் அந் நிலையை அடைய முயலுங் காலமெல்லாம் பிராமணர்கள் சும்மாவா இருந்து வருவார்கள்? அவர்களும் முன்னேறிக் கொண்டுதான் இருப்பார்கள். எனவே பிராமண ரல்லாதார் சம நிலையுடைய முடியாது என்பது என் கருத்து."

இதை ஐயர் கூறி விட்டு "இஹிஹி" என்று சிரித்துக் கொண்டு பாரதியாரைப் பார்வையால் இதற்கு ஒப்பம் கேட்டார். பாரதியார் நடு நிலைமை வகித்தார். ஒரு சார்பில் அவர் நுழைந்திருப்பாராளுல், நிலைமை மோசமாகி யிருக்கும், பாரதியார் வ. வே. சு. ஐயரைத் திட்டாமல் விட்ட வரையில் நலமே என்று அங்கிருந்த

வர்கள் நினைத்தார்கள். ஆனால் நம் கவிஞர் வெடுக்கென்று கேட்டார் ஐயரைப் பார்த்து:—"பிராமணரல்லாதார் மிகப் பெரும்பாலோர், அடிதடியில் கிளம்பி விட்டாலோ?" என்று.

சிறிது நேரம் அங்கு மௌனம் நிலவிற்று. பிறகு ஐயர் வேறு துறையில் பேச்சைத் திருப்பினர். அவர் சென்ற பிறகு தனியாக பாரதியார், கிருஷ்ணசாமி, கவிஞர் இருவரிடத்திலும் சொன்னர் :—

"சுப்புரத்தினம் கேட்டது சரியான கேள்வி. ஆணித்தரமான பேச்சு: அப்படித்தான், பயப்படக் கூடாது. ஜனங்களின்—பெரும்பாலோரின்—அபீஷ்டம், கொடிய கட்டுத் திட்டமும் சட்டங்களும் தூளாகும்படி, அடிதடி சகிதம் உண்டாவதுதான் புரட்சி. அதை நிலை நிறுத்துவது தான் மக்களின் வெற்றி," என்று.

தனக்கு 'பாரதியாரிடம் மதிப்பு ஏற்பட்டதற்கு முக்கிய நிகழ்ச்சி இது" என்று கவிஞர் இன்றும் அடிக்கடி சொல்வதுண்டு.

## பால் காய்ச்சிய படலம்

பாரதியார் குடும்பம் ஊரில் இல்லை. அவருக்குத் துணை கவிஞர்தான். இரவு உணவுக்குப் பின் படுக்கும் பொழுது பாரதியார் பால் குடிப்பது வழக்கம். நம் கவிஞர் தூங்கி விட்டார். பாரதியார் பால் காய்ச்சுகிறார். முயற்சி கைகூட வில்லை. கவிஞரை பாரதியார் எழுப்பினர். "பால் சுட வைக்கும் வித்தை உமக்கு வருமோ?" என்று கேட்டார்,

"ஓ" என்றார் கவிஞர்.

மாடியிலிருந்து கீழிறங்கி வந்து அடுப்பின் மேல் இருந்த பாலில் கவிஞர் சூடேற்றத் தொடங்கினர். பாரதியார் அடுப்பிலிட்டுக் கொளுத்திய காகிதம் போக மீதி யிருந்ததை பாரதி தாசன் கொளுத்தினர். வெகு நேரமாகியும் சூடேற வில்லை. இவரது முயற்சியும் அவ்வாறே முடிந்தது. பாரதியார் வந்தார். முயற்சியைப் பார்த்தார். பாலையும் தொட்டுப் பார்த்தார். "தங்களுக்கும் இழுப்போ?" என்று கேட்டார் புன்னகையோடு. இருவரும் புனராலோசனை செய்தனர். மெதுவாகக் கண்டு பிடித்து விட்டனர் காகிதக் கனல் பாலைச் சூடாக்கப் போதாது என்பதை. பிறகு சுள்ளி கொளுத்திப் பால் சூடேற்றப் பட்டது.

## பெண்ணின் பெருமை

அப்பொழுது கவிஞர் மக்கள் சமூகத்தில் பெண் இனத்தின் பயனைப் பற்றியும், அவர்கள் நிலைமை பற்றியும் கூறினர். பாரதியார் அதனை ஒப்புக் கொண்டு பெண்கள் சுதந்தரம் பற்றி உருக்கமாகவும் ஆற்றலுமையோடும் பேசினர். மறு நாள் அந்தக் கருத்துக்கள் பெண்ணின் பெருமை பற்றிய பாரதியாரின் பாடலாகப் பரிணமித்து கவிஞருக்கு இன்ப மளித்ததாம்.

## காற்றும் மழையும்.

நம் கவிஞர் நல்ல உடல் வலிமை பெற்றவர். நோய் நொடிகள் அவரை அணுகினதே இல்லை யென்று சொல்லலாம். ஆனால் நோய் நொடிகளைக் காட்டிலும் பெரிய ஆபத்துக்களுக்கு ஆளாகித் தப்பி யிருக்கிறார். அவற்றி லொன்றைக் கூறுவோம்.

ஒரு நாள் இரவு 10 மணி. பெருங் காற்றும் மழையும் ஆரம்பித்தன. ஆலங் குப்பம் வைத்திலிங்கம், புதுவை கல்வே கல்லூரி "அட்டெண்டர்" வேலாயுதம் இவர்களோடு கவிஞர் ஆலங் குப்பம் பாடசாலைக் கட்டிடம் ஒன்றில் இருக்கிறார். காற்றும் மழையும் பலத்து, "கட்டிடமும் சுவரோடு பறக்கும்" என்ற நிலை உண்டாகி வருகிறது.

சிறிது தொலைவிலுள்ள கோயில் கட்டடத்திற்குப் போய் உயிர் தப்பலா மென்று மூவரும் தோளோடு தோள் பின்னியபடி வெளியே வருகின்றனர். காற்று மூவரையும் தூக்கித் தூக்கி எறிகிறது, சிறிது நேரத்திலே, வெள்ளம் அலை மோதும் ஆழ்ந்த கழனியில் மூவரும் கிடக்கிறார்கள். வீசி யெறிந்த குறுந்தடி போல, பனை மரங்கள் பெயர்ந்து சுழன்று பறக்கின்றன. இன்ன திசையில், இன்ன இடத்தில் இருக்கிறோம் என்ற உணர்வே யாருக்கும் இல்லை.

காரிருள், காற்றின் கோரமும் மழையும் தணிய வில்லை. கவிஞர் திசை கண்டு பிடிக்கிறார், அந்த நிலையில்?

மூச்சுத் திணறி, பேச்சற்றிருக்கும் இரு தலைகளைத் தொடையிலும் வயிற்றிலுமாக வைத்தணைத்துக் கொண்டு, முதுகினால் காற்றிலிருந்து அவர்களைக் காத்த வண்ணம்! இடை யிடையே தோன்றுகின்ற மின்னலில் சிறிது தலை தூக்கிப் பார்த்து இமைப் போதில் கவிழ்த்துக் கொள்கிறார், கடைசியாக மின்னலின் உதவியால் தொலைவில் இரண்டு ஸ்தூபிகள் நிற்பது தென்பட்டன.

"ஆலங் குப்பத்துப் பெருமாள் கோவிலுக்கு ஒரு ஸ்தூபிதான்" என்பது கவிஞரின் நினைவு, தென்பட்டதோ இரண்டு. சந்தேகம். எனவே தன் வாய்க்கு வெகு அருகில் மடியில் உள்ள வைத்திலிங்கத்தின் செவியை நோக்கி வெகு நேரமாகக் கூவுகிறார். "நம்மூர் கோவிலுக்கு இரண்டு ஸ்தூபியா?" என்று.

பல கூச்சலுக்குப் பின் "ஆம்" என்கிறார் பாதி உயிராகக் கிடந்த வைத்திலிங்கம்.

உடல் வளமுள்ள வைத்திலிங்கத்தையும், விச்சுளியான வேலாயுதத்தையும் பெருங் காற்றால் மூச்சுப்

போகாத வகையில் ஒருவருக் கொருவரை ஆதரவாகப் பொருத்தி வைத்து விட்டு ஸ்தூபி கண்ட திக்கு நோக்கிப் போகிறார் காரிருளில் கவிஞர். காற்று அவரைத் தலை கீழாகத் தூக்கி எறிகிறது. ஆயிரக் கணக்கான முட்கள் உடலில் குத்தி முறிந்து போகின்றன கைப் பிடிச் சுவரில்லாத வயற் கிணறு, அதில் வீழ்கிறார். அக் கிணற்றில் கொந்தளிக்கும் அலைகள் புரட்டித் தள்ளுகின்றன, காட்டாமணக்குச் செடி யொன்றைப் பற்றிக் கொண்டு தப்புகிறார். பிறகு கோயில் வெளிச் சுவரைச் சென்று தொடுகிறார்.

அவர்கள் இருக்கும் திக்கு நோக்கினார். இன்ன பக்கம் போனால் இவ்வளவு தொலைவு, சென்று அவர்களைத் தூக்கிவந்துவிடலாம் என்று முடிவு செய்தார். வெகு தொல்லையோடு இருவரையும் கோயிலில் கொண்டு வந்து சேர்த்து விட்டார்.

## பொழுது விடிந்தது

இரவு 10-மணிக்கு ஆரம்பித்த அந்த கோரமான காற்றின்-பெருமழையின்-சினம் விடியற்காலை 3-மணிக்குத் தணிந்தது. பொழுது விடிந்தது.

ஆலங்குப்பத்து நாய்க்கர்-பெரிய மிராசுதர்-அவருடன் சேர்ந்து, தரை மட்டமாகியுள்ள ஊரையும்; ஆடு மாடுகள் தரையில் புதையுண்ட அடையாளங்களையும், மற்றும் பல சேதங்களையும் சுற்றிப் பார்த்துவிட்டு, 5 மைல் தொலைவிலுள்ள புதுவைக்குக் கவிஞர் புறப்பட்டு வருகிறார்.

வீட்டில் சேதமின்மை கண்டு நிம்மதியடைந்தார். கட்டிலில் படுத்தார். பெருங் காய்ச்சலோடு தூக்கத்தில் ஆழ்ந்தார். நோயறியாத கவிஞரின் உடல், உட்புகுந்த எண்ணிறந்த முட்களின் உபாதையால் துடித்துக்கொண்டிருந்தது, வீட்டார் எல்லோரும் அழுதுவிட்டனர்.

## ஆரவிந்தரின் பாராட்டு

சில நாட்களுக்குப் பிறகு, ஆலங்குப்பத்தார் வாயிலாக இந் நிகழ்ச்சியைக் கேள்வியுற்றார் பாரதியார். கவிஞர் வீட்டிற்கு வந்து நடந்ததைக் கேட்டறிந்தார். வியப்படைந்தார். தனக்கு வியப்புக்குரிய ஒன்றை அடுத்த நாழிகைக்குள் சென்று அரவிந்தரிடம் சொல்லுவார் பாரதியார்.

கவிஞரை அழைத்துக்கொண்டு அரவிந்தரிடம் சென்று நடந்த செய்தியை விளக்கிச் சொன்னார். பொறுமையோடு கேட்டிருந்த அரவிந்தர் ஆங்கிலத்தில் சொல்லுகிறார், பாரதியார் அதைத் தமிழ்ப்படுத்துகிறார்.

"மனிதனுடைய சொந்த நினைவையும் செயலையும் வாயில் போட்டுக்கொண்ட கோரமான காற்றும் மழையும் கடும் போர் புரியும் உக்கிரத்திலும், கோயிலை நீ தெரிந்து கொண்டு சென்றபின், உன் அன்பர்களைக் காப்பாற்ற மீண்டும் திரும்பி வந்தாய், காப்பாற்றினாய். இந்த எண்ணமும் செயலும் அருமையானவை. இன்றைய நாட்டு வாலிபர்களுக்கு இந்தப் பிறர் நலம் நாடும் பெருங் குணம் வேண்டற்பாலது."

## பத்திரிகையில்

அந்தப் பெருங் காற்றும் மழையும் புதுவைப் பகுதிகளில் விளைத்த சேதங்கள் பற்றி பாரதியார் பத்திரிகைகளுக்குப் பல கட்டுரைகள் எழுதினார்.

அருகில் சில ஆண்டுகளுக்கு முன்னே, காலஞ் சென்ற பாரதியாரின் கட்டுரைகள், பாட்டுக்களை "சுதேச மித்திரன்" பழைய பிரதிகளிலிருந்து தேடி எடுப்பதற்கென, எழுத்தாளர் வ. ரா. உள்ளிட்ட ஒரு கமிட்டியை நியமித்தது பலருக்கு நினைவிருக்கலாம். அந்த செயற்குழு வெளிக்குக் காட்டாமல் விட்டுவிட நினைத்தவற்றுள், "காற்றும்-கனக—சுப்புரத்தினமும்" என்பது பற்றிய பாரதியாரின் கட்டுரையும், கவிஞரின் 'சக்திப் பாட்டு'க்கு அவர் எழுதிய குறிப்பும், பாரதியார் உட்பகைக்கு ஆளானபொழுது, நம் கவிஞர், அயர்லாந்து கவிஞர் வெற்ஃகேனையும், வட இந்தியக் கவிகள் தாகூர், அரவிந்தர், சரோஜனி யம்மையார், தமிழ் நாட்டுக் கவி பாரதியார் இவர்கள் அனைவரையும் ஒப்பிட்டு எழுதிய கட்டுரையும் குறிப்பிடத் தக்கவை.

## கவிஞர் சிறைப்பட்டார்.

சென்ற மகா யுத்தம் முடிந்தவுடன் 1919-ல் பிரஞ்சு இந்தியாவில் எல்லாத் தேர்தல்களும் தொடர்ந்து நடந்தன அப்பொழுது புதுவையில் திரு. ஆன்றிகெப்ளே அவர்களுக்கிருந்த அரசினர் செல்வாக்கு அளவிடுதற்கரியது. கவர்னர் முதல் சிப்பாய் வரை எல்லா அதிகாரிகளும் கெப்ளேயின் சட்டைப் பையில்!

அப்பொழுது கவிஞர் 5050 ஓட்டர்கள் உள்ள வட்டமான திருபுவனை கொம்முயினில் ஆசிரியர். தேர்தல் நடந்தது. கவிஞர் ஆதரிக்கும் திரு. குட்டியா சபாபதிப் பிள்ளைக்கே எல்லா ஓட்டுக்களும் விழுந்தன. கெப்ளேயுக்கு விழுந்ததாகப் பொய்க் கணக்கு எழுத முயன்ற அதிகாரிகள் முயற்சியைப் பயன்படாமற் செய்தது கவிஞரின் குற்றமாயிற்று!

மேலும் தேர்தல் சமயத்தில் அவரைச் சிறைப் படுத்தி விட்டால் தேர்தல்களை விருப்பம்போல் நடத்திக் கொள்ளலாம் என்று, கவிஞர் மேல் பல "வாரண்டுகள்" பிறப்பிக்கப்பட்டன. அவர் அஞ்சவில்லை. பின்வாங்கவுமில்லை. வாக்காளரின் பேராதரவினால் நான்கு தேர்தல்களையும் வெற்றிகரமாக முடித்துக்கொண்டு தாமாக நீதி மன்றம் சென்றார். 1-மாதம் 3-நாள் சிறையில் (ரிமாண்ட்) வைக்கப்பட்டார்.

மேற்படி வழக்கு 10-மாதம் வரை நடை பெற்று வந்து, பிரஞ்சு அரசாங்கப் போர் வெற்றிகாரணமாக அளிக்கப்பட்ட பொது மன்னிப்புச் சட்டத்தின்படி கை விடப்பட்டது.

### அறிஞர் சுப்புரத்தினம்

1928-ம் ஆண்டில் சுய மரியாதை இயக்கக் கொள்கைகள் கடவுள் பக்தரான கவிஞர் மனதைக் கவர்ந்தன. உண்மையெனப் பட்டதை ஒளிக்காது வெளிப்படுத்தும் கவிஞர், 1930-ம் ஆண்டிலே "தாழ்த்தப் பட்டோர் சமத்துவப் பாட்டு" மூலம் தமது எண்ணங்களை நாட்டுக்கு அறிவித்தார். பக்தர் சுப்புரத்தினம் அறிஞர் சுப்புரத்தினமானர். அவரது ஆரம்ப உணர்ச்சியும் பிரசார வேகமும் அந்த நூலில் பரக்கக் காணலாம்.

பிறகு தன்மானக் கொள்கையைக் கடைக்காலாக வைத்து "சஞ்சீவி பர்வதத்தின் சாரல்" என்ற காதல் காவியத்தை எழுப்பினர். சுயமரியாதை இயக்கம் பெருமையுற்றது. அவரது கவிதைகளை நாடு வரவேற்றது.

"புதுவை முரசு" என்ற வாரப் பத்திரிகை வெளியிட்டார். தன் மானப் போர் முரசு கொட்டினர். கவிஞரின் "கைம்மைப்பழி" "மூடத் திருமணம்" "சுய மரியாதை போதனை" போன்ற கவிதைகள் இளைஞர்கள் உள்ளங்களைக் கவர்ந்தன; கூட்டங்கள் மேடைகளில் முழங்கின. இயக்கத்தில்—நாட்டில் புத்துணர்ச்சியும் புது வேகமும் தோன்றின.

### கவிதா மண்டலம்

1935-ம் ஆண்டில் "சுப்பிரமணிய பாரதியார் கவிதா மண்டலம்" என்ற பெயரால் முழுதும் கவிதையாகவே ஒரு பத்திரிகை நடத்தினர். அது மக்களின் போதரவைப் பெற்றது, எனினும் புதுவை அரசினரின் ஆதரவைப் பெற முடியாது நின்று விட்டது.

புதுவை. திரு.ச. சிவப்பிரகாசம், போன்ற பலர் கவிஞரின் மாணவர்கள். கவிஞரின் தொடர்பால், தொண்டால், எழுத்து வன்மையும், கவிபுனையும் ஆற்றலும் பெற்ற இளைஞர்கள் - புலவர்கள் - பலர், இன்று தமிழ் நாட்டில் குரல் எழுப்பத் தொடங்கி விட்டனர்.

பாரதியாரைப் பின்பற்றிப்பலர் கவி பாடியதுபோல், இன்று நம் புரட்சிக் கவிஞரைப் பின்பற்றி அவர் வழியிலே - கொள்கையிலே பாடும் "கவிதா மண்டலம்" ஒன்று உருவாகி வருகிறது. இது நாட்டின் எதிர்காலத்திற்கு நல்ல அறிகுறி.

### நன் மக்கள்.

கவிஞரின் மூத்த பெண் சரசுவதிக்கும், வேலூர் கண்டர் உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியர் வித்வான் திரு. கண்ணப்பருக்கும் 23-1-44-ல் சேலம் கல்லூரித் தலைவர். திரு. ஏ. இராமசாமி. M.A.L.T. அவர்கள் தலைமையில், கரூருக்கு அடுத்த கட்டிப் பாளையத்தில் பதிவுத் திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது. கவிஞரின் புகழின் சின்னமாகத் தோன்றியுள்ளான் பேரன் புகழேந்தி!

கவிஞர் பாடல்களை எழுதுவார். பின்னர் அது எங்கிருக்கிறது, என்னவாயிற்று என்பது பற்றிக் கவலைப்பட மாட்டார். மணம் புரிந்து கொண்டு கணவன் வீடு செல்லும் வரையில் அவற்றையெல்லாம் ஒழுங்காகப் பெயர்த்தெழுதி வைத்துக் காத்து வந்தது பெரிய பாப்பா சரசுவதி.

இன்று அந்தப் பணியைத் தொடர்ந்து சிறப்பாகச் செய்து வருபவன் தம்பி மன்னர் மன்னன். கவிஞரின் மக்கள் நால்வருமே பெற்றோர்க்குப் பெருமையளிப்பவர்களே.

### எதிர்ப்பில் வெளிப்படும் மனித சக்தி

சிறுவயதிலே நம் கவிஞருக்கு வீட்டில் அண்ணன், தங்கை, பெற்றோரின் புறக்கணிப்பும், எதிர்ப்பும் இருந்த தென்பதை ஏற்கனவே கூறியுள்ளோம். அதனோடு மற்றொன்றையும் சொல்ல வேண்டும்.

அவ்வப்போது ஏற்பட்ட எதிர்ப்புக்கள் ஒவ்வொன்றும் கவிஞருக்கு ஊக்கமும், பலமும் தந்து நன்மையாகவே முடிந்திருக்கிறது.

பண்டிதர் தேர்வு கருதி கவிஞர் கல்லூரியில் படிக்கும் பொழுது, ஒருநாள் "இராமாயணக் கருப்பொருள்" என்ற நூலில் "தொக்கரக்கரை" என்று தொடங்கும் செய்யுளுக்கு ஆசிரியர் பங்காரு பத்தர் பொருள் சொல்லத் தொடங்குகிறர். பத்தருக்கோ தெற்றுவாய், அவர் தொடங்கும் பாட்டோ வல்லினம் மிக்க சந்த விருத்தம். ஆசிரியர் அதிகம் தெற்றிவிட்டார், அது அவர் பிழையல்ல, மாணவர் அதிகம் சிரித்து விட்டார், அதுமட்டும் அவர் பிழையா?

பங்காரு பத்தர் பெருஞ் சினங்கொண்டார். அதன் விளைவாகத் தன் ஆயுள் முழுதுங் கவிஞரை எதிர்த்தே வந்தார். ஆசிரியரின் எதிர்ப்பையும் சமாளித்துக்கொண்டு பண்டித பரீட்சையில் முதன்மையாகத் தேறினர் நம் கவிஞர்.

நிரவியில் ஒரு தமிழாசிரியர் தேவைக்கு 20 பேர் போட்டியிட்டனர். அவர்களில் கவிஞரும் ஒருவர். பங்காரு பத்தர் "சுப்புரத்தினம் சின்னப் பையன், ஆசிரியனயிருக்கத் தகுதியற்றவன்" என்று சொன்னதோடு, திரு. தம்பி புருஷோத்தமன் என்ற பிரின்சுபாலையும் சொல்ல வைத்தார்.

இந்த எதிர்ப்பு அவர்கள் இருவருக்கும் எதிரியான திரு. கையார் என்பவருக்கு எட்டிற்று. அவர் கல்வி இலாக்காத் தலைவரின் செயலாளர். "சுப்புரத்தினம் தான்

அதற்கு உரியவர், தகுதியானவர்" என்று சட்டத்தால் எண்பித்துக் காட்டினர் அவர். சுப்புரத்தினம் வாத்தியாரானர்.

கவிஞருக்குக் கல்வி இலாக்கா அதிகாரிகள், ஆணையாளர்கள் ஆகியோரின் எதிர்ப்பு இல்லாத நேரமில்லை. இன்று ஒரு பாடசாலையில் இருப்பார். 8-ம் நாள் வேறு கடுமையான ஊருக்கு மாற்றப்படுவார். கவிஞருக்கும் மக்களுக்குத் தொண்டு செய்யப் புதுப் புது ஊர்கள் கிடைத்துக்கொண்டே இருந்தன.

கவிஞர் ஆசிரியராக இருந்த ஒவ்வொரு ஊரிலும், மக்கள் அவரை நினைத்துக் கொண்டிருக்கும்படியான நற்பணிகள் பல புரிந்திருப்பது இன்றும் நேரில் கேட்டறிவோர்க்கு விளங்கும். மிகையஞ்சி விடுக்கின்ருேம்.

### சுயமரியாதைக் கவி.

பல்லாண்டுகளாக மக்களின் இரத்தத்தோடு கலந்து போயுள்ள அறியாமை, அடிமைத்தனம், சாதி மதம் கடவுள் பெயர்களால் விளைந்துள்ள சமூகக் கேடுகள், ஆகிய வற்றைக் களைந்தெறிந்து, மக்கள் வாழ்வுக்குப் புத்துலகம் சமைக்க வழிகோலின சுயமரியாதைக் கொள்கைகள்.

அந்தக் கொள்கைகள் பரவ, நிலைக்க, அழகுறத்தம் கவிதைகள் மூலம் சங்காதம் புரிந்தார் புரட்சிக் கவிஞர். அதன் பயனைப் புதுவையில் எல்லாத் துறைகளிலும் அவருக்கு எதிர்ப்புத் தோன்றியது. அவ்வளவையும் ஆண்மையோடு சமாளித்தார் கவிஞர். அவற்றின் விளைவே இன்று தமிழகம் பெறுகிறது நல்ல நல்ல கவிதைகள். காவியங்களை! கவிஞர் வாழ்க! வணக்கம்.


ஆசிரியர்
எஸ். எஸ். மாரிசாமி

# நேதாஜி

நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களின் வாழ்க்கை வரலாறும், தேசிய ராணுவ எழுச்சியும் பற்றிய விவரமான நூல்.

சுதந்திரத்திற்காக ஆயுதந் தாங்கிய முதல் போராட்டம் 1857-ல் நடந்தது. அதைத் தொடர்ந்து நடந்த போர்கள் பல. கடைசியாக நமது தலைமுறையில் நேதாஜி சுபாஷின் தலைமையில் நடந்த சுதந்திரப் போராட்டத்தைப்பற்றிய விவரங்களை உணர்ச்சி ததும்பும் வகையில், ஆசிரியர் தமக்கே இயல்பாக உள்ள கனல் சொரியும் நடையில் எழுதியிருக்கிருர்.

300 பக்கங்கள் — 12 பக்கம் படங்கள்
காலிகோ பைண்டு — நாலு வர்ண அட்டையுடன்

விலை ரூ. 3-0-0

இது ஒரு 'தினசரி' வெளியீடு

ஆகஸ்ட் முதல் வாரத்தில் விற்பனைக்குக் கிடைக்கும்

விநியோக உரிமை பெற்றவர்கள்:—

ஜோதி நிலையம்,
திருவல்லிக்கேணி, சென்னை.



# N. S. K. நாடக சபா

மகத்தான 3-வது வாரம்

# "பைத்தியக்காரன்?"

(சமூக நாடகம்)

சென்னை ஒற்றவாடை தியேட்டரில்

கதை வசனம்:
S. V. சகஸ்ரநாமம்
P. நீலகண்டன்

சீன்கள்:
ஓவிய நிபுணர் K. மாதவன்

P. K. பிள்ளை,
மானேஜர்.

# இசைத் தமிழ்

விசு. திருநாவுக்கரசு.

வாழ்க்கையில் அறிவினை வளர்க்கும் கூறு அறிவியல் (Science) செயலையும் வளர்ச்சியையும் ஊட்டும் கூறு கலை (Art.) அவற்றுள் செயலையோ, ஊதியத்தையோ எதிர்பாராமல் உணர்ச்சியை ஊட்டுவதுமட்டும் நோக்கமாகக் கொண்டது கவின் கலை. (Fine arts).

இசை அத்தகைய கவின் கலையைச் சார்ந்தது. எனினும் அவற்றிலும் சிறப்புடையது. ஏனெனில் பிற கவின் கலைகள் கண் முதலிய பிற புலன்கள் வழி மனத்தை இயக்க, இசை புலன்களுள் உயர்ந்த செவிப் புலன் வழி இயக்குவது. செவி, பிற புலன்களிலும் உயர்ந்தது என்பது, அது வானின் கூறுடையது எனச் சித்தாந்தம் கூறுவதால் அறியலாம்.

இச் செவிப் புலனுடன் பிற புலன்களையும்—புலன்களின் புறத் தாக்கின்றி, அகத் தாக்குடன் சார்வதாலேயே **கவிதை** உயர்ந்ததாம். புறத்தாக்கும் அகத்தாக்கும் உள்ளதனாலேயே எல்லாவற்றினும் **நாடகம்** உயர்ந்ததாகக் கருதப்படுகிறது. இந் நாடகத்துள் இயலும், இசையும் ஒன்றிக் கலப்பதுடன் செயலும் சார்தல் அறியத் தக்கது.

இசையும், கூத்தும் இலக்கியத்திற்கு முற்பட்டதாதலின் அதனையும் இயலுடன் ஒப்ப இலக்கியத்துட் புகுத்தி பின்னுளைய இலக்கியத்தை இயலாக்கினர். செயல் நீங்கிய நாடகம் இசையாகிறது.

செவிப் புலத்தாக்கு குன்றிய இசை இயலாகிறது. செவிப் புலத்தாக்குக்குப் பின்னல் குன்றுமானல் அது உரைநடை யாதல் இயல்பு.

இசை செவிப் புலனுக்குமட்டும் புலனுகி இன்பம் பயப்பதானல் அது எம் மொழியில் கேட்பினும் சிறப்பில்லை. ஆனல் அது உளத்துக்கும் (ஆறும் புலனுக்கும்) உறவுடையது. அவ்வுள உறவு இருவகை. அறிவு, உணர்ச்சி என்பன. அறிவு வகையில் எல்லா மொழிகளிலும் துய்க்கக் கூடுமாயினும் **சிறப்பாக தாய் மொழியிலேயே துய்க்கலாம். உணர்ச்சி வகையிலோ தாய் மொழியிலன்றி வேறு எம்மொயினும் துய்க்க இயலாது.**

மனித நாகரிகத்தில் இசை மற்ற யாவற்றினும் முற்பட்டது. ஆயினும் அது பற்றிய ஆராய்ச்சியும், அறிவியல் முறைப்படி அமைந்த தொகுப்பும் பிற்காலத்ததே. தமிழ் நாட்டில் இலக்கியம் தோற்றம் பெற்ற நாளிலேயே, இதன் தொகுப்பு முற்றுப் பெற்றிருந்தது என்பது அதன் மாபெரும் தொன்மையை உணர்த்தும்.

இந் நாள், கேள்வி யறிவில் எப்படிப் பலர்க்கு இனியது தெம்மாங்கு முதலிய மெட்டுகளோ அது போல மிகுதி மக்கள் விரும்பி விடும் காரணத்தால் வட நாட்டிசை உயர்ந்ததாகாது. கர்நாடக இசையே வடநாட்டிசையினும் உயர்வுடையது. இசைப் புலமை வல்ல நல்லறிவாளர் தமிழர் போற்றி வளர்த்த தமிழிசையே கர்நாடக இசை என அறுதியிட்டு உரைக்கின்றனர்.

முதல் நூற்றூண்டுகளி லிருந்த பல்லவர் கல்வெட்டுகளால் இசையில் சுர, தாள, லயங்கள் இன்றைய நிலையில் ஏறத் தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இருந்தமை தெரியவரும். குலோத்துங்க சோழன் சுரங்களை வகுத்தான் என்னும் கலிங்கத்துப் பரணிக் குறிப்பால் அரசர்கள் நிறை புலமையுடன் போற்றிப் புரந்த அருமை புலனுகும். அணிமையிலும் சேர மன்னர் கார்த்திகைத் திருநாள் இராம வர்மா இசை வல்லுனராய் இசைப்பா இயற்றுபவராயு மிருந்தமை காண்க.

கருவித் திற மிக்க இந் நாளில் காணும், இசை நுட்பங் கூட எட்டாத அளவுக்குத் தமிழ் நாட்டில் இசை உயாந்திருந்த தென்பதற்கு அந் நாளைய கருவிகளின் பல திறப் பெருக்கத்தாலும், நுண்மையாலும் அறியலாம். **இன்றைய வீணையினும் பண்டைய யாழ் நுண்ணியது, மிக நுண்ணியது.** யாழின் ஓர் வகை ஆயிரம் நரம்பாலமைந்தது என்பதும் இராவணன் இவ் யாழிலே வாசித்து கான ரசம் பொழிந்தான் என்பதும், பிறவும் கூர்ந்து காணத் தக்கன. இது நிற்க,

இசைக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பைக் குறித்து நெடுந் தொலை பண்டைய நாளைய வரலாற்றைத் துருவ வேண்டா. தெலுங்கிசையில் சிறந்த இசைக் கவிஞரும், ஆராய்ச்சியாளரும் தமிழரே யாதல் காண்க.

தமிழில் இசை நூற்கள் இறந்து விட்டன. காரணம் பல. எனினும் அவற்றின் முழு உருவத்தைக் காண முடிய வில்லை. ஆயினும் அதன் சிதைந்த உருவத்தையேனும் காண சிலப்பதிகாரம் துணை செய்கிறது. அன்றியும் பாமரரிடையே வழங்கி வரும் பள்ளு, சிந்து, லாவணி, குறவஞ்சி இவையும் சிலப்பதிகாரத்து வேட்டுவ வரி, ஆய்ச்சியர் குரவை முதலியனவும் தேவார திருவாசகங்கள் நாலாயிரப் பிரபந்தம் முதலியனவும் திருவாசக வரன் முறையில் பட்டினத்தார், தாயுமானுர், தத்துவராயர், பத்திரகிரியார் முதலியனவும் இசைத் தமிழ்ச் சார்புடையனவே. இவர்கள் **பாடல்கள் பாட்டெனக் கூறப்படாது பாடல் என அன்றும் இன்றும் கூறப் பெறுவதால் இவை இசைப்பா வாதல் ஒரு தலை,** பாட்டு என்பது வெறும் செய்யுளேயும்; பாடல் என்பது இசைப் படுத்தப் பட்டவை என்பதையும் உணர்த்தும்.

PHONE: 8461

# NEWTON & CO.,

ARTISTIC-ENGRAVERS, HALF-TONE, LINE AND
TRI-COLOUR BLOCKS & RUBBER-STAMP MAKERS,

**80, WALLAJAH ROAD, MOUNT ROAD, MADRAS.**

THE PREMIER BLOCK-MAKERS SERVING
THE NEEDS OF ALL THE NEWS AND
ADVERTISING AGENCIES THROUGHOUT THE PROVINCE.

***Prompt execution of Orders. Moderate Charges.***

**Colour-Block-Making-A Speciality.**

ஆயுளை இன்ஷ்யூர் செய்துகொள்ளவும்
ஏஜன்ஸி எடுத்து வேலை செய்யவும்
ஏற்ற கம்பெனி.

**மிட்லண்டு இன்ஷ்யூரன்ஸ்
கம்பெனி லிமிடெட்,**

போஸ்ட் பாக்ஸ் நெம்பர் 1502

**13-14, செக்கண்டு லேன் பீச்,
சென்னை.**

# வேண்டும்

**சா. ர. பக்தவத்சலம்**

1. தளர்வின்றி தன்வாழ்நா ளனைத்தும் தூய
தமிழ் நூல்கள் பலயாத்தே தமிழ்த்தே னுண்டு
மளமளவென் றேபல்நூல் சுவைத்து இந்நாள்
மஞ்சுதமிழ் மகளிற்கே அணிசெய் வித்தாய்
அளவிலநும் அருந்தொண்டு தமிழ கத்தில்
அறிவியக்கக் கோல்காட்டி அடைந்தீர் வெற்றி
உளமார நும்மையும் நும் உளத் தெழுந்த
உயர்கவிக ளனைத்தையும் யாம் போற்றுகின்றோம்.

2. பெண்படைப்பை உய்வித்தீர்; பிற்போக் காளர்
பெருவாழ்வைக் கொலைசெய்து பெரிது வந்து
மண்படைப்பில் காதலுயிர் என்று ரைத்தீர்;
மறையனைத்தும் மறையவரின் மயக்க மென்றீர்;
உண்மை பல உரைத்திட்டீர் ; ஒழித்தீர் கைம்மை
ஒப்புளதோ நும்திறனுக் குலகில் ; உய்யும்
வண்மை பல வரையாது சாற்றி நின்றீர்
வண்டமிழை வாழ்விக்க வந்தீர் இன்று.

3. இயற்கை எழில் ஓவியங்கள் பலவாந் தீட்டி
என்றென்றும் தமிழர்களின் இதயந் தன்னில்
செயற்கைஉரு வாய்அமைத்துச் செம்மை செய்தீர்;
செப்பரிதோ நும்பணிகள் சிறுவன் தன்னால்.
கயற்கண்குழு கரைந்தெழுச்சி யுற்றார்; மற்றும்
காதலெனில் எனவென்று கண்டார்; உங்கள்
புயற் கவிகள் கற்றதினால் புன்மைநீத்தார்;
புரட்சிமனப் பான்மையுடன் உளம்பூ ரித்தார்.

4. தமிழினிமை அமுதுயிர்தேன் மணமா மென்று
தமிழரெலாம் சாற்றிடவே கேட்டதுண்டு;
உமதரிய பாடல்களை உற்று நோக்க
உண்மையது என்றுளத்தில் படவே கண்டேன் ;
சமுதாயம் சீர்திருந்தும் வழியைக் கண்டேன் ;
சரிநிகராய் இலங்குபெரு வாழ்வு கண்டேன் ;
உமையொன்று வேண்டுகிறேன் ஒப்பிலாத
உயர்கவிகள் பலவின்னும் அளித்தல் வேண்டும்.


நாதவிஜயம்
மாரியப்ப சுவாமிகள்
M. S. ஞானமணி
Studio SOBANACHALA mds.
THE GREEN PICTURES
Production
டைரக்ஷன்
R
சந்தர்
கதை.வசனம்
வேலவன்.
M. V. மணி
C.V.V. பந்துலு
கண்ணையபான்
K.P. ஜெயராம்
பங்கஜவல்லி
அன்னபூரணி
லலிதகுமாரி
இசை
கிரீன்
ஆரசெஸ்ட்ரா
நடனம்
S. நடராஜ

# வாண குல வீரர்

(ரா. பி. சேதுப் பிள்ளை, பி.ஏ., பி.எல்.)

தமிழ் நாட்டில் வாணர் என்று பெயர்பெற்ற குறுநில மன்னர் நெடுங்காலம் வாழ்ந்திருந்தார்கள். தென் பெண்ணையாறு பாயும் நடுநாடே அவர் ஆட்சியில் அமைந்த நாடு. அதற்கு மகத நாடு என்ற மறு பெயரும் உண்டு. அதனால் வாணகுல மன்னரை மகதர்கோன் என்றும், மகதேசன் என்றும் தமிழ்ப் பாவலர் புகழ்ந்துரைப்பாராயினர்.

தமிழ்நாட்டு முடிவேந்தரும் பெண்கொள்ளும் பெருமை சான்றது வாணர் குலம். கிள்ளி வளவன் என்ற சோழ மன்னன் ஒரு வாண குல மங்கையை மணந்து வாழ்ந்தான் என்பது மணிமேகலைக் காவியத்தால் விளங்கும். "சீர்த்தி" யென்னும் பெயருடைய அந் நல்லாள் "மாவலி மருமான் சீர்கெழு திருமகள்" என்று போற்றப்படுகின்றாள்.

வாண குல மன்னர் கோட்டை கட்டி அரசாண்ட இடம் ஆறகழூர் எனப்படும். ஆழமான ஆறு அகழிகள் ஒன்றினுள் ஒன்றாக நின்று பாதுகாத்தமையால் ஆறகழூர் என்ற பெயர் அதற்கு அமைந்ததென்பர். ஆறை என்பது அதன் குறுக்கம். எனவே, ஆறைக்கோன் என்ற பெயரும் வாணகுல மன்னனைக் குறிப்பதாயிற்று.

தமிழ் ஆண்மைக்கு ஒரு சான்றாக விளங்கும் கலிங்கப்போரில் கலந்துகொண்ட குறுநில மன்னருள் ஒருவன் வாண குலப் பெருமகன். அவன் தஞ்சைத் தலைவன்; பஞ்சநதிவாணன் என்னும் பெயரினன். காஞ்சிமாநகரினின்றும் எழுந்தது தமிழ்ச் சேனை. புலிக்கொடி தாங்கிய போர்க்களிற்றின்மீது தண்டத் தலைவன்—தொண்டைமான்—பெருமிதமாகச் சென்றான். அவர்க்குப்பின்னே பல்லவர் கோமான்; அவர்க்குப்பின்னே வாணர் கோமான்—இவ்வாறாக நடந்தது தமிழ்ச் சேனை என்று பரணிக் கவிஞர் பாடினார். எனவே, கலிங்க நாட்டில தமிழர் பெற்ற வெற்றியில் பஞ்சநதி வாணனுக்குப் பங்குண்டு என்பது சொல்லாமலே விளங்குமன்றோ?

வாணகுல வீரர் பெரும்பாலும் சோழ மன்னர் சார்பாகவே போர்புரிந்தார்கள். மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தில் பாண்டியிலே போர் மூண்டது. வீரபாண்டியன் சீறி யெழுந்தான்; சிதறிக் கிடந்த மறப்படையைத் திரட்டினான்; சோழர் ஆதிக்கத்தை உதறி எறிந்தான்! வீர சுதந்தரம் பெறுவதற்கு வெம்போர்புரியத் துணிந்தான். குடமலை நாட்டுச் சேரன் படையுதவிசெய்து பாண்டியனை ஆதரித்தான்.

இவற்றையெல்லாம் ஒற்றர் வாயிலாக அறிந்தான் குலோத்துங்கன்; உடனே பாண்டி நாட்டின்மேற் படையெடுத்தான். பள்ளத்திற்பாயும் வெள்ளம்போல் சோழியப்படை பாண்டியிற் புகுந்தது. மதுரைக்குக் கீழ்பால் உள்ள நெட்டூரில் இருதிறத்தாரும் எதிர்த்து நின்றார்கள். செருக்களம் செங்களமாயிற்று. பாண்டியன் முன்னணியில் நின்று கடும்போர்புரிந்தான்; வீர வுரையால் மறப்படையை ஊக்கினான். ஆயினும் அவன் சிறுபடை சலிப்புற்றுத் தளர்ந்தது. புலிக்கொடியின் முன்னே மீன் கொடி தாழ்ந்தது. பாண்டியன் மணி முடி இழந்தான்; பட்டத்தரசியையும், படைகளையும் கைவிட்டு ஓட்டம்பிடித்தான். வீரமும், மானமும் விட்டு ஓடிய மன்னவன்தேவியைச் சோழன் சிறை பிடித்தான்; தன் வேளத்தில் வைத்தான்.

நெட்டூர்க்களத்தில் சோழன் பெற்ற வெற்றியின் புகழ் எட்டுத்திசையும் சென்றது. வாகை மாலை சூடிய வேந்தனையும் வீரரையும் இசைப் பாட்டில் ஏற்றினான் ஒரு பாணப் புலவன். அப் பாட்டைக் கேட்டான் குலோத்துங்கன். ஆனந்த முற்றான், செவிக்குத் தேனெனப் பாணன் வார்த்த தெள்ளிய கவிதையை "அருந்தமிழ் விருந்து" என்று புகழ்ந்தான். அருகே நின்ற அப் புலவனை நோக்கி "உன் பாட்டுக்கு ஒரு நாட்டைப் பரிசளிக்க; ஆசைப்படுகின்றேன்; இப் பாண்டிநாடு இனி உனக்கே உரியது; தந்தேன்" என்றான். கவிக்குலம் களிப்புற்றுக் கூத்தாடிற்று. நல்ல பாட்டுக்கு நாட்டைப் பரிசளித்தான் தமிழ் வேந்தன், என்று பாராட்டினர் ஊரார் எல்லாம்.

சோழன் பேசிய புகழுரை கேட்டு நாணினான் பாணப் புலவன். பாண்டி நாட்டின் அரசுரிமையை ஏற்றுக்கொள்ள அவன் இசையவில்லை. தமிழ்ப் பாட்டின் சுவையறிந்த சோழனைப் பணிந்து எழுந்து "அரசே! பண்ணோடு பழகும் இப் பாணனுக்கு மண்ணாளும் பதவி தகுமா? பைந்தமிழ் வழங்கும் பாண்டி நாட்டை நீயே பாதுகாத்துப் பல்லாண்டு வாழ்க" என்று வாழ்த்தி நின்றான்.

பாண்டிநாட்டில் நிகழ்ந்த இப் போரில் சோழ மன்னர்க்குப் பேருதவி புரிந்தவன் ஒரு வாணகோவரசன். பாண்டியன் சேனையை முறியடித்த பெருமை அவனுக்கே சிறப்பாக உரியதாகும். போர்க்களம் பாடிப் புகழ்பெற்ற பாணனை வாணகோவரசன் தன் தோழனாகக் கொண்டான். போர் ஒழிந்தகாலத்தில் அவனோடு ஆனந்தமாகப் பேசிப் பொழுது போக்கினான்.

ஒருநாள் இரவில் வாணன் மாறுகோலம் பூண்டு யாரு மறியாது வெளிப்பட்டான்; பாணப் புலவனது வீட்டின் அருகே சென்றான். கதவு அடைத்திருந்தது. அதைத் தட்டினான் வாணன். உள்ளே இருந்த பாணன் கதவைத் திறவாமல் யார் என்று கேட்டான். அதற்கு வேறொரு பெயரைச் சொன்னான் வாணன். பெயர் மாறி இருந்தாலும் பேசிய குரல் மாறவில்லை. பாணன் சட்டென்றெழுந்து கதவைத் திறந்தான். வெளியே நின்றவனைக் கட்டித் தழுவிக்கொண்டு "ஐயனே! அருந்தமிழ் வாணனே! அன்று படைத் திறத்தால் பாண்டியன் பேரை மாற்றினாய்! என்றும் கொடைத்திறத்தால் மேகத்தின் பேரை மாற்றினாய்! உன் பெயரை மாற்றுதல் இன்று உனக்கு அரிதோ? என்று நயமுறப் பாடினான் பாணன்.

பின்னொருநாள் பாணன் வீட்டில் உலையேற வில்லை; அமுதுபடி இல்லையென்று அன்புள்ள மனையாள் அறிவித்தாள். வாணகோவரசனைக் கண்டாற் கலி தீரும் என்று சொல்லிப் புறப்பட்டான் பாணன். வாணன் வழக்கம்போல் நண்பனை அன்புடன் வரவேற்றான். "உனது குறையை அறிந்துகொண்டேன்; இதோ வருகிறேன்" என்று வெளியே சென்றான். சிறிதுநேரத்தில் வந்தது ஒரு யானை. வாணன் அதைப் பாணன் முன்னே நிறுத்தி ஏற்றுக்கொள்ளும்படி வேண்டினான். வாணன் 'கிருது' உடனே பாணனுக்கு விளங்கிற்று. புன்னகை பூத்த அவன் முகத்தை நோக்கி "அண்ணலே! கலை வள்ளலே! உலைக்குரிய பண்டம் நாடி உன்னிடம் வந்தேன். குறிப்பறியும் கொற்றவனாகிய நீ, கொலைக்குரிய இவ் விலங்கைக் கொடுத்தாயே! வாணர் கோமானாகிய உனக்கு இந்தப் பாணனோடு என்ன பகை" என்று வினயமாகப் பாடினான். அதுகேட்டு இன்புற்ற வாணன் இனிய பரிசளித்துப் பாணன் கவலையைப் போக்கினான்.

இத்தகைய வாணர் குலம் பலவீரரைத் தமிழகத்திற்குத் தந்தது. அவர்களுள் ஒருவன் ஏகம்ப வாணன். தமிழ்மணங்கமழும் பாமாலையை அவர்க்குச் சூட்டி மகிழ்ந்தனர் செஞ்சொற்கவிஞர். "வாணனைப் புகழ்ந்து பேசாத வாய் உண்டோ? அவன் கொடி தாங்கி நில்லாத கொம்புண்டோ? அவன் அடிபணிந்து நில்லாத அரசுண்டோ என்று வாயாரப் போற்றினர் ஒரு கவிஞர்.

வாழையடி வாழையாக வளர்ந்தது வாணர் குலம். வீரம் விளைத்தது; தமிழை வளர்த்தது. இன்று தமிழ் நாட்டிற்கு அத்தகைய குலம் வேண்டும்; நலம் வேண்டும்.

"தமிழுண்டு தமிழ் மக்கள் உண்டு--இன்பத்
தமிழுக்கு நாளுஞ் செய்வோம் நல்ல தொண்டு
தமிழென்று தோள்தட்டி ஆடு--நல்ல
தமிழ் வெல்க வெல்க என்றே தினம் பாடு.

(பாரதிதாசன்)

1. இக்காலத்தில் சேலம் நாட்டு ஆற்றூர் வட்டத்தில் உள்ள ஆறகளூரே அவ்வூர்.





*Telegram:* "கைலி" மதுரை

**சிவானந்தம் பளயகாட் கம்பெனி லிமிடெட்,**

கைலி வியாபாரம்,

278, ராமநாதபுரம் ரோடு, மதுரை.

*Head Office:* 104, லோயர் சித்பூர் ரோடு, கல்கத்தா.

# தன்மானக் காவலர்

மா. பொ. சிவ ஞன கிராமணியார்
ா

தமிழகத்தில் வாழையடி வாழையாகத் தோன்றி வந்த புலவர் பெருமக்கள் பலராவர். அந்தப்பரம்பரையில் சேர்த்து வைத்து எண்ணத்தக்கப் புலவர்களில் நமது கவிஞர் பாரதி தாசன் அவர்களும் ஒருவராவர்.

பாரதி தாசன் தமிழ் மொழிப் புலவர் மட்டுமல்ல, தமிழ் வழியில் பாடும் புலவருமாவார். தமிழ் இனத்தின் வரலாற்றிற்கும், நாகரிகத்திற்கும் மாறுபட்ட கதைகளையும், கலைகளையும் மறுத்துப் பாடிய முதற் புலவர் அவரே யாவார்! எனவே அவரைத் தமிழினத்தின் தன்மானக் காவலர் என்றால் முற்றும் பொருந்தும்.

கவிஞர் பாரதி தாசன் தமது பெயராலேயே சுப்பிரமணிய பாரதியாரிடம் தமக்குள்ள தொடர்பை நினைவூட்டுகின்றார். பாரதியாரை விட பாரதி தாசன் பல வழிகளில் முன்னேறிச் சென்றிருக்கிறார். அதே போலப் பல வழிகளில் பாரதியாருக்கு மாறுபட்டும் செல்லுகிறார். பொதுவாக நோக்குமிடத்து பாரதி தாசன் பாரதியாரைப்போல தற்காலத் தமிழர்களின் துன்ப நிலையைப் போக்கவே சேவை செய்து வருகிறார்.

பாரதியார், ருஷ்ய நாட்டின் செம்மையெலாம் பாழாகிக் கொடுமையே அறமாகித் தீர்ந்தபோது, மக்கள் திரண்டெழுந்து புரட்சி செய்ததை,

"இமயமலை வீழ்ந்ததுபோல் வீழ்ந்து விட்டான்
ஜார் அரசன், இவனைச் சூழ்ந்து
சமயமுள படிக்கெல்லாம் பொய்கூறி
அறங்கொன்று சதிகள் செய்த
சுமடர்சட சடவென்று சரிந்திட்டார்
புயற் காற்றுச் சூறை தன்னில்
திமுதிமென மரம்விழுந்து நாடெல்லாம்
விறகான செய்தி போலே"

என்று பாடினார். அவர் வழித் தோன்றிய நமது கவிஞர் பாரதி தாசனவர்களும் பாரதியார் ரஷ்ய நாட்டில் கண்ட காட்சியையே தமிழ் நாட்டிலும் காணத் துடிக்கிறார் இங்கும் அந்நிய ஆட்சியைச் சுற்றித் தனிவுடமைக் கொடுமையும், சமயச் சதிகளும் அரணியத்திற் பாம்புகள் போல மலிந்து வளர்ந்து விட்டதை யாரே மறுக்க முடியும்? எனவே பாரதி தாசன், ஏகாதிபத்தியம் ஒழிவதோடு நில்லாது, அதன் துணைகொண்டு வளர்ந்த இதர தீமைகளும் தொலைய வேண்டுமென்று தமிழ் பாக்கொண்டு பறைசாற்றுகின்றார்.

சிற்றூரும், வரப்பெடுத்த வயலும் ஆறு
தேக்கிய நல்வாய்க்காலும் வகைப்படுத்தி
நெற்சேர உழுதுழுது பயன் விளைக்கும்
நிறையுழைப்புத்தோள்களெல்லாம் எவரின்தோள்கள்?
கற்பிளந்து மலைப்பிளந்து கனிகள் வெட்டிக்
கருவியெலாம் செய்துதந்த கைதான் யார்கை?
பொற்றுகளைக் கடல்முத்தை மணிக்குலத்தைப்
போயெடுக்க அடக்கிய மூச்செவரின் மூச்சு?

என்பதுபோன்ற பாடல்கள், உழைத்து உணவின்றி, உரிமையிழந்து, உயிர் சுமந்து வாழும் ஏழைத் தமிழர்களின் எண்ணத்தையே எதிரொலி செய்கின்றன!

* * * *

"வெள்ளையனே வெளியே போ" என்று சுதந்தர ஆவலை எதிரொலிக்கும் கோஷம் எங்கும் கேட்கிறது. சுதந்திரம் நம் அருகே வந்துவிட்டதாகவும் ஆனந்தப் படுகின்றோம். இதைப்பற்றி நம்மை ஆள்வோர் என்ன நினைக்கின்றனர் என்பதைக் கவிஞர் தாமியற்றிய "சஞ்சீவிப் பருவதத்தின் சாரல்" என்ற காவியத்தில் ஒரு ஆங்கிலேயன் கூற்றாகக் கூறுகிறார்.

"ஓ! என் சகோதரரே! ஒன்றுக்கும் அஞ்சாதீர்!
நாவலந்தீவு நமைவிட்டுப் போகாது
வாழ்கின்றார் முப்பத்து முக்கோடி மக்கள் என்றால்
சூழ்கின்ற பேதமும் அந்தத்தொகை யிருக்கும்
ஆகையால் எல்லாரும் அங்கே தனித்தனி தான்
ஏகமனதாகி அவர் நம்மை எதிர்ப்பதெங்கே?
சாதிப்பிரிவு சமயப் பிரிவுகளும்
நீதிப்பிழைகள் நியமப் பிழைகளும்
மூடப் பழக்கங்கள் எல்லாம் முயற்சி செய்தே
ஓடச்செய்தால் நமையும் ஓடச்செய்வார் என்பேன்"

மேற்சொன்ன வரிகளிலுள்ள ஒவ்வொரு வார்த்தையும் நம்மைச் சிந்தனையில் ஆழ்த்தி, நமது சுதந்திரப் போராட்டத்தின் திட்டத்தையே திருத்தத் தூண்டுகின்றன வல்லவா?

இன்றைய தமிழகத்தில் அரசியலில் ஆங்கிலமும், ஆலயத்தில் வடமொழியும் ஆட்சி புரிகின்றன. தமிழ் மொழி வாழ்விழந்து கிடக்கின்றது. "முத்தமிழில் வைதாரையும், வாழவைக்கும் தமிழ்த் தெய்வ" மெனப்படும் முருகனுடைய ஆலயத்திலும்கூட தமிழ் மொழிக்கு இடமில்லை. தமிழ்நாட்டில், தமிழர் மத்தியில் தமிழ்மொழிக்கு நேர்ந்த இந்த அவமானத்தைப் போக்குமாறு கவிஞர் ஆணையிடுகிறார்.

காற்செருப்பைப் பிறனொருவன் கழிவிடத்தில்
தள்ளிடினும் பொறுத உள்ளம்
மேற்படுத்தும் எவற்றினுக்கும் மேற்பட்ட தன்மொழியைத்
தமிழைத்—தீயோர்
போற்றுவதற் குரியதொரு பொதுவினின்று
நீக்கிவைத்தாற் பொறுப்பதுண்டோ?
வேற்றுவரின் வடமொழியை வேரறுப்பீர்
கோயிலிலே மேவிடாமல்

* * * *

அரசியலிலும் தமிழ் ஆதிக்கம் கொள்ளும் வகையைக் கவிஞர் அறிவிக்கின்றார் :—

தமிழாய்ந்த தமிழன்தான் தமிழ் நாட்டில்
முதலமைச்சாய் வருதல்வேண்டும்

* * * *

தமிழ் எங்கே? தமிழின் நிலை என்ன எனத்
தாமறியாத் தமிழர் என்பார்
தமிழர் நலம் காப்பவராய் அரசியலின்
சார்பாக வரமுயன்றால்
இமைப்போதும் தாழ்க்காமல் எவ்வகையும்
கிளர்ந்தெழுதல் வேண்டும்; நம்மில்
அமைவாக ஆயிரம்பேர் அறிஞர் உள்ளார் எனமுரசம்
ஆர்த்துச் சொல்வோம்

தமிழ் வளர - தமிழன் வாழ - தமிழ் ஞானமுடையவர்களே தமிழ் நாட்டில் பொது மன்றங்களனைவற்றிலும் ஆதிக்கம் கொள்ளவேண்டு மென்று கவிஞர் கூறுவது முற்றிலும் உண்மை.

கவிஞரின் இந்தக் கனவுகளெல்லாம் நனவாக வேண்டுமானல் தமிழகத்தில் தமிழரசு தோன்றவேண்டும். ஆனல், இன்று தமிழகம் ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டுக் கிடக்கின்றது. தமிழகத்தில் ஆங்கில அரசு மறையும் நாள் எதுவோ அதுதான் தமிழரசு தோன்றக்கூடிய நாள். ஆகவே ஆங்கில ஏகாதிபத்ய எதிர்ப்புப் போரில் தமிழ் மக்களனைவரையும் ஒன்று திரட்டி வெற்றி காண விழையுமாறு கவிஞரை வேண்டுகின்றேன். தன்மானக் காவலர் கவிஞர் பாரதி தாசன் வாழ்க!

# ஆரம்பித்து விட்டது :: என். வி. நடராசன்

கவிஞர் என்று கூறும் பொழுது எங்கும் நம் கவிஞர் கனக சுப்புரத்தினம் (பாரதிதாசன்) அவர்களைத்தான் குறிக்கும் என்பதை எவரும் மறுத்தற்கில்லை. உண்மை. நாட்டிலே பேதற்று அனைவராலும் போற்றப்படும் நிலை எதனல் ஏற்பட்டது? கவிஞர் நாட்டு மக்களிடையே உள்ள அடிமை மனப்பான்மையை சமுதாயக் குறைகளை சாதி-மதம்-கடவுள்போராத் முட்புதர்போல் வளர்ந்திருக்கும் இழிவுகளைத் தம் புரட்சிக் கவிகளின் மூலம் அஞ்சாது சாடினர், சாடுகின்றார்! துவக்கத்தில் கவிஞரின் கருத்துக்கு மக்களின் ஆதரவு மிகக் குறைவாய் இருந்தது உண்மைதான். அவர் திறனை, உண்மையை, மேன்மையை, அறிந்தோரும் மிகவும் சொற்பம். அவர் கருத்து நாட்டினர் பல்லோருடைய எதிர்ப்புக்கு ஆளாகி இருந்தது அந்நாள். இதைக் கண்டு நம் கவியரசர் அஞ்சினரா? சளைத்தாரா? அதுதான் இல்லை. மேலும் தமது கவிதைகள் மூலம், தான் உண்மையெனக் கண்ட புரட்சிக் கருத்துகளைப் புகுத்தினர், எங்கும் பரப்பினர். நோய் பிடித்தவன் மருந்தை உட்கொள்ளும் போது வைத்தியரை நோவதும், பிணி தீர்ந்தவுடன் புகழ்வதும் போல, கவிஞர் பாரதி தாசனின் கவிதைகளை, சாதிக் கொடுமை-அன்னியர்களின் ஆதிக்கம் அறியாமை ஆகிய இன்னோரன்ன அடிமைப்பிணிகளால் கட்டுண்டு தன்மான உணர்ச்சியின்றி வாழ்ந்து வந்த நம் திராவிட சமுதாயத்தினர் முதலில் வெறுத்துப் பிறகு உண்மையை உணர்ந்து பாராட்டத் தொடங்கி விட்டனர். கவிஞர் கவியின் மூலமாகக் கொடுத்தத் தன்மான மருந்து துவக்கத்தில் நாட்டினருக்கு வேம்பாகக் கசந்தது. ஆனல் இன்று காங்கிரஸ்-பொதுவுடமை-திராவிடர்-சுயமரியாதை-ஆகிய பல கட்சியினரும் மற்றும் முஸ்லிம், கிறிஸ்தவர் ஏன்? ஆரியர்களும் கூடப் போற்றும் நிலைக்கு அவருடைய கவிதைகள் வரவேற்கப்படுகின்றன.

பாரதிதாசனின் கவிதைகளும் கொள்கையும் உலகம் ஒப்புவன. இந் நாட்டுத் தொழிலாளர் உரிமை கோரும் போரில் கடைசி ஆயுதமாகக் கூறப்பட்டு வருவது வேலை நிறுத்தம். நான் சொல்லுகிறேன், வாழ்விற்கு முதுகெலும்பாயிருந்து வரும் தொழிலாளர் சமூக உரிமைப் போராட்டத்திற்குச் சிறந்த-ஈடில்லாக் கடைசி "அணுக்குண்டு ஆயுதம் கவிஞரின் கவிதைகளேயாகும்! மனிதர்களை மனிதர்களாக மதிக்கப்படவும் வெள்ளை-ஏகாதிபத்திய வெறியும், அதற்குத் துணையாக இருந்து வரும் ஆரிய ஏகாதிபத்திய வெறியும் அறவே ஒழிக்கப்படவும் ஆன அரசியல்-சமுதாயப் போருக்குக் கவிஞரின். கவிதைகள் அரண்கள் அமைத்து விட்டன! படையும் உருவாகின்றது! இன்று நம் கவிஞர் எல்லா அரசியல் கட்சியிலுமுள்ள முற்போக்காளர்களால் போற்றப்படுகிறார். கவிஞரின் புரட்சிக் கருத்துக்கள் நாட்டில் நடை முறையில் வரத் தொடங்கிவிட்டன. ஏன்? கவிஞரின் தன்மான மருந்து உள்ளே வேலை செய்ய ஆரம்பித்து விட்டது. வாழ்க கவிஞர்!

வெள்ளித் திரைக்குவேண்டிய—
எல்லா விளம்பரங்கள்!

எவை?

பானர்—கட்டவுட்

போஸ்டர்—என்லார்ஜ்மெண்ட் .

லே அவுட்—ஸ்லைட்!!

நல்ல முறையில் தயாரிக்குமிடம்:

பாலு பிரதர்ஸ்

8, பஜார் ரோட்

இராயப்பேட்டை

சென்னை.

BALU BROS

ARTISTS

பல லக்ஷம் மக்கள் பார்த்துப் பார்த்துப் பரமானந்தம் அடைகிறார்கள்



மாடர்ன் தியேட்டர்ஸ்

# சுபத்ரா

T. R. சுந்தரம் B.A., B.Sc., (Leeds)
டைரக்ட் செய்தது.

வசந்தா ஹொன்னப்பா
சாமா மாலதி
ராஜகாந்தம் துரைராஜ்
முதலியவர்கள் நடித்தது.

படித்தவர் விரும்புவது
பாரதி தாசன் கவிதைகள் !

பார்த்தவர் விரும்புவது

பேபி பிராண்டு ஆடைகள் !

நவீன நாகரிக ரெடிமேடு தயாரிப்புகள்.

ஏஜண்டுகள் தேவை :

திருவிடம் ஸ்டோர்ஸ்

விஜயபுரம் * தஞ்சை ஜில்லா.

— பக்தியை நாடும் இரு ரத்தினங்கள் —

புத்தம் புதிய விருந் தளிப்பு

மகோன்னதமான இசைச் சித்திரங்கள்

# பக்த வேமன்னு

நடிகர்கள்

பி. யு. சின்னப்பா — கே. மாலதி

(தெலுங்கு 'சுமங்கிலி' கதாநாயகி)

பி. பீ. ரங்காச்சாரி — எம். ஆர். சந்தானலக்ஷ்மி

சி. வி. வி. பந்துலு

நகைச்சுவை வி. குமாரசாமி & என். ராஜலட்சுமி முதலியோர்.

# பக்த சாருகதாசர்

நடிகர்கள்

இசையரசு: எம். எம். தண்டபாணி தேசிகர்

டி. பிரேமாவதி — எம். ஆர். சந்தானலக்ஷ்மி

நகைச்சுவை வி. குமாரசாமி & என். ராஜலட்சுமி முதலியோர்.

உயரிய கதையமைப்பு, பாட்டு, பேச்சு, நடிப்பு,

டெக்னிக்குகள் நிறைந்தவை.

: தயாரிப்பு :

ரத்னா ஸ்டுடியோஸ்

செவ்வாப்பேட்டை : : சேலம்



தஞ்சாவூரில்

நவீன நாடகங்கள்

ராமனுதஞ் செட்டியார் ஹாலில்

K. R. ராமசாமியின்

கிருஷ்ணன் நாடக சபையார்

புரட்சிதரும் பாடல்! புலமை மிகுநடிப்பு!!

இரகசிய நிகழ்ச்சிக் காட்சிகள்

நிறைந்த நாடகம்!

# "ஓர் இரவு"

By C. N. A.

தினசரி இரவு 9-30 மணிக்கு நடைபெறும்

பாடல்கள்: உடுமலே நாராயணக்கவி.

நாடக அமைப்பு: M. S. முத்துகிருஷ்ணன்

ஓவியம்: V. மாதவப் பிள்ளே

அடுத்து தயாராவது

"நமது தந்தை"

OR

பச்சையப்பா

By M. S. M.



Printed at THE MERCANTILE PRESS, Published by The Pupil's Publishing House,
Q. H. No. 264-D, 2/45, Muthumari Chetty Street, Mannady Madras.





**சோனல்** சொரி, சிரங்கு, படை, பரு, கரப்பான், வேனல் கட்டி, நமைச்சல் முதலியவைகளுக்கு கைகண்ட மருந்து

**டின் 1-க்கு அணா 0-6-0**

*Agents* :—**Messrs. A. S. NAYAGAR & CO.**, 2, Subramaniam Lane, Rattan Bazaar, Madras.
Messrs. **GARRISON COMMERCE**, Governorspet, Bezwada.

*Manufactured by* :—**BHARAT DRUG HOUSE**, Madura.

*Distributors* :—**T. N C. NAGALINGAM PILLAI & SONS**, Chemists, Madura.




Wrapper Printed at the Commercial Printing & Publishing House, Madras, 1, MS. 120A, 7-46 2000